

றோசா

# என் நினைவில் நின்றவை



குறமகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறமகள்

## என் நினைவில் நின்றவை

இளைய மகள் றோசாவுடன்
எழுத்தால் உறவாடும்
நினைவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறமகள்**

**திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்**

# என் நினைவில் நின்றவை

பதிப்பு: ஜனவரி 21, 2018

பதிப்பாசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

பக்கங்கள்: 100

அட்டை அமைப்பும் நூல் வடிவமைப்பும்
சசிகரன் பத்மநாதன் - ஹரன்கிராஃப்

வெளியீடு
தமிழர் தகவல் வெளியீட்டகம்
416 920 9250

அச்சுப் பதிப்பு
அகிலன் அசோஷியேற்ஸ்

பிரதிகளைப் பெறுவதற்கான தொடர்பு இலக்கங்கள்
வாணி - 647 878 2451
பாபு - 647 767 2704



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுரை

சில விடயங்கள் எங்களுக்குத் தெரியாமல் எங்களுடன் ஒட்டியதாக தொடர்ந்து நடைபெறுகையில், 'இது முற்பிறவித் தொடர்' அல்லது 'முற்பிறவிக் கடன்' என்று எண்ணிக் கொள்வோம்.

குறமகள் என எழுத்துலகில் அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் பவனி வந்த திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களுடனான எனது தொடர்பை அவ்வாறுதான் கூறவேண்டும்.

அவர் வாழும்போது மட்டுமன்றி, இன்றும் எமக்கிடையேயான தொடர்பு அறாத்-தொடராக நீண்டு வருவதால், அவரது நினைவுகளையும் எழுத்துகளையும் ஆவணப்படுத்தும் பணியை என்னிடம் ஒப்படைத்து வருகின்றனர் அவரது அருமைப் பிள்ளைகள்.

இந்த நூல் நீண்ட கட்டுரையல்ல, நெடுங்கதையல்ல, குறுநாவலுமல்ல. இவை எல்லாவற்றையும் கடந்த ஒருவகைப் படையல். ஆம்! படையலென்றுதான் இதனைக் கூறவேண்டும்.

மாவீரரான தமது இளைய மகள் குகபாலிகாவை றோசாவாக வளர்த்து, மேஜர் துளசியாக மண்மீட்புக்காக ஆகுதியாக்கிய ஒரு தாய், தமது மகளுடன் ஆத்மார்த்தமாக எழுத்தால் உறவாடும் மனப்பதிவுக் காவியம் இது.

இரு தசாப்தங்களுக்கும் மேலாக தாயகத்தில் எனக்கும் குறமகளுக்குமிடையே இறுக்கமாக வளர்ந்திருந்த உறவு, அவர் கனடா வந்த ஆண்டிலிருந்து மீண்டும் பற்றிப்படர ஆரம்பித்தது. இந்த உறவு ஆழமானதும், மிக அகலமானதும். தமிழர் தகவல் குடும்பத்தின் மூத்தவர்களில் ஒருவராகக் குறமகள் திகழ்ந்தார்.

1998ம் ஆண்டில் றோசாவின் முதலாவது ஆண்டு நினைவின்போது, 'ஈழத்து றோசா - மேஜர் துளசி' என்ற மலரை வெளியிடும் பொறுப்பை உரிமையோடு என்னிடம் தந்தார். தமிழர் தகவலின் இணை அமைப்பான 'அகிலன் அசோஷியேற்ஸ்' வெளியீடாக இதனை வெளிக்கொணர்ந்தோம்.

2005ம் ஆண்டில் குறமகள் அவர்களின் எழுத்துலக ஐம்பதாவதாண்டு வைபவத்தை மிகப்பெருமளவில் பொன்விழாவாக தமிழர் தகவல் நடத்தியது. அவ்வேளை, இவரது முதலாவது கவிதைத் தொகுதியான 'மாலை சூட்டும் நாள்' நூலை அச்சேற்றி வெளியிடும் பேற்றையும் எம்மிடமே தந்தார்.

2016 செப்டம்பர் 15ம் திகதி குறமகள் அவர்கள் கனடாவில் காலமானார். அவரது மறைவையொட்டிய, 'குறமகள் - நினைவழியா நினைவுகள்' என்ற கட்டுரைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பை வெளியிடும் பொறுப்பை அவரது பிள்ளைகள் எம்மிடம் ஒப்படைத்தபோது, அதனை அகிலன் அசோஷியேற்ஸ் வெளியீடாகப் பிரசுரித்து மனைநிறைவு பெற்றுத் - திருப்தியடைந்தோம்.

இப்போது - தமது மகள் றோசாவின் நினைவாக தாம் வாழ்ந்த காலத்தில் அவ்வப்போது அவர் எழுதியவைகளில் எஞ்சியவை - தமது மகளோடு இரவும் பகலும் உறவாடி வடித்த வரிகளை நூலாக்கும் பொறுப்பை, அவரின் பிள்ளைகள் எமக்கிடையேயான உறவின் உரிமை கருதி எம்மிடம் தந்தனர்.

இந்த நூலில் ஈழத்தமிழரது விடுதலைப் போராட்டத்தின் சில முக்கிய தடங்களைப் பார்க்க முடிகிறது. மண்மீட்புப் போராட்டத்துக்கு பிள்ளைகளைக் கொடுத்த பெற்றோரின் மனஉணர்வுகளை ஒரு தாயினூடாகக் காணமுடிகிறது.

இந்தப் பதிவில் எனது மகன் அகிலனும், குறமகள் அவர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதைப் படிக்கையில், அந்த நாட்களில் நனவிடை தோய்ந்தது நெகிழ்ச்சிக்குரியது.

இந்த வெளியீடு எமது மண்ணுக்கான போராட்ட வாழ்வில் வித்தியாசமானது. எத்துணை வித்தியாசமானது என்பதை இதனைப் படிக்கையில் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு வரியில் சொல்வதானால், ஒரு போராளியின் தாயினது போராட்ட வகிபாகத்தைத் துல்லியமாக ஆவணப்படுத்தி நிற்கிறது குறமகளின் படையல்.

திரு எஸ். திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர்
தமிழர் தகவல் - கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

குறமகளின் நெஞ்சை நெகிழ வைக்கும் படைப்பான 'என் நினைவில் நின்றவை' நூலுக்கு முகவுரை எழுதும் பாக்கியம் கிடைத்ததையிட்டு குறமகள் மைந்தனாகிய நான் பெருமிதம் அடைகிறேன்.

எனது தாயின் எத்தனையோ படைப்புகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலவற்றையே நான் படித்துள்ளேன். எனது தமிழிலக்கிய இலக்கண அறிவின்மையும் ஆர்வமின்மையுமே இதற்குக் காரணம்.

மேடைப் பேச்சுகள், பட்டிமன்றங்கள், சிறுகதைகள், கட்டுரைகளென குறமகள் சிறுவயதிலிருந்தே தனது திறமைகளை வெளிப்படுத்தி மக்களின் பாராட்டுகளைப் பெற்றவர். முன்னோட்ட சிந்தனைவாதியான எனது தாயார் தன் மகளின் மறைவி-னால் மிகவும் மனமுடைந்துவிட்டார். இறுதிவரை றோசாவின் நினைவிலும் வேதனையிலுமிருந்து வெளிவர முடியவில்லை.

'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தில்' - இது பழமொழி. ஆனால் நிஜவாழ்வில் பாசமும் அன்பும் வைத்திருந்த ஒருவரை இழக்கும்போது அனுபவிக்கும் வேதனையை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. வயிற்றுவலியும் அவரவர்க்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள்.

ஒரு தாயின் கருவறையில் உயிர்பெற்ற இருதயம், தலை, கை, காலென ஆரம்பித்து முழுமையாக ஒரு குழந்தையாக பத்து மாதங்கள் சுமந்து அத்தாய் அக்குழந்தையை தன் இரத்தத்தில் வளர்த்து எடுக்கிறாள். அத்தாய்க்கு அந்தப் பத்து மாதங்கள் ஒரு யுகம்போல், உடம்பில் எத்தனை மாற்றங்கள், எத்தனை அசௌகரியங்கள். இறுதியில் பிரசவத்தின்போது காலனின் காலடிவரையில் சென்று அக்குழந்தையை இவ்வுலகுக்குக் கொண்டு வருகிறாள்.

பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்த்து ஆளாக்கும்வரை அவள் சிந்தனை முழுக்க முழுக்க அப்பிள்ளையின் எதிர்காலம் பற்றியே இருக்கும். ஆனால் கனவில்கூட எதிர்பார்க்காதவாறு தானே அக்குழந்தைக்குக் கொள்ளிபோடும் நிலை வருமானால் எந்தத் தாய்தான் அதனைத் தாங்குவாள். குறமகள் இரண்டு குழந்தைகளை இழந்துள்ளார். ஒன்றை மூன்று வயதிலும் மற்றொன்றை 28 வயதிலும்.

ஒருவரை நாம் இழந்தபின்னர், அது விதி என விளித்து, வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்கு நகர மாட்டோம். அந்த இழப்புக்கு நாமும் ஒரு காரணமென்றோ அல்லது நாம் அந்த இழப்பைத் தடுத்திருக்கலாம், நன்றாகக் கவனிக்கவில் - லையா, எமது செயற்பாடுகள் நன்றாகவில்லையோ என எத்தனையோ மனப்போராட்டங்கள் வரும். இதற்கு என் தாயார் மட்டும் விதிவிலக்கல்ல.

றோசா, எனது தங்கையின் 16 வயது முதல் 21 வயது வரையான காலம் - ஓர் இளம் பருவப்பெண்ணின் அன்றாட வாழ்க்கைப் போராட்டம், பொறுப்பு, சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் அரசியல் சுற்றாடல் என கடினமான வாழ்க்கைச் சதுரங்கத்தை வெளிப்படுத்தி நிற்கிறது இந்நூல். தமிழீழத்தில் இதுபோல் எத்தனை றோசாக்கள் இருந்திருப்பர். றோசா தன்னுடைய தந்தையைப் பராமரிக்கும் கடமை பற்றிப் பல தடவை இப்படைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அப்பாவின் உண்மை நிலைபற்றி பலரும் அறிந்திருக்க மாட்டார்கள். அமெரிக்காவில் வானொலி விளம்பரத்தில் பாரிசவாத நோய்க்கான அறிகுறிகள் எவை என்பது பற்றியும் உடனடியாக 911 இலக்கத்தை அழைக்க வேண்டியது பற்றியும், எவ்வளவு சீக்கிரம் மருத்துவ உதவியை நாடுகிறீர்களோ அவ்வளவுக்கு பூரண குணமடையும் வீதம் அதிகமென்றும், காலதாமதமானால் ஞாபகசக்தி வீதம் குறைந்துவிடுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு தடவையும் இவ்விளம்பரத்தைக் கேட்கும்போது மனம் படும் வேதனை சொல்லில் அடங்காது. சிங்கள இனவெறியை வைத்திய சேவையிலும் காட்டுவார்களா கொடியவர்கள்? குருநாகலில் பணிபுரியும்போது காலையில் எழுந்த அப்பா பாரிசவாத நோயினால் பாதிக்கப்படுகிறார். இதனைக் கவனித்த அவரோடிருந்த நண்பர் உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கிறார். மாணவர்களுடன் ஒரு பாசறைக்காக குருநாகல் சென்றிருந்த அம்மா, இத்தகவல் கிடைத்தவுடன் வைத்தியசாலைக்கு விரைகிறார். வைத்திய சோதனைக்காக 4 மணிவரை நோயாளி காக்க வைக்கப்பட்டார். அம்மாவின் முயற்சியும் தமிழர் என்ற காரணத்தால் பயனளிக்காமல் போக, உடனடியாக அப்பாவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்கிறார்.

மறுநாள் மாலை 3 மணியளவில் யாழ் சென்றடைந்த பின்னரே வைத்தியம் ஆரம்பிக்கப்பட்டது - கிட்டத்தட்ட 32 மணித்தியாலங்களின் பின்னர். மூளையில் ஏற்பட்ட இரத்த உறைவு கடுமையாக மூளையைப் பாதித்ததால் அப்பா வலது கை, கால் அசைவுகளை இழந்து, பேச்சு மற்றும் நினைவும் இழந்துவிட்டார். இராணுவத்தால் மட்டும் தமிழனை அழிக்க வேண்டியதில்லை. மருத்துவ மறுப்பினாலும் தமிழரை அழிக்கலாமென்பது சிங்கள இனவெறியருக்கு நன்கு தெரியும். அப்பாவைப் பராமரிக்க ஒருவர் முழுமையாகத் தேவையென்பதால் நான் இந்தியா சென்ற பின்னர் அது றோசாவின் பொறுப்பாகிவிட்டது.

இந்நூலில் ஓர் இடத்தில் றோசா அப்பாவுக்கு காசு நாணயங்களைக் காட்டி படிப்பிப்பாரென்றும், அப்பாவுடன் போட்டிக்கு செஸ் விளையாடி றோசா இப்போது அப்பாவுக்குமாக தான் காய்களை நகர்த்தி விளையாடியதாகவும் வருகிறது. அப்போதிருந்த நிலையில் தாம் நினைப்பதைக்கூட மற்றவரோடு பகிர முடியாத நிலையில் அப்பா இருந்தார். நுரையீரலுக்குப் பிராணவாயு பற்றாக்குறையால் அவதிப்பட்டபோதிலும், கைகளில் முழுமையாகப் பேனா ஏந்தி எழுத முடியாமல் கை நடுக்கம் ஏற்பட்ட வேளையிலும், தமிழ்மேல் கொண்ட பற்றும் தமிழ் சமுதாயத்துக்காக நீங்கள் ஆற்றிய அறிவுத்தானத்தைப் பார்த்து உங்களுக்குத் தமிழ் புலமையைக் கொடுத்த அன்னை சரஸ்வதி தேவியே வியந்திருப்பாள்.

நீங்கள் ஆற்றியது தமிழ் அறிவுத்தானம் என்பேன். மகாபாரதத்தில் கொடைவள்ளல் கர்ணன் இறுதிமூச்சுவரை தன்னிடமிருந்த செல்வங்களை தானமாக வழங்கிவிட்டு, இறுதியில் தான் சேமித்த புண்ணியத்தையும் கண்ணனுக்குத் தானமாக வழங்கி உயிர்நீத்தான். நீங்கள் இறுதிநாள்வரை உங்களிடம் தமிழ் படைப்பு வேண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களுக்கு இல்லையென்று கூறாமல் அவர்களின் தேவைக்கேற்ப எழுதிக் கொடுத்தீர்கள். இவற்றை நிறுத்திவிட்டு, ஓய்வெடுக்குமாறு நாம் விடுத்த வேண்டுகோளையும் மறுத்து தமிழ் அறிவுத்தானம் செய்தீர்கள்.

உங்கள் தமிழ்ப் புலமை எதுவுமற்ற நாம் உங்கள் மறைவுக்குப்பின் உங்களின் அந்தியேட்டி நினைவாக ஒரு நூல் பதிப்பதற்கென பல தமிழறிஞர்களிடம் உதவி வேண்டி நின்றபோது உங்கள் சேவையின் மகத்துவத்தை அறிந்தோம். இவ்விடயத்தில் எமக்கு பெரிதும் உதவிய திருவாளர் திருச்செல்வம் அவர்களின் கரங்களை அன்புடன் பற்றிக் கொள்கிறோம்.

வெளியுலகுக்குக் குறமகள் என்கிற முகம், வீட்டில் றோசாவுக்கு அம்மா என்கிற முகம். இரு வேறுபட்ட வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட போராட்டங்கள், துன்பங்கள், றோசாவை இழந்தபின் ஏற்படும் மனக்குமுறல் ஆகியவற்றை இந்நூலில் அம்மாவின் எழுத்தூடாகக் காணலாம்.

1985 - 1990 காலகட்டத்தில் நான் இந்தியாவில் படித்துக்கொண்டிருந்த வேளையில் றோசா பட்ட துயரங்களைப் பின்னர் அறிந்து கொண்டேன். குற்றவுணர்ச்சி என்னை வாட்டி வதைக்கிறது - நானும் தாயகத்தில் இருந்து எனது குடும்பத்துக்கு உறுதுணையாக இல்லாமல் போய்விட்டேனே என்று.

எனது தாயார் தனது பிள்ளைகள் தன்னைப்போல் தமிழாற்றல் இல்லையேயென ஆதங்கப்பட்டதுண்டு. தனது மறைவுக்குப் பின்னர் தனது படைப்புகளைக்கூட பேணிப்பேணி பாதுகாக்க மாட்டார்களௌன அவர் வருந்தியதுண்டு.

என் செய்வேன் அம்மா! உங்களைப்போல் திறமையை ஆண்டவன் எனக்குக் கொடுக்கவில்லையே. உங்கள் அறிவுப்பசியைத் தீர்க்க நீங்கள் படித்த புத்தகங்கள் எத்தனை, ஒரு நூலகமல்லவா வீட்டில் வைத்திருந்தீர்கள். பொதுசன நூலகங்களில் செலவிட்ட எண்ணற்ற மணித்துளிகள், உங்களது determination, dedication, motivation, drive, work ethic மற்றும் சேவை மனப்பான்மையுடன் பார்க்கும்போது நீங்கள் ஒரு மலை. உங்களைப் பார்த்து பிரமிக்க மட்டுமே என்னால் முடியும்.

தமிழர் தாயகத்தில் இனவெறித் தாக்குதலாலும் விடுதலைப் போராட்டத்தின் கடுகதி வளர்ச்சியாலும், விடுதலைப் போராட்டத்தில் ஆணுக்குச் சமமாக ஆயுதம் தாங்கிய தமிழீழப் புதுமைப்பெண் நீங்கள் எதிர்பார்த்த, பிரசாரம் செய்த பாரதி கண்ட புதுமைப்பெண்ணைவிட ஒருபடி மேலே உயர்ந்ததையிட்டு பெருமை அடைந்தீர்கள். அதிலும் உங்கள் மகளும் ஒரு தமிழீழ புதுமைப் பெண்ணாக உயர்ந்து ஊருக்குத்தான் உபதேசம் தனக்கல்ல எனும் புறச்சொல்லை தகர்த்ததையிட்டு ஒரு சமூகப் போராளியாக பெருமை அடைந்தீர்கள், ஒரு தாயாக அல்ல.

பெண்ணியத்துக்காகவும், பெண் விடுதலைக்காகவும் வாழ்நாளின் பெரும்பகுதியை அர்ப்பணித்த உங்கள் தியாகம் பெரிதா, அன்றேல் நீங்கள் பெற்ற மகள் றோசாவின் விடுதலைக்காக ஆயுதமேந்தி உயிர்நீத்த தியாகம் பெரிதா எனத் தமிழினம் சிந்திக்கட்டும்.

அன்பு மகன்
இ. துளசிராம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் நின்றவை.....

(மாவீரராகி மறைந்துவிட்ட மேஜர் துளசி றோசாவாக - குகபாலிகாவாக வாழ்ந்த காலத்துச் சில நிகழ்வுகளை நினைவுகளாக்கி வரையும் காப்பியம் இது)

என் இனிய றோஜாவே, இது உன் கதை மட்டுமல்ல உன் குடும்பத்தின் கதை, உன் ஊரின் கதை, உன் சமூகத்தின் கதையும்கூட. எழுத்தின் மூலவர் உன் தாயாராக இருப்பதால் இது என் கதையும் ஆதல் தவிர்க்க முடியாதம்மா.

உன் கதை என்றேனா? ஓ! இல்லை.. இல்லை... அதில் ஒரு சில துளிகளே!

ஒவ்வொரு நிமிடத்தையும் அர்த்தமுள்ள மக்கள் சேவையாக்கி மண்ணின் உடைமையான அந்த எட்டு வருடங்களின் கதையை நான் எப்படி அறிவேன்? வரலாறு சொல்லக்கூடும். அதுவரை...

அன்பு உள்ளங்களே, சிலருடைய வாழ்க்கை எதுவித ஆரவாரமுமில்லாமல் நிம்மதியாக ஓடிக்கொண்டிருக்கும். உழைத்தோம், உண்டோம், பிள்ளைகளைப் பேணி வளர்த்தோம் நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்தோம் என்பதுபோலச் சலனம் எதுவுமின்றி ஒரே சீராகச் சென்றுகொண்டிருக்கும். வேறு சிலருடைய வாழ்க்கையோ சம்பவங்கள் சரித்திரங்கள் நிறைந்தனவாகப் பரபரப்பு வாய்ந்ததாக அமைந்து இல்லை உண்டு ஆக்கிவிடும். சம்பவங்கள் இவர்களைத் தேடி வருகின்றனவா அல்லது இவர்கள் அவற்றைத் தேடிப் போகிறார்களா என்பதுகூடச் சந்தேகமாக இருக்கும்.

என்னுடைய நினைவில் நின்றவை பல உங்களுக்கும் நடந்த நிகழ்வுகள் ஆகலாம். சிலர் அதே அனுபவங்களினூடாக வந்திருப்பதை இதை வாசிக்கும்போது உணரக்கூடியதாகவும் இருக்கும். அனுபவங்கள் பொருத்திப் பார்க்கும் தகைமையுடையவை. உள்ளங்களின் தன்மை நோக்கி அவை வெவ்வேறு உணர்வுகளைப் பிரதிபலிப்பனவாகும். ஒருவரின் அனுபவ நிகழ்வுகள் மற்றவருக்கு அறிவாகின்றது. மனம் விசாலித்துப் பறக்கிறது பண்படைகிறது. உணர்ச்சிவசப்படாது ஒரு மூன்றாம் ஆளாக நின்று எழுதத்தான் முயற்சிக்கிறேன். முடியுமா பார்ப்போம்!

நீ பிறந்த அந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன். யாழ்ப்பாண மண்ணின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக் கண் திறந்து சரித்திரம் படைத்து அமெரிக்கன் சமயக்குழுவினால் அமைக்கப்பட்ட இணுவில் மக்லியோட் வைத்தியசாலையை யாரும் அறியாமல் இருக்க முடியாது. பிரசவ வைத்தியசாலையை இணுவிலிலும் சாதாரண வைத்தியசாலையை மானிப்பாயிலும் அமைத்ததோடு தேவையான வைத்திய அதிகாரிகளை கற்பித்து டாக்டர்களாக்கிய மேதை கிறீன் பாதிரியாரையும் நன்றி-யோடு நினைக்காதவர்களும்கூட எம்மிடம் இல்லை. கவிஞர் அம்பி டாக்டர் கிறீன் பற்றிய ஒரு நூலையே வெளியிட்டு யாழ்ப்பாணத்தானின் நன்றியுணர்வைப் பிரதிபலித்திருக்கிறார்.

1968, 69களில் இணுவிலில் ஏதோ ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. டாக்டர்களும் மாறி தலைமை டாக்டராக தகைமைகள் நிறைந்த அமரசிங்கம் வந்திருக்கிறார். பிரச்சனைகள் என்ன என்பது மறந்துபோய்விட்டது. ஆனால் என்றுமே சனசந்தடியும், சாமம் சாமமாகக் கார்களின் வருகையும் இடம் போதாமையுமாக இருந்த இடம், ஓய்ந்து ஒரு சில கர்ப்பிணிப் பெண்களுடனே மட்டும் காட்சியளிக்கிறது.

பத்து மாதம் முடிந்து பதினொரு மாதமும் ஆயிற்றாம் குழந்தை இன்னமும் பிறக்கவில்லையாம் என ஊரிலும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் பேசிக் கொள்கிறார்கள். ஏற்கனவே இரு குழந்தைகள் தையலோடு மட்டும் சுகமாகவும், அடுத்த இரு குழந்தைகள் தங்கள் கணக்கும் பிந்திவிட்டதாகக் கூறி வலி ஏற்படுத்தும் மருந்துகளை ஏற்றியும் பிறந்தமையால்போலும் குழந்தையை வெளி-யேற்றும் பலத்தைக் கருப்பை இழந்திருக்கிறது. தை மாதம் பனி வேறு. ஆஸ்துமா இன்னோர் பக்கம் கரைச்சல் தருகிறது.

நொண்டியான பிரசவலி, இதோ இதோ என்றுவரும், திடீரெனக் குறைந்துவிடும். வெளியே வரும் அவசரத்தில் சுழன்று சுழன்று தலையால் இடித்து இடித்து மேல் வயிற்றைப் பிய்ப்பது போன்ற நோவையும் தந்து கொண்டிருக்கிறாள் குழந்தை.

பிரசவ அறையில் டாக்டர் செல்லத்துரையின் மேற்பார்வையில் வலியை அதி-கரிக்கும் மருந்து ஊசிமூலம் செல்கிறது. டாக்டர் திருமதி கனகராசாவும் தம் கடமை முடித்து அங்கே வந்து நிற்கிறார். எமது மாணவி நாகரத்தினம் தலைமைத் தாதியாக என்புகழ் பாடிக் கொண்டு கடமையாற்றுகிறார். நட்புறவுடனான டாக்டர்கள், பண்டத்தரிப்பு மாணவி இவர்கள் முன்னிலையில் சத்தம் போடவோ அழவோ வழியின்றி முகத்தில் சிரிப்பை நிலைநிறுத்தி "ஆண்டவா ஆண்டவா" என முனகிக் கொள்கிறேன். வெளியே ஒரு வாங்கில் அம்மா இருந்து கொண்டு எமது குலதெய்வம் குருநாதர்மீது பாடும் தேவாரப்பதிகமும் கேட்டுக் கொண்டிருக்கிறது. உள்ளே சாந்தம் தவழும் தேவமாதா என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

மகளே! உன் நாடித்துடிப்பு அதிகரித்துக் கொண்டே போகிறதாம். உன் தாயின் நாடி 32க்கும் கீழே விழுந்து கொண்டு போகிறதாம். பரபரப்புடன் ஓடிச்சென்று பிராணவாயுச் சிலிண்டரை உருட்டி வந்து பூட்டி விடுகிறார்கள். உடம்பில் ஒரு விறைப்பு ஏறி வருவதை உணர்ந்து பனிக்காக என எண்ணியிருந்த எனக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரபாயம் உறைக்கிறது. வெளியே காத்திருக்கும் கணவர், பிள்ளைகள், அம்மா எத்தகைய இடிபோன்ற செய்தியைப் பெறப்போகிறார்கள் என நினைக்கவும் கண்களில் கண்ணீர் வருகிறது. ஆபத்பாந்தவன்போல டாக்டர் அமரசிங்கம் வருகிறார். நிலமைகள் பற்றி அறிகிறார். நீண்டநேர லேபர் என்று சிறிது கடினக் குரலில் கூறுகிறார்.

"ஏன் கண்ணீர்? ஏன் இப்படி வேர்க்கிறது? கவலைப்படாதையுங்கோ எல்லாம் சுகமாக நடக்கப்போகுது" என்று எனக்கு அன்பு கொழிக்கக் கூறினார். நிமிர்ந்து தாதியைப் பார்த்தபோது அவரின் முகத்தில் திருப்தியின்மையும் சினமும் இருந்தது. எல்லாவற்றையும் கழற்றும்படி கூறித் தானே நாடியைப் பார்த்துவிட்டு பிராணவாயுவையும் கழற்றிவிட்டார். "உங்களுடைய முழுச் சக்தியையும் பிரி-யோகித்துக் குழந்தையை வெளியே தள்ள வேண்டும். நான் சொல்வதுபோல ஒத்துழையுங்கள்" என்றார் என்னைச் சிறிது நிமிர்த்தி புஷ் புஷ் என்று சொல்ல, சக்தியெல்லாம் ஒன்றுகூட்டி முயற்சி எடுக்க, மகளே நீ பிறந்து விட்டாய். நான் நன்றி சொல்ல முன்னரே அவர் எனக்கு நன்றி சொன்னார். "நீங்கள் ஒத்துழைக்காவிட்டால் வைத்தியசாலைக்குத்தான் கெட்டபெயர் வந்திருக்கும் போலிருந்தது" என்று சற்றுப் பெலமாகவே கூறுகிறார். யாருக்காகவோ கூறியது.

குழந்தாய்! நீங்கள் வெளியே வந்ததும் டாக்டர் செல்லத்துரை "இஞ்சை பாருங்கோ உடனேயே கண்களைத் திறந்து பார்க்குது" என்று சொல்லவும் டாக்டர் கனகராஜா "என்ன நிறம் இப்பதான் விரிகிற றோசா மாதிரி" என்று ரசிக்கிறார், என்ன குழந்தை என்று ஒருவரும் சொல்லவில்லை. நானும் மிகத்தளர்ந்து ஒரு மயக்கநிலை, வெளியே வந்ததே ஆறுதல்தானே.

டாக்டர் கனகராஜா என்னை வாழ்த்தி "குட்டியைப் பார்த்தாலே உமக்கு மாப்பிள்ளை தேட வேண்டிய அவசியம் வராது" என்று செல்லத் தமிழில் சொன்னபோதுதான் பெண் குழந்தை என்பது புரிந்தது. அதிலென்ன நாங்களும் ஐந்து பெண் சகோதரர்கள். ஆண் பெண் சமத்துவம் எனும் உணர்வு இருக்கும்போது "ஐயோ பெண்ணா!" எனும் ஏக்கம் வராதல்லவா.

டாக்டர் அமரசிங்கம், உன் அப்பாவுக்கு நாம் எப்படி மரணத்தின் பிடியில் இருந்தோம் என்பதையும், உன் அம்மாவின் ஒத்துழைப்பாலும் இறைவனின் ஆசியாலும் எல்லாம் சுலபமாக முடிந்துவிட்டதெனக்கூறி வாழ்த்துச் சொல்லி சென்றாராம். அம்மாவிடம் கனகராஜா "பேத்தி அழகான றோஜா வண்ணமும் மூக்கும் முழியும்" எனக்கூறி வாழ்த்தினாராம்.

எமது மாணவி அருகில் வந்து மிகவிசனத்தோடு "பிள்ளை கொடிசுத்திப் பிறந்தது ரீச்சர், கோத்திரத்துக்கு உதவாதாமே" என்று சொல்ல நான் மெல்லச் சிரித்து, "இப்பவே மெல்லக் கோத்திரங்கள் அழிந்து கொண்டே வருகின்றனதானே" என்கிறேன். "என்ன ரீச்சர் எப்படித் தாங்கினீங்கள் ஒரு சத்தங்கூடப் போடாமல்" நான் சிரித்துக் கொண்டே "பெண்கள் கோழைகளாகக் கண்ணீர் விடக்கூடாது, சவால்களைத் தீரமுடன் சமாளிக்க வேண்டும் என்று உங்களுக்கு அடிக்கடி சொல்லிப்போட்டு உமக்கு முன்னிலையில் அம்மா என்று அலறுவதா" என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டேன். அந்த மாணவியின் கண்கள் கலங்கிவிட்டன. பாவம் நாகரத்தினம் இப்போ எங்கேயோ? என் மகள்தான் மேஜர் துளசி என அறிவாளா?

வைத்தியசாலையில் உனக்கு ஏகமான கவனிப்புகள். வேலை செய்வோருக்கு முன்பு நேரமே இல்லை. இப்போதோ டாக்டர்கள் தாதிகள் எல்லாரும் ஒரு சில நிமிடங்கள் உங்களுடன் செலவிடுகிறார்கள். உனது அப்பாவோ "என் மகள் ராஜகுமாரி எத்தனை பேரின் கவனத்தை ஈர்க்கிறாள்" என்பார். அக்காமார் தாதி-மாருடன் யூபிலி புளொக்வரை உலாத்துவார்கள். டாக்டர் செல்லத்துரையின் பிள்ளைகளுடன் விளையாடுவார்கள். இணுவில் ஆஸ்பத்திரி குடும்பம் நடத்தக்கூடிய ஒரு இடம். வைத்தியசாலை என்ற எண்ணம் வராமலே இருக்க சமைத்து சாப்பிடும் வசதிகள் எல்லாம் உண்டு, ஆகையால் யாழ்ப்பாணப் பெண்களுக்கு இது வரப்பிரதேசமாக இருந்து வருகிறது. அன்பும் அரவணைப்பும் சுகநல விசாரிப்புகளும் நிறைந்த ஒரு குடும்ப உறவே இணுவில் வைத்தியசாலை.

உன் நீட்டுப்போக்கான உடலும், அழகுவண்ணமும், நீண்டு மெலிந்த விரல்களும், கண்ணின் கருவிழி அழகும் இவள் பரதத்துக்கென்றே பிறந்தவள், எனவே நடனம் பயிற்ற வேண்டும் என்ற எங்கள் இலட்சியத்தின் ஆர்வத்தைத் தூண்டின. எங்கள் கற்பனை அழகிய நவீன மேடையில் தனியொருத்தியாய் நீ நின்று ஆட, பெரியக்கா வயலின் வாசிக்க, சின்னக்கா பாடலும், நான் நட்டுவாங்கமும் செய்ய, அண்ணா மிருதங்கம் வாசிக்க, அப்பா தாளம்போட நாடெங்கும் நடனக் கச்சேரி-கள், எத்தனை சுகமான மகிழ்ச்சியான கற்பனை. ஆனாலும் கற்பனையிலும் அரைத் திட்டம் நிறைவேறவும் தமிழருக்குச் சனியன் பீடிக்கவும் சரியாகி விட்டது. பிரேமாவிடம் வயலின் கற்ற சசி அக்கா, சின்னராசாவிடமும் ராமநாதனிடமும் மிருதங்கம் கற்ற பாபு அண்ணா, நாகம்மாவிடம் இசைகற்ற வாணியக்கா எல்லாமே அதுல வாழ்வு தொடங்கவும் நின்று விட்டது.

உன் நடன ஆசிரியர் பத்மினி சின்னத்துரை, "முகபாவம் வெகு நேர்த்தி, முத்திரை சுத்தம், உடலசைவு வெகுலாவகம், ஆனால் கால்களின் துரிதம்தான் சிலசமயம் இழுக்குது" என்பார். விறகு எடுத்து வா என்றாலும்கூட பட்டடை-யடியில் நின்று ஒரு நிமிடம் குத்தடைவு நிரப்பிய ஜதிகள் பயிற்சி செய்துதான் வருவதைக் காண்பேன்.

இன்று உன் போட்டோக்களோ எதுவித பாவத்தையுங் காட்டாத தூர நோக்குக்கொண்ட சிலையாகக் காட்சியளிக்கின்றன. காந்தள் மென்விரல்கள் துப்பாக்கி வாக்கிரோக்கி என்பன சுமந்து கண்டினவா? ஜதிகள் போட்ட கால்கள் அணிநடை பயின்று காடுமேடெல்லாம் துரிதநடை போட்டுச் சிவந்தனவா? உன் அழகாலும் நடனத்திறமையாலும் முதிரா இளைஞர் ஆருயிர்களைத் திருகி வேடிக்கை காட்டுவாயோ எனப் பயந்திருக்க, அவை பகைவர் உயிரைப் பறிக்கும் ரௌத்திரமாக மாறினவா? சொல் மகளே எட்டு வருடங்களாக உன்னைக் காணாத அம்மா கேட்கிறேன் சொல்.

என் உதரத்தின் கனியே, மாப்பிளை தேட வேண்டிய அவசியமே இல்லாமல் போய்விட்டாய். குழந்தை குட்டியைப் பெற்று, கோத்திரத்தை வளர்க்க நீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவவில்லைத்தான். அதுதான் கொடி சுற்றிப் பிறந்தீரோ. பிறக்கும்போதே உன் கண்ணை அகல விரித்து இம்மண்ணின் அவலத்தைப் புரிந்து கொண்டிரோ, ஓ, இந்தக் கருவறையின் சிறையுடைக்க நீர் துடித்த துடிப்பென்ன, இடித்த இடியென்ன. அப்பலத்தோடு எம்மண்ணின் சிறைமீட்கத் துப்பாக்கி ஏந்தினையோ. உன் உயிரைப் பணயம் வைத்து வெளியே வந்தாய். அதே உயிரை மண்மீட்புக்குப் பணயம் வைத்து விட்டாய். அதற்கொரு அர்த்தம் கிடைக்குமா சொல் மகளே சொல்!

ஒரு குழந்தை பிறந்ததும் பெயர்வைப்பதென்பது ஒரு முக்கிய கடமையாகவும் பலரின் ஆலோசனையைப் பெறுவதாகவும் அமைந்துவிடுகிறது. தாய் தந்தை வீட்டுப் பெரியோர் விரும்பி ஆமோதிக்க வேண்டும். குழந்தை வாழப்போகிற அத்தனை காலத்துக்கு மாத்திரமல்ல அதன் பின்னரும் தமது விவேகத்தினாலோ, செய்கைகளினாலோ தமது பெயரை நிலைநிறுத்திச் செல்லுவதாயின் நீண்டகாலத்துக்கு நின்று நிலைக்கப்போவதாகவும் இருப்பதல்லவா? அதனால்தான் நாமகரணம் செய்வது ஒரு விழாவாகத் தமிழர் மத்தியில் இடம்பெற்றதோ.

முன்பெல்லாம் தங்கள் முன்னோர்களின் பெயரை வைப்பதில் மக்கள் அதிகம் அக்கறை காட்டுவார்கள். உதாரணமாக எனது அப்புவழிப் பூட்டிக்குப் பெயர் வள்ளிப்பிள்ளை. அம்மாவழிப் பூட்டிக்குப் பெயர் வள்ளிநாச்சன். எனது அம்மா கனவு கண்டது வள்ளி தெய்வானை சமேத கந்தசாமியாரை. நட்சத்திரப்படி 'வ'வில் தொடங்கவேண்டும். பிரச்சனையில்லாமல் வைத்துவிட்டார்கள் 'வள்ளிநாயகி'. எனது ஒன்றுவிட்ட அக்காக்களுக்குக்கூட கமலா, மீனா, பத்மா, காந்திமதி எனும் நாகரிகப் பெயர்கள் எனக்கு மட்டும் இப்படியா என இளம்பிள்ளையாக இருக்கும்போது கவலைப்பட்டு பெற்றோரைக் கேட்பதுண்டு.

இன்று கனடாவில் பெயர் கேட்டு டெலிபோனில் பேசுவார்கள் நிபந்தனைகளுள் முக்கியமானவை 2 அல்லது 3 எழுத்து வெள்ளைக்காரன் உச்சரிக்கக் கூடியது. (ஆனால்) ஒரு தெய்வத்தின் பெயர் எண் சாத்திரத்தின்படி வேறொருவருக்கும் இருக்கக்கூடாது. பாருங்கள் வரவர நிபந்தனைகள் போகும் போக்கை. எமக்கோ நட்சத்திர எழுத்தை எடுத்தால் அதன் எல்லைக்குள் நின்று தேடுவது சுலபமாயிருக்கும். இப்போதுகூட இருவார இடைவெளியில் இரு ஆண் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கவேண்டும். இரு தாய்மாருக்கும் பிள்ளையார் பெயர்தான் வேண்டுமாம். 'ஜ' 'ஹ' வில் விருப்பம். ஒன்றுக்கு 'கஜமுகே' கொடுத்தோம் வைத்தார்கள். இன்னொன்றுக்கு ஹிம்ஹரன், ஹிம்சுதன், விக்னேஷ் எனக் கொடுக்கப்பட்டுள்ளது எதையாவது வைக்கட்டும். பெயர்கள் பெருத்துவிட்டன என்றார்கள். கனகசபாபதி சொல்வதுபோல அவர்களது பெயர்களை நாம் கடினப்பட்டு உச்சரிக்கிறோம். நமது பெயர்களை அவர்களும் உச்சரித்துப் பழகட்டுமே, என்ன ஒரு பிரசங்கம்.

ஊரிலே எத்தனையோ பிள்ளைகளுக்குப் பெயர் வைத்துள்ளோம். இதில் மறக்க முடியாதது ஒன்று. ஒருநாள் அதிகாலை நாலுமணி, 58ம் ஆண்டாக இருக்கலாம் கார் ஹோர்ண் அடிக்கிறது. என்னவோ ஏதோவென்று அடித்துப்பிடித்து ஓடிவந்து கதவைத் திறக்கிறேன் "தங்கைச்சி கேற்றைத் திறவுங்கோ" பையன் திறக்கிறான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலிட்டி வர்த்தகர் ஒருவர். அப்புவுக்குப் பழக்கமானவர் "பிள்ளை, ராத்திரி ஒருமணிக்கு ஒரே சூலில் மூன்று பெண் குழந்தைகள் பிறந்துள்ளன அம்மா. எனக்கு வலு சந்தோசம். இப்பதான் இணுவிலாலை வீட்டைபோறன் சொல்ல. நீங்கள் கல்லூரிக்குப் போனால் பிடிக்கேலாது. எனக்கு நல்ல பெயர்கள் மூன்று வேண்டும்".

அதையதை அந்தந்த இடத்திலேயே முடிக்காதுவிடில் மூளைக்குள் ஓடுகிற ஆயிரம் வேலைகளோடு இதுவும் சேர்ந்து தொல்லை கொடுக்கும். "கொஞ்சம் இருங்கள், என்றவாறு பஞ்சாங்கத்தைப்புரட்டி 'சி' வரி எனக்கண்டேன். ஒரு கடதாசியில் வதவதவென பெயர்களை எழுதுகிறேன். "பிடிக்காவிட்டால் சொல்லுங்கள் வேறு பெயர்கள் தருகிறேன் நாளைக்கு" அவர் வாசிக்கிறார்.

ஸ்ரீ கெங்கா, ஸ்ரீ யமுனா, ஸ்ரீ சரசா. தடுக்கமுன்னரே காலைத்தொட்டுக் கும்பிடுகிறார். வயதில் முதியவர் ஆயினும் ஆசிரியரை மதிக்கும் வணங்கும் அப்பண்பாட்டை இனி எக்காலத்தில் காணப்போகிறோம். சினிமாவில் மட்டும்தான். "அம்மா சரசுவதி, இப்படிப்பெயர்கள் இனி ஒருவராலும் தரமுடியாது. மூன்று பிறந்ததே பெரிய சந்தோசம் அமைவான பெயர்கள் கிடைத்தது அதைவிடப் பெரிய சந்தோ'ம் இதில் ஒருத்தனும் என்னை வெல்லேலாது" என அட்டகாசமாகச் சிரித்தார். உங்கள் அதிர்ஷ்டம்தானே தவிர வேறொன்றில்லை. சமீபத்தில்தான் திரிவேணி சங்கமம்பற்றி வாசித்திருந்தேன். அது உடன் ஞாபகத்துக்கு வந்துவிட்டது. பெண்பிள்ளைகள் என்று அலட்சியப்படுத்தக்கூடாது நன்றாகப் படிக்க வைக்கவேணும்" என்று கேட்டுக் கொண்டேன். "கட்டாயம் அம்மா! உங்களளவுக்குப் படிக்க வைப்பேன்" என்றார்.

மத்தியானம் நிறைய உணவுப் பொருள்களைக் கொண்டுவந்து "பையா அம்மாவுக்கு நன்றாகச் சமைத்துக்கொடு", அவன் மறுக்கவும் கேளாமல் விறாந்தையில் வைத்துவிட்டுப் போய்விட்டாராம். அவர் உயிரோடு இருந்தவரை வளர்ச்சிகளை அறிவிக்க வருவார். எத்தனை அன்பு. ஒரு மகள் இந்தியாவில் இரசாயனவியல் படிப்பது பற்றிச் சொல்லியிருந்தார். அதன்பின் தொடர்பு விட்டுப்போய்விட்டது.

எங்கோ போய்விட்டேனா? நமக்கு எனப்பெயர் வைக்க வேண்டும். கடைசிக் குழந்தை எனக்கும் வயது 35 ஆகிவிட்டது. தைமாதம் 30ந் திகதி காந்தி இறந்த நாள். காந்தி இறந்த மாதம் என எங்கள் மகனை 'பாபு' என அழைக்கின்றோம். தை 16இல் பிறந்தவர் அவர். "என் குலதெய்வம் நல்லூர்க்கந்தன் முருகன் பெயர் வரத்தக்கதாக வைப்போம்" என்றார் கணவர். திருவாதிரை நட்சத்திரம் 'கு', 'க' வரிசையில் வைக்கலாம். காந்தியின் நினைவாகக் கஸ்தூரி என வைப்போமா. நடுவில் 'ஸ்' தமிழ் எழுத்தல்லவே.

அப்பா கேட்டபடி வைக்கலாம். குகன் என்பது கந்தன் ஆகிறது + பாலினி, ஏஞ்சனி, வதனி. இல்லை இவையெல்லாம் மலிந்து கிடக்கின்றன. சரத்சந்திரரின் நாவலொன்றின் கதாநாயகியின் பெயர் 'ஜுவபாலிகா' நினைவுக்கு வருகிறது. இந்தப் பெயர் எனக்கு மிகவும் விருப்பமானது. பாலிகா என்றசொல் எங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பகுதிகளில் புழக்கத்தில் இல்லாத ஒன்று. எனவே 'குகபாலிகா' எனக் குழந்தைக்குப் பெயரிடப்பட்டது. அவருக்கு நல்ல சந்தோ'ம். "காலில் தொட்டுக் கும்பிடவேண்டுமா?" எனப் பகிடியும் விட்டார். பெயரைக் கேட்பவர்கள் சொன்னவுடன் மீண்டும் "என்ன" என்று கேட்கிறார்களாம். அதுதான் சரி திருப்பிக் கேட்கத்தக்கதாகத்தான் பெயர் வைக்கவேண்டும் என்கிறார். வீட்டுக்குக் கஸ்தூரியின் நினைவாக "பாமா" என அழைப்போம் எனத்தொடங்கி, 'பாமா' 'பபா' என மருவத் தொடங்கியது. இதற்கிடையில் என் அம்மா குழந்தை பிறந்ததையும் டாக்டர் கனகராஜாவின் நயத்தலையும் இங்கிலாந்திலிருந்த என் சகோதரி அகிலாவுக்கு எழுதவே அவர் வீட்டுக்கு 'றோசா' எனக் கூப்பிடுங்கோ என்றெழுதிவிட்டார். வீட்டிலே போட்டி 'றோசா'வா 'பாமா'வா. பகலெல்லாம் அம்மம்மாவுடன் நிற்பதனாலும் அப்பு, அம்மம்மா, சித்திமார், மாமா என அவர்களது கட்சி பெரிதானதாலும் போட்டியில் றோசா எனும் பெயர் நிலைத்துவிட்டது. பெரும்பான்மைக் கட்சிதானே ஆட்சி.

றஷ்யன் அயேசன்கள் என வர்ணிக்கப்படும் பெண்புரட்சியாளருடன் ஒருத்தியான றோசா லக்ஸம்பேர்க் (1870-1919) பற்றி 'சோவியத்நாடு' பத்திரிகையில் வாசித்திருந்ததால் எனக்கும் றோசா எனும் பெயர் திருப்தியைத் தந்தது. றோசா லக்ஸம்பேர்க் ஜெர்மன் சோசலிச கட்சியை அமைத்து நீண்டகாலம் தலைவியாய் இருந்தவர், சோசலிசம் ஊடாகப் பெண் சமத்துவம் காணலாம் என்பதில் அசையா நம்பிக்கை கொண்டவள். இடதுசாரிகளான இக்கட்சிக்குள் அதிகமான பெண்களைச் சேர்த்து பலமும் வலுவும் பெறச்செய்தவள். முதலாம் உலக மகாயுத்தத்தில் ஜெர்மனி சேர்வதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து பலமுறை சிறை சென்றவள். அத்தகைய ஒரு போராட்டத்தில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டவள்.

இப்படி ஒருநிலை இலங்கையில் ஏற்படும் என்றோ அதில் என் பெண் இணைந்து கொள்வாள் எனவோ நான் நினைத்தே பார்க்கவுமில்லை. ஆசைப்படவுமில்லை. ஆனால் றோசா எனும் பெயர் திருப்தியைத் தந்தது. அக்காலகட்டத்தில் தேசிய ஒருமைப்பாடு எனும் மாயவலையில் சிக்கி - பேசியவர்கள் ரகசியமாகத் தம்மை வலுப்படுத்திக் கொண்டிருக்க - நாமோ தமிழ்த்தேசியத்தை மறந்து - அரசியல்வாதிகளின் பதவிகளுக்காகக் கொக்கரிக்கும் இனத்துவேசத்தையும் அலட்சியம் செய்து இரு இனமும் கைகோர்த்துத் தேசியவாதம் பேசித் திரிந்தோம். 77ம் ஆண்டுக்கலவரம் சிறிது மனமயக்கத்தைப் போக்க, மேலும் 83ம் ஆண்டு தமிழ்த் தேசியம் என்பதை உணரவைத்தது. அரசியலா? சரி ஒரு பின்னணியாக இருக்கட்டுமே.

ஆம்! றோசா அழகாக இருந்தது. மென்மணம் கமழ்ந்தது, இனிமையைத் தந்தது, கவிஞர் போற்றும் பெண்மையைக் கசிந்தது. இத்தகைய மென்மையினூடே ஒரு முள்ளையும் வளர்த்து வருவதை யார் அறிவார். ஆனால் கஸ்தூரிபாபா போலவே உள்ளத்தால் உரமேறிய உறுதிகொண்ட ஆழமான இன்னொரு பாபாவாகவே வளர்ந்து வந்தாள்.

என் இனிய றோசாவே! குடும்பத்தைத் துறந்து உன் இலட்சிய வேள்வியிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதித்துவிட்டாய். உனக்கு அங்கே தரப்பட்ட பெயர் துளசிகா. ஒரேஒரு அண்ணா துளசிராம் நினைவாக, துளசி, உனது ஈற்றெழுத்தையும் சேர்த்துத் 'துளசிகா' எனும் ஒரு புதிய பெயர். நீயே கேட்டிருக்கக்கூடும் அல்லது அவர்களே தந்தும் இருக்கலாம். சில வருடங்களின் பின் எல்லாப் பெயர்களும் தமிழ்ரூபம் எடுத்த காலத்தில் உன் 'கா'வும் அழிந்து உன் சிறு அடையாளத்தையும் தொலைத்தாய். றோசா மலரினும் மகிமை வாய்ந்த நோய்நொடிகளைத் தீர்க்கும் மூலிகையான துளசி உன் பெயராயிற்று.

துளசி திருமாலுக்குப் பிரீதியான மலர். துளசி இலைகள் விஷ்ணுவின் அர்ச்சனைக்கு உகந்தவை. அகில உலகையும் சங்கு சக்கரம் கையிற்கொண்டு காத்துவரும் காத்தற் கடவுளான எம்பெருமான் விஷ்ணுபகவானின் செயலில் ஒருசிறு துளியாய் தமிழீழம் காக்க உன்னையே அர்ப்பணித்தனையோ.

எவையெல்லாம் நல்லவை, எவையெல்லாம் பின்பற்றப்பட வேண்டியவை என்றெல்லாம் எண்ணினேனோ, எதிர்பார்ப்புக்கு மேலாகவே ஒரு உத்தமர் என் கணவனானார். எதிர்பார்ப்புகளின் வடிவங்களாக பிள்ளைகள் மூவர் வந்து நின்றனர். புரட்சிகரமான சிந்தனைகளின் மொத்தவடிவமாக யாருமே இல்லை என நினைத்தேன். அதிலும் தொட்டாற்சிணுங்கி - அப்பாசெல்லம் - மென்மையான படாடோபமற்ற அழகுவாய்ந்த பயந்தாங்கொள்ளி இவராவார். ஆனால் அடக்கமான உரம்பெற்ற உறுதிமாத்திரம் அந்த மென்மையான புன்னகையின் பின்னணியில் இருந்ததை யாம் எல்லோரும் அறிவோம். உன்னிடம் பயிற்சிபெற்ற ஓர் இளசு சொன்னதாம் "துளசி அக்காவா, சிரிச்சுச் சிரிச்சே வேலை வாங்கிப்போடுவா" என்று.

அப்பாவின் தொலைத்தொடர்பு, அம்மாவின் விரிவுரையாளர் பதவி, அக்காவின் மனோவைத்தியம், வாணியின் கம்யூட்டர், அண்ணாவின் பொறியியல் அத்தனை துறைகளிலும் அங்கே நீ ஆக்கிரமித்திருந்தாயாம். எமைப்பிரிந்த எட்டு வருடங்களிலும் உங்கள் இருப்பு, தொழில், வளர்ச்சி என்பன எதையும் உறுதியாக நாம் அறியவில்லை. காதில் விழுந்த புகழுரைகளை வைத்துக் கதைபண்ண முடியுமோ.

இன்றோ நீ ஒரு றோசாவாகவல்ல. மகிமைவாய்ந்த துளசியாக - வாடாமலராக - சமுதாய நோய்தீர்க்கும் மருந்தாக பசுமையான நினைவுகளை விடுத்துச்செல்லும் பசுந்துளசியாக - மறைந்து மணம் பரப்பும் மலராக மண்ணில் சாய்ந்தனையோ.

பெயர்களும் சக்தி வாய்ந்தன என நிரூபித்தாயே நல்லூர்க் கந்தனின் குகபாலிகா! உன் தெய்வத்தின் சூரன் போரையா நீ ஆடினாய் சேவலும் மயிலுமாக பகைவனின் ஆயுதங்கள் மலைமலையாக உன் தலைவனைச் சேரும்வரை பெரிய மடுவில் நீ சூரன்போர் செய்தாயா? 1997ம் ஆண்டு ஜூன் மாதம் 24ந் தேதி பிறந்தகடன் தீர்ந்ததெனக் களத்தில் பட்டாயா? எண்ணிப்பார்! என் மகளே! "எங்கோ நலமாக இருக்கிறாள் எங்கள் செல்வி. எமக்கெல்லாருக்குமே பிரதிநிதியாகக் களமாடுகிறாள் என்று பாசத்தின் துயரத்தோடும் பூரித்து நின்ற உன் அன்னையும் அருமை அக்காமாரும் அண்ணாவும் யானை நோய் பீடித்த விளாம்பழமாக - வெறுங்கோதாக -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்து போய் நிற்கிறார்கள். மாவீரர் ஆயிரம் ஆயிரம் அவர்களுள் நீயும் ஒருத்தி, ஆனால் எங்களுக்கோ நீ ஒருத்தியே ஒருத்திதான்! மாளுமோ துயரம்!

எம்மை விட்டுச் சென்ற எமது மகள் 1990இல் 3, 4 கடிதங்களையும் 1991இல் ஒரு கடிதமும் 1993இல் ஒரு கடிதமும் மட்டுமே எழுதியிருந்தார். அதன் பின்னர் 1996இல் குடாநாட்டைவிட்டு வெளியேறித் தமது வழக்கமான பணிகளிலிருந்தும் விடுபட்டு வேறு பணிகளில் ஈடுபட்ட காலத்தில் அடிக்கடி கடிதம் போடுவார்.

தனது பெரியக்காவின் பிறந்தநாளுக்கு வாழ்த்து அனுப்பிய கடிதம் 1996 நவம்பர் மாதம் கிடைத்தது. எத்தனையோ ஆண்டுகளின் பின். அதுவரை இடைக்கிடை என் சகோதரி, அவவின் ராணிச்சித்தி மூலமாக செய்தி பரிமாற்றம் மட்டுமே நிகழ்ந்து வந்தது. நாம் சுகம் விசாரித்து எத்தனையோ கடிதம் தங்கை மூலமாக அனுப்பினாலும் 3 - 4 மாதங்களுக்கு ஒருமுறை வந்து வாசித்து அறிந்து கொண்டு, தான் சுகமாகவும் பிஸியாகவும் இருக்கிறேன். கடிதமெழுத நேரம் இல்லை என்று சொல்லிச் செல்வாவாம். சாப்பிடவோ தேநீர் குடிக்கவோ மறுத்து விடுவாவாம். மோட்டார் சைக்கிளில் வந்தால் இறங்காமலே இரு வார்த்தை கதைப்பாவாம். ஜீப்பில் வந்தால் மட்டும் இறங்கி வந்து முற்றத்தில் நின்று பேசிவிட்டுப் போவா. முல்லைத்தீவுச் சமரின் முன்னரே எமக்கு முதலாவது கடிதம் வந்தது.

"அண்ணா நீங்கள் எனது புதிய வேலையைப்பற்றி எந்தக்கவலையும் படவேண்டாம். எந்த வேலையைச் செய்தாலும் விதி என்பது வரவேண்டும். நீங்கள் எல்லாரும் கடவுளைக் கும்பிட்டு கும்பிட்டு யமன் பாசக் கயிறை எறியவே பயப்படுகிறான்" எனவும் இன்னோரு கடிதத்தில் (பரந்தன் சமர்) "எல்லோரும் பகவானைப் பயங்கரமாகக் கும்பிடுகிறீர்கள் போல. அதுதான் என் அருகில் நின்றவளிடம் வந்த யமன் என்னிடம் வரப்பயப்படுகிறான்" எனவும் எழுதியிருந்தாள். நீ யமனை வென்ற சாவித்திரிதான், உன்னிடம் எத்தனை தடவை-தான் அவன் வந்தான். நீயோ உன் புத்தியால் அவனை வென்றே வந்தாய், ஏன் பெரியமடுவில் அவனை ஏமாற்ற முடியாமல் போய்விட்டது? கூறு மகளே கூறு.

பிறக்கும்போதே எவ்வாறு யமனுடன் போட்டி போட்டாய் என்பதை முன்பு பார்த்தோம். அதன்பின் உங்களுக்கு ஒன்றரை வயதிருக்கலாம். தத்தக்க பித்தக்க என தளர்நடை போடுங்காலம். அப்பா வெளியூர்களில் வேலை செய்கிறார். நாங்கள் அப்புவோடும் அம்மம்மாவோடும் அவர்களது பெரியவீட்டில் வசிக்கிறோம். நாச்சாரும் வீடும் எண் சார் வடிவில் முற்றமில்லாமல் அடுப்படிகள். இதனோடு சேர்த்து ட வீடு. அம்மாவின் தொழில் கருதித் தனிவீட்டில் வாழ்தல் வசதியின்மையால் கட்டப்பட்ட வீடு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. அதன் அருகே ஒரு புதிய வீடு கட்டிக் கொண்டிருக்கிறோம். அதற்காக புளியங்குளத்திலிருந்து கொண்டு வந்த மரங்களை இப்பெரியவளவின் ஒரு மூலையில் வைத்து பலகைகளாக இரு தொழிலாளிகள் அறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாவும் அக்காமாரும் பண்டத்தரிப்பு மகளிர் வித்தியாலயத்துக்குச் சென்றுவிட்டனர். அண்ணா பாலர் கழகத்துக்குச் சென்று மத்தியானமே வந்து விடுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அப்புவும் அம்மம்மாவும் மதியபோசனத்தின் பின் உங்களையும் தங்களோடு வைத்துக் கொண்டு சிறிது கண்ணயர்கிறார்கள். பத்மினி எனும் 12 வயதுச் சிறுமி உங்கள் துணிகளைத் துவைக்க கிணற்றடியில் நிற்கிறாள். தொட்டி நிறைய தண்ணீர் அடித்துவிடப்பட்டிருக்கிறது. கிணற்றடியைச் சுற்றி இளந் தென்னைகளும் கமுகுகளும். உன் நான்கு வயது நிரம்பிய அண்ணா ஒரு கமுகில் சாய்ந்தவாறே தேயிலை கறுப்பா பச்சையா என்று பத்மினியுடன் வாது போட்டுக் கொண்டிருக்கிறான்.

அம்மம்மாவுடன் படுத்திருந்த நீங்கள் எழுந்து விழுந்து விழுந்து நடந்து கிணற்றடிக்கு வருகிறீர்கள். மெல்ல வக்குக்குள் ஏறுகிறீர்கள். தொட்டியில் நீரை அலம்புகிறீர்கள். பத்மினி திரும்பி "றோசா தடிமன் வரும்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் திரும்பி "அம்மா வரட்டும் கேட்டுப் பார்ப்பம் கறுப்பாம் கறுப்பு" என்கிறாள். "இல்லை இன்று அப்புவைக் கேட்போம்" என்றார் அண்ணா. அண்ணா எது சொன்னாலும் சரியென்று தலையாட்டும் செல்லப் பாட்டனார்.

கிணற்றுள் தொப்பென்று சத்தம் இருவரும் ஓடிச் சென்று எட்டிப் பார்க்கிறார்கள். றோசா கிணற்றுக்குள். றோசா றோசா என்று கத்திய பாபு, பயத்தினால் கிணற்றுத் தொப்பிக்கட்டுக்கு அப்பால் குப்புறப் படுத்து மயங்கி விட்டான். பத்மினியோ "அப்பு அப்பு" என்று குழறிக் கொண்டே ஓடிப் போய் அவர்களிடம் சொல்ல அவர்கள் ஓடி வந்து கிணற்றை எட்டிப் பார்த்துவிட்டு மரம் அரிந்து கொண்டிருந்தவர்களை சத்தமிட்டு கூப்பிடுகிறார்.

றோசா நிமிர்ந்தபடி மிதக்கிறாள். நைலோன் சட்டை காற்றில் ஊதி நிற்கிறது. வாயுள் புகுவதனால் போலும் வாயையும் இறுக்கி மூடிக் கண்ணையும் இறுக்கி மூடி காலைக் கையை அடிக்காமல் அப்படியே மிதக்கிறாள். கயிறு தேடி துலாவில் மாட்டவோ மரத்தில் கட்டவோ என்று யோசனை 15 நிமிடங்களுக்கு மேலாகி விட்டது.

மெல்லக் கண்ணை முழித்துப் பார்ப்பதும் தண்ணீர்பட இறுக்கி மூடுவதுமாக இருக்கிறாள் றோசா. அப்போது மெல்ல மெல்ல கால் பக்கமாக இடுப்புவரை கீழே போகத் தொடங்கி விட்டது. கிணற்றுள் இறங்கும்வரை தாக்குப் பிடியா-தெனக் கண்டு ஒரு தொழிலாளி பட்டெனக் குதித்துவிட்டார். அவர் தூக்கவுமே இறுக்கிக் கட்டிப் பிடித்துவிட்டது குழந்தை. பிடிதான் அந்தப் பையன் முதுகைத் தட்டித் தட்டி ஆசுவாசப் பண்ணியும் வறுகிப் பிடித்தபடிதான்.

கதிரை கட்டி இறுக்கி என் அம்மா "றோசாம்மா வாங்கோ வாங்கோ" என்றழைக்க மேலே பார்த்தபடியே கதிரையில் ஆடாமல் அசையாமல் இருந்து அம்மம்மா தூக்கியதும் அம்மம்மாவை இறுக்கிக் கட்டித் தோளில் முகம் புதைத்து இரண்டு தரம் விம்மினாயாம். நீ அழவில்லை. அழுததை நான் கண்டதுமில்லை.

அன்புக் குழந்தையே! அந்தநேரத்தில் நீ கவிழ்ந்து விழுந்திருந்தால் காலன் கொண்டு போயிருப்பான். வாயைத் திறந்து அழுதிருந்தால் தண்ணீர் உள்ளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருக்கும். காலைக் கையை அடித்திருந்தால் நீருள் மூழ்க வேண்டியிருக்கும். துடித்துத் துள்ளாமல் இருக்க அழுது அரற்றாமல் இருக்கும் நிதானம் அப்பவே வந்துவிட்டதா? எப்படி பிறப்பிலேயே வந்த நிதானமான போக்கும் பூரணமான செயல்களுந்தான் கனடாவுக்கு விசா வந்துங்கூட தியாக வேள்வியில் குதிக்கச் செய்ததா? யமனை வென்ற துணிச்சலா?

மட்டக்களப்பிலே பத்மினியைப்போல வேறொரு பெண் ஒரேயொரு பிள்ளையான 4 வயதுச் சிறுமியுடன் ஓடி விளையாடியது. தடுமாறி பிள்ளை கிணற்றுள் விழுந்தவுடன் பயத்தில் ஓடிப்போய் ஒளித்து விட்டாளாம். வீட்டில் இருந்த தாய்க்கே தெரியாதாம். மூன்று மணித்தியாலங்களின் பின் மாலைத் தேநீர் வைத்துவிட்டு தண்ணீர் எடுக்க வந்த தாய்தான் கண்டுபிடிக்க நேர்ந்தது. நல்ல காலம் பத்மினி இந்த உதவியைச் செய்யாதிருந்தால் ஒரு நல்ல ஆசிரியரை இழந்திருக்கும். எமது தமிழீழம் ஒரு அருமையான போராளியின் சேவையை இழந்திருக்கும்.

வருத்தமென்று ஒரு நாள்கூட நீ வைத்தியசாலையில் இருந்ததில்லையே. நிதானமாக நீ எடுக்கும் முடிவுகளை நீ மாற்ற மாட்டாய் என்பதை நான் அறிவேன். வெளிநாட்டிலிருந்து இரு சட்டைகள் யார் யாருக்கு என பெயரிட்டு வந்திருந்தன. உனக்கு வந்த சட்டையை மற்றவர் வெகுவாக விரும்பினார். பிரச்சனை எழும்பாதபடி அதை அவைக்கே கொடுங்கள், மற்றதை நான் எடுக்கிறேன் என்றாய். "அன்புடன் உனக்கென்று அனுப்பப்பட்டதைக் கொடுக்க முடியாது" என்றுவிட்டேன் நான் அது உன்னிடமே இருந்தது. வெளியில் போகும்போது "அந்தச் சட்டையை போட்டிருக்கலாமே" என்பேன், "மறந்து விட்டேன் அடுத்த தடவை" என்பாய். அதுவும் என் நினைவில் மறைந்துவிட்டது. நான்கு வருடங்களின் பின் நீ வீட்டைவிட்டு நாட்டுக்காகச் சென்றதன் பின் உன் அலுமாரியில் அதை நான் காண்கிறேன்.

புத்தம் புதிதாக மடித்தபடியே இருக்கிறது. நான் குழறி அழுதேன். "பிறர் ஆசைப்பட்டால் கொடுத்துவிட வேண்டும் என்று எதையும் கொடுக்கும் வழக்கம் எங்கள் எல்லோரிடமும் ஓரளவு இருந்தது. ஆனால் என்றுமே உன் தாராள சிந்தை விட்டுக் கொடுப்பதை நான் அனுமதிப்பதில்லை அதற்காக இது எனக்குத் தந்த தண்டனையோ செல்வமே எனக்கண்ணீர் வடித்தேன். நிதானமாக எடுத்த முடிவுடன் படி தாண்டி விட்டாய். மீண்டும் இப்படிகளில் கால் வைக்க மாட்டாய் என்பதை இதுவும் உணர்த்தியது.

மீண்டும் உன்னைத் தேடி யமன் வந்தான் இந்திய இராணுவமும் எம்மவர் சிலரும் சேர்ந்த ஆட்சி நடக்கிறது. தெருப்பக்கம் ஆண்களை - பையன்களைக் கண்டாலே சூடு விழும். சில இளந்தாரிகள் றயில் பாதைச் சந்தியில் நின்று கதைத்துக் கொண்டு நிற்கின்றனர். சித்தி வீட்டை போன றோசா எதிர்ப்புற றயில் பாதையில் வந்து கொண்டிருக்கிறாள். திடீரென இந்தப் பையன்கள் எழுந்து ஓடத் தொடங்கினர். ஜீப் இரைச்சல் முதலாவதாக எம் வீடு இருப்பதால் ஓடி வந்து மதில் தாண்டிக்குதித்துப் பின்வளவால் ஓடுகிறார்கள். பரபரப்பாக வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. முற்றத்தில் கதிரையில் இருந்த அப்பாவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணி தாங்கிப் பிடித்து பரபரப்புடன் வீட்டுள் செல்ல உதவி செய்கிறா, "தையலக்கா வீட்டுள் ஓடு ஓடு" என நான் இங்கிருந்தே கத்தி வீடு உள்ளே சென்று விட்டேன். நீ நிதானமாக நடந்து வருகிறாய். மதிலால் பாய்ந்ததைக் கண்டவர்கள் எம் வீட்டுப் பக்கமாகவே சுடுகிறார்கள்.

கேற்றைத் திறக்கின்றாய் சன்னம் ஒன்று உன் தலையை மருவியபடி கேற்றில் 'டண்' என்ற சத்தத்துடன் மோதி விழுகிறது. நான் நெஞ்சைப் பிடிக்கின்றேன். நீ உள்ளே வந்து விழுந்து விழுந்து சிரிக்கின்றாய் "அவங்களுக்கு குறிபார்த்துச் சுட முடியுமோ? உங்கடை மாணவன்தான் விளாசிக் கொண்டு நிற்கிறார்" என்கிறாய். அந்தர நேரத்திலும் உயிர் மயிரிழையில் தவறிய அக்கணத்திலும் நீ பரபரப்படையாது சுடுபவர்கள் யார் எனவும் அவதானிக்கிறாய். இது மோட்டுத்தனமான துணிச்சல் எனக் கண்டிக்கிறேன்.

சீமெந்து தொழிற்சாலை குவாறிக்குத் தெற்கே மாவிட்டபுரம் கீரிமலைத் தெருவில் ஒரு சிறு வைரவ கோவில். பயிற்சி முடிந்து நீ வந்தபோது விரக்தியால் மட்டுமல்ல விட்டுக்கலைப்பாலும் நாம் கொழும்பு சென்றுவிட்டோம். வைரவ கோவிலடியில் மண்மூடைகளால் அரண் அமைத்து நீங்கள் சிலர் சென்றிக்கு நிற்கிறீர்கள் குவாறிக்கு வடக்கே காங்கேசன்துறை துறைமுகமும் இராணுவ முகாமும். அவர்கள் எந்நேரமும் புறப்பட்டுக் கொல்லங்கலட்டிக்குள் புகுந்து விடலாம் என்பதால் இதில் பாதுகாப்பு அரண் இவர்களின் நடமாட்டத்தை (தொலைகாட்டி மூலம்) அவர்கள் கண்காணிக்காமலா இருப்பார்கள்?

ஒரு நாள் மாலை ஆறுமணியளவில் ஒரு ஜீப் வந்து நிற்கிறது.

இலத்திரனியல் சம்பந்தமான ஒரு பயிற்சிக்குத் தெரிவாகியிருப்பதாகவும் உடனடியாக அழைத்து வரும்படி மேலிடத்து உத்தரவு எனவும் கூறப்படுகிறது. நண்பிகளிடம் விடைபெற்று அவர்களுடன் போய்விட்டார் துளசிகா. எட்டு மணியளவில் இராணுவ முகாமிலிருந்து இலக்குத் தவறாத குண்டுகள். நிரந்தரமான பிரியாவிடையாக்கிவிட்டனர் தோழிகள். யமன் இரண்டு மணி தாமதித்து விட்டானா?

றோசாவின் அத்யந்த பால்ய சிநேகிதிகள் நால்வர் கனடாவில் இருக்கிறார்கள். அவர்களுள் புனிதா, ஜனா என்பவர்களுக்கு றோசாவின் முகவரி கொடுத்திருந்தேன். பாசமாக அவவுக்கு கடிதம் போட்டிருந்தனர். நண்பிகளுக்கு பக்கம் பக்கமாக நகைச்சுவையாக கடிதம் போட்டிருந்தா றோசா. அவவின் புதிய தோழிமார் யாரெனக் கேட்டிருந்தார்கள் போலும். "இப்போ நண்பர் மிக அரிது கொஞ்சக் காலம் ஒரு செற் இருந்தம் நாலு வருடத்துக்கு மேலாக எங்களுக்குச் சிரிப்பதைத் தவிர வேறொன்றும் தெரியாது. வேலையும் பம்பலும் பஜாரும்தான். பின்னர் ஒவ்வொரு விளையாட்டிலும் ஒவ்வொருவராக போய்ச் சேர்ந்து விட்டார்கள். நான்தான் ஔவைப் பாட்டியிடம் நெல்லிக் கனி சாப்பிட்ட ஆள். எந்தவொரு விளையாட்டிலும் அவுட் ஆகாமல் இருக்கிறேன்".

இன்னொரு இடத்தில் தன் உயிராபத்து ஒன்றைப் பற்றி எழுதியுள்ளாள். "இன்னொரு பம்பல் 93ம் ஆண்டு நீச்சல் பழகினேன். 4 நாள் பழகி ஓரளவு பழகியாச்சு. 5ம் நாள் நெஞ்சளவு தண்ணியில் நானும் இன்னொரு தோழியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிக்கு நீந்திக் கொண்டு போனோம். நீச்சற்பிராக்கில் திசை தெரியாமல் ஆழ்கடலில் போயிட்டம். களைச்சுப் போய் காலை விட்டேன். அப்படியே கீழே-தான் திரும்பி மேலே கொண்டு வந்தது. அப்போது நீந்த முயற்சி செய்தும் முடியவில்லை. கத்தவோ கை உயர்த்தவோ வெட்கமாக இருந்தது. திருப்பி மீண்டும் கீழே கொண்டு போட்டது. அடுத்த தடவை மேலே வந்தபோது தண்ணிக்கு மேலே வரவேயில்லை. மூன்றாம் தடவை கீழே போனபோது நினைத்தேன் இதோடை சரி என்று. சிறிது நேரத்தில் இழுத்து எடுத்தனர். கலன்கணக்கில் தண்ணீரைக் குடித்து விட்டேன். என்னுடன் வந்தவளை இதிலும் மோசமான நிலையில்தான் காப்பாற்றினார்கள். இப்பொழுது முழங்காலளவு தண்ணிக்கு மேல் இறங்குவதில்லை. எல்லாரும் கடலில் விளையாட நான் மட்டும் கரையில் நின்று கொட்டாவி விடுவேன். சரியான பயம். இப்படி பல மறக்க முடியாத சம்பவங்கள்".

உம் தோழிகளுக்கு எவ்வளவு நீண்ட கடிதம். இதில்கூட யமனுடன் போரிட்ட கதைதானே. எத்தனை நாள் ஏமாற்றுவார் இந்நாட்டிலே என எண்ணிவிட்டானா அவனும்.

என் செல்வத் திருமகளே! நீங்கள் கடவுளை நம்பினீர்கள் பகவான் சத்யசாயிபாபாவின் பக்தையாக விளங்கினீர்கள். மீரா போல உருகி உருகி பஜனை பாடுவீங்கள். அத்தகைய நெஞ்சிலே உரமேற்றி விட்டார்களே நம் மண்ணைப் பறிக்க வந்த படுபாவிகள். காலனைக் கண்டு சிரித்தீர்கள், வா கை குலுக்குவோம் என்றீர்கள், கிட்ட வந்ததும் எட்டிச் சென்று சிரிப்பீர்கள். இன்னும் எத்தனை தரம்தான் வந்துவந்து தோற்றுப் போனானோ? பெரியமடுவில் மட்டும் ஏன்? ஏன்?

"வாளிப்பான உயர்ந்த உடற்கட்டு, செந்தழிப்பான கவரும் முகம், நல்ல உடைப் பொருத்தம். அப்படங்களைப் பார்த்தால் அவ போலில்லையே" என மேஜர் நித்திலாவின் தாயார் சொல்லிச் சொல்லி மாய்கிறாரே தன் சொந்தச் சோகங்களூடே என்ன செய்வோம். மங்கைப் பருவத்து அழகுத் திருமுகத்தை - வீரத் திருவுருவைக் காணும் பாக்கியத்தை இழந்த பரதேசியாய் போய்விட்டேன். ஜுலை மாதம் வருவேன் என எழுதியதும், ஒரு மாதம் முன்னதாகவே அம்மா சொல் கேட்காமல் ஓடிவிட்டாயே.

மண்ணுக்காகத் தன்னுயிரை ஈந்தாள் எனும் பெருமையைச் சுமக்கும் அருகதைகூட எமக்கில்லையே. நாம் கனடாவாசிகள் அல்லவா!

தாரமும் குருவும் தலையின் விதி என்பார்கள் அவரவர் பிறக்கும் நேரம் அல்லது கொண்டுவரும் கர்மவினைகளைப் பொறுத்தே தாய் தந்தை வீடு வாசல் செல்வம் முதலிய தனு கரண புவன போகங்கள் அமையும் என்பது இந்து சமய தத்துவம்.

ஒருவரின் தாரமாக வருபவர் அவர் ஆணோ பெண்ணோ மற்றவரோடு சேர்ந்து சுகதுக்கங்களில் பங்குகொண்டு தம் வாழும்நாள் பூரா சேர்ந்து அன்புடன் இயங்க வேண்டியவர். இருவருக்கும் ஒத்துவராவிட்டால் நாயும் பூனையுமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிபடவேண்டியதுதான். ஏனெனில் நாம் ஒருவன் ஒருத்தி கோட்பாட்டில் திளைத்தவர்.

இளமையிற்கல்வி வாழ்நாள் பூரா ஒருவனை வழிநடத்திச் செல்வது, அவனுக்கு அமைகின்ற ஆசிரியன் தன்னலமற்ற கருமமே கண்ணாக இருப்பவனாக இருந்தாலே முடியும். அக்காலத்தில் குரு சிஷ்ய முறையில் கல்வி நடைபெற்றதால் தாக்கம் அதிகமாக இருக்கும் ஆனால் இக்காலத்தில் வெவ்வேறு பாடங்களுக்கு வெவ்வேறு ஆசிரியராகையால் சில பாடங்களே பாதிக்கக்கூடும். ஆசிரியரின் அறியாமை அல்லது காழ்ப்பு உணர்ச்சி மாணவரை பாதிப்புக்குள்ளாக்காமல் டியூசன் வகுப்புகள் வேறு.

எங்கள் ரோஜா ஆரம்ப பாடசாலையில் மிக நன்றாகவே சாதனைகள் புரிந்தாள். போன முதல்நாளன்றே மானிப்பாயைச் சேர்ந்த கெங்காயி எனும் புதிய மாணவியின் நட்பு கிடைத்தது. பாடசாலைவிட்டதும் அழைத்து வரச்சென்றிருந்தேன். பூரணத்தையலக்கா "இதைப் பாரும் வீடு ஒன்று கீறச் சொன்னேன் கீறியிருக்கிறார்கள்" என்றார். சில நல்ல அழகாக நல்ல கூரை யன்னல் எல்லாம் கீறிச் சுத்தமாக இருந்தன. ஒன்றை எடுத்துக் கையில் தந்தார். அது அவ்வளவு நேர்த்தி இல்லை ஆனால் கற்பனை இருந்தது. வீடு ஒன்று கதவினூடே பல்ப் தொங்குகிறது. யன்னலுள் ஒரு ஆள், புகைப்போக்கியில் புகை போகிறது. கதவிலிருந்து வந்த படிகளோடு ஒரு வழி தொடங்கி ஒரு மரத்தடியில் முடிகிறது. படியில் ஏதோ ஒன்று, அது நாயாம்.

"யார் கீறியது தெரியுமோ தங்கடை வீடாம் இது வேப்பமரமாம் றோசாதான். என்ன கருத்துச் செறிவு அபாரமாக இருக்கிறது" எனப்புகழ்கிறார் பூரித்துப் போய்விடுகிறேன்.

"இது மற்றச் சகோதரங்களையும் உச்சும்" என்கிறார் சுப்பிரமணியம் ஆசிரியர். ஆரம்பப் பாடசாலையில் வகுப்புத் தலைவியாகவும் ஐந்தாம் வகுப்பில் மாணவர் முதல்வராகவும் விளங்கினார் றோசா. அனைவரது அன்புக்குப் பாத்திரமாகி பாராட்டுகளையும் பெற்றார்.

இடைநிலைப் பாடசாலைக்குள் நுழைந்ததும் இன்னொரு தாக்கத்தை அவள் எதிரிநோக்க வேண்டியிருந்தது. நட்புரிமை உறவுரிமைப் போர்வையில் எங்கும் குடும்பப் போட்டிகள் பொறாமைகள் இருப்பது சகஜம் அதுவும் இரு குடும்பங்கள் ஏதோ ஒவ்வொரு துறைகளில் செல்வாக்குப் பெற்றிருந்தால் இவர்களை நிம்மதியாக இருக்க விடமாட்டார்கள் சில விசமிகள். இதில் அதிக பங்குவகிப்பது அரசியல் வேறுபாடுகளே.

நல்ல ஆசிரியர் ஒரு பாடத்தை நடத்தும்போது மூன்று திறன்களைக் கையாள வேண்டும். ஒரு பாடத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு உபயோகிக்கப்படும் புத்தியாகும். கற்பிக்கப்போகும் பாடம்பற்றிப் பாடப்புத்தகத்தை மட்டும் நம்பியிராது பலவழிகளிலும் அதுபற்றிய அறிவைத் தேடி வைத்துக்கொள்ள வேண்டும். சில வகுப்புகளில் வாசிப்புப் பாடமாக போய்விடுகிறது. ஆசிரியர் புத்தகத்தைப் பார்த்து ஒரு வாக்கியத்தைப் பெலத்து வாசிப்பார். பின்னர் அதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியத்தைத்தான் விளக்கும் குரலில் திருப்பிச் சொல்வார். தெளிவான அறிவைப் பெற்று மாணவன் பாடம் பற்றிய சூழலில் ஒரு வினா கேட்டாலும் விடை இறுக்கக்கூடிய அளவுக்குத் திரட்டி வர வேண்டும். இந்த விடயத்தை மாணவனிடம் திணிக்காது எப்படி அறிமுகம் செய்து வகுத்து தொகுத்துக் கொடுப்பது? எப்படி அவன் புரிந்து கொண்டான் என்பதை அறிவது? என்பவற்றை முற்கூட்டியே திட்டமிட்டு வரவேண்டும். இதுதான் பாட ஆயத்தம் அல்லது கற்பித்தல் முறை.

"கொள்வோன் கொள்வகை யறிந்து அவன் உளங்கொள்" என நன்னூல் பவணந்தி முனிவர் கூறுவதுபோல் மாணவன் பற்றிய உளவியல் அறிவுத்-தேவை. அவனுடைய குடும்ப சூழல் பின்னணி, ஊக்கங்கள், உணர்வுகள் பற்றிய அறிவு உளவியல் அறிவு எனப்படும். கல்வி உளவியல் படிப்பதனால் மட்டுமல்ல அனுபவத்திலும் இவ்வறிவைப் பெறலாம்.

அநேகர் கல்வியுளவியலுக்குப் பதிலாகக் குற்றவியல் உளவியலை உபயோகித்து மாணவரின் மனோநிலையைத் துன்புறுத்துகின்றனர். விடய அறிவு இல்லாது தாம் கற்ற நெறி ஒன்றிருக்க தேவை நோக்கி வேறெரு துறையில் புகுந்து அதை யாரிடமும் கேட்டுப் படித்து வராது வகுப்பில் வந்திருந்து "இன்றைக்கு என்ன பாடம்" என்று கேட்டு அரட்டிச் சமாளிக்கும் ஆசிரியரும் உளர்.

வாய்ச்சவடாலும், வாக்குச்சாதுரியமும், அரசியல் செல்வாக்குமே பயிற்சிக் கல்லூரிக்குள் நுழையவைக்கும். படிக்காத பாடநெறிக்குள் புகவைக்கும். சுலபமாகச் சித்தி பெற வைக்கும். நினைத்த பாடசாலையில் வெற்றிடம் வரச் செய்யும் அத்தகைய காலகட்டம் ஒன்றிருந்தது. இத்துடன் குடும்பப் போட்டிகளும் சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் றோசாவின் ஆசிரியராக அமைந்தவரால் போராளி மனப்பான்மை உருவாக்கப்பட்டிருக்குமோ என்பதும் எம் சிந்தனை.

ஆறாம் வகுப்புக்கு வந்தவுடனேயே அவசரமற்ற ஒரு பொருளுக்காக எங்கோ அனுப்பப்பட்டபின் வகுப்பு தலைவி தேர்வின்பின் பெயர் அமுக்கப்பட்டுவிட்டது. இதனை தொடர்ந்து பல விடயங்களிலும் இருட்டடிப்பு. வலைப்பந்தாட்டமா இல்லத்துக் குழுவிலிருந்து சாதித்தாலும் கல்லூரிக் குழுவில் சாக்குப் போக்குகள் சொல்லப்பட்டு நிராகரிப்பு. வகுப்பில் முதலாவதாக வந்தாலும் ஏதோ ஒருவகை-யில் இரண்டாவது மூன்றாவது எனச் செய்யும் முயற்சி.

முதலாவதாக வர இருந்த மாணவியே (அவர் கனடாவில் உள்ளார்) என்னிடம் வந்து தான் கூட்டிப்பார்க்க இரண்டாவதாகத்தான் இருக்கிறது. றோசாவை ரீச்சரிடம் சொல்லும்படி கூற "அதற்கென்ன பரிசை வாங்கும்" என விட்டிட்டா என்றாள்.

எதற்கும் நியாயம் கேட்கும் யான் இதற்கு விடுவனோ. கணிதத்துக்கு 100க்கு பதிலாக 00 போடப்பட்டிருந்தது. "யாரும் 100 போடுவதில்லைதானே அதுதான் 00 ஆக்கும் என நினைத்தேன் என்பது சாட்டு. இன்னொரு தடவை நித்திரைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கத்தில் 92 புள்ளி 29 ஆக மாறிவிட்டுதாம். இன்னொரு தடவை 10ம் வகுப்புச் சொந்தக்கார பையனைக் கொண்டு கூட்டுவித்தோம். நல்லகாலம் நானும் ஆசிரியராக இருப்பதால் யாருக்கு 00 புள்ளிகள் எனப் பார்த்து இப்பிள்ளை 10 எடுக்குமா என யோசித்திருக்க வேண்டும் என அறிவுரை கூறி சமாதானம் அடைந்ததாக காட்டிக் கொண்டேன். "விளையாடும்போது நல்லாய் இளைக்குறா நல்லாய் முட்டை கொடுங்கோ. உங்களுக்கு எங்கை நேரம். இதற்கோ அலைஞ்சனிங்கள். றோசாவிடமே சொல்லி விட்டிருக்கலாமே" என ஐஸ் வைத்து அனுப்பிவிடுகிற ஆறாம் வகுப்பாசிரியரே 3 வருடங்களுக்கு தொடர்ந்து போகும் நிர்ப்பந்தம் வேறு.

கல்லூரிக்குப் பக்கத்தில் எங்கள் வீடு இருந்ததால் அவசியத் தேவைகளுக்கு ஆசிரியரோ மாணவரோ அங்கே வருவார்கள். தண்ணீர் குடிக்க, மாங்காய் புடுங்க, றோசாவுடன் விளையாட, கேட்டுப்படிக்க என வரும் இவர்கள் நான் நின்றுவிட்டால் வகுப்பு விடயங்கள் சொல்வார்கள். கேள்வி கேட்பாராம் றோசாவின் முறைக்கு விடை சொல்ல என எழுந்தால். "இரும் இரும் பிறகு வீடு தேடி வந்துவிடுவினம்" எனக் குத்தல் மொழி விடுவார்களாம்.

மற்றைய ஆசிரியர்களின் அன்பும் கணிப்புமே நொந்த நொர்ச்சத்துக்கு ஒத்தடங் கொடுத்திருக்கும். அவர்கள் வழியில் என்னைக் கண்டால் ஏகத்துக்கும் புகழ்ந்து தள்ளுவார்கள். என்ன நிதானம் அடக்கம் என்பர். நான் ஓதும் முறைப்பாடு சொன்னால் "எங்களுக்கு எல்லாம் தெரியும் உங்களுக்குள்ளே இருக்கிற போட்டி பொறாமைகள் அந்த குழந்தையைத்தான் தாக்குது. நாங்கள் வாய்திறந்தால் வன்னிக் காட்டுக்கல்லே போக வேண்டும்" என்பார்கள்.

ஒருநாள் "றோசாவை வேறு பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுங்கோ. தலையை அமர்த்தி கொண்டு படுத்திருக்கும் ஒன்றும் சொல்லுதில்லை" வாணி சொல்லினம் எங்கடை பிள்ளைகள் சந்தோசமாக போய்வர இந்த அனிச்சம் பூவுக்குதானா இத்தனை வேதனை. இப்படிப் பொருமுகிறதோ கேட்டுப்பார்த்தேன். "ஒன்றும் இல்லை" இரவென்றும் பாராமல் வகுப்பு மாணவி ஒருவரிடம் போனேன் அப்போது 7ம் வகுப்பு.

வகுப்பில் விடய அறிவுக் குறையால் பிழையான கற்பித்தல்களும் தடக்கொடுப்புகளும். அக்காமார் சரியாக சொல்லிக் கொடுத்தாலும் றோசாவுக்கு தடுமாற்றம் எது சரி எது பிழையென. பிரத்தியோகப் படிப்பு என் கொள்கைக்கு மாறானதல்ல. நான் க.போ.த சாதாரணம் முடியும்வரை ஒருவரையும் அனுப்புவதில்லை. ஆனால் இச்சூழ்நிலையில் பாலா மாஸ்டர் என ஒரு கெட்டிக்கார பல்கலைக்கழக மாணவனின் வகுப்புக்கு மேற்படி பாடத்துக்கு அனுப்ப வேண்டியதாயிற்று.

வகுப்பு வேலை ஒன்றை எல்லாரும் ஒரே மாதிரிச் செய்திருக்கிறார்கள். றோசாவிடம் எல்லாரும் கொப்பி அடித்திருக்கிறார்கள் எனக்கருதி அவளை எழுப்பிக் கேள்வி நடந்தபோது ரியுசன் எடுப்பது தெரியவந்திருக்கிறது. விளக்கும்படி கேட்க "மாஸ்டர் இந்த இடத்தில் பிழை என்று சொன்னவர்" என்று றோசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருக்கிறாள். அன்றிரவே மாஸ்டரை வீட்டுக்கழைத்து இனிமையாகப் பேசி "நான் யாரோவோ? பிழை என்றால் என்னிடம் வந்து சொல்லியிருக்கலாம். வகுப்பில் நீர் அதைச் சொல்லியிருக்கத் தேவையில்லை. றோசா அங்கை சொல்லி அவமானமாய் போச்சுது" என்று சொன்னாவாம்.

மாஸ்டர் தன்வகுப்பில் "அவ எவ்வளவு அன்பானவ, நான் சொன்னாலும் அதைச் சொல்லுவதோ? எனக்கு பெரும் வெட்கமாக போட்டுது" என்று சொன்னதோடு நோசாவுக்கு தனியாக "உம்மீது எவ்வளவு மதிப்பும் அன்பும் வைத்திருந்தேன் இப்படிச் செய்யலாமோ" என்று கேட்கவே றோசா அழுதவவாம். வகுப்பு முடிந்ததும் உடனே வந்து விட்டாவாம். பிறகு பையன்கள் நடந்ததைச் சொல்லி றோசாவில் பிழையில்லை என்று சொல்லவே "ஐயையோ இனி ரீச்சரும் என்னைக் கூப்பிடுவிக்கப் போறா" என்றவராம். றோசாவின் கவலை மாஸ்டரும் அவவை நம்பித் தப்பப்பிராயம் கொண்டு விட்டாரே என்பதும் அவ்வகுப்பில் படிக்கும் வேறு பாடசாலை மாணவிகளும் தன்னைப் பிழை என நினைப்பார்களே என்பதும்தான். "அம்மா இனி மிஸ்ஸிட்டை ஒன்றும் கேட்காதையுங்கோ" என்று கேவி அழுதாள் லேசில் கண்ணீர் வடிக்காத என் மகள்.

"இனி என்ன செய்தாலும் பரவாயில்லை நான் கேட்க மாட்டேன் நாய் நிலவைப் பார்த்துக் குரைத்தால் நிலவுக்கு நட்டமில்லை. இதை ஒரு சவாலாக ஏற்று மென்மேலும் உயர வேண்டுமே தவிர உன் மனதைப் பழுதாக்கக்கூடாது. இது எங்கள் பள்ளிக்கூடம். எம்முன்னோரின் காணிகள் - கட்டடங்கள் எங்கள் சேவைகள் இந்த உரிமையை யாரும் பறித்து விடமுடியாது. பத்தாம் வகுப்புவரை இங்கேதான் படிக்க வேண்டும். மற்ற ஆசிரியர்கள் உன்னோடு மிக அன்பாக இருக்கிறார்கள்தானே". றோசா "நான் இப்பெல்லாம் அவவைக் கணக்கெடுப்பதில்லை. பிள்ளையளுக்கு எல்லாம் விளங்கும். அனுதாபப்படுவார்கள் ஒரு பாட நேரம் முழுவதும் அடுத்த வகுப்பு ரீச்சரோடு கதைத்துக் கொண்டு நிற்பா. முரளிதரன் "பெல் அடிச்சிட்டுது" என்றுசொல்லி அனுப்பிவிடுவான். "இன்றைக்கு றோசா தப்பிற்றா. Friend மறந்துபோய் போட்டா" என்பான்.

நெருக்கடி சிறிது தளர்ந்ததும் நான் "சவாலே" என்றேன் அவள் "சமாளி" என்று சிரித்தாள். பாடசாலை மாற்றுவதில் எனக்கு வெறும் சுயநலத்தோடுகூடிய காரணம் இருந்தது. என் "இவர்கள் யார்" என்ற எதிர்ப்புணர்வும் பிடிவாதமும் சேர்ந்த ஈகோ ஒரு பக்கம், அடுத்தது வீட்டின் சிறப்புப் பிள்ளையை வெளியில் விட்டால் பொறுப்புவாய்ந்த வேறு ஒழுங்குகள் செய்வது ரொம்பக் கடினம். மா, பலா, வாழை, எலுமிச்சை, செவ்விளநீர், தண்ணீர் என பலவித கவர்ச்சிகள், யாரும் உத்தரவின்றியே உள்நுழைய வைக்கும் வீடு அலம்பிண்டு போய்விடும். இதுவானால் காலை மதியம் மாலை ஒரு மேற்பார்வை இருக்கும். என்னசெய்வது?

அவளுடைய மென்மையான உள்ளத்தைப் பண்படுத்தி எதையும் தாங்கும் சக்தியை அல்லது ஒரு போராட்ட சக்தியை வளர்த்தது. இத்தகைய ஆசிரியர்களும் அவர்களது றோசா வயதுடைய மக்களுமே எனச் சொல்லலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லகாலம் வீட்டிலே தகுந்த ஊக்கமும் உசாரும் கொடுக்கப்படாதிருந்தால் உளத்தாக்கமும் சோர்வும் அதிகரித்துப் பாடங்களில் பின்னடைவைக் கொண்டு வந்திருக்கும். வெறுப்பை உண்டாக்கியிருக்கும், நாளடைவில் மனநோய்க்கும் ஆளாக்கியிருக்கக்கூடும்.

எனவே சவாலே! எதிர்கொண்டு வெற்றிபெறு எனும் மந்திரம் தோல்விகளைக் கண்டு சோர்ந்துபோகவிடாது. வலைப்பந்தாட்டத்தின் கோல் போடத்தெரியாதென கணிக்கப்பட்ட பெண் குறிபார்த்துச் சுடுவதற்கு ஆசிரியராக இருந்தாளே பெருமைதான்.

'கண்ணீரில் நீராடும் நினைவலைகள்' என ஓர் அழகிய தலையங்கத்தை இக்கட்டுரைகளுக்கு வைக்கலாம் என எம் மைந்தன் போன்றதொரு மாணவன் தந்திருந்தார். அவருக்கு நன்றி, ஆனால் முதலாவது கட்டுரை வந்துவிட்டதனால் மாற்றமுடியவில்லை. பின்னொரு சந்தர்ப்பத்தில் அர்த்தம் பொதிந்த இத்தொடர் உபயோகிக்கப்படும்.

துளசிக்கு வாய்த்த ஆசிரியர் பற்றிச் சென்ற தடவை எழுதியிருந்தமை சிலருக்குப் பிடிக்காதிருந்திருக்கலாம். யாரும் பூரணமான மனிதர்கள் இல்லை அதில் நானும் புறநடையானவளல்ல. ஒரு கல்வி விரிவுரையாளர் என்ற முறையில் ஆசிரியர் இப்படி இருக்க வேண்டும் என்பதும் அதற்கு முற்றும் முரணாக நடக்கும் புல்லுருவிகளையும் குறிப்பிட்டிருந்தேன். அதுவும் சிலசமயங்களில் சிலகாலம் மட்டும் புலுடாவிட்டுத் திரிந்து பின்னர் திருந்தியும் இருக்கலாம்.

செங்கையாழியான் இதைத்தான் கல்விச்சுரண்டல் என ஒரு நாவலில் குறிப்பிட்டிருந்தார். ஆசிரியத் தொழிலைவிட மேலான தொழில் வேறெதுவுமே இல்லை. அதனால்தான் ஆசிரியன் இறைவனாக வைத்தெண்ணப்- படுகிறான். 'ஆச்சார்யதேவோ பவ' என்பது வேதமந்திரம்.

இத்தகைய ஒரு சூழலில் வளர்ந்த றோசாவுக்கு அவளது மென்மையான உள்ளத்துக்கு எதிர்மாறான ஒரு அனுபவத்தைச் சந்தித்தபோது ஆசிரியர் உலகத்தைப்பற்றியே கசப்பான உணர்வு ஏற்பட்டதில் அதிசயமுமில்லை அதுபற்றி அவளுக்கு ஏற்பட்ட உளத்தாக்கத்தால் வருந்திய ஒரு தாய் அவளின் மறைவில் அதை நினைத்து நினைத்து வேதனைப்படுவதிலும் ஆச்சரியமில்லை.

பத்தாம் வகுப்பில் க.பொ.த பரீட்சையில் அதிவிசேட சித்திகளும், விசேட சித்திகளும் பெற்று ஒரு பாடத்திலாயினும் சாதாரண சித்திகூடப் பெறாமல் தன் விவேகத்தை நிலைநாட்டியபோதுதான் பெற்றோர் மனமும் குளிர்ந்தது. அவளும் தன் கருத்துகளைத் தடையின்றித் தெரிவிக்கும் துணிச்சலையும் பெற்றாள். அந்தக் காலகட்டம் அரசியலில் திருப்பமும் அதனால் மாணவர் சமுதாயத்துக்குச் சுதந்திர உணர்வு மேலோங்கவுமான விழிப்புணர்ச்சியும் பரவத் தொடங்கியிருந்தது.

"இவ ஒருத்திதான் சாமம்சாமமாய் இருந்து விடைத்தாள் திருத்திறா எங்களோடை கதைக்கச் சிரிக்கவும் நேரமில்லை. எத்தனை பேர் தங்கடை சொந்த அலுவலைப் பார்த்திட்டுச் சம்பளம் எடுத்துக்கொண்டு போகினம் ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாலைப் பேப்பர் என்றால் என்ன, கொண்டாருங்கோ நான் திருத்தித் தாறன்" என்பதில் எனது வீட்டுக்கடமையும் நினைவூட்டப்படும். வாணி இந்திய சஞ்சிகைக-ளைக் கொண்டு வந்து வாசித்துக் கொண்டிருந்தால், "என்ன நீர் உந்தக் குப்பைகூளங்களை வாசித்துக் கொண்டிருந்தால் வகுப்பில் என்ன குப்பையை கொட்டப்போறீர்". இது 87ம் ஆண்டில். இதுபோன்ற கூற்றுக்கள் எனக்குமே மனவருத்தமாய் இருந்தது. வாணியும் ஒரு திறமையான ஆசிரியர் எனப் பெயர் எடுத்தவர். பாடத்துணைச் செயல்களான நடனம் நாடகம் பேச்சு என மேலதிக நே-ரமெடுத்துப் பழக்குபவர். றோசா இயக்கத்துக்குப் போனபின்கூட, முதலாவது கடிதத்தில் "வாணி உந்த வாத்தி வேலையை விட்டிட்டு வேறை வேலை பாரும்" என எழுதியவள். இவை பிஞ்சு உள்ளத்தில் ஏற்பட்ட வடுக்களின் விளைவே.

இப்போது எங்கள் றோசாவும் திறமையான ஒரு போதனை ஆசிரியராகத் திகழ்ந்தாள் எனவும் கேள்விப்படுகிறோம். கணினித்துறையில் அவளது அதிசிறந்த மாணவர்கள் முப்பது பேர் கூடிப் பாமாலை புனைந்து அஞ்சலி செய்தார்களாம் எனவும் கேள்விப்படுகிறோம்.

"எப்பொழுதும் வாயால் உதிர்க்கும் சொற்களைவிட அந்தச் சொற்களுக்குரிய செயல்களைத்தான் அவள் அதிகம் நேசித்தாள்" எனக் களத்துத்தோழி ஒருத்தி எழு-தியிருந்தாள். அதையே ஒரு சிறந்த ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும் என்பதன் இலக்கியமாகக் காட்டினாளோ.

"பிறந்தோம் வாழ்ந்தோம் செத்தோம் என்றிருப்பது எனக்குப்பிடிக்காது ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறு இலட்சியங்களும் வெவ்வேறு கொள்கைகளும் இருக்கவே செய்யும். நான் இந்தப்பாதையைத் தெரிந்தெடுத்துக் கொண்டேன் அதற்காகப் பாசங்களும் பந்தங்களும் அழிந்துபோகாது. தற்போது ஒரு சிறந்த இலட்சியத்துக்காக உங்கள் தொடர்புகளைத் துண்டித்துள்ளேன் அவ்வளவுதான்".

இது றோசா 29.05.91 இல் எழுதியது.

தேடிச் சோறு நிதந்தின்று - பல சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம் வாடித் துன்பமிக உழன்று - பிறர் வாடப் பலசெயல்கள் செய்து - நரை கூடிக் கிழப் பருவமெய்தி - கொடுங்கூற்றுக் கிரையெனப் பின் மாயும் - பல வேடிக்கை மனிதரைப்போலவே - நான் வீழ்வேனென்னு நினைத்தாயோ எனும் பாரதியார் பாடலுக்கிணங்க உன் வாழ்வை அமைத்துக் கொண்டாயோ அம்மா! வீட்டில் சாயி பஜனைகளும் பாரதி பாடல்களுமே அதிகமாக ஒலித்துக் கொண்டிருப்பதால் உனக்கும் ஓர் உத்வேகம் ஏற்பட்டதோ.

றோசாவுடன் சிறுவயதில் பழகிய ஆசிரியர் மாணவர் அனைவருமே அவளது ஸ்திரமான குணங்களை அறிந்து வைத்திருந்தனர். அவள் இயக்கத்துக்குப்போன நாட்களில் எத்தனை சனம் எங்கள் வீட்டில் - ஆறுதல் அளிக்க - விடுப்புப்புடுங்க - மேற்கொண்ட நடவடிக்கைகள் அறிய என, குடும்ப நண்பர்களாகிய அவர்களும் எம்முடன்தான். ஆனால் அந்த அந்த ஆசிரியரோ வெளிப்படையாகவே "றோசா சொல்லிக்கொடுத்து என்னை மண்டையில் போட்டிடுவான்களோ" என்று பயந்தபடியே சொன்னார். ஒரு அற்பபுழுவைப் பார்ப்பது போலவே நான் பார்த்தேன். ஒன்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பம் நோக்கி ஒரு தடவை தூற்றியும் மறுதடவை போற்றியும் இரட்டை வேடம் போடுபவர் அஞ்சியஞ்சியே சாவார். எங்கள் றோசா பொய் பேசமாட்டாள். கோள் சொல்லமாட்டாள். யாருக்கும் ஏதும் தீங்குவருமெனக் கண்டால் உண்மையும் சொல்லமாட்டாள், மௌனம் சாதித்துவிடுவாள். இது அவவுக்கே தெரியும்.

வீட்டில்கூட யாரும் செய்த பிழைக்கு இவள் செய்ததென நினைத்து ஏசினா - லுங்கூட பதில்பேசாது "இவ்வளவுதானா உன் ஆராய்ச்சி" என்பதுபோல் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போய்விடுவாள். அவள் அண்ணாவும் அப்படியே.

இந்த நிதானம், அன்புசெலுத்தும் தன்மை, உறுதியான நடை, ஆழம், நிர்வகிப்புத் திறமை அனைத்துமே அப்பாவிடம் இருந்துதான் பரம்பரை அலகுக-ளாகப் பெற்றிருக்கிறார்கள். எமது "வந்தால் வா போனால் போ" எனும் அவசர முடிவுகள், பரபரப்பு இவை அவளிடம் காணப்படாதவை.

றோசாவுக்கு ஐந்து வயதாக இருக்கும்போது அரசியலில் சில மாற்றங்கள் நிகழ்கின்றன. அதாவது எழுபதுகளின் முற்பகுதியில் தமிழ்காங்கிரஸ் தமிழரசுக்கட்சி இரண்டும் செல்வாக்குடன் விளங்குகின்றன. தமிழரசுக்கட்சியின் வேகம் போதாது எனக்கருதிய இளைஞர் பலர் பேரவை அமைக்கின்றனர். யாரோசிலர் அரசுக்கு நட்டம் விளைவிப்பதற்கு 'பஸ்'களைக் கொளுத்த வேண்டுமென நினைத்தார்கள் போலிருக்கிறது. குடாநாட்டில் இடைக்கிடை பஸ்கள் தீவைக்கப்படுகின்றன. அரசியல்பற்றி இங்கே ஆராய்வதல்ல. அப்பின்னணி எமக்கு எவ்வகையில் தொடர்புபட்டது என்பதே.

ஒருநாள், நல்லூர்க் கந்தனின் விழா நடக்கும் நேரம். ஆண்டு நினைவில் இல்லை. 1974 ஆகவிருக்கலாம். பெரிய சிரிப்புக்கிடமான முடிவு ஒன்று இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் எடுக்கப்பட்டிருந்தது. அதாவது இரண்டு இரண்டு பஸ்ஸாக ஒரே நேரத்தில் புறப்படுதல் வேண்டுமாம். ஒன்று மற்றொன்றைக் காப்பாற்றுமாம்.

அன்று ஆவணி 22ம் திகதி லீவில் வந்து நிற்கும் என் கணவர் பெரிய சப்பறத்தன்று அபிஷேகமும், தேரிலன்று பிரதிட்டையும் எடுக்கவேண்டும். எனவே முதல்நாள் குறிப்பிட்ட பொருள்கள் கோவிலில் கொடுக்கப்படுதல் வேண்டும். இரவுக்கு யாரையோ சாப்பாட்டுக்கு அழைத்திருந்தோம். காலைப்பூசை காணவேண்டுமாம் அவருக்கு. ஸ்ரீதர் தியேட்டரில் ஓடும் சிவாஜியின் 'தங்கப்பதக்கம்' பார்க்கவேண்டும் எங்களுக்கு. எல்லாரும் ஒன்றாகப் போதல் சாத்தியம் இல்லை. சிறுபிள்ளைகளோடு குளித்து முழுகி சில ஏற்பாடுகள் செய்து புறப்பட நமக்கு நேரமாகும். எனவே அவர் காரில் பொருள்களை ஏற்றிக்கொண்டு அதிகாலையில் போவதாகவும், நாங்கள் பஸ்ஸில் வந்து தியேட்டரில் இறங்கிநின்று சந்திப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

நாம் பஸ்நிலையத்துக்குச் சென்றபோது இரு பஸ்கள் புறப்படத் தயாராக நின்றன. விருப்பமானதொன்றில் ஏறுங்கள் எனக்கூறப்பட்டது. கெங்காயியும் தாய்தகப்பனும் முதலாவது பஸ்ஸில் இருந்து எம்மை அழைக்கவே நாங்கள் அதில் ஏறிக்கொண்டோம். முதலாவது பஸ்சுக்கு இரண்டாவது துணையாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது கொழுத்தப்படும்போது இரண்டாவதில் எல்லாரும் வந்து ஏறிக்கொண்டு போய்விடுவதாம். அப்போது மக்கள் காப்பாற்றப்படுவார்களாம். முதலாவது பஸ்ஸைக் கொழுத்துபவன் இரண்டாவதைப் 'போ' என்று விடுவானோ என்று நாம் சொல்லிச்சிரிக்க பஸ்கள் புறப்பட்டன. என்னோடு றோசா இருந்து யன்னலால் வேடிக்கை பார்க்க, பாபு மற்றப்பக்கத்திலிருக்க சசி, வாணி முன்சீற்றில் இருந்தார்கள்.

இணுவில் ஆஸ்பத்திரி கடந்து கந்தசாமி கோவில் சந்தியில் பஸ்கள் நின்றன. சைக்கிள் கடைக்குள் நின்ற ஒருவர் வெகு சாவதானமாக ஒரு சைக்கிள் செயினைக் கையில் எடுத்தவாறு பஸ்ஸை நோக்கிவந்தார் திடீரென யன்னல்க-ளுக்கு முறையான அடி. உடைந்து கொட்டுணும் சத்தம். மக்கள் பாய்ந்தடித்து வெளியே இறங்குகிறார்கள். ஒரு சிறுவாசலால் எப்படி? கெங்காயியின் அப்பா பாபுவை இழுத்துக்கொண்டு ஆட்களுக்கு மேலால் பாய்ந்து இறங்கிவிட்டார். இதற்கிடையில் எங்கள் பக்கத்துக்கு சுற்றிக்கொண்டு அடி வருகிறது. றோசாவின் முதுகில் பெரியதொரு கண்ணாடித்துண்டு அடித்து சட்டையைக் கிழித்துவிட்டது அடுத்த அடியின் முன்னர் அவளை மடியில் தள்ளி நான் மேலே கவிழ்ந்து கைகளால் தடுக்கிறேன். எனது இடது உள்ளங்கையில் நீளமான ஒருசரிவு வெட்டு. அக்கண்ணாடிகள் அவ்வளவு வெட்டாயினதானே சாடையான இரத்தக்கசிவு.

இறங்கிவிட்டோம். முதலே இறங்கியவர்கள் தாம் பார்த்தபோது மற்ற பஸ் சாரதி கண்டக்டர் பயணிகள் இறங்கி ஓடிவிட்டினமாம். வெறும்பஸ்தான் நின்றதாம். இதற்கிடையில் கெங்காயியின் அம்மா "கந்தண்ணை கந்தண்ணை" எனக் கூவிக்கொண்டே பஸ்சைச் சுற்றிச் சுற்றி ஓடுகிறா. இப்போது அதே நிதானமான நடையோடு அடுத்த பஸ்ஸின் கண்ணாடி நொருக்கப்படுகிறது. "யார் கந்தண்ணை" என்று கேட்டாலும் பதிலில்லை. "அப்பா தான்" என்று கெங்காயி சொல்லவே, மயங்கிய மனிசி ஒன்றைத் தூக்கிக்கொண்டு கடைக்குள் போனவர் என்று பாபு சொல்கிறார். ஸ்ரீஸ்கந்தராசாவைச் சிறுவயதில் கந்தண்ணை என்றுதான் கூப்பிடுவதாம். விவாகமாகி ஆறு வருடங்களானாலும் பதற்றத்தில் கந்தண்ணை என்று வந்திட்டுது என வெட்கப்படுகிறா. அந்த நேரத்திலும் நல்ல நகைச்சுவையாகப்படுகிறது எனக்கு.

பிள்ளைகள் பயந்துபோய் நிற்கிறார்கள் ஊரடங்குச் சட்டம்போல் ஒரே அமைதி. வீட்டை திரும்பிப் போவோம் என்கிறாள் சசி. மற்றவர்களும் வீடுபோய்ச் சேர்ந்தால் காணும் என்பதுபோலப் பார்க்கிறார்கள். சந்தோசமாகப் பொழுது-போக்க வந்து துன்பமான மனநிலையுடன் போவதா? அத்தோடு தியேட்டரில் அப்பாவும் காத்துக்கொண்டு நிற்பார். இது தெரியாது அந்தரப்படுவாரே எனக்கூறிப்பார்க்க 10.00 மணி, உடனே கார் ஒன்றை அமர்த்திக் கொண்டு சென்று "தங்கப்பதக்கம்" பார்த்தோம். பின்னர் வீடெல்லாம் "ரிவிங்கிள் ரிவிங்கிள் லிட்டில் ஸ்ரார்" தான். ஆயினும் இரவு பயங்கரக் கனவுகள் கண்டதாகச் சொன்னார்கள்.

அரசியலைப் பொறுத்தவரை எந்த ஒரு கட்சியோடும் நாம் இணைந்தோ பிணைந்தோ செயலாற்றியதில்லை. நாங்கள் "அரசியல்வாதிகளல்ல அரசியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகள்" என்றே எனது உயர்தரவகுப்பு மாணவருக்கு அரசியல் பாடநேரத்தில் கூறிக்கொள்வேன். கட்சி அரசியல் கற்பிக்கும்போது அவற்றின் கொள்கைகளை மட்டும் விளக்கிவிடுவேன். இதுபோன்றதொரு நிலையே வீட்டிலும் இருந்தது நாம் யாரையும் ஆதரிப்பதாகக் காட்டிக்கொள்வதில்லை. எல்லாக்கட்சியினரும் எம் நண்பர்களே. எங்கள் தகப்பனார் தமிழ் காங்கிரஸ், மாமனார் தமிழரசுக்கட்சி. அதனால் சிறு பூசல்கள். அது எமது மனதை வேதனைப்படுத்தும் தேசிய ஒருமைப்பாட்டில் எம் சிந்தனை செல்லும். 83ம் ஆண்டுடன் அதுவும் புஷ்வாணமாகிவிட்டது.

எமது வீட்டிலும் அரசியல் பேசப்படும் அது வெறும் இனப்பற்றுச் சார்ந்ததாக இருக்காது. சமயம் சமூகம் இலக்கியம் என்ற அடிப்படையில் அரசின் போக்குகள் பற்றி அமையும். அதனால் எமது பிள்ளைகளும் உலகம் பற்றிய ஒரு அரசியலைத்தான் கற்றுக் கொண்டார்கள். எனவே சத்தியாக்கிரகம், பா-தயாத்திரை, உண்ணாவிரதம் போன்ற கட்சி ரீதியான போராட்டங்களில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதனால் ஏற்படக்கூடிய உணர்ச்சி எழுச்சிகள் அனுபவித்ததுமில்லை. இந்த பஸ் உடைத்த சம்பவம்தான் அவர்கள் முதல்முதலாக நேரடியாகக் கண்டதும், அனுபவித்ததும், பயந்து உணர்ச்சிவசப்பட்டதுமாகும். ஆனால் நாம் பிற்காலத்தில் அனுபவித்த பயங்கரங்கள் அவலங்கள் எல்லாம் எத்தனை கொடுமையானவை.

எத்தனை Shock Proof அதிர்ச்சிகள் உட்புகாத பொருள்களாகி விட்டோம். நித்தம்நித்தம் சாவைக்கண்டும் கடந்தும் உள்ளம் மரத்துவிட்டது. எத்தனையோ மென்மையான உள்ளங்கள் எல்லாம் இன்றைக்குக் கொடுமையாளர்களின் உயிர்கள் பறிக்கப்படும்போது குரூரதிருப்தியையும் குரூரநகையையும் காட்டுகின்றன. பல கோணேஸ்வரிகளின் நிலையைக்கண்டு உயிர்களை உறுஞ்சும் சக்தி எமக்கில்லையே என ஏங்கவைக்கின்றது.

வாழ்க்கைப் படகில் இன்னும் எத்தனை அனுபவங்களைச் சந்திக்க - வேண்டுமோ, அந்த அனுபவங்கள் எவ்வாறு ஒருவனை மாற்றி -விடுகின்றனவோ, எப்படி உளவியல் தாக்கங்கள் புறச்சூழலால் அமைந்து ஒருமனிதனிடம் மறைந்துகிடக்கும் Primitive instinct எனப்படும் போர் ஊக்கலைத்தூண்டி வீரன் எனும் நாமத்தைப் பெற வைக்கின்றதோ பொறுத்திருந்து பார்ப்போம்.

1977ம் ஆண்டுக் கலவரத்தின்பின் ஏதோ நாம்தான் கொள்ளையுமடித்து கொலையும் செய்து தீக்கிரையாக்கினதுபோலப் பயங்கரவாதச் சட்டத்தை அரசு கொண்டு வந்தது. யாழ்ப்பாணப் பகுதிக்கு விசேட பாதுகாப்புக் கொமாண்டராக வீரதுங்காவை அனுப்பி 1979ம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்கிடையில் பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழித்துவருமாறு ஜே. ஆர். உத்தரவிட்டார்.

பலாலிக்கும் மாதகலுக்குமிடையில் அதுவரை ஓடித்திரிந்த ஜீப்புகள் யாழ்ப்பாணம் முழுவதும் பரந்து செயற்படவும், தம் பிரதசத்தில் சுதந்திரமாக நடமாடித்திரிந்த தமிழ் ஈழமக்களும் தம் மண்ணுக்கே அந்நியப்பட்டவர்களாய் அச்சத்துடன் வாழ்ந்தனர். வாகனங்களைச் சோதனையிடல், இளைஞர்களைப் பிடித்துக்கொண்டுபோய் சித்திரவதை செய்தல், ஆங்காங்கே எதுவித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைகளும் மேற்கொள்ளமுடியாத கொலைகள், கடைகள் எரிப்புகள்.

நாடக டிப்ளோமா முடிந்து வந்ததும் கணவர் களுத்துறைக்கு மாற்றலாகிப் - போகவும் நாடகம் ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு மாற்றலாகி நாம் போகவும் சரியாயிற்று. 1958இல் தனியார் கல்லூரியாக இருந்த மேற்படி கல்லூரி உதவி நன்கொடை பெறும் அரசாங்க பாடசாலையாகியதும், முதலாவது அரசாங்க ஆசிரியராகவும் முதலாவது பெண் ஆசிரியராகவும் செல்லும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது. கலவன் பாடசாலை, பெண்கள் பாடசாலைகளிற் கற்பித்த எனக்கு ஆண்கள் பாடசாலையிலும் கற்பிக்கும் அனுபவம் கிடைத்தது என் பாக்கியமே. அது ஒரு சுவையும் இனிமையும் கலந்த அனுபவம். இன்றும் பழைய மாணவர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் ஆளாகி உள்ளம் நெகிழ்ந்து போயுள்ளோம். றோசாவின் மறைவு கேட்டு உடனேயே குடும்பம் குடும்பமாக திரண்டு வந்து எமக்கு ஆறுதல் அளித்தமையையும் மறக்க முடியாது.

வார விடுமுறைகளின் பெரும்பகுதியைக் கழிக்கும் இடமாக விளங்கிய யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரியுண்டபோது எம்வீடு முழுவதுமே அழுதது. “கதை வாசித்துச் சொல்கிற அக்கா தப்பிவிட்டாவா” என்பதுதான் றோசாவின் முதற்கேள்வியாக இருந்தது. உடற்பசியைப் புசித்து அடக்கலாம் அறிவுப் - பசிக்குத் தீனி போடப்போடத்தான் அகோரமாகப் பசிக்கும். 1981ம் ஆண்டு 'கழுதையறியுமோ கற்பூரவாசனை' என்றாகியது.

1983இல் எமது குடும்பத்திலும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. சசி வைத்தியக் கல்வியில் இறுதியாண்டு, வாணி உயர்தரக்கல்வி முடித்து கணக்காளர் படிப்பு, பாபு சென்ற் ஜோன்ஸ் கல்லூரியில் உயர்தரம் முதலாம் வருடம், இராணுவக் கெடுபிடியினால் யாழ்நகரிலேயே நண்பர் ஒருவருடன் தங்கிப்படிக்கிறார். றோசா சாதாரணதரம் முதலாம் வருடம். கணவரும் களுத்துறையிலிருந்து காங்கேசன்துறைக்கு யாழ்ப்பாணத்தில் தலைமைத் தபாலதிபர் பதவியேற்று வருகிறார். முதுகல்விமாணி முடிந்ததும் விரிவுரையாளராக அழுத்கம ஆசிரியர் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டு, ஒருவருடம் கடமையாற்றினால் கோப்பாய்க்கு மாற்றல் தருவதாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் பணிப்பாளர் சொன்ன-தன்பேரில் மே மாதம் அங்கே போகிறேன். தினமும் யாழ். அஞ்சலகத்திலிருந்து டெலிபோன் அழைப்பு வரும். அன்றாடப்புதினங்கள் வரும். வீட்டில் இருப்பது போலவே இருக்கும்.

வாரவிடுமுறைக்கு யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு சமூகப் பங்களிப்புகளும் விரிவடைகின்றன. ஆடிவேல் விழாவுக்கு வசந்தகுமாரி வருகிறாவாம். வெள்ளிக்கிழமை மத்தியானமே எல்லாரும் கொழும்பு வந்துவிட்டோம்.

ராமகிருஷ்ண வீதியில் 17ம் இலக்க வீட்டின் மேல்மாடியிலேதான் நான் தங்குவது. கீழ் வீட்டில் எம்மூர் ஜெயபாலசிங்கம் கப்பல் ஏஜன்ட் இருந்தார். பஸ்ஸால் இறங்கி வரும்போதே அந்த வீட்டில் ஆள் நடமாட்டம் அதிகமாக இருக்கவே, என்ன விசேடம் என வினவினேன். யாழ்ப்பாணத்தில் 13 இராணுவம் பலியாகி - யுள்ளதாம். ராணுவம் வேட்டையாடத் தொடங்கிவிட்டதாம். இதுவரை 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியூசனுக்குப்போன பாடசாலை மாணவரைச் சுட்டுப்போட்டான்களாம் என தனபாலசிங்கம் (தம்பியார்) அறிவித்துள்ளாராம். தனம் பேசியபோது போஸ்ட் ஆபிசுக்குப் போனவரோ என்று கேட்டேன். ஊரடங்கு போட்டாச்சு போயிருக்க மாட்டார். இங்கேயிருந்து பிரேதங்களை அனுப்புகிறான்கள் உங்கே கவனமாக இருங்கோ. அண்ணை பற்றி 6 மணிக்குள் சொல்கிறேன் என்றார். அவர் யாழ் போனால் பிள்ளைகள் தனித்துப் போவார்கள் எனும் பயம் எனக்கு. மகேந்திரன் சொல்கிறார் 11 பேரா அப்ப இன்னமும் இரண்டுக்கு இடம் இருக்கு.

ஐந்து மணிபோல தனம் அழைத்து "அவர் வீட்டில்தான் நிற்கிறார் உங்களை தார்கா நகருக்கு உடனே போகட்டுமாம் எனத் தகவல்" என்றார். நான் நின்ற வீட்டுக்காரர் சாப்பாட்டுச் சாமான் வாங்கிச் சேகரிக்கிறார்கள். வசந்தகுமாரியின் கச்சேரிக்குத் தாம் போவதாக என்னையும் வரும்படி கூறினார்கள். சிறிது நேரம் யோசித்துவிட்டு ஆறுமணிபோல் கலாசாலைக்குப் புறப்பட்டுவிட்டேன். அழுத்கம சந்தியிலிருந்த விநாயகர் ஸ்டோர்ஸ் பெரியகடை முதலாளிக்கு நடந்த விடயத்தைக்கூறிக் கவனமாக இருக்கும்படி சொல்லிவிட்டு தார்காநகர் போய்விட்டேன்.

4 நாட்களின்பின் டெலிபோன் தொடர்புகிடைக்கத் தொடங்கியது உடன் புறப்பட்டுக் கப்பலில் வரும்படி. பாடசாலைகள் எல்லாம் மூடப்பட்டபடியால் நான் ஒருத்திதான் அங்கே. சிங்களக் காவலாளி என்னால் தனக்கும் ஆபத்து என மூஞ்சியைச் சுழிக்கிறான். பத்தா ஹஜியார் பொட்டுப்போட வேண்டாம் என்றும் தம்வீட்டில் வந்திருக்கும்படியும் கூறுகிறார். எங்கள் பிறப்பு வளர்ப்பு கொழுப்பு விடுமா? மரக்கறி வெட்டுகிற ஒருசிறு மேசைக்கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு அந்தப்பெரிய கட்டடங்களின் மத்தியில் தனியறையில் படுத்திருப்பேன். உதவிக்குப் படுக்கவந்த பாத்தும்மா (சமையலறைத்தொழிலாளி) வையும் அவன் வெருட்டி வரவிடாமல் தன்துவேசத்தையும் காட்டிக்கொண்டான்.

"முழுச்சம்பளத்தோடு மூன்றுமாத லீவு கிடைக்கும் உடனே வாரும்" எனக்கட்டளையே வந்துவிட்டது. ஹாஜியார் தன் குடும்பத்தோடு என்னையும் தலையில் முட்டாக்குப் போடச்செய்து பல தடுப்பு நிலையங்களையும் தாண்டிக் கொழும்புவரவே சகோதரன் அரவிந்தனோடு நான்கூரிக் கப்பலில் காங்கேசன்துறை வந்தோம்.

கப்பலில் வந்த ஒவ்வொரு பிரயாணியின் பின்னாலும் ஒரு சரித்திரமே இருந்தது. கேட்டுக்கேட்டு நெஞ்சுவெடிப்பதுபோல இருக்கும். கணவன் இறந்தது தெரியாமல் ஒரு மாதக் கைக்குழந்தையோடு அகதிமுகாமிலிருந்து ஏறிய பெண் தம்முள் யாரோ பேசக்கேட்டுக் கதறத்தொடங்கியவள் இரண்டு நாட்களாக உணவு தண்ணீர் இன்றிக் கதறுகிறாள். கப்பலின் நோயாளர் பகுதியில் மாவலித்திட்டத்தில் வேலை செய்த பொறியியலாளர்கள் உயிராபத்து நிலையில் இருக்கின்றனர். டாக்டர் இந்திரகுமார், தாய், மனைவி விஜயாம்பிகை, எல்லாம் இழந்த நிலையிலும் மாமி மருமகள் பணிப்போராட்டத்துடன் கியுவில் நின்று உணவு பெ-றுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறையில் நங்கூரம் இட்டதும் ஜெயா கப்டனுடன் கைகுலுக்கி என்னை விசாரிக்கிறார்.

எதுவித பாதிப்பும் இல்லாமல் வந்த காரணத்தால் கப்டனுடனும் நன்கு அறிமுகமாயிருந்தேன். எனவே அவரும் என்னைப்பற்றி ஜெயாவுக்குக் கூறிவிட்டு நமஸ்தே சொல்கிறார். பாபு பயணிகளை இறக்கி வத்தையில் ஏற்றும் தொண்டுக்காக கப்பலடிக்கு வந்திருந்தார். "என்ன உப்படி மெலிஞ்சு கறுத்துப் போனீங்கள்" என்கிறார். என்ன உணர்வு என்று தெரியாத, மகிழ்ச்சியும் சோகமும் கலந்த ஓர் உணர்வு கண்ணீரை வரவழைக்கிறது.

நடேஸ்வராக் கல்லூரிக்குள் ஜெயாவின் காரிலே சென்றிறங்கும்போதே றோசா ஓடிவருகிறாள். "மணிமாமா வந்திட்டார். நீங்கள் ஏன் சென்றது" என்ற கேள்வி. ஜெயா அங்கிள் கப்டனோடு பேசிக்கொண்டு நின்றவர் என்கிறேன். அவளை ஏற இறங்கப் பார்க்கிறேன். வளர்ந்து இருப்பதாகப்படுகிறது. இனி அவள் குழந்தையில்லை. கெதியாக வேலை வைக்கப்போகிறா என்கிறது என்மனம். "சீ தாய்க்கண் நாய்க்கண்" என்பார்களே என அந்நினைவை ஒதுக்கிவிட்டு எங்கே அப்பா என்கிறேன். அவருக்குச் சரியான வேலை றேடியோ message வந்து கொண்டேயிருக்கும். வேறு ஆட்களும் கிடைக்கவில்லை. இந்தக்கப்பலில் ஆபத்து நிலையிலுள்ள காயக்காரர் வருகிறார்களாம். அக்காதான் அந்த அறைக்குப் பொறுப்பு கேதீஸ் அண்ணாவும்தான். யாழ்ப்பாணத்திலிருந்து specialist டாக்டர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் அதுதான் அவ அந்த அறையில் நிற்கிறா.

வாணி பின்பகுதியிலிருந்து ஓடிவாறா. "எப்படியம்மா இருக்கிறீங்கள். வந்து சாப்பிடுங்கோ சனம் வரப்போகுது சாப்பாடு பங்கிடும் வேலை எனக்கு. விக்கியக்காதான் மேற்பார்வை சொல்லிப்போட்டு ஓடியந்தனான். அங்கே வாருங்கோ" என்றபடி திரும்பி ஓடுகிறா. நான் கப்பலால் வந்து இறங்குவேன் என்குடும்பம் ராஜமரியாதை தரும். அம்மா உயிர்தப்பி வந்திட்டா என்று கூடத்தாரும் சுத்தி நின்று புதினங்கேட்கும். தனிமையில் இருந்த அந்த நாட்களை விபரிப்பேன் என்றெல்லாம் கோட்டைகட்டி வந்த எனக்கு ஏமாற்றமாயிருந்தாலும் கடமையே கண்ணாக இருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியும்தான். எட்டி சசியை ஒருபார்வை பதிலுக்கு அவவின் வழக்கமான அரைப்புன்னகை. அப்பாவின் அறைக்குள் எட்டிப்பார்வை கண்களில் காதல்மின்ன ஒருபார்வை எழும்பிவர எத்தனிக்க அடுத்த தகவல் வருகிறது. "இருங்கோ வீட்டை போட்டு வாறேன்" என வெளியே வர ஏ ஜி ஏ பஞ்சலிங்கம் "புறு புறுக்காதையும் இவவந்திட்டா இவவிட்டை மைக்கைக் கொடும்" என்று யாரிடமோ கூற ஒருக்கால் வீட்டை போட்டு வந்திடுகிறேன் எனக்கூறி 'கேற்' பக்கம் திரும்ப "இப்படி வாருங்கோம்மா பள்ளிக்கூடக் கிழக்கு வேலி அழிஞ்சுபோய் கிடக்கு அதற்கூடாகத்தான் எல்லாச்சனமும் போய்வாறது" என்று சொல்லி என்னோடு ஓட்டி வருகிறாள். என்னைக் கண்ட சந்தோசம் அவள் துள்ளல் நடையில் தெரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதினங்களைச் சொல்லேன் என்கிறேன். அதெல்லாம் பிறகு உங்களைச் சிங்களக் காவலாளி அவமதிக்கிறான் என்று அப்பா சொன்னவர். அந்தப் படியாத மோடனுக்கு அத்தனை துணிச்சலோ அவனே காட்டிக் கொடுத்திடுவான் என்றுதான் நாங்களெல்லாம் சொல்லி அப்பா கட்டாயமாக வரச்சொன்னவர் என்கிறாள்.

அவளிடத்தில் பெரும் மாற்றங்களை நான் காண்கின்றேன். இவள் இன்னும் என் சின்னஞ்சிறு சிட்டு அல்ல. கூடுதலான சிந்தனை, கூடுதலான கதை, கூடுதலான பொறுப்பு, எதற்கும் மெலிதாகச் சிரிக்கும் அப்பாவித்தனமான பாவனை போய் கோபமும் வெறுப்புமாக முகபாவம் மாறிமாறி வருகிறது. குளித்துவிட்டு வாருங்கோ "கோப்பி போடுகிறேன்" என்கிறாள். காலையிலிருந்தே சுடுதண்ணி தயாராக இருக்கிறது கமலியும் பிள்ளைகளும் ஆட்டுக்கொட்டில் கூட்டிக்கொண்டிருக்கிறார்கள். "இவர்களுக்கும் அகதிச்சாப்பாடோ" என்று கேட்கிறேன். முதல் இரண்டு நாளும் இங்கேதான் சமைத்தனாங்கள் பாரத்சீமாவும் சிதம்பரமும் (கப்பல்கள்) வரத்தொடங்கிவிட்டன. சமையல் பள்ளிக்கூடத்திலை. விக்கியக்கா எங்களைச் சமைக்க விடயில்லை. எல்லாரும் அங்கை நின்று பாடுபடுகிறமாம் பிறகேன் அங்கை சாப்பிடலாமாம். இண்டைக்கு உங்களுக்கு நல்ல கொண்டாட்டம். உங்கடை அபூர்வ சகோதரி உங்களுக்காக இறைச்சிக்கறி சமைக்கிறாவாம். சுதன் கோழி பிடிச்சுக் கொடுத்தவனாம். ஒன்றல்ல இரண்டு என்று சொல்லிச் சிரிக்கிறாள். "அதற்கென்ன சிரிப்பு" "எங்களுக்கும் வேட்டைதானே. கமலம் மா இடிச்சு வறுக்கும் இரவுக்குப் பிட்டவிச்சு அ அ" என்று பாவனை புரிகிறாள். "பாபுப்பிள்ளை பஸ்ஸாலே இறங்கிறவையை விபரம் விசாரித்து எழுதுகிறது. இண்டைக்கு நீங்கள் வாறியள் என்று டியூட்டி மாத்தி அங்கை வந்தது. நான் அதிகமாக அக்காவோடைதான் நிற்கிறது. பழந்துணி சுடுதண்ணி என்று அப்பாவின் வேட்டி ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு போய்விடுவேன். பகிடி தெரியுமோ தலைத்தீபாவளி வேட்டியாம் கொட்டன் வேட்டி சரிகைக்கரை போட்டது. அடியிலை கிடந்தது கரையைக் கிழிச்செறிந்து போட்டுக் கொண்டுபோட்டன். அப்பாவந்து நல்ல ஏச்சு அம்மா பத்திரப்படுத்தி வைச்சவ ஏச்சு வாங்கப் போகிறாய் என்று" என்னைப்பார்த்து அசட்டுச் சிரிப்பு சிரிக்கவும் அம்புலன்ஸ் வண்டியின் சைரன் கேட்கவும் சரியாக இருந்தது. பேசன்ட் வருகுது நான் போறன் என்று சொன்னவாறே ஓடிவிட்டாள்.

எனக்கு ஒருவேலை இருந்தது கப்பலின் பொதுநல ஆபீஸர் சியாமளா கப்டனுக்கு என்னைப் பேராசிரியர் என அறிமுகம் செய்திருந்தார். கப்டனுக்கு நான் சொல்லித்தான் இலங்கை இந்தியாவின் பகுதியல்ல என்பது தெரியும். அவர் Professor என்றுதான் அழைப்பார் பம்பாய்வாசி உணவுவகைகள் பற்றிப் பேசியபோது இடியப்பம் புட்டு என்றால் தெரியாது. இட்லி தோசை கண்டிருக்கிறேன் என்றார். ஒரு இரவு அவர்களுடன் உண்ணும் சந்தர்ப்பமும் கிடைத்தது. எனது சிறுகதை ஒன்றை இந்தியாவில் தபாலில் சேர்ப்பதாகப் பெற்றுக்கொண்டார். எனவே கப்பல் உயர் உத்தியோகத்தர் ஐவருக்கும் இடியப்பம், சொதி, உருளைக்கிழங்கு பாற்பிரட்டல், கத்தரிக்காய் பொரித்த கறி அனுப்பும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. மாலையில் ஜெயாவிடம் கப்பலுக்குக் கொடுத்துவிட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர் ஒருவரின் உதவியோடு இத்தனையும் செய்யும்போது நான் றோசாவைப் பற்றியே கதைத்துக் கொண்டிருந்தேன். கடைசியாகக் கண்டு ஒன்றரை மாதத்துள் இப்படி ஒரு மாற்றமா என்று. இந்தக் கோதாரிக்குப் பிறகு இங்கை எல்லாரும் மாறிட்டினம் என்றார் மாமி.

இன்றும் “ஏன் நேரஞ்சென்றது” என்று றோசா ஓடிவந்த காட்சி முகத்தில் கொஞ்சம் உப்பல். நிறம் பெயர்ந்து நல்ல வெள்ளையாக உயர்ந்து காணப்பட்டாளல்லவா. இனிக் குழந்தையாக செல்லம் பொழிய முடியாது. “என்ன கொண்டு வந்தனீங்கள்” என்ற பழைய கேள்வி தொலைந்துவிட்டது. வேகமான பேச்சு. ஒரு சுறுசுறுப்பு. மின்னலடிக்கும் வேகத்தில் உணர்ச்சி மாற்றம். சிரித்துச் சிரித்துக் கதைக்கும் தன்மை எல்லாம் புதிதுபோலப்படுகிறது. வயதுக்கும் பருவத்துக்கும் ஏற்ற முதிர்ச்சி வருகிறதோ. என்னோடு சிரித்துக் கதைக்கும் பழக்கமேயில்லை செல்ல அழுகையோடுதான் பேசும். மற்றவர்களோடு முஸ்பாத்திவிடும்போது அதுவும் அப்பாவோடு கூடுதலாக நான் பார்த்து ரசிப்பதுண்டு. அப்பாவின் சின்னவயதுச் செல்லப்பெயரைத்தான் சொல்லிக் - கூப்பிடுவாள். அப்பாவுக்கு அது பிடிக்காத பெயர். “உங்கடை பொண்டாட்டி கனக்கச் சட்டங்கள் போடுறா” என என் எதிர்ப்பையும் தகப்பனிடம்தான் சொல்லுவா.

பருவமடையும் காலந்தானே கெதியாக நடக்கப் போகுதுபோல் எனத் தீர்மானித்தேன். நெல்லு கிடக்குது நல்லெண்ணெய் ஆனைக்கோட்டையிலே வாங்கி வைக்க வேண்டும் எனத்தீர்மானித்தேன்.

என் அன்பு றோசாவே, இன்று இதை எழுதும்போது மீண்டும் என்கண்கள் குளமாகின்றன. இரவு நான் வசிக்கும் தமிழ்க் கூட்டுறவு இல்லத்தின் 10வது ஆண்டுவிழா. கடந்த இருமாதங்களாக கண்டதையும் கற்பனை பண்ணி என்னை நானே வருத்திக்கொண்டு கண்ணீருகுக்கும் நிலையைக் கட்டுப்படுத்தியிருந்தேன். “வீட்டுக்குள் அடைந்ததுபோதும் நீங்களும் வாழவேண்டுமல்லவா பொதுக்கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுங்கோ” எனப்பல நண்பர்களும் என்னை நிர்ப்பந்திக்கிறார்கள். என் இலக்கிய உலகமும் என்னை விடுவதாயில்லை.

விழா நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது இந்துஸ்தானித் திரைப்படப் பாடலுக்கு அபிநயம் பிடித்த ஒரு பெண் யாவரையும் கவர்ந்தாள். இரவு விருந்தின்போது அந்தப் பெண்ணின் தாயார் வந்து “என்னைத் தெரிகிறதா” என்றாள். தொண்ணூறாம் ஆண்டில் ஒன்றன்பின் ஒன்றாக நேர்ந்த அதிர்ச்சிக-ளினால்போலும் எவரையும் அடையாளங்கண்டு கொள்ளாதபடிக்கு எனது மூளையின் சில “செல்”கள் செயலிழந்து போனமையை உணருகிறேன். எமது அயலவரான பூரணத்தின் மகள் எனது மாணவி தர்மவதிதான் அவள். ஊரவரைக் கண்டால் எனக்கு விசர் வாறது இடத்தையும் பாராது குழறி அழவேண்டும்போல. இந்தப் பலவீனம் எப்படி வந்தது?

சிறிதுநேரம் சிரித்து உல்லாசமாக இருக்கப்போன எனக்கு மேலும் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனை. ராஜன் குழுவினரின் வில்லுப்பாட்டு ஒரு போராளி சுதாவை எங்கள் கண்முன் நிறுத்தியது மகளே! எதிரிக்கும்பல் ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்ட பவநிரதன் எனும் வீரப்புலியின் தங்கை, அண்ணனின் இடத்தை நிரப்பச் சென்றவள் நீ அறிவாய் கடந்த இரு மாதங்களுள் அந்த சுதா, கிளிநொச்சியில் வீரமரணம் அடைந்தமையும் கல்லூரிவீதியை ஞாபகப்படுத்தின. காங்கேசன் தந்த வீரச் செல்வங்களின் ஒன்றன்பின் ஒன்றான மறைவு ஒரு விசித்திரமான மன அழுத்தத்தைத் தருகிறது.

ஹோமாரின் 'இலியட்' காவியத்திலிருந்து சில வரிகள் மொழிபெயர்த்துத் தருகிறேன்.

ஓ, மைத்துனனே, இந்த யுத்தத்திலிருந்து நாம் தப்பி வாழ்வோமா?

இறப்பேயில்லாத வயதே முதிராத ஒரு வாழ்வை என்றென்றும் வாழ முடியுமா?

இனிமேல் நான் போருக்குப் போகமாட்டேன் உன்னையும் சத்தியமாய் அனுப்பமாட்டேன். ஆனால் இன்றோ எம்மைச் சுற்றி

ஆயிரம் ஆயிரம் வடிவங்களில்

இறப்பு காத்திருக்கிறது. எவனொருவனாயினும் அதன் பிடியிலிருந்து

ஒளிக்கவும் முடியாது பாதுகாப்பாக வாழவும் முடியாது. ஹோமரின் 'இலியட்'

இவ்வார்த்தைகளுக்கு அர்த்தத்தைப் பரிந்து கொள்ளும்போதும் இங்கே சம்பவிக்கும் துர்மரணங்களைக் காணும்போதும் பெருமூச்சு விடாமல் இருக்கமுடியவில்லை.

இத்தனை உயிர்த்தியாகங்களுக்கும் ஒரு பலன் கிடைக்காமல் போய்விடுமா என்று மனதை ஆற்றி ஆற்றிக் கொண்டே எமது பிரதேசங்களைக் கோட்டைவிட்டுக் கொண்டிருக்கிறோம்.

மகளே, உயிர்த்தியாகம் உங்களை வருத்தாது ஆனால் காட்டிலும் மேட்டிலும் உண்ண உணவின்றி, குடிக்க நல்ல நீரின்றி, இருக்கவோ படுக்கவோ இடமின்றி, நாடோடிகளாய் திரிந்து, பயிற்சி எடுத்துப் பிரமாண்டமான போருக்குத் தயார் செய்யும்போதும், காயப்பட்டு வருந்தும்போதும் உங்கள் துயரங்களை நீங்களே அனுபவிக்கிறீர்களே அதுதான் தியாகமாகப்படுகிறது.

றோசா, வன்னிக்காட்டிலே சீறிக்கொண்டே யாருக்கோ கொத்தப்போன பாம்பை சாதாரண நாகம் என நினைத்து நீங்கள் அடிக்கப்போனதும் அது துள்ளிப்பறந்து நீங்கள் அருந்தப்பில் தப்பியதெனவும், எல்லாருமே தூரவாகச் சூழநின்று தடியாலே அடித்துக் கொன்றதெனவும் அது பறைநாகம் எனவும் ஐந்தடி உயரத்துக்குக்கூட துள்ளிப்பாய்ந்து கொண்டேயிருந்தது எனவும் அறிந்தேன்.

சாதாரண மட்டத்தேளைக் கண்டாலே அம்மா என அலறியடித்து ஓடிப்போகும் 18 வயதுக் குமரியே என் கண்முன் நின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்புக்குள் நுழைந்தாலே இல்லாத வீரம் எல்லாம் வந்துவிடுமோ. உலகத்தவர் உண்ணும் உணவெல்லாம் உண்டு பழகினீர்களாம். சில வேளைகளில் அகப்பட்டதைச் சாப்பிட்டு உயிர்வாழ வேண்டுமே என்பதற்காக பாம்பு இறைச்சியும் அவ்வகையில் ஒன்றாம் என அறிந்தோம். இதுவெல்லாங்கூட எம்வீரர்கள் செய்யும் மகத்தான தியாகம் அல்லவா. இதற்கெல்லாம் நாம் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்.

மகளே! நீ அன்று சொன்ன வார்த்தைகள் பேசாமடந்தை பேசிவிட்டாள் என்ற பிரமிப்பைத் தந்தாலும் அவற்றுள் சில காதுள் ரீங்காரம் செய்கின்றன. கழுத்திலே வெட்டுவிழுந்த பொறியியலாளரைக் குறிப்பிடும்போது "ஒரு செடியை வெட்டினாலே பாவம் போலிருக்கிறது. வேரோடு பிடுங்கும்போது, அது களை என்றாலும் தாவரம்தானே எனத்துன்பமாக இருக்கிறது. மனிசரை வெட்டுற சாதி - சீ அரக்கர்களே! வெறி நாய்கள்!"

அன்று காலையில்தான் உன்னைக்கண்டதும் என் வாய் சிரிக்கிறது. கண்ணில் நீர் முட்டுகிறது, பிரிவுத் தவிப்பு. கதையோடு கதையாக "என்ன அம்மா எல்லாரும் நல்லாக மெலிஞ்சு வருகினம் நீங்கள்தான் இரண்டு மடங்காகி வந்திருக்கிறியள்" என்று சிரிக்கிறாய். பார்க்கிறவர்கள் எல்லாம் என்ன கோலம் என்கிறார்கள் இவள் மட்டும் கள்ளி! சீண்டியா பார்க்கிறாய். நானும் விட்டுக்கொடாமல் "அகதியாய் வரும்போது உனக்கு ஒன்றும் கொண்டு வரக்கூடாதல்லவா. அதுதான் ஓசிச்சாப்பாடுதானே முழுவதையும் சாப்பிட்டுவிட்டேன்" என்கிறேன். இந்த உல்லாசப் பகிடி எனக்கும் உனக்கும் பிடித்திருந்தது.

அன்று மாலையில் உன் உணர்வுகள் மாற்றம் அடைந்துவிட்டன. உன் வெறுப்பும் மன உளைச்சலும், ஆத்திரமும் அன்றைய தினம் கள்ளம் அறியா உன் உள்ளத்தில் ஆறாத காயத்தை விளைத்துவிட்டன. செடிகளையே வெட்டத் துணியாத உன்னைத் துவக்கேந்த வைத்தது சூழ்நிலைதானே. பரம்பரையிலும் பார்க்க மனித நடத்தைகளில் சூழ்நிலையின் தாக்கம் அதிகரித்துவிட்டதா? உளவியலாளரே! கூறுங்கள்.

தொடர்ந்து வந்த நாட்களில் இனத்துவேசமும் வளர்வதாகப்படுகிறது. ஏனெனில் ஏதோ ஒரு பண்டிகைக்கு சிறீனி பெரராவும் பத்மினி குணரட்னாவும் வாழ்த்து அட்டைகள் போடுகிறார்கள். இவர்கள் எமது பல்கலைக்கழக நண்பர்கள் சாதாரண கல்வியதிகாரியின் மனைவி ஒருத்தி எனது மாற்றலுக்காக உதவி புரிபவர். மற்றவள் பொலிஸ் கணவனை இழந்த விதவை ஆசிரியை, தமிழ் டாக்டர் ஒருவர் இதய அறுவைச் சிகிச்சை செய்து ஒரே சகோதரனைக் காப்பாற்றியதற்காகத் தமிழர்மீது அபிமானம் உடையவர். கடிதத்தை வாங்கி வரும்போதே அப்பாவுக்கு சிரித்துச்சிரித்தே கூறுகிறாய் "எங்கடை அம்மாவின் தகுதிக்குத் தமிழரிலை ஒருத்திகூட நட்பாக இருப்பதற்கு அருகதை அற்றவர்கள். அவவுக்குக் கல்வி மந்திரியின் மனைவி, பொலிஸ் கமிஷனரின் மனைவி போன்ற சிங்கள நண்பர்தான் தகுதியாம்" என வேண்டுமென்றே சருவுகிறாள். மகளின் புத்திசாலித்தனத்தை மெச்சுவதுபோல அப்பாவும் "ஹா ஹா" என ஆனந்தமாகச் சிரிக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள்தான் பிள்ளைகளைக் கெடுக்கிறது" எனும் வழக்கமான குற்றச்சாட்டோடு கடிதங்களைப் பெற்றுக்கொள்கிறேன். "அவைக்கெல்லாம் வெட்கமில்லையாக்கும் தமிழருக்கு 'காட்' அனுப்ப" என்று உன் வெறுப்பைப் பிரதிபலிக்கிறாய்.

நீ இயக்கத்தில் சேர்ந்தபின் முதல் கடிதத்தில் எழுதியிருந்தாய் "நான் போராட என்றே பிறந்தவள் என்பதை சிறுவயதிலிருந்தே உணர்ந்தவள். எதுவிதமான உலக ஆசைகளுக்கும் இடங்கொடுக்காமலே அடிமை விலங்கை உடைத்தெறியப் பாடுபடவேண்டும் என ஆசை கொண்டேன். வளர்ந்து வரும்போது இயக்கங்களை ஆராய்ந்தேன். பிடித்தமான ஒன்றுக்கு மூன்று வருடங்களாகச் சிறுசிறு சேவைகளைச் செய்து வந்தேன். போராளியாக வேண்டுமென்பதுதான் என் நீண்டநாள் ஆசை. உங்களுக்குத் தெரியாமலும் இருக்கலாம். தெரிந்தும் தெரியாததுபோல நடந்திருக்கலாம். நீங்கள் அழுது கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். நான் இயக்கத்துக்காகவே பிறந்தவள், இயக்கத்தைத் தவிர வேறு எந்த interest உம் இல்லை. என் இலட்சியத்தைப் புரிந்து கொள்ளுங்கள் please"

ஆம்! உன் குணங்குறிகள் உன் தியாகசிந்தையைத்தான் காட்டிநின்றன. உன் சித்திமார் "நீ என்ன சந்நியாசியோ" என்பார்கள். தோழிமார் உனக்குத்தரும் ஆடம்பரப் பொருள்களை அனுபவிப்பார்கள். "எனது நகைகளை வாணிக்குக் கொடுத்துக் கல்யாணத்தை முடியுங்கோ. அவை எனக்குத்தேவையில்லை" என்பாய், ஒருநாள் "எட்டுச் செவ்வாய் என்று சொன்னீங்கள்தானே. நானும் என்காலில் நிற்பேனே தவிர இன்னொருவன் நிழலில் நிற்கமாட்டேன்" என்பாய். இன்னொருநாள், "காந்தி ஏதோ சொன்னார் கலியாணம்தான் ஒரு பெண்ணுக்கு முடிந்த முடிவல்ல" என்று பேசுவீர்களே, அந்த ஒருத்தியாகத்தான் நான் இருப்பேன் என்பாய் மறுநாள். இவையெல்லாம் குழந்தைப்பிள்ளை ஆற்றல் என நினைத்தேனே தவிர ஒரு சின்னப் பெண்ணின் இலட்சியங்கள் என எண்ணத் தவறிவிட்டோம். 83ம் ஆண்டுக்கும் 86ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்திலேதான் இவை இதுவும் ஒருவகை teen age fancy (கட்டிளமைப் பருவக்கனவுகள்) என்று நினைத்துவிட்டோம். உன் வயதில் என் கருத்தில் நிறைந்த காந்தீயம் எவ்வளவு பலமான இலட்சியமாக நின்று நிலைத்தது. ஏன் அதை ஒப்பிட்டு உன் சிந்தனைகளும் கூற்றுக்களும் வலுவான இலட்சியமாக இருக்கக்கூடும் என்ற எண்ணம் எனக்கு வராமல் போய்விட்டது. பாசம் கண்ணை மறைத்ததா?

"அம்மாவின் கண்களுக்கு எதுவும் தப்பாது ஆனால் அவ அறிந்தும் அறியாததுபோல் நடந்துகொள்கிறா என்றே நினைத்தேன்" என ராணிச்சித்திக்குச் சொன்னீங்களாம். ஆம் என்குஞ்சு! நான் அறிவேன் உமது வலுவான ஆதரவை - சிறுசிறு மனிதாபிமானமான உதவிகள் செய்வதை. பிள்ளைகளுக்குச் சுதந்திரம் கொடுப்பதுபோல கொடுத்து அவர்களையறியாமலே இரண்டுங்கெட்டான் பருவத்திலே முழுக்கண்காணிப்புள் வைத்திருப்பேன். ஆனால் பதினேழு பதினெட்டு வயதில் இனி அவர்கள் தம்மூளையை உபயோகிக்கக்கூடிய வல்லமை பெற்றுவிட்டார்களென அவர்தம் சுதந்திரத்தை மதித்து நடப்பேன்.

வீட்டிலிருக்கும் ஒரேயொரு பிள்ளை 1986களில் குடும்ப பாரத்தை அவளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தல்லவா சுமக்கிறாள். சிலசமயங்களில் அவளா நானா தாய் எனும் சந்தேகம் வரும். சில பிரச்சனைகளுக்குத் திசை தெரியாது தடுமாறும்போது அவளது புத்திக்கூர்மை உடனடியாக நிவாரணம் தருகிறது. அதுமாத்திரமல்ல அப்பா நோயாளியாகி எம் இருவரிலும்தான் தங்கி வாழ்கிறார். அப்பாமீது அவள் செலுத்தும் அன்பும் அக்கறையும், வீட்டைத்துறந்து காட்டுக்குச் செல்லும் மனவுறுதியைக் கொடுக்காதெனவே நினைத்தேன். அதனால் இப்படி ஒருநிலை வருமெனக் கடைசிவரை நான் சந்தேகமே கொள்ளவில்லை.

1983 கலவரத்தின் பின் பலாலி ஆசிரியர் கலாசாலையில் தற்காலிகக் கடமை புரிந்தபின் நவம்பர் மாதத்தில் மீண்டும் அழுத்கம. மூன்றுமாத சம்பளம் பெறுவதற்காக நாங்கள் விரிவுரையாளர் நால்வரும் களுத்துறை கல்விக்கந்தோர் வந்து பட்ட அவமானங்கள் சொல்லமுடியாது. முன்பு கதிரையில் இருத்திக் கௌரவமாக நடத்தப்பட்ட நாங்கள் அன்றும் தொடர்ந்து மூன்று நாட்களும் அங்கும் இங்குமாக அலைக்கழிக்கப் -பட்டோம். உதவிக்கு வந்த முஸ்லிம் ஆசிரியருக்கு ஏச்சுத்தான் 3ம் நாள் S L E A S III என எமது தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தரிடம் அனுப்பப்பட்டோம், இருக்கும்படி அவர் சொல்லாததால் கோபமடைந்த நான் "மன்னிக்கவும்" என்று சொல்லி என்பாட்டிலேயே கதிரையில் இருந்ததோடு மற்றவர்களையும் இருக்கும்படி சொல்லி அவர்களில் இருவரை அமர வைத்தேன். முஸ்லிம் ஆசிரியர் அந்தரத்துடன் நெளிகிறார். கூட்டிவந்த கிளாக்கர் சிங்களத்தில் என்னைப் பார்த்துப்பார்த்து அலுவலருக்கு ஏதேதோ சொல்கிறார்.

நான் அந்த அலுவலருக்கு அன்பும் கண்டிப்பும் நிறைந்த ஒரு தாயின் குரலெடு-த்துப் பதமாக, மூன்று நாட்களாக அலைவதை விளக்கினேன். நாங்களும் மனிதர்தான் எங்களை வருத்தி என்ன பிரயோசனம் எப்படிப் பொறுப்பாளர் ஆகலாம் கொழும்பில் யாரோ நடத்திய வன்முறைச் சம்பவங்களுக்காக நாங்கள் உங்களை கோபிக்கலாமோ என விளக்கவும், அவருக்கு தன்னை நம்பி நான் சொல்வதாக முகங்கனிந்து வந்தது. அதனால் அதிலேயே நாம் இருக்க ஒரு மணித்தியாலத்தில் ஓடியோடி வேலை நடந்து 'செக்' கையில் வந்து சேர்ந்தது.

வரும்போதுதான் எங்கள் விரிவுரையாளர் சொன்னார் "துணிச்சலைப் பாருங்கோ இந்தப் பொம்பிளைகளுக்குப் புலிக்குட்டி பிறக்காமல் வேறென்ன பிறக்கும்" என்றுதான் அவன் ஏசினானாம். முஸ்லிம் ஆசிரியரும் அதையே சொல்லி "இவதான் ஞாயம் பேசுறவ Head Office உக்கு அறிவிக்கப்போறன் உன்ரை பேரென்ன என்று என்னைக் கேட்டவ" என்றாளாம்.

இதை வீட்டில் சொன்னபோது இனிப்புலிக்குட்டியைப் பெறக் காலம் போச்சு என்று அப்பா சிரித்தார். அப்படி என்றால் பாபுவைத்தான் அனுப்பவேண்டும் என்று நான் சிரித்துக்கொண்டே சொல்ல அப்பா கையை ஓங்குகிறார். "பகிடிக்குத் தன்னிலும் சொல்லக்கூடாது. அவன் படிக்க வேண்டும்" என்கிறார். இன்று அதை நினைத்துப் பார்க்கிறேன். என் வயிற்றிலிருந்து பெண்புலியின் சீற்றம் மிகுந்த உறுமல் கேட்கிறது. அந்தச் சிங்களவனின் நாவில் சரஸ்வதியா உறைந்தாள். முதிர் கன்னியரான மற்றையவர்களிடம் பலிக்காத அவன் வாக்கு என்னளவில் பலித்துவிட்டது. புலிக்குட்டியின் தாய் எனப் பூவுலகம் போற்றுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் ஊமையாய் அழுகிறது. ஆம்! உன் கடிதத்தில் அண்ணாவுக்கு எழுதினாய் "வீட்டுக்கொருவராயினும் நாட்டைக் காக்கப் போகவேண்டும்தானே. ஆனால் நீங்கள் ஒரேயொரு ஆண்பிள்ளை குடும்பத்துக்கு நீங்கள் அத்தியாவசிய தேவை. ஆதலால் நான் முந்திக்கொண்டேன் அண்ணா! மன்னித்துக் கொள்ளுங்கள்".

ஒருபாசம் மிகுந்த தங்கை. அண்ணனை அவனிடம் கொழுந்து விட்டெரியும் கோபக்கனலை எவ்வாறு ஆற்றுகிறாள். அவளது ஒவ்வொருசெயலும் நன்கு ஆராய்ந்து தெளிந்து வழிவகை சொல்லித் தன்வழியில் சென்றதை இது காட்டி நின்றது.

1984ம் ஆண்டு மணலாற்றுக் குடியேற்றமும் தமிழின அழிப்புகளும் ஒருபுறம் நடந்து கொண்டேபோக யாழ்ப்பாணத்திலும் கோயில்கள், வங்கிகள், அஞ்சலகங்கள் முதலானவற்றில் கொள்ளைகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு எமக்கும் எங்கள் குடும்பத்துக்கும் ஒரு சோதனையான ஆண்டாக விடிந்தது.

எம் குழந்தாய், இன்றும் நீ எனக்குக் குழந்தைதான். ஏனோ நீங்கள் எம்மைவிட்டுப் போகும்போது 21 வயது பூரணமான ஒரு முழுப்பொறுப்பு வாய்ந்த பெண் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. என்றோ ஒருநாள் 17 வயதில் என நினைக்கின்றேன் நீ விளையாட்டுப்போல் சொல்கிறாய் "அப்பா நான் இயக்கத்துக்குப் போகப்போகிறேன்" கேட்டுக்கொண்டிருந்த நானும் கொஞ்சம் சீரியஸாக வாக்குரிமையும் வராத வயதுக்காரியைக் கொண்டு போட்டான் எனத்தலைவர் மீது வழக்கு வைப்பேன் என்கிறேன்.
சிரித்துக்கொண்டே சொல்லியிருக்கலாம். அப்ப எத்தனை வயதாகவேணும் என்று கேட்கிறாய். 21 வயதாகவேணும் என்கிறேன் அதற்காகத்தான் காத்திருந்தாயா அல்லது காலங்கனிந்து உன் பொறுப்புகள் நீங்கும் நாளைக் காத்திருந்தாயா என இன்றும் குழம்பித்தவிக்கிறேன்.

அப்பாவின் நோயுடன் தொடங்கிய குழப்பம் என் சீரிய சிந்தனைகளைப் பாதித்து அடுத்தது என்ன என அன்றாடப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுவதிலேயே நிலைக்கத் தொடங்கிவிட்டது.

அன்று சுமையாக தெரியாத சுலபமாகத் தீர்வுகளைக் கொண்டு செலுத்திய விடயங்களெல்லாம், இன்று ஆய்ந்து ஓய்ந்து அலசும்போது இதையெல்லாம் எப்படித் தாங்கினோம் எப்படித் தீர்க்கமான முடிவுகளை எடுத்தோம் என மலைப்பாக இருப்பதோடு சுயபச்சாத்தாபமும் மேலேழுகிறது. இந்த சுயபச்சாத்தாபம் தன்மீது தானே இரக்கம் கொள்ளச்செய்து ஆளைச் செயலிழக்க வைத்துவிடும். பிறரிடம் குற்றங் கண்டுபிடிக்க வழிவகை செய்யும். சிலசமயம் ஆணவத்தையும் வளர்க்கும்.

நீங்கள் எல்லாரும் அப்பாவைக் கண்ணுங்கருத்துமாகக் கவனிக்கிறீர்கள். உன் வாடிவதங்கிய முகத்தைப் பார்க்கும்போது எனக்குப் பகீர் என்னும். "அப்பாவுக்கு முன்னால் உன் கவலையைக் காட்டாதே. மயக்க நிலையிலேயே சிலருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் போய்விடும் எங்கள் அதிர்ஷ்டம் அப்பா காலாய் கையாய் எம்முன் இருக்கிறார். அவருக்கு உற்சாகத்தை ஊட்டவேண்டும்" என்கிறேன். அதன்பின் அப்பாவுக்குப் படிப்பிக்கின்றாய். காசுகளை எடுத்து முன்னாலே வைத்து மூன்று ரூபா இருபத்தைந்து சதம் எடுத்துத்தாருங்கள் என்றால் எடுத்துத் தருவார். ஆனால் ஐம்பது சதத்தைக்காட்டி எவ்வளவு காசு என்றால் பத்துசதம் என்பார். பிழைதானே என்றால் ஒப்புக்கொள்வார். தண்டனை என்ன? எழும்பலாம் உடற்பயிற்சி செய்யலாம் என்றுவிடுவாய்.

முன்பெல்லாம் 'செஸ்' விளையாடும்போது அப்பா அழாப்புகிறார் என அழுவாய். அப்பா சிரிச்சுச் சிரிச்சே அழாப்புவார் எப்படியோ ஈற்றில் நீதான் வெல்லுவாய். அப்பா கடத்திப்போட்டு எழும்பப்பார்ப்பார் விடவேமாட்டாய். ஆனால் இப்போவோ அப்பாவுக்கு எதையெதை வெட்டலாம் எனக்காட்டிக் கொடுப்பாய். வெட்டக் கொடுப்பாய். வெல்ல வைப்பாய். சந்தோசப்படுத்துவாய். மாத்திரையைப் போடக்கொடுத்துவிட்டு ஜதிபோடுவாய். ஓ! என்ன பொறுமை! பட்டாம்பூச்சியாகப் பறந்துதிரிய வேண்டிய பதினைந்து வயதில் ஓய்வு நேரமெல்லாம் அப்பாவுடன் பொழுதுபோக்கும் பொறுமை.

ஆரம்பநாட்களில் சனம்சனமாய் வீடு நிறைந்தபடி அவர்களது பரிதாப வார்த்தைகள். ஆறுதல் கூறுவதுபோல அவர் முன்னிலையிலேயே எம்மையும் குழந்தைகளையும் பரிதாபம் பார்க்கும் நெஞ்சுநெகிழ்ந்த வஞ்சகமில்லாத வெகு-ளித்தனமான வார்த்தைகள் - அவற்றால் அப்பாவின் மனம் புண்பட்டு எங்களுக்காக வருந்துகிறார். அதனால் யாரும் பார்க்கவருவது உன் அம்மாவுக்குப் பிடிக்காது. "இதுகளென்ன வேடிக்கை பார்க்கவோ வாறதுகள்" என்று நீயும் புறுபுறுப்பாய். கூட்டிக்கொண்டுபோய் பின் விறாந்தையில் வைத்துக் கதையுங்கோ என்று வாணி சொல்வாள்.

பாபுவுக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சை, உங்களுக்கு சாதாரண தரப் பரீட்சை.

மூன்று மாத லீவில் நின்று உடற்பயிற்சியாளரை யாழ்நகரிலிருந்து வரவழைத்து வைத்தியம் நடைபெறுகிறது. இதற்கிடையில் அழுத்கம பயிற்சிக் கலாசாலையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக உங்கள் அம்மாவுக்குப் பதில் அதிபர் நியமனக் கடிதம் வருகிறது. கடமையே பெரிதென இருந்து தன் சுகநலத்தை இழந்த அப்பாவும் "நீர் போம் பிறகு பார்ப்பம்" என வார்த்தைகளுக்கு சிரமப்பட்டுக் கூறுகிறார். ஆனால் தவணை விடுமுறைக்கு முதல் எனது லீவை முறிக்க வேண்டும் அப்படியானால் அடுத்த தவணைத் தொடக்கத்திலும் லீவு எடுக்கலாம்.

தவணைலீவு விட ஐந்து நாட்களின் முன் உங்கள் கையில் அப்பாவை விட்டு நான் புறப்பட்டு கொழும்பு கல்வியமைச்சுக்குப் போய் மேலதிகாரியை சந்திக்கிறேன். கோப்பாய்க்கு சாதாரண விரிவுரையாளராக அனுப்புங்கோ என மன்றாடியும் அவர்கள் ஒருப்படவில்லை. சிறிது காலம் பதில் அதிபராகக் கடமையாற்றுங்கள். ஆறுமாதத்தில் கோப்பாய் அதிபர் பதவி வெற்றிடம் வருகிறது. இந்த அனுபவத்தோடு நிரந்தரமாக்கி அங்கே அனுப்பிவிடுகிறோம் என்கிறார்கள். ஒன்றும் செய்யமுடியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோசா, என் எதிர்காலமல்ல உங்கள் எதிர்காலம் படுபயங்கரமாக என்முன் தெரிகிறது. ஏற்கனவே சமூகசேவை, எழுத்துப்பணி, மேடைப்பேச்சு எல்லாவற்றையும் நிறுத்திவிட்ட எனக்கு குடும்பத்தின் ஒரே உழைப்பாளி என்ற நிலையிலும் உங்களது எதிர்காலம் நோக்கியும் உத்தியோகத்தை உதற முடியாதிருந்தது.

கையறுநிலையில் கல்வியமைச்சின் வெளிவாயிலில் ஒருதூணில் சாய்ந்தபடியே "பகவானே ஒருவழி காட்டுங்கள்" என வெறித்து நிற்கிறேன் அப்படியே வீடு திரும்புவோமா. எத்தனை நிமிடம் அப்படி நின்றேனோ தெரியாது. "உங்களை என்ன கரைச்சல்படுத்துகிறது" என்ற அன்பான குரல் விழிப்படையச் செய்கிறது. அடுத்த பணிப்பாளராக வரக்கூடிய திருமதி ராஜபக்ஷ முறையிட்டேன்.

என்னை அறிந்தவள் நீயம்மா. நீ அப்பாவோடு ரகசியமாகச் சொன்னதை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். "அம்மாவுக்கு அதிபர் பதவி பிடிக்காதே. தனிப்பட்டவரின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் இருபத்துநான்கு மணிநேரப் பொறுப்பென்று சொல்றவ. கட்டாயம் திரும்பி வருவா" அப்பா "நோ நோ வேணும" என்கிறார். உன் சொற்கள் என் காதில் இனிமையாக விழுகிறது, மகளே என் பலங்களையும் பலவீனங்களையும் புரிந்து வைத்திருந்தவள் நீ தான். உன் ஆழமான கண்கள் என்னை ஊடுருவும்போது, நான் நிர்வாணமாகி நிற்பதுபோல உணருவேன். நான் விட்ட தப்பு எனக்குப் புரிந்துவிடும். மெல்லிய முறுவலோடு போய்விடுவாய். அத்தருணங்களில் என் அம்மாவின் கண்கள் உன் கண்களில் பிரதிபலிக்கும்.

"ராஜபக்ஷ! உடலும் உயிரும் என 30 வருடம் வாழ்ந்துவிட்டு எனது உதவி அவசியமாகத் தேவைப்படும்போது அதிபர் பதவி ஒருதூசு அல்லவா.

அவர் உற்றநண்பிபோலச் சில பொன்மொழிகளை உதிர்த்தார். பட்டதாரிகளல்லாத ஆனால் நீண்ட வருடங்கள் அங்கே விரிவுரையாளராயிருக்கும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் அதிபர் பதவிக்குப் போட்டி ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குப் போட்டியாக வரவில்லை என்பதைப் புரியவைத்திட்டு நேரே வகுப்புகளுக்குப் போங்கள். பொறுப்பை ஏற்காது லீவுக்குப் போய்விடுங்கள். பிறகு லீவு முடிய யோசிக்கலாம். என்கிறார்.

தகைமைப் பத்திரங்களோடு குறுகிய காலத்தில் எங்கள் ஆற்றல்களைப் பிரயோகித்து நாடகம், நாட்டியநாடகம், நடனம், கும்மிப் பாட்டு, பேச்சு, விளையாட்டு, தமிழ்விழா என்றெல்லாம் பழக்கிக்காட்ட, அதற்கு முஸ்லிம் பிரமுகர்களும், கல்வியமைச்சு அதிகாரிகளும் அழைக்கப்பட்டு எம் விரிவுரையாளர்களின் புகழ் பரம்பியதாலே அன்று எமக்கு அந்த உயர்விலே கர்மயோகம் என்ன என்பதை இத்தகைய சம்பவங்களால் இறைவன் உணர்த்தினானோ? பலனை அனுபவிக்காமல் இறைவன் திருவுளமாக யாழ்நகர் போய்ச்சேர்ந்தேன்.

திரு பத்மநாதன் தம்மையறியாமல் இன்னொரு உதவியும் செய்துவிட்டார். வெளிநாடு போவதற்காக, கோப்பாயை விட்டு விலகுகிறார். சம்பளமற்ற லீவில் நின்ற எமக்கு, 1985ம் ஆண்டு மேமாதம் அந்த வெற்றிடம் கிடைக்கிறது. இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் பிரயாணமாயினும் வீட்டுக்கடமைகளைச் செய்யும் வாய்ப்புக் கிடைக்கிறது. அதனால் உங்களது எதிர்காலம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றவும் வழியாகிறது.

நாட்டு நடப்புகள் மேலும் பிரச்சனைகளைத் தருகின்றன. அன்று சனிக்கிழமை நடேஸ்வராக் கல்லூரியில் தவணைப்பரீட்சை பிள்ளைகள் பரீட்சை முடிந்ததும் தமது ரியூசன் மாஸ்டர் வீட்டுக்குச் சென்று விடைகளை ஆராய்கிறார்கள். கல்லூரி வீதியின் அந்தலைமுடக்கில் அந்தவீடு இருக்கிறது. பருத்தித்துறை வீதியால் போன இராணுவத்தின் கண்களுக்கு இந்த முடக்கில் குவியலாய் பாடசாலை யூனிபோமுடன் நிற்கும் பிள்ளைகளைத் தெரிகிறது. ஜீப் திரும்பி-வரவும் மாணவர் ஓடி மறைகிறார்கள். மாஸ்டரும் வேறு சிலரும் கைதாக்கப்-படுகிறார்கள்.

உடனே சுற்றிவளைப்பு. வீட்டில் நின்ற எங்கள் பாபு சைக்கிளில் சங்கக்கடைக்கு சாமான் வாங்கச் சென்றவர் - மனேஜர் நின்றவர்களை உள்ளே விட்டுக் கதவைச்சார்த்தி விடுகிறார். வீடுவீடாக பையன்கள் காங்கேசன் சந்திக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். றோசாவும் வாணியும் கேற்றடியில் நின்று யார்யார் கொண்டு செல்லப்படுகிறார்கள் எனப்பார்க்கிறார்கள்.

பாபு வெளியில் போனதால் "அம்மா போ அம்மா போ" என அப்பா தமது குறுகிய சொல்வளத்தால் சொல்லிக்கொண்டே இருக்கிறார். சேலை உடுக்கவும் சங்கக்கடை மனேஜர் வந்து தம்மைக் கதவைத் திறக்கச்சொல்லி பாபுவைக் கூட்டிச் சென்றுவிட்டதாகவும் கூறுகிறார். அழுத்கம ஆசிரியர் கலாசாலை அடையாள அட்டையையும் எடுத்துக்கொண்டு ஓடுகிறார். கல்லூரிவீதி மூலைவீட்டுக்காரர் உட்பட (இப்போ கனடாவில்) பலர் லொறிகளில் ஏற்றப்-படுகிறார்கள். நிறைய ட்றக்குகள். இராணுவத்தினர்.

பட்டயங்கள் பல சூடிய ஒருவர் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். அவரிடம் சென்று அடையாள அட்டையைக்காட்டி எனது மகனும் அழுத்கம ஸாகீராக் கல்லூரியில் படிப்பதாகவும் நாங்கள் விடுமுறைக்காக வந்தவர்கள் எனவும் கூறினேன். என்ன பாடம் படிப்பிக்கிறீர்கள் என்று கேட்டார். ஆங்கிலம். மகனைக் காட்ட அவரை அழைக்கிறார். நான் சொன்ன பொய் அவனுக்குத் தெரியாது பயந்து கொண்டிருந்தேன். என்னை யாரென்று கேட்டார். அம்மா என்று சொன்னதும் "புலியைத் தெரியுமா கண்டிருக்கிறாயா" என்று கேட்டார். இவன் இல்லை எனத் தலையாட்டினான் "சரிபோ" என்றிட்டார். மற்றவர்களை விட்டிட்டு வரவும் எமக்கு மனமாகவில்லை. அவர்களும் ஏக்கப் பார்வையோடு என்னைப் பார்க்கிறார்கள். "லொறியில் ஏற்றமுன் அம்மா அம்மா என்று பெலத்து அழுங்கோ" என்று கிட்டநின்ற இருவரிடம் கூறினேன்.

பாபுவை வெளிநாட்டுக்கு அனுப்பவே வேண்டும் என்பதில் றோசாவே நீயும் வாணியும் காட்டிய அக்கறை கொஞ்சநஞ்சமல்ல. "அண்ணா! அப்பாவை நான் பார்ப்பேன் வைத்தியசாலையில் விட்டால் மனோ (சித்தியின் மகன்) பார்ப்பான் நீங்கள் போங்கள்" என்கிறாய். யாழ் பல்கலைக்கழகத்துக்கு பௌதிக விஞ்ஞானத்துக்கு வந்திருக்கிறதுதானே. அப்பாவுக்கு உதவியாக நின்று இங்கே படிக்கலாம் என்கிறான் பாபு. அப்பாவும் அதையே ஆமோதிக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் வாக்குவாதங்களுள் நீ வந்து என்னோடும் பேசுகிறாய் "அம்மா பாபுவை என்ன செய்யப்போறீங்கள்?" உனக்கு வயது பதினாறு. எனக்கு வயது 52. ஏனோ எனக்குக் கோபம் வருகிறது. முந்திரிக்கொட்டை மாதிரி முன்னுக்கு வெளிக்கிட்டுவிடுவினம் என்று. ஆனால் நீ கேட்ட பவ்யம் எனக்குப் பாய இடம் தரவில்லை "வழிவகைகளைத்தான் யோசிக்கிறேன்". எப்போதும்போல "என் காப்பையும் சங்கிலியையும் வில்லுங்கோ" நான் சிரித்தது உனக்கு அவமான-மாகப் போய்விட்டது. முகங்கருக வெளியே போகிறாய்.

விமர்சனம் கூறுகிறவன் அதற்குரிய பதிலையும் தயாரித்து வைக்கவேண்டும். பிழைகள் கண்டுபிடிப்பவர் அதை எப்படி நிவர்த்தி செய்யலாம் எனும் வழி-வகைகளையும் கூறவேண்டும். அப்படியான ஒரு தர்க்கரீதியான சிந்தனை, அதை நிவர்த்திக்கும் முறை இரண்டுமே தன்பாட்டிலேயே உன் ஒழுங்கான சிந்தனை செயலைக் காட்டி நின்றது. உமது சக்திக்கேற்ற உமது பொருள்களைத் தியாகம் செய்வதன் மூலம் ஏதோ ஒரு வழிவகை காட்டுகின்றாய். அப்போதே உங்களிடம் திட்டமிடும் உத்தியும் செயலாற்றும் உத்தியும் தொழிற்படுவதை உணர்ந்து கொண்டோம். இவை ஒரு சிறந்த நிர்வாகியின் பண்புகள் அல்லவா எனது விரக்தி உன் முகத்தை வாட வைத்துவிட்டது.

அன்று உன் அண்ணனையும் வாணியையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டவேளை என்ன வேளையோ. 'காங்கேசன்' பஸ்ஸில் அரைவாசி, ஊரிலேயே நிரம்பிவிட்டது. அனுராதபுரத்து அசம்பாவிதங்களின்பின் முதன்முறையாக இந்த நீண்டதூரப் பிரயாண பஸ்வண்டிகள் எல்லாம் 7-8 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுவதாம். அன்று 20 பஸ்கள் ஒன்றாகப் புறப்பட்டன.

IAB பரீட்சை எழுதும் இளம்மாணவிகள் அறுவரும் அவர்களோடு இரு பெற்றோர்களும், அச்சுவேலியிலிருந்து ஜெர்மனி போவதற்கான பாஸ்போட்டுடன் ஒரு இளைஞனும் குறிப்பிடத்தக்கவர்கள். பாபுவின் பாஸ் புத்தகத்தை வாணியின் பெட்டியில் வைத்து அவவைத் தனியாகப் பிரயாணம் செய்பவராக - சாரதியின் பின் 'சீற்'றில் இருக்கவிட்டு நாமிருவரும் இடையில் எங்கோ ஒரு இடத்தில் இருந்து கொண்டோம்.

வழியெல்லாம் சோதனைச்சாவடிகள் 10 நிமிடத்துக்கொருமுறை இறங்குவதும் ஏறுவதும். எவ்வளவு நேரம் தங்கவைக்க முடியுமோ அவ்வளவு நேரம் தாமதிக்க வைத்தே விடுவார்கள். எல்லாரும் இறங்கி நிற்கும்போது தேர்திருவிழா மாதிரித்தான் தெருவெங்கும் தெரியும். இளைஞர்களின் முழங்கால் முழங்கை பார்த்து ID பார்த்து அனாவசியக் கேள்விகள் கேட்டு ஒவ்வொரு இடத்திலும் இரண்டொருவரைத் தடுத்து நிறுத்தி தலாவ வந்தடையும்போது மாலை 6 மணியாகிவிட்டது. கடுமையான சோதனை மகாஜனாவில் படித்துக்கொண்டிருந்த அந்த அச்சுவேலிப்பையன் பெருத்த உருப்படி. தோட்டவேலை செய்து நரம்பு தடித்த கால்கள். முகத்திலும் ஒரு வெருட்சி. அவர் எமக்கு முன்னாலேயே அடிவாங்கினார் தான் ஒரு மாணவன் எனக்கூறியதும் உதைத்து விழுத்தி 'ஜீப்'பில் ஏற்றிக்கொண்டு போய்விட்டார்கள். கூட்டிவந்தவர் அலைந்து அங்கும் இங்கும் ஓடித்திரிந்து ஆலோசனைகள் கேட்டுக் கொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக்குப் போவதான ஆசிரியர் நியமனத்தைக் காட்டி வாணி பஸ்ஸில் ஏறிவிடுவா. பாபுவின் சூட்கேஸில் வெள்ளைக் காற்சட்டை சேட்டுகளும் (பழையவை) உயர்தர வகுப்பு விஞ்ஞான கணிதப்புத்தகங்களும். யாரோ முஸ்லிம் இராணுவம் சென்ற்ஜோன்ஸ் கல்லூரி என்பதை வாசித்துவிட்டார். பிரச்சனை எழுப்பினார். டார்காடவுண் ஸகீராக் கல்லூரியையும் அதன் அதிபர் மாமன் பத்தாஹாஜியார் பற்றியும் சொல்லி ஆசிரியர் கலாசாலை IDயையும் காட்ட அவர்மிக மகிழ்ந்து, தானே சூட்கேஸ் அடுக்கிப் பூட்டி, தான் பேருவளை என்றும் அதிபரை நன்கு தெரியும் என்றும் சுகநலம் விசாரித்ததாகச் சொல்லும்படியும் கூறி அனுப்பிவிட்டார்.

அனுராதபுரத்தில் பொசன் விழா கோலாகலமாக நடைபெறுகிறதுபோல. நாம் புறநகர் வழியே ஒரு உணவுக்கடையில் இறங்குகிறோம். நேரம் 8 மணி. பஸ் சாரதிகள் கூடிக்கூடிக் கதைக்கிறார்கள். எமது சாரதி வழியில் கல்லெறி விழுவதாகவும் தாம் எச்சரிக்கை செய்ததும் தலையைக் கீழே போடுமாறும் சொன்னார். புறப்பட்டு ஐந்து நிமிடமும் ஆகவில்லை இருபுறமுமிருந்து கல்லெறிகள். முதலெறியே சாரதியின் முன் யன்னலுக்குத்தான். முன்சீற்றிலிருந்த வாணிக்குக் கண்ணாடி அபிசேகம். நல்லகாலம் வெட்டாத கண்ணாடித் துண்டுகள். பின் கண்ணாடி முழுமையாகவே உடைந்து அந்த மாணவிகள் பதுங்கியபடியும் கீழே இருந்தும் வந்தார்கள். எமது கண்ணாடியுடைந்த பின்னர் கல் நேரடியாகவே வரத்தொடங்கியது. தோள்மூட்டில் அடிபட்டு ஒருமாதமாக நோ மாறாமல் இருந்தது. சிலருக்கு சிறு சிறு காயங்கள் நோவுகள். இருபது பஸ்களில் ஒருபஸ் ஆயினும் கண்ணாடிகளோடு போய்ச்சேரவில்லை என்று கேள்விப்பட்டோம்.

களனிப் பாலத்துக்குக் கிட்டவாக கடைசிச் சோதனை. இராணுவப் பெரியவ-னாகலாம் ஒருவன் மக்கள் இறங்கி நிற்கும் நிலையைக் கண்டு "பஸ் எல்லாம் போகட்டும் விடுங்கள்" எனப் பெலத்து 'மைக்' இல் உத்தரவு கொடுத்தும் "இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்" என இன்னொருவன் குரல் கொடுக்கின்றான். உடைகள் எல்லாம் உதறி உதறி வெளியே குவிக்கப்படுகிறது. பவுடர் சோப்பு கிறீம் என்பவைகூடத் திறந்து திறந்து போடுகிறார்கள். நடை-பாதை, அங்காடிகளின் கடைபோலக் காட்சியளிக்கிறது. தன்மான உணர்வு மீறுகிறது. வாய் காட்டவேண்டும்போல். இடைக்கிடை அதுவும் நடக்கிறது. தமிழ் தெரிந்தவன் என்பதை அறியாமலே "இந்தக் கழுதை பலகாரம் என்று தெரிஞ்சும் பிச்சுக் கொட்டுது" என்கிறேன். அவன் ஒருவரையுமே ஏறவிடாமல் தடுத்து ஏசத் தொடங்கிவிட்டான். "டாக்டராக வரவேண்டிய நான் யாப்பாண வாத்தியனாலை இப்படி இருக்கிறன். அவுங்களுக்கு வீட்டுவேலை செய்யோணும், தண்ணிபிடிச்சுக் கொடுக்கோணும், காய்கறி வெட்டிலப்பம் குடுக்கோணும் ஆனா படிச்சுக் கொடுக்கமாட்டாங்க" ஏசிக் கொண்டே இருக்கிறான்.

ஒவ்வொரு பஸ்ஸாகப் பார்த்துக்கொண்டு வந்த அதிகாரி ஒருவன் ஐந்தாவதான கல்லும் மண்ணும் கண்ணாடித் துண்டுகளுமாக நிறைந்திருந்த எமது பஸ்ஸைப் பார்த்துவிட்டு "பாவங்கள், உங்களுக்காகப் பரிதாபப்படுகிறன். நீங்கள் போகலாம்" என்கிறான். 2 மணிக்கு வீடுவந்து உடுப்பை மாற்றிய இடத்தில் வட்டமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடித்துகள்கள் மினுங்குகின்றன தலையெல்லாம் மண்ணும் கண்ணாடித் துண்டுகளும்.

மகளே, இவற்றையெல்லாம் உங்களனைவருக்கும் சொன்னபோது நீ சிரித்தாய்.

"ஏன் சிரிக்கிறாய்" என்று கேட்டேன். மழுப்பிவிட்டாய். "அம்மா ஏதோ சாதனை படைச்ச மாதிரியல்லோ சொல்கிறா. உப்படி அவமானப்பட்டுக் கொழும்புக்கு நானெண்டால் போகமாட்டன்" என்று பெறாமகன் மனோவுக்குச் சொன்னாயாம். என்ன செய்வோம் காரியமும் ஆகவேண்டும். வீட்டிலும் வைத்திருக்க முடியாது. நிம்மதியாக அவனும் படிக்க வேண்டும்.

அன்புச் செல்வமே! தமிழராகிய நாம் செய்த தவறு ஒன்று புரிந்தது. நிறையக் குழந்தைகள் பெற்று கிளிநொச்சி வவுனியா மன்னார் மாவட்டங்களை மனித குடியிருப்புக்கேற்றதாக மாற்றியமைத்து அங்கெல்லாம் குடியேறியிருந்து ஆட்சிப்படுத்தியிருக்க வேண்டும். மிகச்சிறிய அளவிலேயே இது நடைபெற்றுக் கொண்டிருக்க நாமெல்லாம் அரைப்பரப்புக்கும் வேலிவாசலுக்கும் சண்டைபிடித்து வழக்காடிக் காசு செலவழித்து, குடாநாட்டுக்குள்ளேயே விறாண்டி விறாண்டிக் கிடந்துகொண்டோம். எந்தப் புதிய நாகரிகத்தையும் உடனடியாகக் கற்றுக்கொண்டு நாம் மிக நாகரிகம் வாய்ந்தவர்களாகக் காட்டிக்கொண்டு கருத்தடைகளைச் செய்து கொண்டோம். "ஐயையோ என்னாலை இனி ஏலாது இது காணும்" என ஒன்று இரண்டுடன் நிறுத்திக்கொண்டோம். எங்கள் பகுதிகளெல்லாம் அடிபட்டபோது போக இடமில்லாமல், வெளிநாடுகளில் தஞ்சம் கோரி ஓடிவர இதுகாரணமாயிற்று. எம் குழந்தைகளும் தம் வேரை மறந்து கனடாவில் வேரூன்றத் தொடங்கிவிட்டார்கள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்துபட்ட சமுதாய வாழ்வுக்கு ஈழத்தமிழனே வழிகாட்டியானான்.

அவரவரை அந்தந்த இடங்களுக்கு அனுப்பியபின் உனது படிப்பு விடயமாகக் கவனம் செலுத்துகிறேன். சுண்டிக்குளி, வேம்படி இரு இடங்களிலுமே அனுமதி கிடைத்துவிட்டது. பெற்றோல் விலை ஏறியதால் இயக்கப்பெடியள் வழியில் காரை மறித்து "கார் தேவை, இதிலை நில்லுங்கோ நாங்கள் இப்ப கொண்டுவந்து தாறம்" எனக் கேட்க நான் சாட்டுகள் சொல்லி மறுத்துவிட்டாலும், அவசரமாகக் காரை விற்றுவிட்டோம். பஸ்ஸில் போகவரச் சுகம் எனக்கூறி றோசாவே வேம்படியைத் தெரிவு செய்துவிட்டா. அதிபர் திருமதி இராஜரத்தினம் அவர்களும் ஆசிரியர் பலரும் எமக்கு நன்கு அறிமுகமானவர்களாகையாலும் நாமும் உடன்பட அவள் அங்கே சேர்க்கப்பட்டுவிட்டாள். சினேகிதி நகுலா வீட்டில் தங்கவும் வசதி செய்யப்பட்டது.

இதுதானோ விதி என்பது? அந்த மென்மையான மலரைக் கடினமானதாக மாற்றுவதில் இந்தக் கல்லூரியும், இது இருந்த ஸ்தானமும் இதற்கு அடிக்கடி கிடைக்கும் செல் வீச்சுகளும்கூட ஒருவகையில் காரணமாயின எனக்கூறலாம்.

றோசா உன் தந்தையைப் பிரியமுடியாதவளாகி நீ அடிக்கடி வீட்டுக்கு வந்துவி-டுவாய். நான் எப்படி நகுலாவின் முகத்தில் விழிப்பது என்று எந்நாளும் ஏச்சுவாங்குவாய். பாவம் நகுலா என்னமாதிரி தன்பிள்ளைபோலப் பார்த்தா. TV


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவிடா. படிக்கும்படி தூண்டுவா. வீட்டில் வேறுயாரும் இல்லை. நல்ல அலங்காரமாகத் தளபாடங்கள் இடப்பட்ட பெரிய அறை. மின்விசிறி. மேசைலாம்பு எல்லாம். அவ கந்தசஷ்டி விரதம் பிடிக்கும்போதுகூட கோழி காய்ச்சி உனக்காக குளிர்ப்பெட்டியில் வைத்துவிட்டுத்தான் தொடங்கினவ. இவற்றைச் சொன்னால் “என்னென்று பொட்டுபொட்டென்று இருக்கிறது, றேடியோ பாடிக் கொண்டிருந் - தாலும் படிக்கலாம் நெடுக ‘அப்பா பாவம்’ என்று யோசிக்கத்தான் சரி” என்பாய்.

வீட்டில் அப்பா உன்னை நினைத்தபடிதான். சுகமில்லாமல் வந்தவுடனேயே, முன்பு எமது வீட்டில் உதவிக்கு நின்ற பிள்ளை குடியும் குடித்தனமுமாக இருக்கிறாள். அவளுடன் தொடர்பு இருந்து வந்தது. கஸ்தூரிபாய் நிலையத் - துக்குத் தர்மபுரம் போகும் நாட்களில் அங்கேயும் போவோம். கடின சீவியம்தான். இயலுமான உதவி செய்வோம். தர்மபுரம் சென்று மனோன்மணியைச் சந்தித்து எங்காவது ஒரு பிள்ளை ஒழுங்கு பண்ணித் தரும்படி கேட்டேன். “எங்கடை ஐயாவுக்கு வருத்தமா” எனப் பதறித் துடித்துப்போனாள். தன்னுடைய பிள்ளைக-ளில் ஒன்றைத் தருவதாக ஆண்பிள்ளைகள் வேலைக்குப் போகிறவர்கள் பெண்கள் வயதுக்கு வந்தவர்கள் தனியே வீட்டில் விட்டிட்டுப் போகமுடியாது. சந்தியருகில் வீடு. இராணுவம் அடிக்கடி வருவது. எனவே கைத்துணைக்கு 4ம் வகுப்பில் படிக்கும் 11 வயது லதாவை கூட்டிவந்து பாடசாலையில் சேர்த்துவிட்டேன். பெரிய தகப்பனோடு விளையாடிப் பொழுதுபோக்க 5 வயதான முதலாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த தன் இளையமகன் அச்சுதனை தங்கை ரதி முதலிலேயே எம்வீட்டுக்கு அனுப்பிவைத்தா. அவர் 5மணிவரை விளையாடிப்போட்டு 5மணிக்குத் தாய்வீடு போய் 6மணிக்குத் திரும்புவார். முற்றத்தில் இருவரும் விளையாடி “பெப்பா பெப்பா” “ஐயா ஐயா” என முறைப்பாடுகள் செய்ய இவர் பார்த்திருப்பார். சிரிப்பார். பின் றோசா பாடம் சொல்லிக் கொடுப்பா.

லதாவுக்கு சீருடை தைத்து பாடசாலையில் சேர்க்கும்போது அதிபரிடம் சில சலு-கைகள் பெற்றோம். முதல் மணி அடித்தபின் போகலாம். காலை இடைவே-ளைக்கு வீடுவந்து பிளாஸ்கிலிருக்கும் பாலை வார்த்துக் கொடுத்துக் கழுவிவைத்துப் போதல். மதியம் வந்து உணவு போட்டு அப்பாக்குக் கொடுத்து தாமும் சாப்பிட்டுப் போதல். பின்னேரம் வந்து அப்பா முன்னிலையில் இருந்து பார்த்தெழுதுதல். இரண்டாம் வகுப்பு அறிவும் இல்லாத நிலையில் வாக்குக்-கொடுத்து வந்தபடியால் கடுமையாகக் பாடம் சொல்லிக் கொடுப்பது. அடுத்த வீட்டுத் தங்கையின் பிள்ளைகளும் சொல்லிக் கொடுப்பர். ஏதோ தானியக்க வகுப்பேற்றத்தில் ஏழாம் வகுப்புவரை வந்தாயிற்று. 87ம் ஆண்டு எங்களோடு ஓடுப்பட்டுப்பட்டு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கடைசியாகப் படிக்கும்போது உயிருக்கு உத்தரவாதமின்மையால் தாயுடன் அனுப்பிவிட்டோம். பிறத்திப்பிள்ளை ஒன்று நடந்தால் யார் பொறுப்பு. தங்கை குடும்பம் அளவெட்டிக்குப் போகவும் ‘ஜோ’வும் (அச்சுதன்) அவர்களோடு போய்விட்டார்.

கே.கே.எஸ் துறைமுகத்துக்கு யாழ்ப்பாணப்பகுதி இராணுவத்துக்கான உணவுகள் முதலியன கப்பலில் வரும். பொதுமக்களுக்கான அரிசிமா முதலியனவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரும். பலாலியிலிருந்து இராணுவம் நடைபவனியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே ஹெலி காவல் செய்ய துறைமுகத்துக்குப் போகும் யாராவது எதிர்பட்டால் சூடுதான். இயக்கங்களும் சொட்டிக் கொண்டிருக்கும்.

இதனால் போதகர் ஒருவர் தலையிட்டு சமரசம் செய்து வைத்து, இராணுவம் வரும்போது யாரும் தாக்கக்கூடாதெனவும், அதுபோல பறியலுக்குப்போகும் எம்மவரை யாரும் தாக்கக்கூடாதெனவுமான ஒரு கனவான் ஒப்பந்தம் செயல்பட்டு வந்தது. இதைவிட காலை 8மணிக்கு பாண்ஹெலி என அழைக்கப்படுவதான ஹெலிக்கொப்ரர், துறைமுகம் சென்று திரும்பும். இது எங்கள் வீடுகளுக்கு மேலால் அதன் பாதையில் அடித்தள்ளிக் கொண்டு போகும். பச்சைவானைக் கண்டால் ஹெலிக்குக் கொண்டாட்டம்.

ஒருநாள் எங்கள் வீட்டின்மேல் நின்றுவிட்டது. பாடசாலைக்குப் போகும் அவசரம். வீட்டுக் குளியலறையில் நான். கிணற்றடிக் குளியலறையில் றோசா. திடீரென மேலே துவக்குச்சத்தம். ஏதோ கூரைமீது விழுந்து உருளும் சத்தம். ஏன் எங்களுக்கு அடிக்கிறார்கள்? பாடசாலைக்குப் போகும் சிறுவர்களைப் பார்ப்பதற்காக, அவரை வெளிக்குந்தில் இருக்க விடுவோம். நல்ல காற்றின் சுவாசமும். சின்னவர்கள் சீமெந்து மேசையின் கீழ் ஒளிந்து கொண்டார்கள். அரைவாசிக் குளியலோடு ஓடிவந்து அப்பாவைக் கைத்தாங்கலாக உள்ளே கூட்டிச் செல்கிறேன். "அப்பா அப்பா" என்று கத்தியவாறே றோசா நீயும் ஓடிவா-றாய். சூடுநின்று ஹெலி போகிறது.

வீட்டுக்கு 20 யார்மட்டில் தூரம். வெளியே ஓடும்போது சூடு விழுந்துவிட்டால் உனக்கு என்று நினைத்ததும் எனக்குக் கோபம் வருகிறது. "ஏன் இப்ப ஓடியந்தனீ. சன்னம்பட்டால் என்ன செய்கிறது" "அவரை நீங்கள் படியிலை ஏற்ற மாட்டீங்கள்" என இழுக்கிறாய், "எனக்கில்லாத அக்கறையோ உனக்கு" உன்னுயிரின் பாதுகாப்பை எண்ணி என்கவலை. நீ சிரித்துக்கொண்டே இரா-கமிழுத்து மென்மையாப் பாடிக் கொண்டே போகிறாய் "எனக்குப் பிறந்தன்று முதலே அப்பாதான்" எனக்கும் சிரிப்பு வந்துவிட்டது. அதன் அர்த்தம் "நீங்கள் 23 வயதில் கண்ட அப்பாதானே என்பதுதான். எப்படி இந்த நகைச்சுவை அதுவும் நாசுக்காக எனக்குக் கோபம் ஏற்படாதபடிக்கு.

பச்சைவானொன்று கல்லூரிவீதிக் கடைசியில் நின்றதாம். எமது வீட்டுக்கு நேரே நின்று அங்கேதான் அடித்ததாம் சன்னங்கள் பட்டு வான் யன்னல் உடைந்ததோடு வெளியே நின்ற யாருக்கோ காயமுமாம் எனக்கேள்விப்பட்டோம். ராணிவீட்டு வேலியோடும் எம்வீட்டிலும் விழுந்தவை வெற்றுத்தோட்டாக்களாம் பவுண் நிறத்தில் தளதளவென மினுங்கியிருந்த அவற்றைச் சின்னன்கள் இருவரும் பொறுக்கினார்கள். அப்பா எல்லாவற்றையும் 'ஜோ'விடமே கொடுத்துவிட்டார்.

இதுதான் எங்களுக்கு ஆரம்ப அனுபவம். துவக்கு தோட்டா, வெற்றுறை, பிப்ரி கலிபர் என்பன பற்றிய அறிவுத்தேடல் நேரடி அனுபவத்தில் தொடங்கிவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கிய நண்பர்கள் சந்திப்பு:**

வேம்படி கல்லூரிக்குப் போகவரத் தொடங்கியதும் றோசாவின் பார்வையிலும் ஒரு விரிவு ஏற்பட்டது. தன் உணர்வுகளை வெளிப்படையாகச் சொல்லும் திறன் ஒன்று வந்தது. இது 83இல் தோன்றியிருந்தாலும் 86இல் நிதானமானதாக மாறியிருந்தது. சுதந்திர தாகத்தை முதலில் ஊட்டிய சினிமாப்பாடல் அவள் வாயிலும் ஒலிக்கத் தொடங்கியது "தோல்வி நிலையெனக் கொண்டால்". தமிழீழத்தில் பிரச்சனைகள் கூடிவரவே அடிக்கடி யாழ்சென்று இலக்கிய வட்டச் சந்திப்புகளை நடத்த முடியாதிருந்தது. பிரயாணக் கடினடம். செல்லடியினால் திடீரென பஸ், மினிவான் எல்லாம் நின்றுவிடும். வீடுகளுக்குத் திரும்ப வழியில்லாமல் போய்விடும். பிரதேச வாரியாக யாழ் இலக்கிய வட்டக்கூட்டங்களை ஒழுங்கு செய்ததன் மூலம் செலவுகளின் தாக்கம் பரவலாகும் என எதிர்பார்த்து இரண்டொரு கூட்டங்கள் நடைபெற்றன. ஈற்றில் அதுவும் சாத்தியமில்லாது போயிற்று. மாதம் ஒருதடவை கூடுவது நின்று போயிற்று. ஆயினும் தொடர்ந்து இயங்கிவந்தது.

தொல்லிப்பளைச் சுற்றாடலில் நிறைய எழுத்தாளர்கள் இருந்தமையால் நா. சுப்பிரமணியன் ஐயர் அவர்கள் தலைமையில் "தெல்லிப்பளை கலை இலக்கியக்களம்" என்ற வேறொரு அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் கலைகளுக்கு முக்கியம் அளிக்கப்பட்டது. நாடகம் - நாடக விமர்சனம், நாவல் விமர்சனம், சிறுகதை, ஓவியக்கண்காட்சி என்பவற்றோடு மாணவர் மத்தியில் பயிற்சிப்பட்டறைகளும் நடத்தப்பட்டன. இதற்குப் பலரும் சைக்கிளில் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தன. செயற்குழு உறுப்பினராக - ஐயாவோடு ஏ.ரி. பொன்னுத்துரை, கோகிலா மகேந்திரன் (செயலர்), அனுவை நாகராஜன் - மெய்கண்டான் செல்லத்துரை, அப்புத்துரை, கலாகேசரி தம்பித்துரை, குறமகள் ஆகியோர் இருந்தனர். ஐயர் வீட்டில் செயற்குழுக்கூட்டங்கள், யூனியன் கல்லூரியில் ஒன்றுகூடல்கள், அதற்கும் வினைவந்தது ஒரே ஊரடங்குச் சட்டம். அப்பாவும் வீட்டோடு நோயாளியாகவே எமக்கும் போகேலாத கட்டம். எனவே இவருக்கு உற்சாகமூட்டுவதற்கும் இலக்கிய சர்ச்சைகள் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் செய்வதற்கும் இவர்கள் மாலை 5 மணியின்பின் எங்கள் வீடுகளுக்கு வருவார்கள். மாலையில் இராணுவம் புறப்படுவதில்லை கரையோரத் தெருவில் மாத்திரம் நடமாடும். ஹெலியும் இரவில் மக்கள் நடமாட்டத்தை அறியாது. பகலில் அடங்கிக் கிடந்த மக்கள் இரவில்தான் நடமாடுவர்.

லீவு காலமாயின் இடைக்கிடை எல்லாரும் எங்கள் வீட்டில் சந்திப்பார்கள் அறிவித்துவிட்டு வரமுடியுமா என்ன. வெளிமுற்றத்தில் கதிரைகளைப் போட்டுவிட்டு வெளிச்சம் போடாமலே இருந்து மணிக்கணக்காகக் கதைப்போம். கணையாழி, கசடதபற எழுத்து ஆகியவை பரிமாற்றம் செய்யப்படும். தமிழ்சினிமாவும் தரங்குறைந்த சஞ்சிகைகளும் எப்படி தமிழைக் கெடுக்கின்றன என்றெல்லாம் கலந்துரையாடுவோம். அடுத்த வீட்டிலிருந்து தங்கை வந்து சிற்றுண்டி தயாரித்து கோப்பியும் செய்துவைப்பார். றோசா கொண்டுவந்து பரிமாறுவாள்.

நன்றாக இருட்டி நிலவு வெளிச்சம் பரவத் தொடங்கத்தான் அவர்கள் போவார்கள். முற்றமெல்லாம் பாத்திரங்கள் கதிரைகள் எல்லாம் தூக்கி வைக்கவேண்டும். ஒருநாள் தன்தகப்பனின் முன் நின்றாள் கைப்பிடியில் தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கைகளையும் ஊன்றிக்கொண்டு குனிந்து "அப்பா இப்ப ஏழு எட்டுப்பேர் 4 மணித்தியாலமாக இருந்தவை. 32 மணித்தியாலம் ஒரு மனிதனின் சக்தி வீண் விரயமாக்கப்பட்டுள்ளது. இலக்கியத்தை அலசி என்ன கண்டவை உருப்படியாக என்ன செய்தவை? ஒவ்வொரு இலக்கியகாரனைப் பற்றியும் புறணிதானே கதைச்சவை. நாட்டு விடுதலைபற்றி ஊஹும். மட்டக்களப்பிலை மலைநாட்டிலை அம்பாறையிலை வயல்வெட்டப்போன அத்தனை கமக்காரரையும் வெட்டிப்போட்டு கிடுகும் வைக்கலும் போட்டுக் கொழுத்தினாங்களே. அது கற்பனை இல்லைத்தான் நிஜம் நிஜம். அப்ப எழுதேலாதுதானே. "என்ன என்ன என்ன" என்கிறேன் சிறிது சினத்தோடு. இப்பதான், பழைய சாதிமதம் பற்றி இவன் நேரடியாகச் சொல்கிறான். அவன் மறைமுகமாகச் சொல்கிறான் என்ற ஆராய்ச்சி. உதெல்லாம் விட்டிட்டு சமூகம் எங்கேயோ போட்டுது. ஐயாவுக்குப் பல்கலைக்கழகத்தில் லெக்சர் அடிக்க உதவும். எழுத்தாளரென்றால் சமூகத்துக்குத் தேவையானதையல்லோ எழுதவேண்டும், கோகிலா இப்பதான் வேலிச்சண்டை பற்றி எழுதுகிறா, அம்மா இப்பதான்...

வயதுக்கு மூத்தவர்களைப்பற்றி இப்படியெல்லாம் வீட்டில் ஒருவரும் பேசுவதில்லை. எனக்கு சரியான கோபம் வருகிறது. குரலை உயர்த்தி "அம்மா இப்பதான்... சொல்லு சொல்லு" என்கிறேன். "ஒன்றுமில்லை" என்றவாறு கதிரை-களை வீட்டுள் கொண்டுவருகிறாள். "சொல்ல வந்ததைச் சொல்லிமுடி" "வாழை ஒருக்காத்தான் குலைபோடும்" என்று இழுத்துப்பாடிச் சமாளிக்கிறாள்.

றோசா! அப்பகூட, உனக்கு வேலைப்பளு பண்டம் பாத்திரம் கழுவிக்கதிரை தூக்கி வைத்து என்று என்மனம் நினைக்கிறதே தவிர உன் உள்ளத்தில் மூண்டிருக்கும் கனவை நான் அறியவில்லை. அது பாரதியார் சொன்னதுபோல அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை ஆங்கோரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன் வெந்து தணிந்தது காடு - தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ தத்தரிகிட தித்தரிகிட தித்தோம்.

ஆம், உன்னுள்ளத்தில் விடுதலைத் தீ மூளத் தொடங்கிவிட்டது. உனது சில முடிவுகளை எம்மால் மாற்றமுடியாமல் இருக்கும். தர்க்கரீதியாக அதற்கு நீ தரும் விளக்கமும் சொல்லும் பவ்யமான முறையும் காரணமாகலாம். இப்படித்தான் உனது ஜி சீ ஈ சாதாரணதரச்சித்தி வந்தபோதும், விஞ்ஞானமா, கணிதமா, வர்த்தகமா என ஆலோசனை. கணிதப் பகுதிக்குப் போகுமாறு எமது ஆலோசனை. சசியும் வந்து நிற்கிறா. நீ மௌனமாகவே நிற்கின்றாய். பூச்சி பூரானுக்கே பயப்படுகிற இவளுக்கு உயிரியல்துறையா என்பது என் நியாயம்.

"அனட்டமி படிக்கும்போது நான் பட்டபாடு. இரண்டு நாள் மயங்கி விட்டேன் சரியான அரியண்டமாயிருக்கும். முதலில், நீ சரிக்கட்டமாட்டாய்" சகோதரியின் மென்மையான சுபாவத்தை எண்ணியும் கடினப்படாமல் கணிதத்தையே படிக்கட்டும் எனவும் சசி அபிப்பிராயப்பட்டிருக்கலாம்.

டாக்டரே இப்படிச் சொல்லிவிட்டா என்று எனக்கு மகா சந்தோசம். அப்பா நிமிர்ந்து றோசாவைப் பார்க்கிறார் "உங்களாலை படிக்க முடிந்ததாயின் என்னாலும் படிக்க முடியும்" என்கிறாள். அந்தத் தீர்மானமான குரலில் ஒரு சவால் தன்மையும் இருந்தது. ஆனால் பிற்காலத்தில் விரும்பியோ விரும்பாமலோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதத்துறைதான் கைகொடுத்தது. புதிய கண்டுபிடிப்புகளுக்கு உதவியது. தமிழீழத்துக்கான சேவையில் முத்திரை பதிக்க வைத்தது.

ஓட்டங்கள் ஒருநாள் சிறிது மாற்றம் அடைந்தன. சிலர் வேறு கிராமங்களில் வீடு வாடகைக்கு எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். செல்லடி மோசமாக இருந்தது ஒருநாள் இராணுவம் நிறைய இறங்கியிருப்பதாவும், நடேஸ்வராக் கல்லூரியில் தங்கப்போவதாகவும் கதை. இராணுவ அட்டூழியங்களும் கொலைகளும் ஒருபுறம்.

நாம் எங்கே போவதென்றாலும் சில முக்கிய விடயங்களைக் கருத்துக்கெடுக்க வேண்டியிருந்தது. அப்பாவுக்கு வசதியுள்ளதான கொம்மோட் உள்ள மலசலகூடம் இருக்கவேண்டும், எனக்கும் றோசாவுக்கும் பாடசாலை போய்வரக்கூடிய சுலபமான இடமாக இருக்கவேண்டும், லதாவும் உட்பட நான்கு பேர் தங்கவேண்டும், வீட்டுக்காரரின் இதயமும் விசாலமாக இருக்கவேண்டும்.

என் கண்ணே றோசா, அந்த நாட்களில் நீயும் இல்லாவிட்டால் நாங்கள் என்ன செய்திருப்போம். வாழ்க்கை என்பது ஒரு போராட்டமாகிவிட்டது என்னைப் பொறுத்தளவில். அவரைப் பிடித்து மெல்ல மெல்ல நடத்தி வந்தாலோ, ஓடுகிறவர்கள் திரும்பிப் பார்த்து "ஐயோ இராசாத்தி உனக்கும் இந்தக் கெதியா" என்பார்கள். இது அந்த மென்மையான இருதயத்தைக் கிழித்துப்போடும் என்பதை உணரமாட்டார்கள். "பி எம் உங்களுக்கும் இப்படி வந்ததோ என்று அநுதாபம் கொட்டுவார்கள். சிலர் நின்று உதவி செய்வதாகக் கூறுவார்கள். "நீங்கள் ஓடுங்கள். நாங்கள் ஆறுதலாக வருகிறோம்" என்று சொல்லி அனுப்புவோம். நான் சிறிது தளர்ந்து "அதற்கென்ன" என்று சொன்னால், றோசா, நீ "அவர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடுகிறார்கள் என்னம்மா நீங்கள்" என்று என் ஆற்றாமைக்கு ஒரு அடிதருவாய். உன் கையிலிருக்கும் சூட்கேஸைத் தூக்குவதிலும் பார்க்க அவரது வழங்காத பாரமான கையைத் தாங்கிக்கொண்டு நடக்கவைப்பது சுலபமாக இருக்கும்.

சரியான உதவி கிடைக்கும்வரை விழுந்து வெடிக்கும் செல்களின் நடுவே, வேடிக்கைக் கதை சொல்லி மனதை கொடூரமான வார்த்தைகளைச் சிந்திக்க வைக்காமலே அழைத்துச் செல்கிறோம். எனினும், மொழி வேறுபாடு மறந்த - சிந்தனையில் வந்தபடி சொல்வார். "கமக் நா, கோ கோ, வாறன்" என எங்களைப் போகும்படி வற்புறுத்துவார். ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள் சொல்லும் ஆற்றாமைமிக்க அந்தச் சிறிய வார்த்தைகள் என் இதயத்திலிருந்து இரத்தத்தைக் கக்கும். அந்தநேரத்தில் என் சிறிய குஞ்சே, என்ன பகிடிவிட்டு அப்பாவைச் சிரிக்க வைப்பாய்.

"அப்பா எங்களோடை கூட வாறதாலை எங்களட்டை வாற யமன் உங்களையும் தட்டிப்போடுவான் என்று பயப்பிடுகிறியளாக்கும். கவனியுங்கள் நாங்கள் போனால் உங்களைக் கூட்டித்திரிய ஆக்கள் இருக்கமாட்டினம். உங்கடை மக்களை இஞ்சாலை வரவும் விடான்கள் பேசாம வாங்கோ எங்கேயெண்டா என்ன ஒருமிக்க போவம்" இடையில் சைக்கிள் உதவி கிடைக்கவே மாவிட்டபுரம்வரை வந்து மினிபஸ் எடுத்தோம் எங்கே போவோம் என்பது தீர்மானிக்கப்படவில்லை. அல்லது நாட்கள்வரை தங்க வேண்டி வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவிலில் எமது தோழி கனகா மயில்வாகனம் வீட்டில் இறங்கினோம். விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்ற அவரது தாயாரும் மிகத்தளர்ந்த நிலையிலும் எம்மை வரவேற்றார்கள். தெருவோரத்தில் இருந்த வீடாகையால் இவருக்கும் வேடிக்கை பார்க்கக் கூடியதாக இருந்தது. எமக்கும் விரைவாகப் பாடசாலைகள் போய் விரைவாக வரமுடிந்தது. மினிபஸ்கள் தெல்லிப்பளை மட்டுமே சேவை செய்தன. மாவிட்டபுரம்வரை இராணுவம் நிற்பதாகத் தகவல்.

இந்தநேரத்தில் இயக்க மோதல்களும் நடைபெற்றன போலும். அது நன்றாகத் தெரியவில்லை. ஆனால் இரவு இரவாக கிழக்கே திருநெல்வேலிப்பக்கம் இருந்து சூட்டுச்சத்தங்கள் கேட்டுக் கொண்டேயிருந்தன. சிங்கள இராணுவத்தினரான கைதிகள் தட்டப்படுகிறார்கள் என்றொரு பரவலான கதை ஆனால் விட்டுவிட்டு சமகால இடைவெளியில் கேட்டுக்கொண்டேயிருந்தது. இன்னமும் வன்முறைக்குப் பழக்கப்படாததால், பரிதாப உணர்ச்சியும் நெஞ்சுப்படபடப்பும் அதிகம் அதிகமாக வருத்தியது. இதுபற்றி மறுநாள் பிரஸ்தாபித்தபோது, அப்பாவும் பெரும் பரிதாபமாக மேலே பார்த்து ச்ச்சிச் எனப் பரிதாப ஒலி எழுப்பினார். றோசா நீ என்ன சொன்னாய் ஞாபகம் இருக்கிறதா? "அம்மா, அவனவன் அவனவன் வேலையைப் பார்க்கிறான் நீங்கள் உங்கடை வேலையைப் பார்த்துக் கொண்டிருங்கோ. சும்மா அப்பாவையும் குழப்பி என்னையும் படிக்கவிடாமல்..."

அன்று ஆசிரியர் கலாசாலையில் வரவு மிகக்குறைவாக இருந்தது. ஹாஸ்டல் பிள்ளைகள் மட்டுமே வந்திருந்தார்கள் எனவே பாடசாலையை மூடிவிட்டுப் புறப்பட்டுவிட்டோம். வீட்டுக்கு வந்தபோது கனகா பாடசாலையிலிருந்தும் வரவில்லை றோசா வந்து படித்துக் கொண்டிருந்தா. கொக்குவில் இந்துக்கல்லூரி நடந்துகொண்டிருந்தது. மற்றைய நண்பர்களைச் சந்தித்து அளவளாவ அங்கே சென்றபோதுதான் ஆசிரியர் அறையில் பல திடுக்கிடும் சமபவங்களை அறிந்தேன். அண்ணனைத் தம்பியும், மச்சானை மச்சானும் சுட்டுக்கொன்ற நம்மவருள்ளான பிணக்குகள் பல விரிந்தன. இதயமே வெடிப்பது போன்ற உணர்வு. வீடுவந்து கதைக்கும்போது றோசா நீயும் அனுதாபத்துடன் கேட்டுக்கொண்டிருக்கிறாள். ஆனால் ஈற்றில் நீ சொல்கிறாய். "கூர்ப்புக் கொள்கையின்படி தக்கதுதான் வாழும்". கனகா சிரிக்கிறா. "மகள் இந்த வயதி-லேயே தத்துவம் பேசுறா" "ஓம் வேம்படிக்குப் போனபிறகு ஞானமுதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது" என்று பகிடி விடுகிறேன். ஆனாலும் இவளுக்குப் பல விடயங்கள், புதினங்கள், இயக்கங்கள் பற்றிய தகவல்கள், அறிவுகள் நன்கு தெரியவருகிறது. ஒன்றும் எங்களுக்குச் சொல்லாது அமசடக்காக இருக்கிறாள் என்று எனக்குப் புரிகிறது.

எங்கடை பிள்ளை எங்களுக்கு எல்லாம் சொல்லும் ஒரு நாளும் ஒன்றும் மறைக்கமாட்டாள் என்று சொல்லும் பெற்றாரின் அறியாமையை நினைத்துப் பார்க்கிறேன். வேண்டுமானால் தம்மீது ஏதும் தவறிருந்து அது பெற்றாரை எட்டப்போகுதென்று சந்தேகப்பட்டால் மட்டும் அதனைத் திரித்துத் தன்னில் ஒரு பிழையுமில்லை மாதிரியும் மற்றவர்களின் தூண்டுதலால் நடந்ததெனவும் கதையில் முந்திவிடுவார்கள். சின்ன வயதிலேயே என்னவகையாக மூளையைப் பாவிக்கிறார்கள். எனவே இளங்குமாரியிடம் நாம் எதிர்பார்க்கவும் முடியாது, வரவழைக்கவும் முடியாது. அதேநேரம் படிப்பிலேயே கவனமாக இருப்பதையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தோடு அப்பாவிடம் ஓடி வருவதையும் கடமைகள் செய்வதையும் காணும்போது என் உளவியலறிவு அந்த மௌன வேலியை உடைக்க விடுவதில்லை. மிக நேர்மையான உயிர் அது.

ஏதோ உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளின் பின் புதுவருடப்பிறப்பை வீடுகளிற் கொண்டாடலாம் இராணுவம் திரும்புகிறது என அரசாங்க அதிகாரியால் வானொலி அறிவிப்புகள். கனகாவின் தம்பிமாரும் அடிக்கடி எம்மை ஒன்றும் செலவு செய்யவிடாமல், உணவுப்பண்டங்களைக் கொண்டு வந்தும் உபசரிப்பார்கள். இத்தகைய உபசாரங்கள், நீண்ட நாட்களுக்கு ஏற்றுக் கொண்டிருப்பது இங்கிதமில்லையல்லவா. எனவே, பத்துநாட்களின்பின் அறிவித்தலைக் கேட்டவுடன் வீடு வருகிறோம். அண்டை அயல் இன்னமும் வந்து சேரவில்லை.

ஒரு மனிதரும் இல்லாத ஒரு ஊரிலே மூன்று நாட்கள் வசித்ததே விசர்பிடிப்பதுபோல. சனசந்தடியற்ற தெருக்கள், ஒழுங்கைகள் - பூசை நடவாத கோவில்கள் பயங்கரமாக இருக்கிறது. மரக்கறி தேடிப் பயந்து பயந்து ஒழுங்கையுள் இறங்கினாலோ, எமது குரலுக்கே எமக்குப் பயமாக வருகிறது. தோட்டங்கள் நீரின்றி வாடியிருந்தாலும் நிறையக் காய்களுடன் இருக்கின்றன. வீட்டு யன்னலூடாய் தேவையானதைப் பிடுங்கி வந்து சமைப்போம். இருவருமே பாடசாலை செல்லவில்லை. வீடு வளவு சுத்தப்படுத்தல், பத்தாயத்திலிருந்து நெல் எடுத்து உணவுக்குப் பதப்படுத்தல். சரியான வேலை. வருடப்பிறப்புக்கு அக்காவும் வாணியும் வருவினம் என்று புழுகிப்புழுகி நீ எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்கிறாய். பரீட்சை ஆவணியில் காணும் விடுவிடு என்று மறிக்கவேண்டும். உதவி செய்ய வாற தம்பதியினரும் தங்கள் வீடுவந்து சேரவில்லைப்போலும்.

ஒழுங்கான வாகனசேவை இல்லை. லீவுக்குத்தான் வரவேண்டும் எனும் உறுதியை எடுத்துக்கொண்டு நகுலா வீட்டுக்கு உங்களை அனுப்பி விடுகிறோம். ஊர் வழமைக்குத் திரும்பிவிட்டது. ஆயினும் பழையபடி தற்காலிக ஓட்டங்கள். இராணுவ ஜீப்புகள் சிலசமயம் சீமெந்துத் தொழிற்சாலை வாசல் மட்டும் வருமே தவிர அதற்கு அப்பால் போவதில்லை. ஆனால் கடற்கரைத் தெருவால் எந்நேரமும் ஓடிக்கொண்டேயிருக்கும்.

இன்னும் ஒருநாள் பாடசாலை லீவு விட்டுவிட்டது ஓட வேண்டி வந்துவிட்டது. எல்லாரும் நேர்ஸிங் ஹொமில் நிற்கமுடியாது. அப்பாவையும் லதாவையும் அங்கே விட்டிட்டு வாணியும் நீங்களும் தெல்லிப்பளை உறவினர் வீட்டுக்குச் செல்கிறீர்கள். அன்று ராணுவம் போக நேரம் செல்கிறது. வரும்போது குமரகுரு, பாலசிங்கம் முதலியோருடன் எம்வீட்டுப் படலையில் (கேற்) நின்று கதைக்கிறோம். றயில்பாதையால் ஓடும்போது இந்தச் சந்தியில் நின்று வெடிவைத்தானாயின் மாவிட்டபுரம்வரை பிடிக்குமே என்று சரியான பயமாய் இருக்கிறது என்று கூறுகிறார் பாலா. கல்லூரிவீதியில் எமது பின் வீட்டுக்கு நேரே அவர்வீடு. "வேலி வேலி" என்று நினைவூட்டுகிறாய் எனக்கு. "நாங்கள் முன்வேலியை வெட்டிவிடுகிறோம் இங்காலே 2 வேலியும் வெட்டிவிட்டிட்டம். நீங்கள் ஓடிவந்து வடலிக்குள் புகுந்து ஒற்றையடிப் பாதையால் குருவீதியைச் சந்தித்து அப்படியே தலையிட்டி வைர கோவிலடிக்குப் போய்விடலாம் என்கிறேன். இது மாவைக்கந்தனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வீதியிலிருந்து மயிலிட்டிவரை செல்லும் தெருவில் உள்ளது.

அப்போது கல்லூரிவீதி அரசடியில் ஒரு பிரேதம் கிடப்பதாக யாரோ சொல்கிறார்கள். நானும் விரைந்து அங்கே செல்கிறேன். சித்த சுவாதீனமில்லாத இளைஞன் ஒருவன், வீட்டுக்காரர் யாழ்ப்பாணத்தில் இருக்கப்போய்விட்டார்கள். அவர் பிடிவாதமாக மறுக்கவே உறவினர்கள் உணவுகொடுக்க அங்கேயே இருந்து வந்தவர் அதிகமாக முன்னுக்கு இருக்கும் மதகு ஒன்றின்மீது இருப்பார். உறவினருடன் அவரும் வந்தவராம். அன்று சொல்லுக்கேட்க முடியாத அளவுக்கு நோய் முற்றியிருந்தது. அவர் திரும்பி வந்து இருந்திருக்கிறார். மக்கள் குழுமிவிட்டனர் பிள்ளைகளும் பார்க்க வந்துவிட்டார்கள்.

வீடுவந்ததும் 58இல் தொடங்கியது 87இல் முடிந்துவிட்டது என்றேன். 1958 கலவரத்திலும் ராணுவம் பல முறைகேடான செயல்களைச் செய்தது. தொழிற்சாலையில் வேலை செய்த உத்தியோகத்தர் ஒருவர் வேலை செய்யாது குழப்பம் செய்கிற சிங்களத் தொழிலாளியிடம் கடுமையாக நடந்து கொள்வார். அவன் இராணுவத்திடம் கோள் சொல்லிவிடவே இரவில் ஒரு ஜீப்பில் வந்திறங்கித் தண்ணீர் கேட்டிருக்கிறார்கள். மனைவி திறக்கவேண்டாம் என மறிக்கவும் அவர்களை அறைக்குள் ஒளிந்திருக்குமாறு சொல்லிவிட்டுக் கதவை திறந்துள்ளார். அத்தனைபேரும் உள்ளே நுழைந்து பொல்லினால் சொல்லிச் சொல்லி அடித்திருக்கிறார்கள். அதனைத் தாங்காது மனைவி வெளியே ஓடிவந்து மன்றாடவும், கணவனைக் கப்புடன் கயிற்றினால் கட்டிவைத்து மண்டையில் நல்ல அடி. இந்தப் பையன் 7வயதுச் சிறுவன், மற்றையோர் தங்கைமார் வீட்டையே சின்னா பின்னப்படுத்திவிட்டார்கள். இந்தக் கொடுமைகள் பலதையுங் கண்ட பையனின் புத்தி பேதலித்துவிட்டது. தகப்பனுக்கு தலையிலே எத்தனையோ சத்திரசிகிச்சைகள். வேலை செய்யமுடியாது. சிறிதுகாலத்தில் மண்டைவலி காரணமாக இறந்துவிட்டார்.

எதுவுமே நடக்காத யாழ்ப்பாணத்துக்கும் இராணுவத்தை அனுப்பி எத்தனையோ கொலைகளைச் செய்து பெண்களை மானபங்கப்படுத்திய அந்த ஐம்பத்தெட்டாம் ஆண்டின் எச்சமாக இருந்த நினைவுச்சின்னத்துக்கும் அன்று சமாதி கட்டப்பட்டுவிட்டது. இதனைக் கேட்டதும் உன் முகம் போனபோக்கு. இதுகளைக் கண்டுமா பிறகும் சாத்வீகப் போராட்டம் நடத்தினார்கள் எனக் குமுறினாய். இராணுவம் போனபின் அவனைச் சாக்கொண்டிருக்க வேண்டும். ஜீப்புக்கு நெருப்பை வைத்துக் கொளுத்தியிருக்கலாமே என்றாய். ஏதோ நான்தான் செய்யவில்லைப்போல மூஞ்சையை நீட்டிக் கொண்டுபோய் படுத்துவிட்டாய். சத்தத்துக்கு அண்டையயல் ஓடிவரவில்லையா என்று கேட்டாயே. "எப்படி முடியும்" எல்லாருக்கும் தெரியும் தங்கள் தங்கள் வீடுகளுக்கும் வந்துவிடுவான்களோ என்று அவரவர் உயிர் அவரவருக்குப் பெரிது. ஜீப்பின் சத்தம், அவங்கடை ஊருக்கும் மொழிச்சத்தம், அடிச்சத்தம், வீல்வீலென்று மனைவி உதவிகோரி அழைக்குஞ் சத்தம் என்ன செய்யலாம் வெறுங்கையுடன்.

அங்கே ராணுவம் பலப்படுத்தப்படுகிறது. இங்கே காந்தீயம் பேசித் தனிப்பட்ட செல்வாக்கு உரம்பெறுகிறது. அங்கே தமிழன் தம் எதிரி எலும்புத்துண்டால் வசப்படுத்துவோம் என இங்கே சிங்களச் சோதரர்கள், போட்ட எலும்புத்துண்டைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைத்துக்கொண்டே போராடுவோம். "என்னை மனிதன் மதி என்றான்" என ஒரு பாடலில் வரும். பாடலை மறந்துவிட்டேன். குளிர்பெட்டியிலிருந்த இறைச்சியைச் சமைத்து உணவுண்ணும்போது மணி 11.45 தெருவில் வாகனங்கள் ஓடுவது போலக் கேட்கிறது. இரவில் ஓடுவதில்லையே பெரும் இரைச்சலாக இருந்தபடியால் ஜீப்பாக இருக்கலாம். ஏதாவது சோதனை நிகழப்போகிறதோ.

இராணுவம் இங்கே வருமானால் வாணியும் றோசாவும் பின் கதவைத்திறந்து கொண்டு காணியைக்கடந்து வடலிக்குள் போய் நில்லுங்கள் அல்லது மாமரத்தில் ஏறி உயரப்போய் இருங்கள். கோழிகள் பறக்கப்பார்க்கும என வாணிக்கும் றோசாவுக்கும் சொல்லிவிட்டுப் படுத்துவிட்டோம்.

நாளை நிகழ்வதை யாரறிவார்? சிறிதுநேரத்தில் துறைமுகப்பக்கமாகச் சூட்டுச் - சத்தங்கள் கேட்கத்தொடங்கின. இரவு நேரமாகையால் கல்லூரிக்குள் கேட்பது போன்ற பிரமை. எல்லாரும் எழுந்து ஆரவாரம். அப்பாவை நடு அறையில் விட்டு இவர்களை ஓடச்சொல்லுவோமெனில் பயப்படுகிறார்கள். ஒரு மணியிலிருந்து மிகமோசமாகத் தாக்குதல்கள் கூடிக்கொண்டே போகின்றன. வீடெல்லாம் பூட்டிவிட்டால் வெளியே நடப்பது ஒன்றும் தெரியாது. றோசா யன்னலை நீக்கிப் பார்த்துவிட்டு எலிவாணம்போல எல்லாம் வருகுது என்றாள். வந்து வந்து கிட்டே வெடிக்கிறது. கல்லூரிக்குள் ஜீப்புகள் இரைந்து கேட்கின்றன. செல் எல்லாப்புறத்திலிருந்தும் ஏவப்படுகின்றன. இத்தனைக்கும் அன்றைய இரவுபோலப் பயங்கரமான ஒரு இரவை நாம் சந்தித்ததில்லை.

நிஜங்கள் கற்பனைகளைவிட அதிகசக்தி வாய்ந்தவை. கொடூரமானவை. கற்பனைக்கும் எட்டாதவை. கற்பனை என்பது ஒருவன் தன் அனுபவத்துக்குட்பட்ட உணர்வுகளை, தான் ஆக்கிய கருவைச்சுற்றி அமைப்பதுதான். ஆனால் காணும் கொடூரங்களை விளக்கும்போது வார்த்தைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிடுகிறது. துன்பதுயரம் வேறு. பயங்கரம் வேறு. இந்தப் பயங்கர இரவுபற்றிச் சிந்திக்க முயலுமுன் அந்த உணர்வுகளில் கால்பங்குகூட வந்து சேருகிறதில்லை.

இனிய செல்வமகளே, அன்று இரவும் அப்படித்தான் வெடிகள் கேட்கத் தொடங்கியவுடனேயே ஒருவரையொருவர் அழைத்துக்கொண்டு ஊரெல்லாம் ஓடிவிட்டது. இந்த மோசமான சத்தங்களூடே மக்களின் அரவமோ கதையோ கேட்கவில்லை. பாலாவும் குமரகுருவும் நாங்கள் சொன்ன பாதைவழியே விரைகிறார்களாம். "பிஎம் வீட்டுக்காரரைக் கூப்பிட்டுப்பார்ப்போம்" என பாலா சொல்ல, என் அசாத்தியத் துணிச்சலில் நம்பிக்கை வைத்திருந்த குமரகுரு "ரீச்சர் எமக்கே வழிசொன்னவ இந்தநேரம்வரை அவரையும் வைச்சுக்கொண்டு உங்கேயா இருக்கப்போறா" என்று சொல்லிக் கொண்டே விரைந்து விட்டார்களாம்.

கதவுகளைத் திறந்தால் கல்லூரிக்குள் நிற்கும் இராணுவம் புகுந்துவிடுமோ யன்னல்களூடே சன்னங்கள் பாய்ந்துவிடுமோ எனத் தப்பாக புரிந்துகொண்ட நாம், அனுபவித்த பயங்கரங்களை வார்த்தைகளால் வடிக்கமுடியாது. செல்கள் நாற்புறத்திலும் வந்து விழுந்து வெடிக்கின்றன. பலாலியிலிருந்து - கப்பலிலிருந்து துறைமுகத்திலிருந்து செல் மின்னல், செல் இடி, செல் மழை, செல் புயல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவாறு சூறாவளியாகிச் சுழன்றடிக்கிறது. அடிக்கடி என்மகளே நீ யன்னலுக்கும் பின் கதவுக்கும் போகிறாய் திறந்து வெளியே பார்ப்பதற்கு. என் பதட்டத்தில், ஏசி ஏசி எங்களோடு வந்து மேசையின் கீழ் இருக்கும்படி நிர்ப்பந்திக்கிறேன். வாய் ஓயாமல் சத்தியசாயிபாபா என்று அரற்றிக் கொண்டும் கிட்ட வெடிக்கும்போது காதைப் பொத்தியபடி குரலை உயர்த்தியும் அலறுகிறேன். என்னை மறந்தநிலையில் உருவேறிய பெண்போல மௌனமாகச் சுருண்டு கொண்டிருக்கும் மற்றவர்கள் என்னையே நம்பியிருக்கிறார்கள் என்ற என் நினை-வோடு பகவானை அழைக்கின்றேன். ஆனால் எதையும் கேட்கவில்லை.

“விதியை வெல்லமுடியாது” என்பதை அனுபவமூலமாக கண்டுணர்ந்து, நடப்பதுதான் நடக்கும் எனும் ஒரு தெளிவு என்னுள் இருந்தது. ஆனாலும் எமக்கு எது தேவையோ அதை இறைவனோ அல்லது இறைவனின் அம்சமான பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவோ அறிவார்கள் தகுதியாயின் தருவார்கள். நாமஸ்மரணம் ஒன்றுதான் அந்த நேரத்தில் பயங்கரத்தைப் போக்கவல்லது. வாணி அப்பாவின் கால்களை வருடிவிட்டுக்கொண்டு இருக்கிறாள். றோசா தன் சங்கிலியில் தொங்கும் பாபா பென்டனை இருகரங்களாலும் பொத்தியபடி கவிழ்ந்தபடி இருக்கிறாள். அப்பா இடைக்கிடை வெடிச்சத்தம் கேட்டதும் “அருச்சுனா அபயம்” என்கிறார்.

ஜீப் சத்தங்கள் - நீ கிசுகிசுக்கிறாய் “செல் எல்லாம் இவ்விடத்தையே சுற்றி வெடிப்பதால் இராணுவம் கல்லூரிக்குள் இல்லை. துறைமுகத்திலிருந்து ‘மூவ்’ பண்றாங்கள் போலிருக்கிறது”. சில நிமிடங்களில் ஹெலியும் வந்துவிட்டது சுழற்றி சுழற்றியடிக்கத் தொடங்கிவிட்டது. அதன் வட்டப்பாதை கல்லூரிச் சுற்றா-டலாய் இருந்தது. தலையிலே சிறாய்ச்சுக் கொண்டு போவதுபோல், மேலே போயும் கீழே இறங்கியும் மழையாகப் பொழிகிறது. நீயே பிறகும் சொல்கிறாய் “பொடியள் ராணுவத்தை தாக்க வந்து கல்லூரிக்குள் நிற்கிறாங்கள் போல” அதையும் ஒரு கருதுகோளாக்கித் தரவுகளை வாய்ப்புப் பார்க்கிறேன். ஹெலியின் சூடு காதைப்பிளக்கிறது. எனவே திரும்பவும் “பாபாவை அழைப்பு”.

வெளிச்சுவர்களில் புல்லெற்கள் டணார் டணார் என மோதிக் கீழே விழுகின்றது. ஹெலி மற்றப்பக்கம் போனபோது ஓடிப்போய் யன்னலால் பக்கமுற்றத்தில் கட்டிவிடப்பட்ட ஆட்டைப் பார்க்கிறாய். அயலில் நாய் படுத்திருக்கிறது. எதுவித உயிர்ப்புமின்றி “இரண்டும் செத்துப்போச்சுது போல” என்கிறாய். நானும் பார்க்க கால்களைப் பரப்பியபடி கண்விழித்தபடி அப்படியே கிடக்கிறது. கொட்டிலில் கட்டுக்கொடியில் நின்ற ஆட்டை பின்னேரம் அவிழ்த்துக் காலாற இங்கே கட்டியதும், ஆட்டடி கூட்டியதும், இங்கே இலைகுழை போட்டதும், அதிலேயே இரவுக்கு நிற்கட்டும் என்று சொன்னதும், ஆடு சாக நானே காரணமெனக் கலங்கினேன். ஆனால் காலையில் நாம் வெளியே வந்தபின் அது எழுந்துநின்று உடம்பை உதறி ‘மே’ எனக் கத்துகிறது. கூவாத கோழிகள்கூட எம்மை வெளியே கண்டபின்தான் மரத்தால் இறங்குகின்றன. எல்லாப் பிராணிகளுமே பயத்தில் உறைந்து கிடந்தன போலும்.

விடியற்காலக்கருக்கலில் றயில்பாதைச் சந்தியிலிருந்து ஒருபெரும் வெடிச்சத்தம் மேல் நோக்கிப்போவது போல். சங்கிலிவிழும் சத்தமும் ஒன்று. வந்துவிட்டான்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலைக்கு என எண்ணவும் றோசா நீ பாய்ந்து யன்னலடிக்கு ஓடுகிறாய் வேடிக்கை பார்க்க. "நான் சொன்னன், பெடியள்தான் ஹெலிக்கு மோட்டார் அடிக்கினம் போல" அத்தோடு ஹெலி போய்விட்டது. ஒரு அமைதி நிலவுகிறது. நீ போய் நிம்மதியாகக் கட்டிலில் படுத்துவிட்டாய். வாணி காப்பி வைக்கப்போகி-றாள். "இனியும் தாங்கேலாது அடுத்தாச்சல் தொடங்குமுன் கோப்பியாகிலும் குடிப்போம்" என.

நானும் ஒருக்கால் நீட்டிநிமிர்ந்து படுத்திவிட்டுவாறேன் என முன்னறைக்குப் போகிறேன். கண்ணாடி யன்னல்களை உடைத்துக் கலாபரமேஸ்வரனைச் சுட்ட அனுபவத்தால் தாக்குதல் நடக்கும்போது நடு அறைக்குப்போய் விடுவோம். ஐந்து நிமிடமும் ஆகவில்லை. ஒரு பாரிய வெடிச்சத்தம் எங்கள் வீடு குலுங்கியது. பூட்டியிருந்த முன்பக்க யன்னல்களும் கதவுகளும் "ஆ"வெனத் திறந்துகொண்டன. கண்ணாடிகள் நொருங்கி விழுந்தன. கட்டிலில் உருண்டு மெல்ல நிலத்தில் வீழ்ந்து தவழ்ந்து கதவடிக்குப் போகவும், வாணி அம்மா என அலறியடித்து ஓடிவாறாள் அப்பா இருந்தபடியே "அம்மா அம்மா" என ஒரே கத்து. றோசாவும் எழுந்து பரக்கபரக்க முழிக்கிறா. அந்த அறையில்தான் செல் விழுந்ததென நினைத்து விட்டார்கள்.

எமது வீட்டின் முன், கல்லூரியின் உலோகத் தொழிற்சாலை. அதன்மீது விழுந்தே அது நொருங்கி விழுகிறது. நடுவே றயில்பாதை 25 யார் தூரம் இருக்கும். பேச்சுமூச்சற்று நிற்கிறோம். "பகவானே நன்றி". இயக்கினவனின் கோணம் சரியாக இருந்தும் தூரம் மயிரிழையில் தப்பிவிட்டது.

நன்கு விடிந்து சூரியஒளி நிலத்தில் பரந்தபின் நீண்டநேரம் நிசப்தத்தின் பின்தான் வெளியே வருகிறோம். அண்டையயலில் ஒருவருமில்லை. அந்த இரவுக்கு நாங்கள் மட்டும்தான் சாட்சி என நினைத்துக் கொண்டிருக்க வேறும் ஒரு உயிர் வயதுபோன அம்மா ஒருவர் கடற்கரைப் பக்கமிருந்து வந்துகொண்டிருந்தார். நாங்களும் புறப்பட ஆயத்தம் செய்துகொண்டு றோசாவை பெரிய வீதிக்குச் சென்று டாக்டர் ராஜேந்திராவிடம் அப்பாவை ஏற்றக் காரை அனுப்பும்படியும், அவர்கள் இல்லாவிட்டால் மினிவான் ஒன்றை பிடித்துவரும்படியும் சொல்லி அனுப்பினோம்.

சிறையிலிருந்து விடுபட்ட பறவைபோல நாட்டு வளப்பம் அறியலாம் எனச் சென்ற நீ, படுபயங்கரமான முகத்தோடு வந்துசேர்கிறாய். உன் தொண்டைக்குழியின் துடிப்பிலிருந்து மிகவும் அரண்டு பயந்திருக்கிறாய் என்பது புரிகிறது. உன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவர நேரஞ்செல்கிறது. திகைப்பு.

"ஈற்றில் - தெருவில் ஒரு ஈ காக்கா கூடப்பறக்கவில்லை. பயங்கரமாக இருக்கு. பிரக்கிராசி அங்கிள் வீட்டுக்கு முன்னாலை தலையில்லாமல் ஒரு ஆள் சைக்கிளோடு விழுந்து கிடக்கு, மைதானத்தடியில் தெருவெல்லாம் இரத்தம் வழிந்தோடிக்கிடக்கு, அங்கால சாரம் உடுத்தபடி ஒன்று கிடக்கு. ராஜேந்திரா வீடு பூட்டியிருக்கு. காரோ ஒரு மனிசரோ இல்லை. எங்கடை குருவீதியால் வந்தால் இவற்றைச் சந்திக்காமல் வரலாம் என்று திரும்பிப்பார்க்க அதுக்கும் முன்னாலை மூட்டை மாதிரி இரண்டு இடத்திலே தெரியுது. ஆட்கள் தானாக்கும். திரும்பிற்றன் சயிக்கிளை வெட்டி வெட்டி ஓடி மற்றப்பக்கத்தைப் பார்த்துவர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கடைப்பிடியிலை ஒருதலை நிமிர்ந்து நிற்குது.

என் கண்ணே, என் செல்வமே அன்றுவரை எங்கள் உறவு வீடுகளுக்குக்கூட பிரேதம் இருக்கும்போது உன்னை நான் அனுப்புவதில்லை. உன் மென்மையான றோசா இதழ் இதயம் கூம்பிவிடுமே. உன் குழந்தைமை வதனம் வாடிவிடுமே எனச்சித்தார்த்தனாக வளர்த்த என் செல்வத்தை தட்டத்தனியே இந்தக் கொடூரங்களைக் காண வைத்தேனே என என்னுள்ளம் பிசைந்து கொண்டேயிருந்தது. வாணி தந்த கோப்பியையும் மறுத்து நாடியைக் கையிலே தாங்கிக் குந்துச் சுருளில் இருந்துவிட்டாய். அதன் பின்னரும் எத்தனையோ பயங்கரங்களைச் சந்தித்துள்ளோம். ஆனால் அன்று உன் முகத்தையும் உன் நிலையையும் கண்டதுபோல வேறோரு காலத்திலும் கண்டதேயில்லை.

நல்லகாலம் அந்த முதிய பெண் "அம்மாளாச்சி இந்த வீடென்றாலும் திறந்து கிடக்கு. ஒரெப்பன் என்டாலும் சுடுதண்ணி தாருங்கோ பிள்ளயள்" என்றவாறே உள்ளே நுழையவும் உன் சிந்தனை திருப்பப்படுகிறது. "பாவம் பெடியள் கொஞ்சம் தோல்வியாய் போச்சு" என்கிறா நாங்கள் கண்ணை அகல விரித்தவாறே என்ன நடந்தது என்கிறோம்.

புலிப்பெடியள் துறைமுகக் காம்ப் அடிக்க வந்தவங்கள். பள்ளிக்கூடத்தில்தானாம் நிலைகொண்டவை. சாமான்களை ஏற்றப்போகும் லொறிகள் தெருவில் வரிசையாக நின்று 11 மணியின்பின் துறைமுக அனுமதி கிடைத்ததும் அங்கேபோய் சோதனைசசாவடியில் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் உள்ளே அனுப்பப்படுவன. ஏற்றி இறக்கும் தொழிவாளர்கள் ஏற்கனவே அங்குசென்று இரவில் தொழில் செய்து காலையில்தான் வெளியே வருவார்கள்.

போராளிகள் சாரதிகள் அறியாவண்ணம் லொறிகளில் ஏறிப்பதுங்கியிருந்து சோதனைச் சாவடிக்கு அண்மையில் இறங்கி துறைமுகம் கட்டுவதற்காகப் போடப்பட்டிருந்த நீண்ட சீமெந்துக் குழாய்க்குள் பதுங்கிவிட்டனர். சிலர் வங்கியின் மேல்மாடியில். முகாம் காவலாளி சிறிது அயர்ந்துவிட அப்போதான் வெளியே சலம்விட வந்த சிப்பாயைக் கவனிக்காது இவர்கள் வெளியேவர அவன் அலறியடித்து சுட்டபடியே ஓட நிலைபெடுக்கு முன்னரே உசார்நிலை. இருபக்கமும் சுடுபட துறைமுகத்திலிருந்து தாக்குதல் தொடங்கிவிட்டது.

இருபகுதித் தாக்குதலுக்கும் நடுவே துறைமுகத்தை நோக்கி ஓடிய சிப்பாய்கள் அகப்பட்டு மரணிக்கவும் பரா வெளிச்சத்தில் வங்கி மேலிருந்தோரும் தாக்குதலுக் - குள்ளாயினர். காயக்காரரையும் தூக்கிவந்து கல்லூரியருகில் நின்ற வான்களில் ஏற்றி அனுப்பிவிட்டனர். எல்லோரையும் ஏற்றி முடியத்தான் ஹெலிக்கு மோட்டார் அடித்தார்கள்.

இத்தாக்குதலில் எத்தனைபேர் இருபகுதியிலும் கொலையுண்டார்கள் எனத் - தெரியாது, ஆனால் எமது துறைமுகத் தொழிலாளர்கள் உடனேயே ராணுவப் பெரியவனிடம் சரணடைந்துவிட்டதால் அவர்கள் பாதுகாக்கப்பட்டுவிட்டார்கள். எனினும் எமது கலாசாலையின் விரிவுரையாளர் கனகேஸ்வரியின் கணவன் மயில்வாகனம் (ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி) அங்கே மற்றப்பகுதியில் காவற்கடமையில் இருந்தவர். அவர் உடனேயே ஓடியிருக்கலாம். மறுநாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை இராணுவம் அவரை பங்கருள் அழைத்துச்சென்று சுட்டுவிட்டு ஒரு இராணுவ அதிகாரிபோல உடுப்புகளும் துவக்குகள் தோட்டா பெல்ற் எல்லாம் பூட்டிப் படமெடுத்து மறுநாள் TVயில் புலிகளின் கொமாண்டர் சுடப்பட்டார் என நீண்டநேரம் காட்டினார்கள்.

போர் தொடங்கமுன்னரே கடற்கரைமக்கள் போராளிகளைக் கண்டவுடன் மெல்லமெல்ல இருண்ட ஒழுங்கைகளால் தெல்லிப்பளை சுண்ணாகப்பக்கம் போய்விட்டார்கள். இந்த அம்மையார் நடக்கமாட்டாராகையால் கஸ்டம் வந்தால் அந்தக் குழாய்க்குள் இருக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். அப்படியே இருந்துதான், பசிதாகம், குளிர் எனப் புறப்பட்டுவிட்டார்.

9 மணிபோல கருணானந்தசிவம் (பின்னர்வரும்) சைக்கிளில் செல்கிறார். "நீங்கள் இங்கேயா இருந்தனீங்கள். எப்படி இருந்தீர்கள். தெல்லிப்பளைவரை ஒரு சனமும் இல்லை. ஒரு எண்ணெய்க் கப்பல் துறைமுகத்தில் எரிந்து கொண்டிருக்கு. இன்றைக்கு ஆமி மூவ் பண்ணும், கெதியாகப் போயிடுங்கோ. அவசியமான அடையாள அட்டையை விட்டிட்டுப்போட்டம். அதுதான் வந்தனான். திரும்பிப் போய் ரதியக்காட்டச் சொல்லுகிறன் என்று சொல்லிப் போய்விட்டார்.

2 மணிக்கு வந்து ரதிச்சித்தப்பா அப்பாவைச் சைக்கிளில் ஏற்ற நாம் நடையில். மேலே ஹெலி சுற்றுகிறது. தலைக்கறுப்பைக் கண்டால் சுடுகிறது. நாங்கள் சங்கீதக்கரைக்கு ஓடுவதுபோல படலைக்குப்படலை தாவி தூண்களோடு மறைந்து நின்று ஒருபடியாக மாவிட்டபுரம்வரை வந்து கோபுரத்தில் இளைப்பாறுகிறோம். நேரம் செல்கிறது. அப்பாவும் சித்தப்பாவும் தெல்லிப்பளையில் காத்து நிற்பார்கள் என வாணி அவசரப்படுத்தவே எழுந்து தெருவுக்கு வருகிறோம்.

றோசா, நாம் வந்த பாதையை அந்த நீண்ட தெருவைப் பார்த்துக்கொண்டே நிற்கின்றாய். எமது ஊருக்குப் பிரியாவிடை சொல்கிறாயோ? நீ சொல்கிறாய்.

"நான் பிறந்த வீட்டைவிட்டு, விளையாடிய மண்ணைவிட்டு, படித்த பாடசாலையை விட்டு, இந்த ஊரையே விட்டு, அகதியாய் ஓடவைச்சிட்டான்கள். இந்தநிலை இனிமேல் எங்கள் சந்ததிக்கே வரக்கூடாது". உன் முகத்தில் கவலையும் குரலின் உறுதியும் தொனிக்கிறது. நீ சொல்வதைச் செய்பவள். செய்ய முடியாததைச் சொல்லமாட்டாய். நடக்கவேண்டிய தூரத்தை நினைத்துக் களைப்போடு "சரி சரி, தத்துவம் பேசினது போதும் வா வா" என்கிறேன் சலிப்போடு.

இருந்தும் உன்கூற்றை அலட்சியம் செய்யவில்லை சிறிது உசாராகவே இருக்கத் தொடங்குகிறேன்.

என் றோசாக் குஞ்சு அன்றுதான் உன் உள்ளத்தில் விதை நாட்டப்பட்டது என நான் நினைக்கிறேன். ஏனெனில் நீங்கள் எழுதிய முதலாவது கடிதத்திலேயே "நான் மூன்று வருடங்களாகச் சிந்தித்து சிந்தித்து எடுத்த முடிவுதான் இது, யாரையும் நோக வேண்டாம். யார் சொல்லையும் கேட்கும் புத்தியில்லாதவளா நான் எந்தவொரு நண்பிக்கும் தெரியாது ஆனபடியால் அவர்களை ஏசாதீர்கள்" என எழுதியிருந்தீர்கள்.

1983ம் ஆண்டிலிருந்து அன்றுவரை நீங்கள் சந்தித்த அனுபவங்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டூழியங்கள், அநியாயங்கள், அதர்மங்கள், அக்கிரமங்கள், அதிர்ச்சிகள் எல்லாம் உங்கள் உள்ளத்தை கடினமடையச் செய்து இறுக வைக்கிறது. அது சுதந்திர ஈழத்துக்கான சிந்தனைகளை உரமாக்கி வளப்படுத்திப் பண்படுத்திவிட்டது போலும்.

இன்று நீ குமுறிச் சொன்ன அந்த வேதனைக்குரல் என் காதில் இரைகிறது. “நான் பிறந்த வீட்டையும், விளையாடிய மண்ணையும், படித்த பாடசாலையையும் விட்டு, என் ஊரையே விட்டு அகதியாய் ஓட வைச்சிட்டாங்கள். இனிமேல் இந்த நிலை எங்கள் சந்ததிக்கே வரக்கூடாது”.

நான் குழந்தையென்று உன்னை நினைக்க ஏதோதோ கடுங்கருத்துகள் பொதிந்த வார்த்தைகள் உதிர்க்கிறாய். பாதிக்கப்பட்டவர்களின் பதிவுகள் ஆக்குகிறாய். ஆம் நம் வரலாறு இலட்சியங்களுடன் வாழும் இளைஞர் யுவதிகளின் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. கட்டாயக் கடமையைத் தலையில் சுமத்தி விடுகிறது. சுமக்கும் அந்தப் பெருஞ்சுமையைப் பஞ்சுப்பொதியெனக் கொண்டு உன் போன்ற வீரரும் வீராங்கனைகளும் களத்தில் குதித்து விட்டீர்கள்.

ஆனால் இங்கோ உங்கள் கல்லறைகளுக்கு மேடையமைத்து மக்களைச் சந்திக்க வைக்கிறோம் எனக்கூறி ஏற்கனவே குழம்பிக் கிடந்து பிறரின் இரத்தத்தை உறிஞ்சி உல்லாச வாழ்வு வாழும் சிலர் குழப்பியடிக்கிறார்கள். தேவர்களே காலடி வைக்கத் தயங்கும் இடத்துக்கு மூடர்கள் நாலுகால் பாய்ச்சலில் செல்வார்களாம் என இவர்களைப் பற்றிக்கூறி என் வெதும்பலைத் தீர்க்க வேண்டியுள்ளது. உபத்திரவங்கள். பழந்தமிழ்க்குடிகள் நாம் வரலாற்றுக்கெட்டிய காலம்வரை வடதேசங்களிலிருந்து வருவோர்கள் காலடி பதிக்கும் இடங்கள் காசத்துறை, குரக்கன்துறை, வீரமாணிக்கதேவன்துறை எனப் பல சிறுதுறைகளைக் கொண்ட காங்கேசன்துறை எனும் பெரிய துறைமுகம் எமது நகரமாகும். அப்பெரிய ஊரையும், பரம்பரை பரம்பரையாக ஆண்டனுபவித்த காணி பூமிகளையும், நாற்சார் வீடு தொடக்கம் நவீன வசதிகளுடன்கூடிய இல்லங்களையும், வானளாவ நிற்கும் மா பலா தென்னையென்று பயிரிட்டு நீருற்றி இலையெண்ணி வளர்த்த மரஞ்செடி கொடிகளையும், கோயில் குளங்களையும், எம்மால் அன்போடு வளர்க்கப்பட்ட செல்லப் பிராணிகளையும் பின்னே தவிக்க விட்டு ஏன் ஓடினோம்? ஏன் ஏன்? இவன் கொட்டினான் அழிக்கிறான் என நியாயப்படுத்தும் அநீதிவான்களே கேளுங்கள்.

இனியொரு அமைதியான உலகம் ஏற்பட வேண்டுமானால் ஆயுதங்கள் தொடக்கம் ஆகாய விமானங்கள்வரை நீங்களும் ஏன் நாங்களும் மகாபிரளயம் ஒன்று ஏற்பட்டு மாய்ந்து போனால்தான் அது நடக்கும். அதுவரை எத்தனை மகான்கள் அவதாரங்கள் சமாதானத் தூதுவர்கள் தோற்றினாலும் இந்த அழிவுப் பாதையும் வளர்ந்து கொண்டேவரும். மனிதன் இயற்கையின் சீற்றத்தால் மட்டுமல்ல செயற்கையின் சீற்றத்தாலேயே அதிகமாக அழிந்து கொண்டே போகின்றான். வேண்டாம் தொடர்வோம்.

உடுவிலுக்குப் போவோமா நீர்வேலி போவோமா எனும் சிந்தனை. நாங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைய வேண்டிய காலம் அதனால் பாடசாலைகளின் அண்மை நோக்கி நீர்வேலி போகிறோம். எங்கள் பெறாமகனும் குடும்பமும் குடியிருந்த வீடு. கண்ணாடித் தொழிற்சாலையில் போமன் ஆக வேலை பார்ப்பவர் குடும்பம் கல்வியங்காட்டில். எனவே வீடு எம்மோடுதான். கணவருக்கும் பழக்கப்பட்ட இடம், றோசாவுக்கும் எனக்கும் ஒரு பஸ் பிரயாணம், சிறிய தகப்பனை பகலில் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்வார் வரதன் என வசதிகளை பார்த்தோமே - யன்றி சட்டிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த மாதிரி என்பதை அப்போது அறிந்து கொள்ளவில்லை.

வசாவிளான், கட்டுவன், மாவிட்டபுரம் பக்கங்களிலிருந்து இடம்பெயர்ந்த சிலரும் அயல்களில் இருந்தார்கள். இயக்கத்தின் செயற்பாடுகளை நேரில் காணவும், அவர்களை வைத்து கிராம மக்களின் வீரவழிபாட்டையும், மிகவும் நேசமுடன் உணவூட்டி கரந்துறையும் வசதிகள் செய்து கொடுப்பதையும், இளம்பெண்கள் இரவில் சர்வசாதாரணமாகத் திரிவதையும், எம் வீடு வந்து றோசாவுக்கும் எமக்கும் அவர்களைச் சுட்டிக்காட்டி அவர்களின் வீரசாகசங்களையும் செயல்களையும் விண்டுரைப்பதையும் நாமும் விக்கிரமாதித்தன் கதை கேட்பதுபோல சுவாரசியமாக கேட்பதையும் அனுபவித்தோம். இதனால் பழைய விழுமியங்களுள் சில விழுந்துடையத் தொடங்கின. றோசாவின் நட்பை விரும்பி, படிக்கும் இரவு நேரத்தில்கூட அவர்கள் வருவதையும் வெளியே இருந்து பேசு-வதையும் தடுக்க மனமில்லை.

ஊரடங்குச் சட்டங்கள், பலாலியில் கேட்கும் ஆட்டிலறி செல்கள், குண்டு வெடிப்புச் சத்தங்கள், பயங்கர சூழ்நிலையில் எம்மைப்போல் அந்த வயதில் களியாட்டங்கள், விளையாட்டுப் போட்டிகள், வலைப்பந்தாட்டம், பட்மின்ரன் எனப் பல அனுபவங்களையும் இழந்தநிலை இவர்களுக்கு. கலகலப்பும் சிரிப்பும் மறந்தநிலை என்ன செய்வது இப்போதெல்லாம் வேம்படிக்கு வீட்டிலிருந்துதான் போகிறாள். ஏதும் அசம்பாவிதங்கள் அங்கே நடந்தால் மட்டும் நகுலா வீட்டில் நிற்பாள்.

ஒரு புதிய இடத்தில் வாழ்க்கை கிராமியக் கலப்பு நன்றாகத்தான் இருந்தது. ஆனால் வீட்டுக்கு வீடு பங்கர்கள். தோட்டவேலிகளில் பங்கர்கள் அதன்மேல் ஆட்டுக்கொட்டில். இங்கே முன்பொருமுறை குண்டு போட்ட அனுபவம் இருந்ததால் பலத்த ஏற்பாடுகள். பங்கர் என்பது நமது பிரதேசங்களில் காணவே கிடைக்காது. இங்கோ தெருவில் காணப்படும் மதகுகளின் கீழேகூட நன்கு துப்பரவாக்கப்பட்டு மணல் பரவியிருந்தது. ஹெலி பலாலியிலிருந்து நாவற்குழி முகாமிற்கு உணவு கொண்டு புறப்பட்டாலும் தோட்டத்தில் நிற்கும் பெண்களுக்குத் தெரிந்துவிடும். அவர்கள் கூ கூ வென (இறைப்புக்கு ஆட்களை கூப்பிடும் சத்தம்) போல் சத்தம் வைப்பார்கள். இது மாறி மாறிக் கோப்பாய் எல்லைவரைபோக எல்லாரும் பங்கருக்குள் போய்விடுவார்கள். கடைகளில் நிற்பவர்கள் மதகுகளின் கீழே போய்விடுவார்கள். வாற ஹெலியும் நீர்வேலிச் சந்தியிலும் கோப்பாய்ச் சந்தியிலும் தன் பங்குக்கு 50 கலிபர் தோட்டாக்களை வீணாக்கிச் செல்லும். அந்த வீட்டின் குளியலறைக்கும் மலசலகூடத்துக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே சீமேந்து தட்டுப் போடப்பட்டிருந்தமையால் நாம் மூவரும் நின்று எங்களுக்கும் ஹெலிக்கும் பிறவித் தொடர்போ எனப் பேசிக் கொள்வோம்.

நம் வீட்டின் முன்தான் புத்தூர்க் கொள்ளையில் பெயர்பெற்ற ஆலமரமும் குளமும் இருந்தன. இத்தனை பிரசித்தி வாய்ந்த இடம் றோசாவின் சூழலாக அமைந்ததுதான் விதிபோலும். ஆவணிமாதம் வரப் போகின்ற பரீட்சைக்கு முழுமூச்சாக உன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறாய். இயக்கக் கூட்டத் -திற்கு தோழிமார் அழைப்பார்கள் நீ போக மறுத்து விடுவாய். கலைவிழாக்கள் தவிர்ந்த வேறொரு கட்சிக் கூட்டங்களுக்கும் நாம் போவதில்லைதானே. தலைவர் பிரபாகரன் சுதுமலைக்கு வந்தபோதுகூட மினிவான்கள் இலவசமாக மக்களை ஏற்றிச் சென்றன. நீர்வேலியே திரண்டு சென்றது. உன் நண்பிகள் வந்து அழைக்கிறார்கள். நீ மறுத்துவிட்டு வானில் ஏறும் சனங்களைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாய். முகத்தில் எதுவித சலனமும் இல்லை. எனக்கே பாவமாக இருக்கிறது. 'கேட்டால் விடுவோம்' எனத் தளர்ந்தேன். ஆனால் நீ கேட்கவில்லை. திரும்பி வீட்டுள்ளே போகும்போது அப்பா கேட்கிறார் "போறதா" அவரைத் திரும்பிப் பார்த்துவிட்டு உள்ளே போகிறாய்.

உன் மௌனங்கள் என்னைச் சித்திரவதை செய்வன. எதையும் தங்க வைக்காத என்னுள்ளம் அதையே பிறரிடமும் எதிர்பார்க்க முடியுமா? நான் மெல்ல எழுந்து எட்டிப் பார்க்கிறேன் நீ படிப்பில் ஆழ்ந்துபோய் இருக்கிறாய். உன் உள்ளத்தில் ஆவல் இருந்ததா? யாருடனும் அம்மா தனியா அனுப்ப மாட்டா என நினைத்தாயா? படிப்பு வேலை நிறைய இருந்ததா? கிராமமே வெறிச்சோடி இருக்கும் நிலையில் அப்பாவை விட்டிட்டு அம்மா வர மாட்டா. கூட்டிப்போக நம்மவர் இல்லை என நினைத்தாயா? குடும்ப விழுமியங்களுக்கு தலை சாய்த்தாயா? நானாகிலும் உன்னைக் கேட்டிருக்கலாமா? எனக்கும் உள்விருப்பம் இல்லாமல் மெதுவே அந்த வினாவை தடுத்து விட்டேனா? பல கேள்விகள் என்னை அலைத்தன.

நள்ளிரவையண்டி வந்திறங்கிய மக்களைப் பார்க்க நீயும் நானும் விறாந்தையில் நிற்கிறோம். அந்த பெண் பிள்ளைகள் இருவரும் உடனேயே ஓடி வருகிறார்கள், கதைகதையாகச் சொல்கிறார்கள், சிரிக்கிறார்கள் மாறிமாறி ஒன்றுள்ஒன்று புகுந்து சொல்கிறார்கள். மிக ஆவலுடன் கேள்விகள் கேட்டுக் கேட்டு கிரகித்து கொள்கிறாய் நீ.

G.C.E பரீட்சை தமக்கு நடத்தக்கூடாது இந்தக் குழப்பமான சூழ்நிலையில் என ஒரு சாரார் தொடங்குகிறார்கள். யாழ்ப்பாணம் முழுவதும் ஓரே வாதப்பிர-திவாதங்கள். றோசாவும் பரீட்சை வைக்கக்கூடாது என்பதை ஆதரிக்கிறார். நான் ஒரேயடியாகச் சொன்னேன் நீங்கள் பரீட்சை எழுத வேண்டும். அரசியல் மாண-வரின் கல்விக்குள் புகுவது சரியல்ல, இனி அடுத்த தடவை நிலைமை இன்னமும் மோசமாகக்கூடும் அடுத்ததாக நாங்கள் கனடாவுக்குச் செல்ல இருக்கிறோம். கல்விப் பத்திரம் ஒன்று தேவை இந்தநேரத்தில் கல்வி பாதிக்கக்கூடாது. கல்வியில் யாரும் கைவைக்கக்கூடாது எனச்சத்தமிட்டேன். மறுநாள் பல்கலைக்கழகத்திலிருந்து கல்வித்திணைக்களம்வரை பரீட்சை மறுப்பு ஊர்வலமாம். முன்னேற்பாடோ தெரியவில்லை. காலையில் வேம்படி நண்பிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் அங்கிருந்தே தேடி வந்துவிட்டார்கள். சுதந்திராதேவி "எங்களைக் கேட்டா" எல்லாம் நடக்கப்போகிறது? எல்லா மாணவருடனும் நாங்கள் கலந்து கொள்ளாவிட்டால் எம்மைக் கருங்காலிகள் என்பார்கள் ஆன்ரி என்று சொல்லவே நானும் கூட்டிப் போகும்படி விட்டுவிட்டேன்.

வீட்டின் அழுத்தங்களும் நாட்டின் அழுத்தங்களும் என் சிந்தனையை மழுங்கடித்து விட்டனவா? ஒரு சிறு பிள்ளை சொல்லும்வரை நியாயங்கூட எனக்கு புரிவவில்லையா? அல்லது அவர்கள் ஒரு நீதிபதியினதும் ஒரு விரி-வுரையாளரினதும் புதல்விகள் என்றபடியால் விட்டுக் கொடுத்தேனா? புரட்சிக் கொடிகள் பிடித்து மாற்றங்கள் பெற்று என் ஆசிரிய வாழ்வில் பட்ட துன்பங்களால் இவற்றில் நாட்டமில்லாது போய்விட்டதா? சிபாரிசுகளுக்கு அடிபணிந்தமை சின்னத்தனமென்று நினைத்தேன். சரியாக சிந்தித்து சரியான முடிவு எடுத்து மகளை விட்டிருந்தால் றோசாவின் மதிப்பில் நான் உயர்ந்திருப்பேன், சுயநலவாதியாக தோற்றமளித்தமை இந்தப் பயங்கர வாழ்வுக்கு ஈடுகொடுக்க முடியாமையிலா? என்னையிட்டு நானே அவமானத்தில் குறுகினேன்.

நடந்துபோய் களைத்துவரும் மகளுக்கு நல்ல கறி சோறு சமைத்து விசேட விருந்தொன்று படைத்ததுதான் நான் செய்த நட்டாடு. சம்பள காசோலை மாற்றமுடியாது ஊரடங்கு அறிமுகமில்லாத இடம். கடன்பட்டறியாத மானங்காக்கும் அகங்கார உள்ளம். மகனுக்கு இந்தியாவுக்கு காசு அனுப்ப முடியவில்லை, நாங்களே அகதிகள் அநாதைகள், நகைகள் எல்லாம் வீட்டிலே கிணற்றடி கமுக மரத்தடியில் மூன்று அடி ஆழத்தில் ஆபத்துக்கு உதவாத-வையாகக் கிடக்கின்றன. வீட்டிலே நெற் களஞ்சியம், தேங்காய், முருங்கை. இங்கோ அரிசி வாங்கப் பணமில்லை. மாற்றியுடுக்க சேலைகள் இல்லை. அன்னதானம் சொர்ணதானம் வஸ்திரதானம் செய்துவந்த குடும்பங்களில் பிறந்தும் எமது கர்மம் இப்படி வாட்டுகிறது. ஊரோடு ஒத்ததுதான்.

காப்பைக் கொடுத்து அரிசி வாங்க றோசாவை அனுப்பியபோது கடைக்காரன் எல்லாம் விசாரித்திருக்கிறார். முக்கந்தர் சின்னத்தம்பியின் பேத்தியா? ஐயையோ காப்பு வேண்டாம் கடனாகத் தருகிறேன் என்றிருக்கிறார். அம்மாட்டைச் செக் இருக்குது என்று சொல்ல, தான் ஒருவரிடமும் செக் எடுப்பதில்லை ஆனால் சாமான் லொறிக்குக் கொடுக்கலாம் எனக்கூறி செக்கை ஏற்றவுடனே எமது பசி பட்டினியும் தீர்ந்தது.

இளம் பெண்களை விட்டுச் சில காரியங்களைச் சாதிக்கும் பலரைக் கண்டு உளம் நொந்து இருக்கிறேன். வரிசையில் நிற்கத் தேவையில்லை. பதுக்கி வைத்த பொருள்களை அவர்களுக்காக வெளியே விடல். அலுவலகங்களிலும் நூறு கேள்விகள் கேட்காமல் தேவையானதைச் செய்து விடுதல் எல்லாம் பெண்மையை விலை பேசுதல் எனும் எண்ணத்தை எண்ணுள் வளர்த்து வந்தது. அதனால் என் தன்மானத்துக்காக றோசாவைக் காப்புடன் அனுப்பியது பிழை என என் மனம் குறுகுறுத்தது.

றோசா என் பல இயலாமைகள் பலவீனங்கள் உன் மனோபலத்தையும் வளர்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தன என்பது எனக்குத் தெரியும். "எல்லாவற்றையும் நீங்களே செய்து செய்து ஒரு பத்திரங்கூட நிரப்பத் தெரியாமல் வளர்த்து விட்டீர்கள் என அண்ணா குற்றம் காட்டினான்". ஒரு தடவை உள்ளே வந்து கதை என எனக்குச் சட்டம்போட்ட அம்மா றோசாவை மட்டும் சைக்கிள்வழிய ஊரெல்லாம் சுற்றும் சுதந்திரங் கொடுத்து இன்று அவள் போய்விட்டாள் என குற்றஞ்சாட்டினான். நீ பிரிந்தபோது நாங்கள்பட்ட அத்தனை துன்பங்களுடேயும் என் றோசா நீ நின்றுபிடித்தாயே. பெரும்பங்கை ஏற்றாயே. ஏற்ற முடிவுகள் உடனுக்குடன் எடுத்தாயே நீ தாயாகவல்லவா செயலாற்றினாய் என நினைத்தேன் ஒரு கரம் யோகியாகவுமே திகழ்ந்திருக்கிறாய். எமக்கே புத்தி சொல்லவல்ல உன்னை வேலியிட்டுச் சிறைகாக்க என்னால் முடியுமா? அப்படியெல்லாம் நீ அலைந்து திரிவதில்லை, அம்மா கொடுக்கும் வேலைகளைச் செய்யப் போனாலும் சில நிமிடங்களுள்ளே வந்துவிடுவாள். ராணிச் சித்திதான் அண்ணாவைத் தேற்றினார்.

சிறைகாக்கும் காப்பு என் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை

நிலவுக்கொளித்து பரதேசம் போன கதைபோல எதற்குப் பயந்து எதனால் துரத்தப்பட்டு ஓடினோமோ அதற்கு இங்கேயும் குறைவில்லை, ஆயினும் பரபரப்புக் குறைந்த ஒரு அமைதியான கிராம வாழ்வு றோசாவுக்கும் எமக்கும் பிடித்துக் கொண்டது.

எதிரே ஆலமரமும் குளமும். அதற்கப்புறம் ஒரு பெருந் தரவைக்காணி நீண்ட வெளி. நிலவுக்காலம் வெகு ரம்மியமாய் இருக்கும். பிற்பக்கம் கிராமம் நல்ல பச்சைக் காய்கறி வகைகள். சில நிமிடங்களுள் கலாசாலை, கல்லூரி போய்வர வாய்ப்பானமையால் பிரயாண நேரங்களான காலை மாலை மூன்று மணித்தி - யாலங்கள் மிச்சம். வாயோயாமல் கதைக்கின்ற வறுத்தலைவிளான் பிள்ளைகள் இருவருடனும் றோசா தரவையில் உலாத்தப் போவாள். சிரித்துக் கொண்டே வருவாள். வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலுக்குப் போவார்கள் எங்கள் குலதெய்வம் குருநாதர் கோவிலுக்கு றோசா மாலையும் கட்டிப் போவது வழக்கம். அது நினைவில் வந்து போலும் "கண்ணனண்ணை ஆட்கள் எங்கெங்கை போயிட்டினமோ தெரியாது" எனக் கோவிலோடு சம்பந்தப்பட்டவர்களை நினைவுகூருவாள்.

நீர்வேலிக் கந்தசாமி கோவில் திருவிழா நடக்கப் போகிறதென அந்தக் குளத்தையும் சுற்றாடலையும் இளைஞர்கள் ஒருநாள் துப்பரவு செய்து கொண்டிருக்கிறார்கள். நாவற்குழிக்கு போன ஹெலிக்கு மண்வெட்டிகளை உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். திரும்பிவந்த ஹெலி அவ்விடத்தில் சுட்டது மாத்திரமல்ல பலாலியிலிருந்து பொம்பரும் வந்து அவ்விடம் குண்டுகள் போட்டது. பாடசாலையும் ஒருவீடும் சேதம் அடைந்தன. இப்படி நிறையவே நிகழ்வுகள்.

தொடர்ந்து வடமராட்சி தாக்குதல். ஒருநாள் விடியும்போது தெருப்பக்கமாக ஒரே ஆரவாரம். வந்து பார்க்கிறோம் சாரிசாரியாக மக்கள் கூட்டம் நடந்து செல்கிறது. விரித்த தலையோடும், வீட்டு உடுப்போடும், இடுப்பில் பிள்ளையோடும், தலையில் பெட்டிகளோடும், சைக்கிள்களுடன் யாழ்ப்பாணப் பக்கமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைகிறார்கள். "நிலத்தாலை வாறாங்கள் பங்கருகளுக்குள்ளும் சுட்டுத் தள்ளுறாங்கள் இனி எங்க போவோம" எனப் பெலத்துச் சொல்லிக் கொண்டே போகிறார்கள், அச்சுவேலிக்கு வந்திட்டான்களாம். ஓயாத மழைபோல வடமராட்சிப் பக்கம் வந்திட்டான்களாம். ஒயாத மழைபோல வடமராட்சிப் பக்கம் ஒரே குண்டு வெடிப்புச் சத்தம்.

குழந்தையொன்று அழுவதாகத் தண்ணீர் கேட்ட ஒரு தாய்க்கு தேநீர் கொடுத்தோம். உடனே பலர் அதில் குவிந்து விட்டார்கள். என்ன செய்வதென்று தெரியாத நிலை. இது தற்காலிக வீடு. அன்றன்று பொருள் வாங்கிக் கொள்வது. எங்கள் வீடு போலவா 7 இறா சீனி 2 இறா கோப்பி என்றெல்லாம் 'ஸ்ரோக்கில்' வைத்திருக்க. அதிகாலைப்பொழுது உள்ளதைக் கொடுத்தபின் பேசாது உள்ளே போய்விட்டோம். அப்பொழுது றோசா நீ நினைவூட்டுகிறாய் "அப்பா நான் சின்னனாய் இருக்கும்போது இரவிலே றயிலில் வந்த ஆட்களுக்கு கோப்பி கொடுத்தமல்லவா"?

ஓ அதை நினைவில் வைத்திருக்கிறாய் அது ஒரு பங்குனித் திங்கள், நாங்கள் வற்றாப்பளைக்குச் சென்று இரவு 11 மணிபோல வருகிறோம். எம் வீட்டின் முன் ஒரு புகையிரதம் நிற்கிறது. காரோடு வீடு வர முடியாமல் சந்திக்குப்போய் வேறு பாதையால் வீடு வந்து விளக்குகளைப் போடுகிறோம். 8.20க்குப் புறப்பட்ட கடுகதிப் புகையிரதம் சிறிது தூரம் ஓடுவதற்கிடையிலேயே கோளாறு ஏற்பட்டு - விட்டது. கடைசிப் பெட்டி பழைய கை காட்டி மரத்தடியில் நிற்கிறது. புகையிரதப் பாதுகாப்பாளர் இறங்கி அங்குமிங்கும் நடக்கிறார். பெட்டிக்குள் இருந்த தொய்வுக்காரர் ஓயாமல் இருமுகிறார். "சூடாக ஏதும் வேணுமா" என அப்பா கேட்கிறார். புண்ணியங்கிடைக்கும் என்கிறார் அவர். காரைநகர் பருத்தித்துறை

மக்கள்கூட இடம்பிடிப்பதற்காக காங்கேசன்துறைக்கு வந்து எடுப்பார்கள். கோப்பியைக் காப்பாளர் கொடுக்கவே மக்கள் கீழே இறங்கத் தொடங்கி-விட்டனர். எனவே அண்டாவில் காப்பி போட்டோம் காப்பாளரும் அப்பாவுமாக முற்றுக் கொடுத்து விநியோகம். 2 மணிக்குதான் புகையிரதம் புறப்பட்டது. நன்றி-யெனும் வார்த்தைகள் காற்றில் தவழ்ந்தன. பூரித்து நிற்கிறோம்.

றோசா அதை நினைவூட்டியதும் ஏற்கனவே ஒரு வாய் சோறு கூடக்கொடுக்க முடியவில்லையே என்று தவித்த எனக்கு வேதனை சொல்ல முடியவில்லை. விதி என்பது இதுதான் அரசனும் ஒருநாள் ஆண்டி ஆவான்.

அன்று சசியும் வாணியும் இரவுபோல் வருகிறார்கள் மறுநாள் 24 மணிநேர ஊரடங்குச் சட்டம். வார இறுதி நீர்வேலி சலசலக்கிறது. இராணுவம் சிறுப்பிட்டிக்கு வந்திட்டானாம் உடனே கிளம்ப வேண்டும். வரதனும் இல்லை. யாரோ உதவி செய்கிற பெடியன் எங்களை அழைத்துச் சிறிது உட்புறமாகக் கொண்டுபோய் அப்பாவுக்காக ஒரு கட்டில் போடப்பட்டிருக்கிறது. பொதுக் கிணறோடு சேர்ந்த 3, 4 வீடுகள் பூர்த்தியாகக் கட்டுப்படாத பழைய கிணற்றுக் கட்டுதான் பிள்ளைகள் இருந்து சல்லாபிக்க ஏற்ற இடம். சில பூமரங்கள் தென்னஞ்சோலை அழகிய கிராமச் சூழ்நிலை. ஹெலி சுற்றாத நேரங்களில் அக்காமாரும் றோசாவும் தோட்டமெல்லாம் சுற்றுவது வாழைத் தோட்டத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுவதும், கப்பற் குலையைப் பார்த்து பெருமூச்சு விடுவதும், வெள்ளரி கெக்கரி வத்தகைச் செடிகளை நேரில் பார்த்தும், தின்றும், நன்றாக விதம்விதமான உணவு வகைகள் பழவகைகள் பலகார வகைகள் என ஒவ்வொரு வீட்டிலும் இருந்து வரும். வருபவர்கன் இரவில்தான் கிணற்றடியில் குளிப்பார்கள். ஹெலி சுடத்தொடங்கினால் வீட்டுக்கார அன்றி இவர்களையும் கூட்டிக்கொண்டு ஆட்டுத் தொட்டில் போடப்பட்ட பங்கருக்குள் சென்று விடுவா. உள்ளேயிருந்து கடலை முதலியன கொறிப்பார்களாம்.

ஆனால் றோசா இறங்க மறுத்து விடுவாள். முற்றத்தில் நின்று அண்ணார்ந்து பார்ப்பாள் இவங்களுக்கு பயந்து பங்கருக்குள் போகமுடியாது செத்தால் பரவாயில்லை என்பாள். வானோலி மூலம் செய்திகளை அறிந்து கொள்வோம். ஒரு வாரம் சென்றதும் பழையபடி நாம் இருந்த வீட்டுக்கு வந்துவிட்டோம். அக்காமாரும் போய்விட்டார்கள்.

சில நாட்களில் திரும்பவும் ஹெலிகொப்டரில் தரவையில் இராணுவம் வந்து இறங்கப் போகிறதெனவும் வீடுகளை விட்டு வெளியேறுமாறும் அடுத்த கதை வந்தது. இத்தடவை வரதன் எம்மைக் கூட்டிப்போய் உடுவிலில் அவரது அக்காவும் எமது பெறாமகளுமான வதனி வீட்டில் விட்டு வந்தார்.

அங்கே வீடு வாடகைக்குத் தேடியும் சரிவரவில்லை. பேச்சு வார்த்தைகள் நடை-பெறுவதாகவும் இராணுவம் சிறிது ஓய்வு எடுப்பதாகவும் கேள்விப்பட்டு ஒரு வாரத்தில் மீண்டும் நீர்வேலிக்கு வந்தோம். எப்படியும் ஒரு தனி வீடுதான் எமக்கு சரியானது. இனி இராணுவம் வந்தாலும் புறப்படுவதில்லை எனும் தீர்மானத்தோடு:

பரீட்சைக்குச் சில தினங்களே இருந்தன. றோசா படிப்பில் மிக ஊக்கமாக இருக்கிறாள். கலாசாலையால் வீடு வந்ததும் அப்பா சொல்வார் "அந்தப்பிள்ளைகள் வந்து ஒரே கதை கதை ஒரே புலி புலி" றோசா "கொஞ்ச நேரந்தான் கதைச்சனான்" என்பாள். "அப்பா இனி அம்மா இல்லாத நேரம் கோப்பி சாப்பாடு போட்டுத் தரமாட்டேன். கோள்மூட்டிக் கொண்டு. அவரைப் பாருங்கோவன்" என்று செல்லம் விடுவாள். உடனே அப்பா சிரிப்பார். என்னைப் பார்த்து "பாவம்" என்பார் அதாவது "ஏசாதேயும்" என்பதுதான்.

உரும்பிராய் தாவடி பொம்பரினால் தாக்கப்படுகிறது. நாமெல்லாம் விறாந்தைக-ளிலும் வேலியிலும் நின்று கோண்டாவில் பக்கம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். வகுப்பறையில் றேடியோவில் விமானி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக் - கிறார்கள். சில ஆசிரிய மாணவர்கள் அறிவித்தல் கொடுத்திட்டான் என அவர்கள் சத்தம் போட பொம்மர் குத்திக் கொண்டு வரும்.

குண்டைப் போட்டவுடன் மேலெழும்பும் அதன்பின் வெடிக்கும் சப்தம் கேட்கும் "மினிஸ்டரும் அதற்குள் இருக்கிறார் போல" ஏனென்றால் "யெஸ் மினிஸ்டர்" என அடிக்கடி சொல்கின்றார்கள் என மாணவர்கள் சொன்னார்கள். இதை மறுநாள் பத்திரிகைகள் ஊர்ஜிதம் செய்தன. இவையெல்லாம் றோசாவுக்குச் சுடச்சுட செய்திகளாக வந்து சேர்வதும் அதை எங்களுக்குச் சொல்லாது விடுவதும் நடக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் கோட்டையில் இருந்து தீவிரமான செல்லடி, ஊரடங்குச் சட்டம் போடப்பட்டு விட்டது. கலாசாலையிலிருந்து இருபாலைச் சந்திக்கு வந்துவிட்டோம் இன்று மினிபஸ்கள் ஓடவில்லையெனும் தகவல். ஹெலி ஆங்காங்கே மனித நடமாட்டங்கண்டு சுடுகிறது. நாங்கள் மெதுவாகக் கோப்பாயை நோக்கி நடக்கி-றோம் கோப்பாய் சந்தியில் நல்ல சன நடமாட்டமாக இருந்தது. கிட்டே போனால் முதன்முதலாக பெண் போராளிகள் கிளிநொச்சியிலிருந்து வந்து இறங்கி நிற்கிறார்களாம். நானும் அகமும்முகமும் மலர எட்டியடி வைக்கின்றேன். அடேங்கப்பா! என்ன ஸ்மார்ட், என்ன நடை முழு இராணுவ உடையுடன் சந்தியில் அங்குமிங்குமாக நடைபோடுகிறார்கள். "ஆச்சி நாங்கள் வந்திட்டம் பயப்படாதையுங்கோ" என ஆட்களுக்குச் சொல்கிறார்கள் 10, 12 பேர் இருக்கலாம். கப்டன் போன்ற பெண்ணின் முதுகில் எதோ பெரிய பெட் மாதிரி ஒன்று கெயின் தோட்டக்காரர்கள் எல்லோரிடமும் மக்கள் அஞ்சியஞ்சியே ஓடியோடி வருகிறார்கள் வேடிக்கை பார்க்க.

பலாலியிலிருந்து ஹெலி நாவற்குழிக்கு கிளம்பி வந்துவிட்டது. வந்த சனமெல்லாம் திரும்பி ஓட்டம் கடைகள் அடித்துச் சாத்தப்படுகின்றன. சந்திக்குத் தென்கிழக்கேயுள்ள தகரக் கடையருகில் வந்துவிட்டேன். ரீச்சர் பாலத்துக்கு ஓடுங்கோ என்றபடி மற்றவர்கள் ஓடுகிறார்கள். எனக்கோ இந்த வீராங்கனைகள்மீது வைத்த கண்களை எடுக்க முடியவில்லை. ஹெலி அண்மித்து விட்டது. கப்டன் கட்டளை கொடுத்தாள் "கவர் அப் கவர் அப்" தெருக்களில் குப்பறப்படுத்து துவக்குகளை மேலே நீட்டியபடி ஒவ்வொரு பக்கத்திலும் இருவர். கப்டன் கடகடவென ஒரு பலாமரத்தில் குரங்கு தாவிய மாதிரி ஏறி ஒரு கொப்பில் சாய்ந்து நின்று மேலே இலக்கு வைக்கிறாள். நான் கடையின் மறுபக்கத்தில் ஏதோ கட்டளை இடப்படுகிறது. புரியவில்லை ஹெலி நேரே வந்ததும் சூட் என்ற கட்டளை, எல்லாரும் மேலே பார்த்துச் சுட்டார்கள். இவளிடமிருந்து பாரிய சப்தத்தோடு ஏதோ மேலே பறந்தது. உடனே ஹெலி வட்டமிட்டு வட்டமிட்டு அடிக்கத் தொடங்கியது. நான் ஹெலிக்கு எதிர்ப்புறமாக கடையைச் சுற்றிசுற்றி வருகிறேன். ஒரு போராளி சொன்னாள் "அம்மா கீழே போங்கோ" அதற்கிடையில் இன்னுமொரு வெடிச்சத்ததோடு மேல் எழும்பியது.

ஹெலி போய்விட்டது. அவள் சரசரவென கீழே இறங்கினாள். எல்லோரும் எழுந்தார்கள் ஒன்று சேரந்தார்கள். கலகலவெனச் சிரித்தபடி தலையையும் நெஞ்சையும் நிமிர்த்தியபடி நடந்தார்கள். அவர்களுடன் பேசிப்பார்ப்போம் என விரைந்தேன். ஆனால் யாருடனும் ஒன்றும் பேசாது மேற்கே நோக்கி நடந்தார்கள் "தங்கச்சி" என அழைத்தேன் "கடை, கோயிலாக இருந்ததால் உங்களுக்கு நல்ல பலன் கிடைத்திருக்கும்" என அன்போடுகூடிய பகிடியை விட்டுக்கொண்டே சென்றுவிட்டாள் ஒருத்தி - என் ஜன்மம் சாபல்யம் அடைந்து விட்டது போன்றதொரு எல்லை காணாத மகிழ்ச்சி. பாரதியின் புதுமைப் பெண்ணாகவே வளர்ந்து அப்படியே சமூகத்துக்கும் கற்பித்து வாழ்ந்து கொண்டிருந்த எனக்கு, ஒருபடி மேலான கண்ணிறைந்த காட்சி நீர்வேலிவரை எப்படி நடந்தேனென்றே தெரியாத வண்ணம் உற்சாகமாக இருந்தது.

பொழுதுபட்டு விட்டதே என அப்பா விறாந்தையில் காத்துக் கொண்டிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகத்தோடு அப்பாவுக்கு இந்தக் கதைகளை வர்ணித்துக் கொண்டிருந்தேன். எனது ஆரவாரமான சத்தத்துக்கு உள்ளே படித்துக் கொண்டிருந்த றோசா கதவோடு வந்து நின்றதை நான் காணவில்லை. எத்தனை பேர் வந்தார்கள் என அதே முகமலர்ச்சியோடும் ஆவலோடும் கேட்டபோதுதான் நான் சுயநினைவுக்கு வந்தேனோ. எப்படி என் கருத்து உடனே திரிந்து திருகுப்பட்டது? எப்படி இவ்வளவு கெதியாக உள்ளத்தால் திட்டம் தீட்ட முடிந்தது எவ்வளவு பாதுகாப்பாக (alert) ஆக உள்ளம் சிந்திக்கிறது? சிந்திக்க முன்னரே வாய் கொட்டிவிடுகிறது. ஏன்? ஏன்?

"ஓ ஒரு 12 பேர் இருக்கும். சும்மா காட்சிக்கு உடுப்புப் போட்டு அனுப்பி வைச்சிருக்கினம். பெடியள் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் சேருகின்றார்கள் இல்லை என்பதுதானே அவையின்ரை கவலை. பெட்டையளை பார்த்தால் அவங்களுக்கு ரோசம் வருமென்று. இவை எங்கையென்றாலும் போராடியி ருக்கினமோ உயிர் விட்டிருக்கினமோ பெடியள் என்றாலும் இதுவரை 325 பேர் செத்திட்டான்களாம்".

இவை உள்ளம் உணர்ந்து வந்த வார்த்தைகளல்ல. திரும்பி றோசாவைப் பார்த்ததும் மாவைக் கந்தனடியில் நின்ற றோசாவே என் கண்ணில் தெரிந்தாள். அவளுக்கு அதைரியத்தைக் கொடுக்கவே இந்தப் படுபாதகமான வார்த்தைகள். சுயநலமாயிருந்தது குற்றமல்ல ஆனால் உள்ளார வீராங்கனைகளைப் பாராட்டி மகிழ்ந்து கொண்டே இந்த வார்த்தைகளைக் கொட்டிவிட்டேன். உடனடியாகவே அவள் நத்தைபோல் சுருண்டு கொண்டே உள்ளே சென்றுவிட்டாள். அவளது மனக்குமுறல் அவளது டயறியில் வழங்கப்பட்டிருந்தது. அது பின்னொரு முறை சொல்வேன்.

என்னுயிரை ஊசலாட வைத்து எம்மைப் பிரிந்து சென்றவளே. இது மாவீரர் வாரமாம். சமத்துவம் போற்றும் மாவீரர் தினம் 27ந் திகதி நவம்பர் மாதம் எனத் தேசிய தலைவர் பிரகடனம் செய்துள்ளார். மண்ணுக்காகத் துரும்பெடுத்துப் போட்டு மரித்தவரும்சரி, அணி வகுத்துப் படை நடத்திக் களங்கண்டு வெற்றி சூடி வீரச்சாவை அணைத்தவரும் சரி ஒரே தரத்தில் வைத்து மண்ணுக்காக உயிர் நீர்த்தவர்களும் தற்கொடையாக உயிரைத் தியாகம் செய்தவர்களும் மாவீரர்" எனப் போற்றப்பட்டு வணங்கப்படும் நாள் இது.

சாவிலாவது சமத்துவம் பேணுவோம் என நான் நினைக்கும்போது ஒரு தொலைபேசி வருகிறது. வெளிநாட்டிலிருந்து இயக்கத்துக்காக 8 வருடம் வேலை செய்து காயம்பட்டு சமீபத்தில் வீடு வந்த பெண் அவள். எங்கள் பேச்சு இரு வேறு உலகங்களில் இருப்பவர்களின் தொடர்பு போலவே அமைந்திருக்கும். ஒரு வாரமாக மாவீரர் தினம் கொண்டாடுவதையும் எவ்வாறு கனடாவில் சுயநலமற்ற தொண்டர்கள் பலர் தமது தொழிலையும் சுகத்தையும் சுயநலத்தையும் தியாகம் செய்து இடத்துக்கிடம் இல்லங்கள் அமைத்து மாவீரர் வழிபாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து பாடுபடுகிறார்கள் எனவும் தம்மால் பங்குபற்ற முடியாத சுதந்திர போராட்டத்துக்காக இங்கிருந்தே அத்தத் தியாகசீலர்களை கடவுளாக மதித்து உன்னதமான பங்களிப்புகளைச் செய்தும் மண்ணின் மைந்தர்களாகத் திகழ்கிறார்கள் எனவும் கூறியபோது அவள் அசந்து விட்டாள்.

மேஜர் துளசியிடம் வீரவழிபாடும் நட்பும் கொண்டிருந்த அவள் "அன்ரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளசியக்கா எவ்வளவு புண்ணியம் செய்தவள். எனக்கு இங்கே வாழ முடியாமல் இருக்கிறது. நீரிலிருந்து வெளியே போட்ட மீன் மாதிரித் துடிக்கிறேன். ஒரு பெரிய இலட்சியத்துக்காக சிறுசிறு பிரச்சனைகளையும் விட்டுக்கொடுத்து பரவாய்படுத்தாது சமத்துவமாக சிரிப்பும் மகிழ்ச்சியுமாக வாழ்ந்த எமக்கு இங்கே அற்ப விடயங்ளுக்கும் சச்சரவு செய்து எந்நேரமும் எவ்வளவு இருந்தாலும் திருப்தியற்ற வாழ்க்கை வாழும் என் சுற்றத்தைக் காணும்போது என்ன செய்வதெனத் தெரியவில்லை. எனக்குக்கூட எத்தனை கட்டுப்பாடுகள். ஒட்டவே முடியவில்லை. திரும்பிப் போகவே விரும்புகின்றேன் என்று ஒரேயடியாகப் புலம்புகிறாள்.

இதே காலகட்டத்துள் உனது வந்தனைக்குரிய தமிழ் தேசியத் தலைவரின் பிறந்தநாளும் சேர்ந்து வருகிறது. அதுமாத்திரமல்ல உனது ஆன்மிக குருவும் கடவுளுமான ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் பிறந்த தினம் சேர்ந்தே வருகிறது. நவம்பர் மாதம் ஒரு புனிதமானதும் புரட்சிகரமானதுமான மாதமா?

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா திருவருளே குருவடிவாகவும் இறைவனாகவும் கண் முன்னே காட்சியளிக்கும் தெய்வத்தின் வழிபாடுகளை வீட்டோடும் ஊரின் நிலையத்தோடும் உன்னோடும் சேர்த்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. உனது மூன்று வயதில் எமது வீட்டில் ஸ்ரீ சத்ய சாயி வழிபாடு தொடங்கியது. உங்கள் பிஞ்சு உள்ளம் முறையான ஆன்மிகப் பயிற்சி பெறத்தொடங்கியது. மாலைகட்டி பகவானின் படத்துக்குப் போடுவதும் பூசைக்கு துளசி அல்லது வில்வம் ஆய்ந்து வைப்பதும் பிள்ளையார் பஜனை பாடுவதும் உன் பணியாயிற்று. பகவான் பற்றி கேட்டும் வாசித்தும் அறிந்து கொண்ட அசையாத பக்தி சுவாமி-யின் சிறுபடங்களைச் சேர்த்தல் மோதிரம் பென்ரன் முதலியவற்றை சேகரித்தல் உம் பொழுதுபோக்காக அமைந்தன.

1987ம் ஆண்டு பகவானின் பிறந்தநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்திய இராணுவம் சுற்றி வளைத்து ஆட்களை பிடித்து றயில்பாதையால் அழைத்து வந்து கல்லூரி வீதி றயில் பாதைச் சந்தியில் குவிகிறது. அடிக்கடி எங்கள் வீட்டு வாசலுக்கு வந்து உள்ளே பார்க்கிறது. ஒருவருமே திரும்பிப் பார்க்கவில்லை பாடிக் கொண்டேயிருக்கிறோம். யாரோ மிடுக்காகப் படியேறும் சப்பாத்துச் சத்தம். குமரகுரு எழுந்து சென்று சப்பாத்தோடு உள்ளே வரவேண்டாம் என விநயமாகச் சொல்கிறார். ஊரடங்குச் சட்டத்தில் (35 பேர் மட்டில்) எவ்வாறு கூடினீர்கள் எனக்கேட்க எல்லாரும் அக்கம் பக்க வீட்டுக்காரர்தாம் எனப்பக்குவமாகச் சொல்லி 20 நிமிடத்தில் முடித்து விடுவோம் எனச்சமாளித்து அனுப்பி விடுகிறார். றோசா உனக்கு கோபம் வரப்போகிறதென எதிர்பார்க்கிறேன் ஆனால் நீ புன்முறுவலுடன் மகா சந்தோசமாக இருக்கிறாய். “இவ்வளவு பேரையும் அவங்கள் வெளியேற்றியிருந்தால் உண்மையான பக்தர்கள் எவரும் இங்கே இருக்கவில்லை என நினைக்க வேண்டும் ஆனால் பகவனின் அருள் அலை வியாபித்திருந்தமையால்தான் அவங்கள் விட்டிட்டாங்கள்” என்கிறாய்.

கண்ணே உன் பாசத்தை தேசபக்தி மறைக்க 1990இல் நீ எம்மை விட்டுப் போய்விடுகிறாய். ஏதாவது தடயம் சொல்கிறேன் மேசை மேல் நகைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன லாச்சியுள் இரண்டு டயறிகள் இருக்கின்றன. குறிப்புக் கொப்பிகள் சீராக அடுக்கப்பட்டு கட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. notes தனியே அலுமாரிக்குள் சில உடுப்புகள் நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வாணியும் போடத்தக்கதான உடுப்புகள் நன்கு அழுத்தப்பட்டு வாணியின் அலுமாரிக்குள். டயறிகளை மட்டும் எடுத்து வருகிறேன். 87ம் ஆண்டு டயறியில் சில புதினங்கள் மட்டுமே. 89ம் ஆண்டு டயறி வேறொன்றுக்கு உபயோகிக்கப்பட்டிருந்தது.

உங்கள் அப்பாவுக்கும் எமக்கும் பல தினக்குறிப்பு புத்தகங்கள் இனாமாகக் கிடைப்பன. வீட்டுப் படிப்பு வேலைகளை எழுதுங்கள் எனப் பிள்ளைகளுக்குக் கொடுப்போம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாக பயன்படுத்துவர். இவளுடைய டயறியில் பெரியவர்களின் நல்ல வார்த்தைகள், சொற்றொடர்கள், வசனங்கள் காணப்படும். பகவானின் கூற்றுகள் அவர் தாய்நாட்டுக்காகத் தியாகங்கள் பல செய்ய வேண்டும் என்பதாகக் கூறிய அருளுரைகளும் காணப்படும். ஆனால் 1989ம் ஆண்டு டயறியில் "ஓம் ஸ்ரீ சாய்ராம்" என லிகித ஜெபமே எழுதப்பட்டிருந்தது. இலிகித ஜெபம் என்பது ஏற்கனவே இந்தியாவில் பிரபலமான ஒரு வழிபாடு.

கடவுளரின் மந்திரமொன்றை ஓய்வு நேரங்களில் எழுதுவார்கள். அல்லது ஏதாவது ஆக வேண்டியிருந்தால் இத்தனை தரம் எழுதி முடிப்பேன் என நேர்த்தி வைப்பார்கள். மனதால் நினைத்து, வாயால் சொல்லி, கையால் எழுதும் மனம் வாக்கு காயம் மூன்றும் ஒன்றி நிற்க வழிபடும் இம்முறை மகத்தான சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுவது.

இலிகித ஜெபம் இப்போது பரவலான அளவுக்கு அப்போது இருந்ததில்லை. எங்கள் வீட்டில் யாரும் எழுதியதாக இல்லை. அந்த டயறியிலே ஓம் ஸ்ரீ சாய் ராம் வரிசைவரிசையாக எழுதப்பட்டிருந்தது. மூன்று நான்கு பக்கங்களின் பின் "பகவானே எனது இலட்சியம் நிறைவேற எனக்கு மனவுறுதியைத் தாருங்கள்" எனும் வாசகம் அடிக்கடி காணப்பட்டது. இப்படியே டயறி முழுவதும் எழுதப்பட்டிருந்தது.

இரவுதான் பகவானின் பீடத்தில் தலையை மோதி மோதி "கையைக் காலை முறித்தென்றாலும் அவளை எங்களுக்கு முன்னே கொண்டுவந்து விடுங்கள்" என விடியும்வரை கதறித் தீர்த்தேன். எனக்கு ஆறுதலைத்தர விரும்பிப்போலும் பகவான் என் கண்களில் இந்த டயறியைப் பட வைத்தார் ஆம்! எனது உணர்ச்சிகளை ஒதுக்கி வைத்துச் சிந்தித்தேன். நான் மிகச் சுயநலத்துடன் என்னையும் வருத்திப் பகவானையும் வருத்தி இன்னொரு உயிரை வருத்தும்படி வரத்தைக் கேட்டேன். ஆனால் எங்கள் மகளோ தனது கள்ளமில்லா உள்ளத்தால் பொதுநலத்தை விரும்பி தன்னை அர்ப்பணித்து மன உறுதியை மட்டும் கேட்டாள். நானோ "கையைக் காலை முறித்தென்றாலும்" என இன்னொரு உயிருக்குத் துன்பம் விளைவிக்கும் வன்முறையைக் கேட்டேன். அவளோ யாருக்கும் துன்பம் இழைக்காத ஒன்றையே கேட்டாள். பகவானே! வஞ்சகமில்லாத உள்ளத்துடன் தாய்நாட்டுக்குச் சேவை செய்யவென மனம் வாக்கு காயத்தினால் வழிபட்ட அவளுக்கே விரும்பியதை கொடுத்தீர். இதுதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ சங்கல்பமாயின் இதுவரை நான் வழிபட்ட மாதிரி ஒன்றும் கேட்காமலேயே இனியும் உங்ளை வழிபடுவேன் என அன்றே தீர்மானம் செய்து கொண்டோம்.

உங்கள் பகவான் பக்தி முதல் வந்த கடிதத்தில் காணப்பட்டது "நான் வரும்போது பகவானின் சிறிய படம் ஒன்றும் பென்ரன் ஒன்றும் மட்டுமே கொண்டு வந்தேன். பகவானைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவர் முகத்தில் உங்கள் அனைவரையும் காண்கிறேன் என்றும் வியாழன் வெள்ளியிற்கூட அசைவ உணவே கிடைக்கிறது உண்ணாமல் விட்டால் எங்கள் வேலைக்கு வேண்டிய பலம் இல்லாமல் போய்விடும். அத்துடன் சைவ உணவு பெறுவதும் கடினடம். கிடைத்ததைத்தான் உண்ண வேண்டும் பகவானுக்கு தெரியும்தானே எனவும் எழுமியிருந்தீர்கள்.

"பகவானே உங்கள் சித்தம்" என மனதைத் தேற்றிக் கொண்டோம்.

அடுத்த கடிதத்தில் பகவானின் பென்ரன் தொலைந்துவிட்டது எனவும் புதிது ஒன்று தேவையெனவும் எழுதியிருந்தீர்கள். கோபம் தாங்கா நிலையில் "உனது செய்கை பகவானுக்குப் பிடிக்கவில்லை அதுதான் உன்னை விட்டுப் போய்விட்டார்" என இக்கடிதத்தை யாரோ ஒருத்தி எழுதிய மாதிரி "துளசி" என விழித்து உதாசீனம் செய்யப்பட்ட இராசாத்தி என எழுதி கொழும்பிலிருந்து தங்கைக்கு அனுப்பினேன். அவள் பென்ரனும் கொடுத்து கடிதமும் கொடுத்துள்ளாள். "அம்மா நான் உங்களுக்கு என்றுமே றோசாதான் "துளசி" இங்கே உள்ளவர்களுக்கு மட்டுமே. இனிமேலும் இப்படி எழுதி மேலும் என் மனதை புண்ணாக்காதீர்கள். உங்கள் கவலை ஒருவருக்கொருவர் சொல்லியாகிலும் ஆறுவீர்கன். நான் என்ன செய்வேன் பகவானுடனேயே பேசிக் கொள்வேன்" என எழுதியிருந்தீர்கள் சாம, பேத, தான தண்டம் ஆகிய எல்லா முறைகளையும் முயற்சி செய்தும் உங்கள் அசையாத உறுதியையும் அதற்கு பக்கபலமாகப் பகவானின் பக்தி விளங்குவதையும் கண்டபின் "இனி இப்போதைக்கு உங்களையும் "வெளியே வா" எனக் கேட்பதில்லையென உறுதி பூண்டோம்.

ஏழு வருடத்தின்பின் திரும்பவும் கடிதம் எழுதத் தொடங்கியபோது புட்டபர்த்திக்கு போய் வந்தீர்களே எனக்கு பகவானின் படமோ பென்ரனோ ஒன்றுமே அனுப்பவில்லைதானே, வீட்டிலிருந்து கொண்டுவந்தபடம் பழுதாகிப் பழுதாகி வருகிறது என்றெழுதியிருக்கிறீர்கள். நேரிலே வந்து சந்திக்கும் ஆவலுடன்தான் கொழும்புவரை வந்திருக்கிறேன். நீங்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தீர்கள் நானும் முதல்முதல் கண்டவுடன் அப்பாவை நினைத்து அழுவேனா கண்ட ஆனந்தத்தில் சிரிப்பேனா என்றெல்லாம் கற்பனை பண்ணித்தான் இருந்தேன். ஆனால் படைக்குவிப்பும் பாதைத் தடுப்பும் நவாலி தேவாலய உடைப்பும் கனடா திரும்ப வைத்துவிட்டது. இதையும் விதியெனச் சொல்லி தேற்றங் கொள்ள வேண்டியதாயிற்று.

பகவான் சத்யசாய் பாபாதான் மகளே உனக்கு ஆறுதல் தந்திருக்கிறார் நாங்கள் அறிந்தளவில் எந்தவொரு நண்பிக்கும் வீடுபற்றி நீ சொல்லிக் கவலைப்பட்டதோ, பிரிவுத் துயரைக் காட்டிக் கொண்டதோ இல்லை. ஆனால் வீட்டார் பற்றி மிக உயர்வாக பேசி எந்த நேரம் என்ன வேண்டுமென்றாலும் யாரும் போய் கேட்கலாம். எந்தக் கடினப்பட்டாயினும் உதவி செய்வார்கள் எனக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருக்கிறாய். அதன்படி சிலசமயம் நடந்தும் இருக்கிறது. ஆனால் நாங்கள் உனக்குக் காசு அனுப்பக்கூடாது என்பதில் மட்டும் குறியாக இருந்தாய். பகவான் உன் இறப்பில்கூட உனக்கு உதவி புரிந்திருக்கிறார். ஒருகணங்கூட வருந்த வைக்காது உடனேயே உயிரை எடுத்துக் கொண்டார். அதற்கு தெய்வத்துக்கு நன்றி.

நிற்க. மாவீரர் தினம் ரொறன்ரோவில் கொண்டாடப்படுவதாகச் சொன்னேனா. இந்தமுறையும் வழக்கம் போலவே மாவீரர் வாரத்துக்கான ஏழு நாட்களிலும் ரெறன்ரோவின் பல பாகங்களிலும் அதாவது ஸ்காபரோ, மிசிஸாகா, ரொறன்ரோ கிழக்கு, லான்ஸ்டவுண், வெஸ்ரன், ரொறன்ரோ மத்தி, ஸ்காபரோ கிழக்கு ஆகிய பிரதேசங்களில் மாவீரர் துயிலும் இடமமைத்து அத்தனை போட்டோக்களையும் தூக்கி எழுச்சிமிக்க வணக்கவிழா நடைபெறுகிறது. பொதுமக்கள் விளக்கேற்றிய தீபங்களை போட்டோக்களுக்கு வைத்து அஞ்சலி செய்தும் களப்பலியான மாவீரர் நினைவாக அமைக்கப்பட்ட கல்லறைக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தியும் மிகப் புனிதமாக வழிபாடு செய்கிறார்கள். அந்தந்த இடங்களிலே பாடல்களும், சொற்பொழிவுகளும், கொடி வணக்கமும் நடைபெறுகின்றது. ஈகைச் சுடரேற்றி வைக்கப்படுகின்றது. ஓடும் வாகனங்கள்கூட அந்தநேரம் இயக்கத்தை நிறுத்தி ஒருநிமிடம் மாவீரரை நினைவு கூர்ந்து செல்கின்றன. அன்று வீடுகளிலும் அமைதியாக ஈகைச் சுடர் ஏற்றப்படும். 28ந் திகதி மாவீரர் தினம் பிரகடனப் - படுத்திய 10வது ஆண்டு தினத்தை முன்னிட்டு மாபெரும் எழுச்சிக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். இந்தத்தடவை C.N.E வெப்பமூட்டப்பட்ட உள்ளரங்கத்திடலில் மேற்குறித்த கலைநிகழ்ச்சிகள் நடைபெ-றுகின்றன.

இந்தியா தலையிடுகிறதாம் பேச்சுவார்த்தை நடைபெறுகிறதாம் என்றெல்லாம் புலிகளின் வானொலி சொல்வதாகக் கலாசாலையில் சொல்கிறார்கள். ஆனால் அந்த வீட்டில் றோசா இல்லாத நேரம் பார்த்துதான் அவருக்கு இவற்றைச் சொல்வேன். ஏனெனில் மக்களின் துயரத்தைப் புரிந்து கொண்ட அவளும் பொதுக் கதைகளின்போது கருத்து மாறுபடுவதால் போலும் அவள் எழுந்து சென்று விடுவாளே தவிர திருப்பி ஒன்றும் சொல்லமாட்டாள்.

அன்று வானத்தில் வினோதமான சத்தங்கள் எழுந்தன அண்ணாந்து பார்த்தபோது சிவப்பு நிறமான சிறிய விமானங்கள் நான்கு அங்குமிங்கும் பறந்து விளையாட்டுக் காட்டின. குத்தி வாறதும் தீடிரென எழுவதுமாக - வெளிநாட்டு வி-மானங்களைக் கொண்டு வந்து எங்களுக்குக் குண்டுமாரி பொழியப் போறங்கள் என்று அப்பாவை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்லவும் றோசாவைக் கூப்பிடவும் அது முற்றத்தில் நின்று வேடிக்கை பார்க்கிறது. பின்னால் ஒரு பெரிய விமானம் மிக ஆறுதலாகப் பறந்து வருகிறது. எனது படபடப்பைக் கண்டு தனக்கேயுரிய ஒரு பெருமிதச் சிரிப்போடு “அது இந்திய விமானம் காலையி-லேயே தெரியும் நீங்கள் அந்தரப்படட்டும் என்றுதான் நான் சொல்லவில்லை” என்கிறாள். 4 விமானங்களும் சுற்றிச் சுழன்று ஜான வித்தைகாட்டி முன்னே செல்லும் நடனமாதர் பின்னே மகாராஜாவின் யானை அசைந்து வருவதுபோல எட்டினால் தொட்டு விடலாம் மாதிரி பெரிசு செல்கின்றது. குளத்துக்குபின்னால் இருக்கும் தரவை எல்லையில் பொதி ஒன்றைப் போட்டு செல்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பிரச்சனைகள் தீர்க்கப்படப் போகின்றன என்ற சந்தோசம் எனக்கு . ஆனால் றோசா தீவிர சிந்தனையில் இருக்கிறாள். ராஜிவ் காந்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார். ராஜிவ் அணிவகுப்பு மரியாதை ஏற்கிறார். T.Vயில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். திடீரென ஒரு மோடன் (சிங்களவரின் மாவீரன்) ஓங்கியடிக்க முயல அவர் தப்பி விடுகிறார். நான் நெஞ்சின் மீது கை வைத்து நாவெழாமல் அமர்ந்து விட்டேன் "அய்யய்யோ தப்பிற்றான்" எனக் குரல் றோசாவிடம் இருந்து எழுந்தது. அப்பா பதைத்தவாறு என்ன என்று உறுக்குகிறார். அடி செருப்பால நாய்க்கு என ஒரு நாளும் ஏசாத வார்த்தைகளால் ஏசி விட்டேன். ஆள் கண் கலங்கியபடி அறைக்குள் படுத்துவிட்டாள்.

நான் விட்டேனா? அவனில் வந்த ஆத்திரத்தைத் தீர்க்க றோசா கிடைத்து - விட்டாளே. "அவங்கட குலமென்ன கோத்திரமென்ன பரம்பரை பரம்பரையான அரசியல் அறிவென்ன இந்தச் சிங்கள மோடனை ஏன் உடனே சுடாமல் விட்டவன்கள் Set பண்ணி வைச்சிருப்பார்கள், தற்செயலாக ஒன்று நடந்தால் தமிழராலைதான் இப்படி நடந்தது" என்று எம்மைப்போல் பன்மடங்கு பெரிதான இந்தியா எல்லைமீது கோபிக்குமே என்று ஐந்து நிமிடம் கத்திக் கொண்டிருந்தேன். விரிவுரையாளரல்லவா திருப்பிக் கதைக்காத பழக்கம் இருந்ததால் எல்லாம் "டயறியில்" ஏறுகிறதென்பதை அப்போது நான் அறியவில்லை.

1987ம் ஆண்டு டயறியை 1990ம் ஆண்டு புரட்டிப் படித்தபோதுதான் அவளது நெஞ்சக் குமுறல்களைக் கண்டேன். பரீட்சை ஒத்திவைப்புப் போராட்டத்தின் முதல் நாள் "பெண் விடுதலைப் போராளிகள் என பெயர்பெற்ற சிலரோ பெண்களின் சுதந்திரத்தைப் பிரிக்கிறார்கள். எங்கள் சுதந்திரத்தில் தலையிட்டு ஆதிக்கம் செலுத்துகிறார்கள். எனக்கு இன்னமும் வயது வரவில்லையாம்". அப்பாவிடம் சிபார்சுக்குப் போனால் தளதளத்துக் கண்ணீர் விட்டு வேண்டாம் என்கிறார் அப்பா.

போராட்ட தினத்தன்று எழுதப்பட்டிருந்தது.

"குடும்ப மதிப்பையும் கௌரவத்தையும் பேணுகின்றவர்களுக்கு நல்ல மருந்து கொடுக்க வேண்டும். எனது நண்பிகள் இருவரும் நானும் மாறி மாறி மூவர் வீடுகளுக்குச் சென்று உத்தரவு பெற்றுவிட்டோம். கொம்மா துணிச்சல்காரிதானே சரி போங்கோ என அவர்களின் அம்மாமாரிடம் உத்தரவு வந்துவிட்டது. கூட்டத்தில் எங்கள் கல்லூரி மாணவிகள் சிலர் கட்டாயம் பரீட்சை செய்ய வேண்டுமென வாதிட்டார்கள். எப்படியும் ஊர்வலம் போவம். சரிவராவிட்டால் பரீட்சை எழுதலாம் என முடிவு பெறப்பட்டது" என எழுதப்பட்டிருந்தது. பெண் போராளிகளை கோப்பாய்ச் சந்தியில் நான் கண்டு புழுகம் அடைந்து வீடு சென்று புகழவும் றோசாவைக் கண்டவுடன் அதனை திரித்து அலட்சியமாகக் கூறியதையும் முன் அத்தியாயங்களில் கண்டிருப்பீர்கள். அன்று டயறியில் எழுதப்பட்டதாவது -

"விமான ஓட்டிகளாய் பெண்கள் வர வேண்டும் என வீரப்பிரதாபங்களை மேடைகளில் அள்ளி வீசினால் போதுமா? எங்கள் வீராங்கனைகளும் களத்தில் குதிப்பார்கள். நாட்டுக்காகப் போராடி வீர மரணம் அடைவார்கள். பெடியங்கள் 325 பேர் வீர மரணம் அடைந்து விட்டார்களாம். மரணம்தான் வீரத்தை அளக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுகோலா? அப்படியாயின் எங்கள் வீராங்கனைகளும் இவர்களுக்குப் பாடம் படிப்பிப்பார்கள்".

இதை எழுதி மூன்று வருடத்தின்பின் றோசா நாட்டுக்காகப் போனபின் வாசிக்கும்போது எப்படி இருந்திருக்கும் ஒரு தாயின் நிலை? "என்னை இப்படிக் கீழ்த்தரமாக மட்டிட்டாயோடா. உன்னைக் காப்பாற்ற வேண்டும். அந்த எண்ணமே வரவிடக்கூடாது எனும் சுயநலத்தாலல்லவா நான் அப்படி நடந்தேன்" "உனக்கல்லடி பெண்ணே அது ஊருக்கடி கண்ணே" என்பதுபோல நடந்தேன். என் கற்பனையில் வடித்த அந்த வீரப்பெண்ணை நேரில் கண்டதனால் ஏற்பட்ட ஜன்மசாபல்யம் உன் முகத்தைக் கண்டதும் ஏன் மாறிக் கரணம் அடித்தது? என்னே மனிதர் மதி.

அடுத்து டயறியைப் படிக்கிறேன் "ஒரு பெரும் வல்லரசு இந்துசமுத்திரத்தில் தன் இறைமையைக் காப்பாற்றுவதற்காக சுதந்திரத்துக்குப் போராடும் ஒரு சிறிய நாட்டில் குரல்வளையை மிதித்து விட்டது". ராஜிவ் ஒப்பந்தத்தில் கையெழுத்து வைத்த அத்தினமாகக் காணப்பட்டது. இப்படிப்பட்டதொரு சிந்தனை அந்தக்காலத்தில் எமக்கு வரவில்லையே. எம்மைக் கொன்றழிக்கத் தொடங்கிய பின்னர்தானே அந்த ஞானோதயம் எமக்கு வந்தது. இன்னமும்கூட அப்படியான சுதந்திரச் சிந்தனை வராதவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த இளைஞர்கள் வேகமாகச் சிந்திக்கிறார்கள்.

ராஜிவுக்கு அடிக்க முயற்சித்த அந்தத் தினத்திலே டயறி நீளமாக இருந்தது. என்னிடம் காட்டமுடியாத மனக்குமுறல் தீர்க்கப்பட்டிருந்தது.

"இவர்கள் திருந்தமாட்டார்கள். அடிமை வாழ்வு வாழ்ந்தே பழக்கப்பட்டவர்கள் அரசாங்கத்திடம் கைநீட்டிப் பிச்சை வாங்குகிற அடிமைத்தனம், அவன் பரம்பரையாய் படித்தவனாம் அப்படி எண்டால் இப்படிச் செய்வானா? சிங்களவனுக்கு இருந்த சுதந்திர உணர்வுகூட இல்லாதவர்கள் இவர்கள். இந்த அடிமைப்புத்தி எப்போது ஒழியுமோ. இந்தப் பரம்பரை இருக்கும்வரை சுதந்திரப் போராட்டம் கடினமான காரியம்தான்".

அனிச்சம் பூப்போல வளர்த்த என் மகளா எழுதினாள். மனிதாபிமானத்தால் - மரியாதை கொடுபட வேண்டியவனுக்கு அதைக்கொடுக்காததால் மாபெரும் மனிதனை உதாசீனம் செய்தமைக்காக சொல்லப்பட்ட என் வார்த்தைகள் உன் இருதயத்தைக் கீறிவிட்டதாடா? மறுநாள் உன்னை வைத்து இந்திய சுதந்திரப் போராட்டம் பற்றி நேரு, காந்தி, இந்திரா என்றெல்லாம் கதை சொல்ல நீ மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாய். எழும்பும்போது நீ சொல்கிறாய் "நான் உதெல்லாம் புத்தகங்களில் வாசித்தனான். அதுதான் இரத்தம் சிந்தாமலே பெற்ற சுதந்திரம் என்பதால் அவர்களுக்கு எங்கள் இலட்சியம் புரியவில்லை" என்று எங்கோ பார்த்துக் கொண்டு சொல்கிறாய். எனது கற்பித்தல் தொழிலிலேயே முதலாவது சறுக்கல். நேர்விளைவுக்குப் பதிலாக எதிர்விளைவுதான் கற்பிக்கப்பட்டது. நோக்கத்திலே வழுக்கல் ஏற்பட்டுவிட்டது.

இந்திய இராணுவம் வந்தபின் நாம் ஊருக்குப் போகமுடியும் என்ற நிலை வந்தது. நீயும் அப்பாவும்தான் போவோம் எனத்துடிக்கிறீர்கள். கலாசாலை வசதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி நீர்வேலியில் இருப்பது எனக்கு விருப்பமாக இருக்கிறது. ஆனால் அப்பா வீடு போவதை ஆதரித்து மெல்லச் சிரிக்கிறார். எனக்குப் புரிந்து போகிறது. "என்ன றோசா அப்பாவுக்கு கன்வஸிங் நடக்குதோ" என்கிறேன். "இந்த அப்பா எல்லாத்தையும் அம்மாக்குச் சொல்லிப் போடுவார். இனி நான் உலாத்தக் கூட்டிக் கொண்டு போகமாட்டேன்" என்று சிணுங்கிக் கொண்டே செல்லம் விடுகிறாள். பதினெட்டு வயதுக் குமரி. தெருவும், கண்ணாடித் தொழிற்சாலையும், ஆலமரமும், குளமும், தரவையும், காலையிலும் நிலவு நாளையிலும் நன்கு ரசிக்கத்தக்கவை. கிறிஸ்ரியன் கல்லூரி சென்றால் கல்லூரியில் அப்பாவுடன் படித்த அவ்வூரவர் கேள்விப்பட்டு வந்திருந்து கதைத்துப் போவார்கள். தங்கள் அல்பத்திலிருந்து படங்களைக் கொண்டு வந்து காட்டுவார்கள். ஸ்போட்சில் ஜுனியர் சம்பியன், இன்ரர் சம்பியன் என வெள்ளிக் கிண்ணங்களுடன் எடுத்த தனதும் அப்பாவதும் போட்டோக்களைக் காட்டினால் றோசாவுக்கு ஒரே கேலிதான்.

"அப்பா உங்கடை வாரிசுகள் ஒன்றும் ஓடாதுகள், ஓடினால் டபிள் அடி என்று சொல்லிச் சொல்லி அதுகள் நிண்டிடுங்கள். நீங்கள் கொண்ணைமார் துரத்ததுரத்த வீட்டைச் சுற்றிச்சுற்றி ஓடுவீங்களாக்கும். நீங்கள் ஓட சனம் நினைச்சிருக்கும் ஒரு பெடியன் உருண்டு கொண்டோடுகிறான் எண்டு. இண்டைக்கும் உங்களைப்போல கால் ஏலாத நாலு பேரைப் பிடிச்சு ஓட்டப்போட்டி வைத்தால் ஆர் வெல்லுவினம்"? "நான்"? என்று கேட்பார் அப்பா. "பின்னே அண்டைக்குக் குண்டு போடப்போட நீங்கள் எவ்வளவு கெதியாக ஓடினீங்கள். என்ரை கையைப் பிடிச்ச பிடியிலை விரல் எலும்பெல்லாம் முறிஞ்சு போச்சு" அப்பா விரல்களைத் தடவிக் கொடுக்கிறார் "என்ன செய்வம்" என்று பெருமூச்சு விடுகிறார். "தரவைக்குள்ளே போட்டி நடக்கும்" என பெரிய அறிவித்தல்கள். இப்படியெல்லாம் செல்லங்கொட்டி அப்பாவை

மகிழ்வித்து வைத்திருந்த நீயா? அந்த ஏழை நெஞ்சு பதைபதைக்க, எண்ணியதைச் சொல்லத் தயங்கும் கொடிய வியாதிக்காரனை, வாழ்க்கையில் அர்த்தத்தை உன்னிலே கண்ட அந்தக் குழந்தையைகூட விட்டிட்டு போகக்கூடியது மண்ணின் பாசமா?

கண்ணே றோசா,

சோகத்திலும் மகிழ்ச்சி, சோகத்திலும் வீரம், சோகத்திலும் பெருமிதம், சோகத்திலும் துயரம், வெறுப்பு என நவரசங்களும் கூட்டிக் குழைந்து வருமா? எப்படி வரும், நவரசக் கலவைப் பற்றி பரதமுனிவர் என்ன சொல்லியிருக்கிறார்? அனுபவிக்கும்போதுதான் அவை சாத்தியம் எனப்படுகிறது.

எங்கிருந்த இந்தக் கண்ணீர் வருகிறது? இது எம் வாழ்நாளில் எங்கு சென்றிருந்தது. உடல் ஒய்ந்து தளரும்போது தேங்கிக் கிடந்ததா? தலையிடிக்கவில்லையா அல்லது சிவனின் முடியிலிருந்து கங்கை ஊற்றெடுப்பதுபோல இத்தனை நீரும் மண்டைக்குள் ஊற்றெடுத்து மகாநதிப் பரிவாகமாகி அலைபுரண்டு என்னை அழிக்கப் போகிறதா? காலம் வரட்சியைத் தோற்றுவிக்கும் என்றார்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரினூடே நீண்டநாள் உன்னைக் காணாத - இனிமேல் காணவே முடியாத துயரம், நோய்களைச் சுமந்த காரணத்தால் உன்னைப் பார்க்க வரமுடியவில்லையே என இந்த உடம்பின்மீது வெறுப்பு. மாவீரர் தியாகம் போற்றப்படும்போது மகிழ்ச்சி. மண்ணுக்கான வீர வேங்கைகளை இன்னும் பெற்றுக் கொடுத்திருக்கலாமே எனத் தலைநிமிர்த்தும் வீரம்.

எல்லாவற்றிலும் மேலாக என் அன்புக்குரியவளே! முள்ளியவளையில் நீ துயிலும் இடத்துக்கு வானத்திலிருந்து பூமாரி பொழிந்தார்களாமே. எத்தனை பெருமிதம். அரும்பெருஞ்சாதனை ஒன்றில் சாதனைகள் புரிந்த பலருக்கு பூத்தூவி வழிபாடு. தேவர்கள் பூமாரி பொழிந்தார்களா? என் செல்வத்துக்கும் அந்தப் பாக்கியம் கிடைத்ததா? இதனை கேட்கும் நான் எத்தனை பாக்கியசாலி.

1986இல் வின்ஸர் கலாசார மண்டபத்தில் "காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுவோம் என்றார் பாரதி. அதை நாமே செய்வோம் பெண்களாகிய நீங்கள் விமானிகளாகப் பயிற்சி பெறவேண்டும் என்பதைத்தான் அவன் கூறினான்" என எம் அபிலாசைகளுக்கு புது விளக்கம் கூறியிருந்தேன் மகளே! நீ என்ன சொன்னாய் "நான் இப்ப 5'6" தானே இன்னும் கொஞ்சம் வளர வேண்டுமோ என்று மென்மையான ஏளனமோ என புரியாத ஒரு சிரிப்புடன் வினாவுகிறாய்.

"உதுகளுக்கெல்லாம் மேல்நாட்டில்தான் பிறக்க வேண்டும் இலங்கையில் அதுவும் தமிழனாய் பிறந்து கொண்டு...", "அப்படிச் சொல்லாதே தெல்லிப்பளையில் கதிர் என்றொரு விமான ஓட்டி இருக்கிறாரே சைனாயேயில அப்பாவோடு பழக்கமாயிருந்தவர்" அவளுக்கு நினைவு வருகிறது சேகுவரா காலத்தில் திருகோணமலையிலிருந்து பலாலிவரை மாலை நேரத்தில் காவல்ரோந்துக்கு வருகிற விமானத்தில் தபாலதிபராக இருந்த அப்பாவையும் கூட்டி வந்து வீட்டில் விட்டுப்போவார். பின்னர் சில மணித்தியாலங்களில் அழைத்துச் செல்வார்.

றோசாவுக்கு விமானம் பற்றிய ஈடுபாடு எதுவும் இருந்ததோ அறியேன். ஆயினும் சொந்த விமானத்தில் சொந்த விண்காக்கும் வேங்கை வீரன் மாவீரராகிய உங்கள் துயிலுமிடத்துக்குப் பூத்தூவி அஞ்சலி செய்தானென்றால் உங்கள் உள்ளங் குளிர்ந்திருக்குமே குதூகலித்திருக்குமே இதையிட்டு எங்களுக்குத்தான் எத்தனை பெருமை. அதை உன் ஊனக் கண்ணால் காணமுடியவில்லையே என்ற சோகம்.

இது நிற்க.

இந்திய இராணுவம் அமைதிகாக்கும் படை எனும் பெயரோடு வந்திறங்கிவிட்டது. ஆயுதக் கையளிப்பு, நிவாரணப்பொருள் பங்கீடு, மீளக் குடிபோதல் என ஒரே பம்பல். வாணியும் வந்து நிற்கிறாள். நீர்வேலியிலிருந்து அக்காவும் தங்கையும் சைக்கிளில் புறப்பட்டு விடுவார்கள் தெல்லிப்பளையில் நிவாரணம் பெற்று அளவெட்டி உரும்பிராயில் சித்திமாரைச் சந்தித்து வருவார்கள்.

கொஞ்ச நாளாக இந்திய உணவு பற்றிய பேச்சுத்தான். "அந்த ஆட்டாமாவில் அவங்கடை நெய்யை விட்டுப் பிசைந்து றொட்டி சுட வேணும் என்ன சோக்கப்பா! கமகம எண்டு வாசனை" என மகிழ்ச்சி பொங்கும் முகங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா தலையிட்டதனால் நீண்டநாள் சண்டை தீர்ந்துவிட்டது என்பதுதான் எல்லார் நிம்மதிக்கும் காரணம், வேகமான சிந்தனையாளருக்கு வேறேதோ சொல்லியிருக்கலாம். ஆனால் சாதாரண மனிதரோ நிறைந்த மனமுடையராய் இலங்கை எவ்வாறு பிரிபடப்போகிறது என எதிர்பார்க்கப் போனார்.

வாணி போய்விடவே நானும் றோசாவுமாகத் தெல்லிப்பளை வருகிறோம். வீடு பார்க்கப் போகலாம் எனக் கதை வரவே றோசாவை அங்கேயே விட்டு மினிவானில் காங்கேசன்துறை போகிறேன். கல்லூரிச் சந்தியில் இறங்கிப் போகும்போது சிறிது பயமாக இருக்கிறது. ஒருவரும் வரத்தொடங்கவில்லை றயில் பாதை தெரியாத வண்ணம் கட்டளைகளின் இடைவேளியில் ஆமணக்குகள் இடுப்புவரை வளர்ந்திருக்கின்றன.

ஆறுமாதத்தின் பின் வருகிறோமல்லவா. படலை முற்றம் எல்லாம் கார் போக வசதியாக மக்கிபோட்டு இறுக்கிய நிலம் ஆனால் ஒரே மஞ்சமுன்னாச் செடிகள், மல்லிகை, முல்லை, நித்தியகல்யாணி, நந்தியாவட்டை, கருந்துளசிகள் யாவும் பட்டமரங்களாகக் காட்சியளிக்கின்றன. வடக்கு கதவு திறந்தபடி தேர்ந்தெடுத்துக் களவாடிய பின் மிஞ்சிய பத்துப் பழைய அலுமாரிகள் இருந்தன. நூலக அறையில் மாத்திரம் சங்கத்தமிழ் நூல்களிலிருந்து அத்தனையும் பத்தாயப் பெட்டியும் நெல்லும் பூட்டித் திறப்பெடுத்துக் கொண்ட குளிர்சாதனப் பெட்டியும் பத்திரமாக இருந்தன.

மக்களெல்லாம் வெளியேறியபின் இலங்கை இராணுவம் தமக்குத் தேவையான விலையுயர்ந்த பொருள்களை எடுத்துச் சென்றதாகவும் அதன்பின் இராணுவ எல்லைக் காவலரோடு நட்புப் பூண்ட ஒரு சிலர் நாளிலும் பொழுதிலும் மிகுதியைக் களவெடுத்துச் சென்றதாகவும் தேங்காய் தேசிக்காய் மாங்காய் என வளவு வரும்படிகளை கொண்டு சென்று சுன்னாகம் சந்தையில் விற்பனை செய்ததாகவும் கேள்விப்பட்டோம்.

கே.கே.எஸ் திறந்துவிடப்பட்டதும் வீடு வந்து சேர்ந்தோம் றோசா நல்ல சந்தோசமாய் திரிந்தாள். பட்டுப்போய் நின்ற கருந்துளசிக்கு நீர் வார்த்து வார்த்துத் துளிர் வரப்பண்ணிவிட்டாள். சிறிது நாட்கள் சுகமே ஓடின. எங்கள் சொந்த வீடு என்ற உணர்வோடு வளவெல்லாம்கூட்டி ஒதுக்கித் துப்பரவு செய்தோம் மோட்டாரை பூட்டித் தண்ணீர் அடித்தோம். இந்தியன் ஆமி வந்துவிட்டது.

திலிபனின் உண்ணாவிரதத்தின்போதும் பாடசாலை மாணவிகளுடன் சென்று பங்கு கொண்டு திரும்பிய றோசா "நீங்கள் போகவில்லையா அம்மா" என்று கேட்டாள். "பாடசாலையால் வரும்போது போனால் அரைமணி நேரமாவது எல்லோருடனும் இருந்து பஜனை செய்ய வேண்டும். பிறகு இங்கே இருண்டு போய்விடும் அப்பா பதட்டப்படுவார்" என்கிறேன் உனக்கு அது பிடிக்கவில்லை. பாடசாலை விடுமுறை நாளில் போவேன் என்கிறேன். "15 ரூபா செலவழித்துப் போற ஆள்தான்" என முணுமுணுக்கிறாய். மறுநாள் கவிதை ஒன்றை எழுதி கலாசாலை விரிவுரையாளர்களுடன் கியுவில் நின்று திலிபனிடம் சமர்ப்பித்துப் போய்விட்டேன், கல்லூரி மாணவிகள் அக்கவிதையை இயம்பினர். நான் அதைச் சொன்னபோது உன் கண்களில் பூ பூத்தது. சிலசமயங்களில் சிலருக்காக சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளைக் கைவிட நேரிடுகிறது. அப்படித்தான் உலகில் சத்தியங்கள் தவறப்படுகின்றன. எதற்காக உயிரைப்பணயம் வைத்ததொரு உண்ணாவிரதம்? ஆயுதத்தைக் கையிலெடுத்தால் பிறகென்ன சாத்வீகம்? யாருக்காக? யாரிடம்? காலைப்பிடி இல்லாட்டில் கழுத்தைப்பிடி இதற்கு நடுவில் என்னைப் பொறுத்தளவில் ஒன்றும் இல்லை.

குமரப்பா புலேந்திரன் பிடிபட்டதும் மக்கள் கெம்பி எழும்பினர் முதலாவதாக எமது பிரதேசம்தான் தாக்கத்துக்குள்ளாயிற்று, இனி ஓட இடமில்லை. சூட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. புதினங்கள் பறக்கின்றன. தெல்லிப்பளைச் சந்தியில் இராணுவ ஜீப் சேதத்துக்குள்ளாகிறது. பரவலாக உயிர்ச்சேதம் துறை-முகத்திலிருந்து பிரமாண்டமான செயின்புளோக் எனும் டாங்கி புறப்பட்டுவிட்டது. அகப்பட்ட உயர்ந்த கடைகள் நொறுக்கப்படுகின்றன. கண்ணில்பட்டோர் சுடப்படுகின்றனர். கரையோர மக்கள் நடேஸ்வராக் கல்லூரிக்குள் தஞ்சம் வருகின்றனர். காங்கேசன்துறை, தெல்லிப்பளை, வசாவிளான் சந்தி, பலாலி, மயிலிட்டி சேர்ந்த ஒரு தீவு சுற்றி வளைக்கப்பட்டது வெளியே நடப்பது ஒன்றும் தெரியாது வாழ்ந்தோம். நல்லகாலம் இராணுவம் உள்ளிறங்காததால் நாம் உள்ளேயே அடைந்து கொண்டோம்.

அந்தப் பயங்கர நாட்கள் மின்சாரம் இல்லை விளக்கெரிக்கவும் பயம். நிலவும் வெள்ளிகளும் தரும் இயற்கை ஒளியில் போக்குவரத்துகள் நடைபெறும். மக்கள் ரயில் பாதை நீளத்துக்கு கட்டையிலும் தண்டவாளத்திலும் அமர்ந்து கொள்வர். சுத்தமான காற்றைச் சுவாசித்தபடி மெல்லமாக பேசியபடி நித்திரை வந்ததும் எழுந்து கல்லூரிக்குள் செல்வர். காசு வைத்திருப்பவர் அபூர்வம். பண்டமாற்றில் வியாபாரம். குருநாதர் சுவாமி கோவிலடியில் மூன்று ஒழுங்கை சந்திக்குமிடத் - திலும் றயில் பாதையில் எங்கள் வீடுகளின் முன்னாலேயும் சந்தை கட்டும். றோசா தேங்காய்களை உரித்து வைத்திருப்பா, அப்பா படியில் இருப்பார், மரக்கறிகளைத் தந்து தேங்காயை எடுத்துப் போவார் தேசிக்காய் கருவேப்பிலை-யும் கொடுப்போம். இராணுவத்தின் கண்ணில்படாமல் விடியவே வலைவீசி மீன் பிடித்து அவையும் வரும் விலைகளில் யாரும் கறாராய் இருப்பதில்லை. கூடக் குறையப் பார்ப்பதில்லை. ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் எனும் நோக்கமே முன்னெழுந்து நிற்கும். வீடே ஒரு சத்திரம் போலதான்.

சீனி சர்க்கரை கிடைப்பதில்லை தேயிலை, கோப்பி கிடைக்கும். பாண் இல்லை மா இல்லை எமக்கு நெல் இருந்ததால் கடும் விலைக்கு வாங்கத் தேவை இருக்கவில்லை. றோசா இந்த மினி மார்கட் சுற்றி வருவா, சீனி கிடைத்தா வாங்குவா, ஜனங்களோடு பழகுவா, உதவி செய்வா, வயது போனவர்களுக்கு கைகொடுத்து எழுப்பியோ நடத்தியோ உதவி செய்வா. அரைமைல் விட்டத்துக்கப்பால் என்ன நடக்குதென்றே தெரியாது வாகனங்கள் இரைந்தள்ளி ஓடுவதும் பீரங்கிச் சூடுகளும் கேட்கும். உரும்பிராய் சங்கானைப் பக்கமெல்லாம் கொலை சூடு வீடழிப்பு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கொன்று குவித்தமை ஒன்றுமே ஒரு மாதத்துக்கு மேலாக எங்களுக்கு எட்டாத தகவல்கள். எந்த ஒரு ஆட்சியும் நடைபெறாத சுதந்திரமான ஒரு கிராமிய வாழ்க்கை. வசதிகள் பல இல்லாவிடினும் மனிதர் மனிதராக ஏற்றத் தாழ்வின்றி வாழ்ந்த அந்த ஒரு மாத காலமும் ஒரு புதிய அனுபவம்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோசா முழுமையான தனித்தியங்கக்கூடிய பயிற்சி பெற்று மனோவளர்ச்சியை அடைந்தநிலை. இனி இவளால் தனித்தும் வாழமுடியும் எனும் மனோதிடமும் பூரண மனிதத்துவமும் பெற்ற அதிசய நாட்கள் இவை.

எத்தனைக்கெத்தனை புழுகமாக இந்திய அமைதிப்படையின் வருகையை வரவேற்றோமோ அத்தனை வேகத்தோடு தலையை மாட்டிக்கொண்டோம் என்பதைப் புரிந்து கொண்டோம்.

மொன்றியலில் இருந்து எமது மாணவர் ஒருவர் "என்ன ரீச்சர், இந்தியன் இராணுவ வருகையின்போது நாம் பட்டபாட்டை எழுதாது சுருக்கிவிட்டீர்களே. என்ன பயம் ஊரின் கதைதான் பிள்ளைகளைப் போராளிகளாக்கியது என்பதை எழுதுங்கள்" என அன்புக் கட்டளையிட்டார். பண்பாடு கருதிப் பல கொடுமைகளை என் பேனாவால் எழுத முடியவில்லை. கூடாத விடயங்களைச் சிந்திக்கவோ எழுதவோ முடியாத நிலையைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டேன். பேனாவின் தார்மீகக்கடமை என்ன என்பதை உணர்த்திவிட்டார் மாணவன்.

ஜூலை மாதத்திலிருந்து நிலைமையை நேர்சீராக்கி எங்கள் வீடுகளில் அனுமதிக்கத் தொடங்கவே நாமும் மீளக்குடியேறினோம். ஆனால் எமது குலதெய்வமாம் குருநாதர் ஆலயவளவில் கூடாரமடித்து இராணுவம் தங்கியிருந்தார். எமது மடத்தில் அவர்களின் அதிகாரி தங்கியிருந்தார். இது தெரியாமலே றோசா நாம் வந்து சேர்ந்தவுடன் சைக்கிளில் கோவிலுக்குக் கற்பூரம் கொழுத்தப்போய் இந்த ஆரவாரங்களைக் கண்டு ஐயர் கூப்பிடவும் மறுத்து திரும்பிவிட்டாள். ஐயரே தேடிவந்து என்னையாகிலும் வரும்படி அழைத்தார். தர்ப்பை போடக்கூடிய தர்மகர்த்தாக்கள் ஒருவரும் இல்லை. சாதாரண மக்கள்தான் நிற்கிறார்கள் தேவாரம் பாடவும் ஆளில்லை.

நான் போனபோது, பிராமணரான அந்த அதிகாரி பிரசாதத் தட்டு ஒன்றை அழகான பட்டுத்துண்டால் மூடி திருநீற்றுக் குறிகளும் பூணூலும் வெற்றுடம்பில் தவழ, தலைமீது வைத்து பக்திசிரத்தையாக பணியாளர் பின்வர கொண்டு நேரே அர்த்தமண்டபம்வரை போய் தூபதீபம் காட்டி மந்திர உச்சாடனம் செய்து காயத்ரி மந்திரம் முதலியன பாடினார். எங்கள் ஐயர் பூசை வைத்தார். கேசரித்தட்டை பாரிசாரகரிடம் கொடுக்க, பச்சைக்கற்பூரமும் வாசனைத் திரவியங்களும் நெய்யும் கமகமக்க பிரசாதம் பக்தர்களிடையே பங்கீடு செய்யப்பட்டது. இராணுவத்தினரும் சந்தனமும் குங்குமமும் நெற்றியில் துலங்க மக்களோடு தமிழில் அளவளாவினர்.

இராணுவ அதிகாரி என்னுடன் கதைத்தார். "நாங்கள் சிங்கள அரசிடமிருந்தும், புலிகளிடமிருந்தும் உங்களைக் காப்பாற்றவே வந்திருக்கிறோம். கவலைப்படவேண்டாம்" என்றார். கூர்நாக்கு என்று பட்டம் பெற்ற நான், "புலிகளால் எமக்கொரு தொந்தரவுமில்லை. அவர்கள் எங்கள் சுதந்திரத்துக்காகத்தான் பாடுபடுகிறார்கள். நேதாஜிபோல" அந்த இளைஞர் உடனே, "அது.. வெள்ளைக்காரனோடு" என இழுத்தார் "இது சிங்கள அரசாங்கத்தோடு..." என முடித்தேன். உடனே அவர் உரையாடலை மாற்றி "இலங்கை குபேர நாடுதான். விவசாயிகளும் கள் இறக்குவோரும்கூட பங்களாக்களில் வசிக்கினம். என்னுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு இரண்டறையும் ஒரு அடுக்களையும்தான் கல்வீடு, மற்றது பெரிய குடிசை, பலதும் பத்தும் செய்ய" என்கிறார்.

இதை நான் வீட்டில் சொன்னபோது றோசா நீ சொன்னாய் "லலித், சொன்னதுபோல அங்கே சாப்பாடில்லாமல் எத்தனையோ சனம் சாகுது. எங்களுக்கேன் கேசரி என்று கேட்கிறதுதானே என்னப்பா?" "கையேந்தி நெய்க்கேசரி வாங்குங்களே" என்று பாடுகிறாய். ஏன் சிரிக்கிறாய் என அப்பா கேட்க, "உப்படித்தான் இடைக்கிடை ஸ்குறூ கழருது. உங்களுக்கு சொன்னாலும் விளங்காது" என்கிறாய். உனது டயறியை வாசித்தபின்தான் இதனை நினைத்துப்பார்க்கிறேன். இந்தியன் எங்களை அடிமைப்படுத்த வந்திருக்கிறான் அதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதே.

மக்கள் திரும்பி வரத்தொடங்கவே, அரசாங்க அதிபரிடம் சொல்லி இராணுவம் அங்கிருந்து அகற்றப்பட்டது. சிறிது நாட்களுள் வட இந்திய ராணுவம் வந்திறங்கியது. துறைமுகத்து இராணுவமுகாம் இவர்களால் நிறைந்திருந்த வேளையில், வாடிவீட்டடிக்கு குண்டுகள் அடிக்கப்பட்டன. எதற்கும் ஒரு புலியும் இருக்குதுதானே. அவர்கள்தான் ஊறணிப்பக்கமிருந்து வாடிவீட்டுப்பக்கமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு ஓடிவிட, துறைமுக ராணுவம் மேற்கிலிருந்து கிழக்கே வாடிவீட்டடிக்கு அடிக்கத் தொடங்கப் பொலிஸாரும் திருப்பித்தாக்கிய-தாக ஒருகதை. இந்திய பொலிஸாரின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்துக்கு வட இந்திய ராணுவம் அனுப்பப்பட்டமை பிடிக்காமல் பொலிஸார்தான் சண்டையைத் தொடங்கினர் என்பதும் இன்னொருகதை. எது எப்படியோ அதன் பலனை அனுபவித்தது எம்மூர் மக்கள்தான். சிங்கள இராணுவம் எங்களூர் எல்லை கடந்து மாவிட்டபுரப்பக்கம் புலிகளுக்குப் பயந்து காலை வைக்கமாட்டார்கள். அதனால் தெல்லிப்பளைப்பக்கம் ஓடினோம். இப்போ எல்லாத் தெருவிலும் இந்திய ஜீப் ஓடித்திரிகிறது. அதனால் எங்கும் தப்பமுடியாது.

வந்திறங்கிய இராணுவம் கூர்க்காக்கள் எனக் கூறிக்கொண்டனர். அதிகாலையி-லேயே சுற்றிவளைப்புத் தொடங்கிவிட்டது. பருத்தித்துறை வீதியின் இருமருங்கும், வீதிக்கும் கடலுக்கும் உட்பட்ட பிரதேசமும் வேட்டைநாய்களின் ஆதிக்கத்துக்குள்ளாயின. பின்பக்கத்திலுள்ளோர் காட்டடைப்பு வீதியால் கல்லூரிக்கு ஓடிவந்தனர். ஆண் பெண் குழந்தைகளை பூட்ஸ் கால்களால் அடித்தும் உதைத்தும் இழுத்தும் வந்து தெருவில் இருத்தப்பட்டனர். பெண்கள் காமுகர்களால் கடித்துக் குதறப்பட்டார்கள் நார்நாராகக் கிழிக்கப்பட்டார்கள். குற்றுயிரும் குலையுயிருமாக மயங்கிக்கிடந்தனர். காசு நகை கொள்ளையடிக்கப்பட்டன. உடைமைகள் சேதமாக்கப்பட்டன. ஊரடங்குச் சட்டம் ஒருபுறம். அரசாங்க அதிபரோடு இந்திய உயர் அதிகாரிகளுடன் பொதுமக்கள் தேவைகள்பற்றி உரையாடச் செல்கின்ற எம்மூர் பிரமுகர்கள் கோடீஸ்வரர்கள்கூட விட்டுவைக்கப்படவில்லை. கீச்சு நாச்சென்ற மொழியும், வெறியும் இராணுவத்தின் கண்ணை மறைத்தன. நான்கு மணியின்பின் இவர்கள் துறைமுகத்துள் நடத்திச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டு மாலை 6 மணிக்குத் திருப்பி அனுப்பப்பட அவர்கள் மயங்கிய நிலைகளிலிருந்த பெண்களையும் சுமந்து கல்லூரிக்கு வந்தனர். சில குடும்பத்தினரைக் காணவேயில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம் கிழக்குக் கரையோர வீடுகளிலிருந்து இன்னொரு பகுதி மக்களைக் கடற்கரைக்கு இட்டுச்சென்றது. முழங்காலளவு நீரில் வரிசையாக நிற்பாட்டி வைத்தது. இதில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தாய் மகள்மார் இருவர், ஒருத்தியை மணம் புரியப்போகும் ஒரு வாலிபன். இவன் வழக்கமாகவே இரவில் குருநாதர் கோவிலில் வந்து படுப்பவன். ஆண்துணையில்லா அந்த வீட்டின் மாடு கன்றுபோடும் நிலையிலிருந்ததால் அன்று அவர்கள் வீட்டில் தங்கியவன், இவர்களைவிட தன் இருபிள்ளைகளையும் மயிலிட்டி உறவினர் வீட்டுக்கனுப்பிய தாய் ஒருவர் தன் 6 மாதக்குழந்தையைச் சுமந்தபடி, ஏழுமாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர். இன்னும் பல ஆண்களும், பெண்களும், குழந்தைகளும்.

இராணுவம் கரையில் நின்று சுடத்தொடங்கியது ஒவ்வொருவராக நீருள் விழுகிறார்கள். கையிலிருந்த குழந்தையைக் குறிபார்த்துச் சுட்டுவிட்டுக் கெக்கலித்தானாம் ஒருவன். மற்றவன் தாயைச் சுட்டானாம். கர்ப்பணிப் பெண்ணின் வயிற்றுக்கே சூடு வைத்தான் மற்றவன். காதலனைச் சுடத்தொடங்கியபோது "ஐயோ அவரைச் சுடாதீர்கள்" என முன்வந்து மறித்தாளாம் காதலி நீ திரும்பி அவனைக் கட்டிப்பிடி எனக் கட்டிப்பிடிக்க வைத்துச் சுட்டுவிட்டுக் குரூரமாகச் சிரித்தார்களாம்.

அந்தப்பகலுக்கு யார் சாட்சி சூரியனா? வெளிச்சவீடா ஒருவருமே மிஞ்சாத கொலைகள் இவையெல்லாம் எப்படி வெளிவந்தன? காப்பாற்ற முடியாவிட்டாலும் காட்டிக்கொடுக்கக் கடவுளும் இருக்கிறார்தானே. காதலர்கள் சுடுபட்டவுடன் அயலில் நின்ற தாயார் நடுத்தரவயதுப் பெண் மயங்கி நீருள் விழுந்துவிட்டாள். மற்ற மகளையோ பிறரையோ சுட்டது தெரியாது. அந்தப் பெண்ணுக்கு அறிவு திரும்பி வந்தபோது மாலையாகிவிட்டது. கடல் அலை அவளது சேலையை அடித்துச் சென்றுவிட்டது. நிலைமையை கண்டும் உணர்ந்தும் கொண்ட அவள் தன் வலதுகுறைந்த 18-20 வயதான வீட்டுள் விட்டுவந்த சப்பாணிப் பையனை

நினைத்துக்கொண்டாள். அவனுக்காகத்தான் தான் உயிருடன் தப்பியதாக நினைத்தாள். கடற்கரையில் இராணுவரோந்து நடக்கிறது. சுற்றிவரத் தன்மகள்மாரின் பிரேதங்கள். அலை எழும்பும்போது தலையைக் கிளப்பிச் சுவாசித்தும் தணியும்போது அசைவின்றிக்கிடந்தும் கண்ணீர் பெருக்குகிறாள்.

ஆறுமணியின் பின் வெளிச்சவீட்டு மேட்டில் மாத்திரம் இரு இராணுவக்காவலர் மேலுங்கீழுமாக நடக்கிறார்கள். அட்டமித்திதி வெளிச்சம், மெல்ல உருண்டு மேலே வருகிறாள். அவர்களின் அசைவைப் பார்த்து உருள்வதும் அசையாது கிடப்பதுமாகத் தரைக்கு வந்து சேர்ந்துவிட்டாள். முதலில் இருந்த வீட்டுள் புகுந்து கொடியில் இருந்த ஒரு நைலோன் சேலையைக் கட்டித் தன் மானத்தைக் காத்தாள். வேலிகளால் பாய்ந்து தன் வீட்டுக்கு ஓடிவந்து யன்னலால் உள்ளே பார்க்கிறாள். சப்பாணி மகனைக் காணவில்லை. மக்களே இல்லாத வீடுகள். எதுவித அரவமும் வீட்டில் இல்லை. இனி யாருக்காக வாழவேண்டும். பற்றுக்கோடே இல்லாத சோகம். கிணறொன்றில் பாய்ந்து - விட்டாள். நைலோன் சேலை பொம்மி ஆளை ஆழவிடவில்லை. ஒருகல்லில் ஏறிநின்று மூன்றுமுறை குதித்துக்குதித்தும் தற்கொலை முயற்சி தோல்வியாகிறது. அனுபவிக்க இன்னமும் உண்டுபோலும் என மேலே ஏற வழியில்லாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கல்லிலே ஏறி மூன்று நாட்களாக நிற்கிறாள்.

மூன்று நாட்களாக மிகப்பிரயத்தனப்பட்டு இந்திய உயரதிகாரிகளைச் சந்தித்து காணாமற் போனோரைத் தேடி உறவினர்கள் சென்று பிரேதங்களைக் கண்டெடுத்து ஒன்று சேர்த்துக் கடற்கரையிலேயே தீமூட்டி எரித்தனர். வீட்டுள் அந்தப்பையன் இருப்பானா என்று தேடிப் பையனையும் தூக்கிக்கொண்டு திரும்பிவிட்டார்கள். மனிதக்குரல்கள் கேட்டு சத்தம் வைத்தும் யாரும் கிணற்றை எட்டிப் பார்க்கவில்லை. யாரோ ஒருவர் ஏதோ எடுப்பதற்குத் திரும்பி வர கிணற்றுள் குதித்த சப்தம் ஒன்று கேட்டிருக்கிறது. ஆடுமாடாக இருக்குமோ என்று எட்டிப்பார்த்து, சத்தம் வைத்து எல்லாரையும் அழைத்து அப்பெண்ணைக் காப்பாற்றி இருவரையும் கல்லூரிக்குக் கூட்டிவந்தனர். அவருடைய கதை பத்திரிகைகளில் பிரசுரமானது. ஆனால் நோய் காரணமாக சில வாரங்களில் அந்தப் பையனும், அதிர்ச்சி, சோகம் காரணமாகச் சில மாதங்களில் அந்தப் பெண்ணும் காலமாயினர்.

பாதிக்கப்பட்ட பெண்கள் கல்லூரிக்கு அழைத்துவரப்பட்டவுடனேயே டாக்டர், தாதிமார் வந்து, காயங்களைத் துப்பரவு செய்து மருந்திட்டு, பல் விஷம் நக விஷம் ஏறாமல் ஏற்பூசிகள் தடுப்பூசிகள் போட்டு வைத்தியம் செய்தனர். சுடுநீர் பழந்துணி என்பன கொடுத்தும் ஆறுதல் வார்த்தைகள் கூறியும் பங்கு - கொண்டோம். அதிமோசமாக அரைகுறை உயிரோடு வந்தவர்கள் இருவர். எட்டுமாதக் கர்ப்பிணிப்பெண் ஒருவர். மற்றவர் றோசாவின் சகமாணவி ஒருத்தியின் அக்கா - ஒரு அலுவலர். பிய்ந்து இருந்த நகங்களும் ரத்தக்கறைபடிந்த பற்களும் போராடி இருக்கிறார் என்பதையும் காட்டின. பழந்துணி கொண்டு வந்தபோது உடலெல்லாம் காயத்தோடு அரைமயக்கத்திலிருந்த அக்காவைக் கண்டு பதறிவிட்டாள் றோசா.

பெண்களுக்கு இப்படியும் ஒரு தண்டனை இருக்கிறதென்பதை அறியாதவள் றோசா. அறிந்திருந்தாலும் இத்தனை கொடூரமாகவும் இருக்கும் என்பதை உணராதவளாகவும் இருக்கலாம். முன்பு இலங்கை இராணுவம் வரும்போது "அப்பா ஓடமாட்டார் ஆனபடியால் நானும் அப்பாவும் இருப்போம் நீ பின்புறத்தால் சித்திவீட்டை ஓடிவிடு" என்று சொன்னால் "உங்களை விட்டிட்டுப் போகமாட்டன் என்னைச் சுட்டால் சுட்டிட்டுப் போகட்டும் என்னிலை தொடட்டும் பார்ப்பம்" என வீர மொழிபேசும் றோசா அதிர்ச்சியடைந்துவிட்டாள் போலும். தன் அறைக்குள் படுத்துவிட்டாள். இடிந்து போய்விட்டாள். இவையெல்லாம் வெளிப்படையாகக் கதைக்கிற விடயங்களா. எவ்வளவு கூப்பிட்டும் வெளியே வரவில்லை. வந்தபோது கண்கள் வீங்கியும் மூக்கு சிவந்தும் காணப்பட்டபோது தொடர்ந்தும் மௌனம்தான்.

"சாண் போனாலென்ன முழம் போனால் என்ன" என்றொரு மனப்பான்மை அவளுக்கு வந்திருக்க வேண்டும். வேறு ஊரிலே நின்ற சகமாணவி வந்து சந்தித்துக் குழறிக் குழறி அழுதபோதும்கூட கண்களில் ஒரு தீவிரப் பார்வையோடு தட்டித்தட்டி ஆசுவாசப்படுத்தினாளே தவிர ஒரு சொட்டுக் கண்ணீர் விடவில்லை.

'கற்பு' என்பதற்கு உடல்ரீதியான வரைவிலக்கணத்தைக் கொடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைமாய்க்கும் எண்ணத்தை மாற்றவேண்டும். இது உடலுக்கு ஏற்பட்ட சித்திரவதை, அநீதி இழைத்தவனால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மட்டுமே. கையைக் காலை வெட்டி, மிளகாயை எரித்து மூக்கில் பிடித்து நகக்கண்ணில் ஊசி ஏற்றிச் சித்திரவதை செய்வதுபோல இதுவும் ஒருவகை சித்திரவதைதானே. காயங்கள் மாற, வலியும் போய்விடும் மனம் ஈடுபட்டுப் பிழை நடக்கும்போதுதான் கற்புக் கெடுகிறது. கற்பெனப்படுவது அறிஞர்களால் கூறப்பட்ட அறநெறிசார்ந்த ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தலாகிய சொற்றிறம்பாமையாகும். இதை நாம் மனதில் இருத்திக் கொள்ளவேண்டும்.

இத்தகைய கொடூர அனுபவங்களைக் காணாதவர்கள், கேளாதவர்கள், நேரில் அனுபவிக்காதவர்கள், இக்காலகட்டத்தின் முன்னே நாட்டை நீங்கியவர்கள், கோழைத்தனத்தால் இவற்றைச் சிந்தித்துப் பார்க்க மறுத்தவர்கள், தனிப்பட்ட குரோதங்களை வளர்த்து சமூகரீதியான நன்மைக்கு முதலிடம் கொடாதவர்கள், கையால் விறாண்டியும் பல்லால் கடித்தும் தம் கற்பைக் காப்பாற்றியிருக்கலாமே என அபத்த வார்த்தைகளைப் பேசுகிறவர்கள், இவர்களுக்கு கொஞ்சம் நாவடக்கம் தேவை. உதவிசெய்யாவிட்டாலும் உபத்திரவமாய் இருக்காதீர்கள்.

எங்கள் றோசாவுக்கு இந்தக்காட்சி பெரும் சாட்டையடி. 18 வயதில் இன்பக்கனவுகள் தோன்றவேண்டிய காலத்திலே காதல், கலியாணம், குடும்பம் பற்றிய ஒருவெறுப்புணர்வு தோன்றத் தொடங்கிவிட்டது. கசப்பான அனுபவம் மனதைக் கல்லாக்கிவிட்டது. இது பின் நாட்களில் அவள் பேச்சுகளில் பிரதி-பலிப்பதைக் கண்டுள்ளேன். 1987ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற சம்பவமே இங்கே என் நினைவுக்குள் நின்றவை மட்டும் வந்திருக்கிறது. எத்தனையோ சொல்லாமல் விடப்பட்டிருக்கின்றன.

எம் சொந்தமண் கசாத்துறை என வரலாற்றுக்கெட்டாத காலத்திலும் காங்கேசன்துறை மாருதப்புரவீகவல்லி காலத்திலும் மிகப் பிரசித்தி பெற்ற துறைமுகமாகவும் விளங்கிப் பல வர்த்தகர்களை ஈர்த்ததுடன் மாவிட்டபுரம் புராதன காலக் கீரிமலை என யாத்திரிகர்களை வரவழைக்கும் இடமாகவும் பின்னர் புகையிரதநிலையம் வாடிவீடு சீமெந்துத் தொழிற்சாலை இரண்டாம் உலகப்போரின் வைத்தியசாலை என்பவற்றால் பேரும் புகழும் பெற்றிருந்தது. போர்த்துக்கேயரைக் கட்டவைத்து, ஒல்லாந்தரை ஆலயங்கள் கட்டவைத்து, ஆங்கிலேயரைக் கலங்கரை விளக்கம் நிறுவவைத்து யாழ்நகரைவிட முக்கிய கேந்திரமாக விளங்கி எம்மையும் பெருமையுறவைத்தது.

எல்லாம் எதற்காக? குடாநாட்டையே அழிக்கத்தக்க படை வந்திறங்கவா? எம்மானத்தை உறிஞ்சி உயிரை, உடைமையை பதம் பார்க்கவா, வீடுகளை விட்டுக் காடு நாடெல்லாம் ஓடிக் கடல் கடந்து அகதிகளாய் அந்நியர் தயவை எதிர்பார்த்து நிற்கவா, உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம் எம் அவலத்தைப் பேசும்படி வைக்கவா. எழுதாத கதைகள் வடித்து ஓய்ந்து வறண்டுபோயின கண்கள்.

இப்படியும் சரித்திரப் புகழ்பெற்றது.

என் அருமை மகளே உனக்கு உறைத்ததுகூட எமக்கு உறைக்கவில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவோர வீட்டில் வசிக்கும் நண்பர் முத்துசாமி குடும்பம் இரவு படுக்கைக்கும் பகல் பிரச்சனைகளுக்கும் எம்முடன் தங்கி வருவது வழக்கம். இந்தியன் இராணுவம் கல்லூரிக்கு வரப்போகிறது என்றொரு கதை மின்னல் வேகத்தில் பரவுகிறது. தங்கியிருந்த அகதிகள் பின்பக்கத்தால் ஓடிய ஓட்டம் அதுவும் ஜீப் ஒன்று வந்து நின்றதும் கண்மூடித்திறப்பதற்குள் வேலிகளைப் பிரித்துக் கொண்டு எங்கெங்கோ ஓடிவிட்டார்கள்.

இராணுவம் நடைபவனியில் வருகிறது என்றதும் றோசா தானாகவே "நான் முதலில் சித்தி வீடு போய் அப்பாவை எடுப்பிக்க ஆள் அனுப்புகிறேன்" என வழக்கமான சிறு சூட்கேஸுடன் போய்விட்டாள். திரு குமரகுரு எமது பின்வீட்டில் தற்காலிகமாக வந்து தங்கியிருக்கிறார். அவருக்கும் திரு.முத்துசாமியருக்கும் எம்மைவிட்டுப்போக மனமுமில்லை எமது உயிருக்கு உத்தரவாதமுமில்லை. எனவே "பி.எம் பயப்படாதையுங்கோ" என்று படியால் இறக்கி பின்பக்கத்தினால் தாங்கிப் பிடித்து செல்கிறார்கள் அப்பாவை. கோற இழுவையில் வடலிகளூடாக வெளியே கொண்டுவர றோசா ஒரு பையனைச் சைக்கிளுடன் கூட்டி வருகிறாள். அப்பாவோ அதிலேற மறுக்கிறார். நானும் தடுக்கிறேன் ஆனால் அந்த தன்னலமற்ற பையன் ஒரு கிட்னியுடன் மட்டும் வாழ்பவன் ஏற்றுகிறான் இவ்விடயம் தெரியாத மற்றவர்களும் ஏற்றிவிடுகிறார்கள். "சித்தி வீட்டில் நிறைய ஆட்கள் என்று அம்பட்டியவத்தையில் நேசன் அண்ணா வீட்டில் ஒழுங்கு செய்திருக்கிறேன்" என றோசா கூறுகிறாள். மழையும் ஒருபுறம் பெய்கிறது.

வீட்டில் மொட்டைக்கறுப்பன் அரிசியில் பாற்கஞ்சி காய்ச்சி வைத்தபடி அந்த வீட்டில் ஒரு மாமி மாத்திரம் இருப்பவர். திருமதி முத்துசாமி குடும்பமும் நாமும். நான் மெதுவா எங்கள் வீட்டுக்கு வருகிறேன். இன்னமும் இராணுவம் வந்து சேரவில்லையாம் கள்ளப்பாதைகளால் போய் பின்பக்கத்தால் கள்ளர் நுழைவது போல பதுங்கிப் பதுங்கி நுழைந்து அரவமெதுவும் எழாவண்ணம் கஞ்சிப்பானையையும் தூக்கிக் கொண்டு அரக்கப்பரக்கத் திரும்புகிறேன் தூரவரும் போதே றோசா சிரிக்கிறாள். அப்பாவுக்குக் காட்ட அவரும் சிரிப்பு எல்லாரும் சிரிப்பு "ஆகத்தான் அம்மாக்கு அரைநாள்கூடப் பட்டினி கிடக்கேலாதோ".

அங்கேயிருந்த ஆறேழு குடும்பங்களும் (எங்கள் உறவினர்களே) இரவானதும் எல்லாரும் அந்த முற்றத்துக்கு வந்து விடுவார்கள் கடலிலிருந்து புறப்படும் செல்லடிகள் வாண வேடிக்கைப்போல எலி வாணங்கள் போலக் கம்பி கம்பியாக பொறிகள் பறக்க வந்து விழுகின்றன. எங்கள் வீட்டுப்பக்கமெல்லாம் நிறையவே விழுகின்றன. சங்கக்கடை திறந்து (லான்ட் மாஸ்ரரில்) அரிசி மூடைகள் ஏற்றி உட்புறமாக கொண்டு செல்கின்றனர். நம்மவர் மக்களுக்கு அவை மறுநாள் விநியோகம் செய்யப்படும். திடிரென பலாலியிலிருந்து ஆட்டிலறி செல் சுன்னாகம் காரைநகர் திக்கு நோக்கி வெடித்து வெடித்துப் பறக்கின்றன. என்ன நடக்கிறது. எவருக்குமே தெரியவில்லை. எம்மூர்ப் பிரமுகர்களால் டெலிபோனில் கொழும்புக்கு அறிவிக்கப்பட்டு இந்திய தூதராலயத்திலிருந்து விசாரணையின் பின் அமைதி நிலவத் தொடங்கவும் பூனையை எங்கே கொண்டு போய்விட்டாலும் அது வீடு தேடி வந்து விடுமாம் அதேபோல 3 நாட்களில் நாங்களும் வீடு நோக்கி வந்து சேர்ந்தோம். இத்தனை பரபரப்பான சூழ்நிலையில் திகிலூட்டும் வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம். சாதாரண வாழ்வின்போது வந்து வருத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்த்மா, பிறசர் என்பன ஒன்றையுங் காணோம். பாதி வருத்தம் உளவியல் சார்ந்ததுதான் என அனுபவம் கூறுகிறது.

மீண்டும் ஒக்டோபர் முதலாம் வாரத்திலேயே அடுத்த படையெடுப்பு புலேந்திரன் குமரப்பா கொலையோடு ஆரம்பித்து விட்டது. எப்படி எம்மூர் உள்ளே தனித்தும் தவித்தும் போனது என்பதை முன்னைய கட்டுரையில் கண்டிருப்பீர்கள். அதிகாலையில் துறைமுகப் பகுதியிலிருந்து செயின் புளோக் டாங்கிகள் புறப்பட்டுப் போகும். எப்போ இவை திரும்பி வருவன என்று தெரியாது. தார் தெரு எல்லாம் கிடங்கு முடங்காக்கி விட்டது. பின்வளவு இளைஞன் விவாகமாகி அந்நிய நாட்கள் மனைவி வீட்டில் அன்ரனா வயர் கழற்றும்போது கண்ணிற் பட்டுவிட்டான். உடனே சூடுதான். பசுந்தளிர்கள் பறிக்கப்படுவது வேதனையானது.

மின்சாரம் இல்லை. தொடர்ந்த ஊரடங்குச் சட்டம். இராணுவத் தலையீடில்லாத இனக்குழும வாழ்வை மேற்கொண்டிருந்தமையால் தெல்லிப்பளைக்கப்பால் என்ன நடக்கிறதென்பதை அறியோம். ஒரு மாதத்துக்கும் மேலானபின்தான் வெளியுலகத் தொடர்பு கிடைக்கிறது. இதற்கிடையில் எமது குடும்பத்திலும் ஒரு சிறு சாதனை.

கொழும்பிலிருந்து யாரிடமோ கொடுத்துவிடப்பட்ட கடிதம் ஒன்று சாசவகச்சேரி-வரை வந்து அங்கிருந்து கால் நடையாக கட்டுவன் வந்து சேர்ந்த ஒருவரால் எம்மிடம் தரப்பட்டது. முதலாவது கண்ணிவெடித் தாக்குதல் காங்கேசன்துறையில் மார்ச் மாதம் 16ந் திகதி 1987ம் ஆண்டு நடைபெற்றது.. அன்று நாமெல்லாம் எமது மூத்த மகள் சசியின் விவாக ஒப்பந்தத்துக்காக கொழும்பு சென்றிருந்தோம்.

உறவினர் அனைவரும் கனடாவில் இருந்தாலும் "எத்தனையோ நாடுகளுக்கெல்லாம் சென்று வந்திருக்கிறேன் ஆனால் வசிப்பதற்கு ஏற்ற இடம் இலங்கைதான்" எனக்கூறி இலங்கையிலேயே இருக்க முடிவு செய்தவர் மருமகன். முதலாவது மருதானைக் குண்டு வெடிப்புடன் அவசரத் தீர்மானம் செய்து தமது அழகான பங்களாவையும் விட்டுவிட்டுக் கனடாவுக்கு வந்துவிட்டார். சசிக்கு ஏற்பாடுகள் செய்யவே லீவில் நீர்வேலிக்கு வந்து எல்லாவற்றையும் நேரில் அனுபவித்த சசிக்கு "நீங்கள் போங்கள் ஒரு பிள்ளையாலும் மிஞ்சட்டும் - பாபு படித்த பின் அவனையும் அங்கே அழைத்துக் கொள்ளுங்கள்" எனக் கூறியிருந்தோம்.

சசியின் கடிதம்தான் அது. தனக்கு டிசம்பர் முதலாந்தேதி விமானப் பயணம் என்றும் வாணி கண்டியிலிருந்து நிற்பா, வேறோருவரையும் காணமுடியாது இனி எந்த ஜென்மத்தில் காணப் போகிறேனோ அக்கடிதம் கூடத்தான் போகுமுன் கிடைக்குமோ தெரியாது எனவும் கலங்கி எழுதியிருந்தா. நவம்பர் 29ந் திகதி இக்கடிதம் கிடைத்தது. எதுவித போக்குவரத்தும் கிடையாது. மலாரடிப் - பட்டுப்போய் இருக்கிறோம். அப்பா சாதாரணமாகவே ஏழை மனம் சுகவீன காலத்தில் இன்னும் விம்மி விம்மி அழுவார். றோசா அவரின் கைகளைத் தாங்கியவாறு மௌனமாக கண்ணீர் விடுகிறா. வெளிநாடு போற பிள்ளைக்கு ஒரு ஆறுதல் வார்த்தை ஆசிகளை எப்படி அளிக்கலாம் எனத் தீவிரமாக சிந்தித்து விசாரிப்புகள் மேற்கொள்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீவிலை வந்து நின்ற பலர் வெளிப்பிரதேசங்களுக்குப் போக வழியில்லாது ஒரு மாதத்துக்கும் மேலாக நின்றுவிட்டார்கள். பலர் அவசர அவசியக் காரணங்களுக்காகவும் கொழும்பு செல்ல வேண்டியிருந்தது. அவர்கள் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இந்திய இராணுவத்தினோடு ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. உத்தியோகத்தருக்கான முதலாவது பஸ் மறுநாள் புறப்படுவதாக இருந்தது. அவசரம் அவசரமாக தைரியம் ஊட்டும் வகையில் ஒரு கடிதம் எழுதினோம். றோசாவும் ஒரு பந்தி - பெரும் பாரதமாகவே கடிதம். யாழ்ப்பாணம்வரை சென்று யாரிடமாவது கொடுப்போமென நினைத்தால் எமக்கு அனுமதியில்லை. எமது அதிட்டம் எமது மாணவி 'சிறி' (ஹொப்பர் கட் உரிமையாளருள் ஒருவர்) சைக்கிளில் வந்து எம்மைக் கண்டதும் இறங்கி வணக்கம் தெரிவித்து கிராமசேவகரிடம் பெயர் கொடுக்கப் போவதாகவும் தான் முதல் பஸ்ஸில் போறதாகவும் கூறுகிறார்.

முகவரியைக் கொடுத்து முதலாந்திகதி மூன்று மணிக்குள் நேரே கொண்டு போய் கொடும். அதற்குப் பிந்தினால் கனடா விலாசத்தை வாங்கித் தபாலில் சேர்த்துவிடும் எனக் கொடுத்து விட்டேன். 30ந்திகதி 10 மணிக்கு புறப்பட்டு சந்திக்கு சந்தி சோதனை எனும் பெயரால் நிறுத்தப்பட்டுப் பல அவமானங்களுள் உட்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் சேரவே ஐந்து மணி ஆகிவிட்டதாம். கொழும்பில் மறுநாள் இரண்டரை மணிக்கு இறங்கித் தன் அலுப்பையும் பசியையும் பாராமல் நேரே சசி வீடு போய்க் கடிதத்தைக் கொடுத்த பின்னரே சிறி தன் இடத்துக்கு போயிருக்கிறா.

பெண்களின் உடம்பில் குண்டுகள் தேடுவதும் பிறாண்டி விறாண்டி உயிர்க்கொலை செய்வதும், வல்லுறவுக்கு உட்படுத்துவதும் எங்கள் பாரத பண்பாடுகள் அல்லவா. முன்பு மிகமிக அருமையாகவே நடைபெற்ற ஓரிரு சம்பவங்களை அரசியல்வாதிகளும் இயக்கங்களும் பெரிதும் விளம்பரப்படுத்தித் தத்தம் செல்வாக்கைத் தேடிக் கொண்டன. ஆனால் இப்போதோ எங்களை வாழவைக்க வந்த - இனியும் வாழ்விப்பார்கள் என நம்பிக்கை வைத்திருக்கின்ற இந்திய இராணுவத்திடம் இலங்கை இராணுவம் கற்றுக் கொண்ட இப்பாடத்தில் இலங்கை இராணுவம் குருவுக்கு விஞ்சிய சீடன் ஆகிவிட்டது. கோணேஸ்வரிகளும் கிரிசாந்திகளும் மலிந்து பெண்ணியத்துக்கு சவால் விடுவிக்கப்பட்டுள்ளது. பெண்ணிலைவாதிகளாலும் தீர்க்க முடியாத இப்பிரச்சனைகள் இப்போ பெண் போராளிகளால் கையாளப்படுகின்றதென்பது பெருமைக்குரியதாகின்றது. பழிக்குப்பழி இரத்தத்துக்கு இரத்தம் எனும் ஆவேசம் எப்படி அடங்குமோ?

என் றோசாக் கண்ணா என் உணர்வுகளை உணர்ச்சிக் கொந்தளிப்புகளை இந்த வயதிலும் அடக்க முடியாது தவிக்கிறேனடா. அன்று முப்பதாந் திகதி நாம் மூவரும் மூன்று மூலைகளில் இருந்து சமைக்காமல் யாரோ தந்ததையும் சாப்பிட மனமில்லாமல் பிரிவுத் துயரால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நீயோ "எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டி எட்டி எட்டிப் போகுது" என்ற பாடலைத் திருப்பித் திருப்பி போட்டுக்கொண்டிருக்கிறாய். விளக்குங் கொழுத்தாது வீடு இருண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கிறது. கூடு கலையத் தொடங்கிவிட்டது. அப்போ எங்களை பொறுத்தவரை கனடா என்பது அடிவானத் தோற்றமாக என்றும் எல்லையை பிடித்துவிட முடியாத தொடுவானமாக் காட்சியளிக்கிறது. குளட்டாவத்தை, கூத்தியவத்தை, சனியாப்புலம், மாசியப்புலம் எனப்பல பரம்பரைக் காணிகளை கட்டியழுது கொண்டு மூன்று நான்கு வருடத்துக்கு ஒருமுறை சசியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையாகத்தான் இருக்கும் என நினைத்தோம். "ஊரும் சதமல்ல உற்றாரும் சதமல்ல" எனும் ஆன்மிக ரீதியான பேருண்மையைச் சிங்கள அரசு எமக்கு கற்பித்து விட்டது. அதற்கு நன்றி.

அப்பாவும் நானுமாவது ஏதோ பேசினோம். வருபவர்களோடு கதைத்தோம். றோசாவின் துயரம் சகிக்க முடியாமல் இருந்தது. அக்கா என்ற மரியாதை ஒருபுறம். சினேகிதிபோல நெளிச்சு பழிச்சு சீண்டிவிடுவது மறுபுறமாகப் பழகியவள். மௌனமும் படுக்கையும் அப்பாவுக்கு மருந்தெடுத்து கொடுப்பதோடு அப்பாவின் அண்மைக்கே பயப்பட்டாள். அவர் அழுதால் பிறசர் ஏறும் இன்னொரு அட்டாக் வரக்கூடும். முதலாந் திகதி விடிந்ததும் முதல்வேளையாக அந்த பாடல் காசேற்றை எடுத்து ஒளித்துவிட்டேன். வாழப்போகிற பெண்ணுக்கு கண்ணீர் கொட்டியோ அனுப்புவது எனக்கூறி பூசை புனஸ்காரங்கள் செய்து பக்திப்பாடல்களை தவழவிட்டு றோசாவை கோவிலுக்கு அர்ச்சனை செய்ய அனுப்ப, நிலை சீராகிறது.

இந்தக் களேபரங்களுள் அமைச்சர் காமினி அடிக்கடி சொல்கிறான். "யுத்தம் பற்றி எனக்கொன்றும் சொல்ல முடியாது. அதுபற்றி நான் அக்கறைபடுத்தவும் இல்லை. இந்நாட்டு மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும் என்பதற்காக அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறேன். அது ஒன்றே எனது குறிக்கோள்" என்று சொல்லிச் சொல்லியே மணலாற்றுப் பக்கமெல்லாம் சுவீகரித்து அநுராதபுரத்தையும் இந்து சமுத்திரத்தையும் இணைக்கும் வகையில் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களை அமுக்கிக் கொண்டான். இதுவும் இந்தியா நமக்குச் செய்த பெரும் நன்மையல்லவா. நிலைமை சிறிது சுமுகமாக இந்தியாவும் அதன் கொய்யகத்தில் தொங்கிக் கொண்டு EPRLF உம் ஆட்சியமைக்கப் போவதாகக் கூறிக்கொண்டார்கள். பத்மநாபா எமது அம்மா வழி உறவினர். பரவாயில்லை முதலமைச்சரும் நம் சொந்த மண்தான். அவருடைய தாயார் இறந்தபோது நடந்த வரிசைகளை எம்மண் இனியொருமுறை காணுமென நான் நினைக்க - வில்லை. அனைத்து இந்தியப் படையும் வந்து சல்யூட் அடித்து வரிசையில் நின்று கௌரவிக்க இராணுவ உயரதிகாரிகள் சேறுஞ்சகதியும் நிறைந்த அந்த ஒழுங்கையில் மழையில் நனைந்து நனைந்து வந்து பத்மநாபனுக்கு சல்யூட் அடித்து துக்கம் விசாரித்துச் சென்ற காட்சி இப்பவும் கண்ணுக்குள் நிற்கிறது. எங்கள் மண்ணுக்குத் தலைவணங்கினாங்களே எனும் குரூர திருப்தி. விதவ-தமான ஜீப்புகள் ட்றக்குகள் மாவை எல்லையைத் தொடும்வரை தெருவில் நிற்பாட்டப்பட்டிருந்தன. அவையெல்லாம் சுடுகாட்டுக்கு ஊர்வலம் போயின. அடுத்த ஆட்சி தொடங்குகிறது, அதுவும் எம்மை எப்படிச் சீரழிக்கிறது என்பதைப் பார்ப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் யாழ்ப்பாணத்தில் இந்தியரின் ஆட்சி தொடங்கிவிட்டது. சந்திக்குச் சந்தி பரிசோதனை முகாம்கள். அந்த முகாம்களில் பெண்களை மானப்பங்கப் - படுத்துவது போன்ற சோதனைகள் நடைபெறுகின்றன எனக் கேள்விப்படுகிறோம். தொடக்கத்தில் கொஞ்சம் கேவலமாகத்தான். அதிகாரிகள் நாளடைவில் எம்மக்கள் கல்வியறிவுடையவர்கள் செல்வமாக வாழ்கிறார்கள் என நினைத்து சிறு கௌரவம் தரப் பழகிக் கொண்டனர். குடாநாடும் கொஞ்சம் இவர்களது அழிவிலிருந்து சுதாகரிக்கத் தொடங்கியது.

கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டுவிட்டன. ஆசிரியர் கலாசாலைக்கு நிறையப்பேர் தெரிவாகி இருந்தனர். காங்கேசன்துறை யாழ்ப்பாண வீதியை அண்டியே ஐந்து விரிவுரையாளர்களும் பதினேழு மாணவிகளும் இருந்தமையால் ஒரு வான் ஒழுங்கு பண்ணியிருந்தோம். மாவிட்டபுரம் கடந்ததும் அரசடியால் கொல்லங்கட்டி திரும்பி திரும்ப மகாஜன றோட்டால் தெல்லிப்பளைச் சந்தி வந்து நேராகக் கோண்டாவில் திரும்பி இருபாலை போகும்.

தொடக்கத்தில் ஒருநாள் ஒரு ஆசிரிய மாணவிக்குக் குண்டு இருக்கா எனப் பார்க்கிறானாம் ஒருவன் "ரீச்சர்" என்று சத்தம் போடவே நானும் இன்னொரு விரிவுரையாளரும் சண்டைக்குப் போய்விட்டோம் "கொண்டு வா உந்தன் மேலதிகாரியை" என்று நிண்டோம். அதிகாரி இதை பெரிதுபடுத்த வேண்டாம் எனச் சமாதானம் பேசவே "அவனுடைய மனைவியை கூட்டிவாருங்கள் எங்கள் ட்றைவரைக் கொண்டு குண்டு இருக்கா என அமத்திப் பார்க்க" என்றோம். அவனுக்கு மொழிப்பெயர்த்துச் சொல்லுமாறு அந்த அதிகாரியைச் சொன்னோம். அவன் கேட்டதும் வெலவெலத்துப் போய்விட்டான். இதன் பின்னர் ஒருத்தன் படியில் ஏறிப் பார்ப்பான் "எல்லாரும் ஆசிரியர்கள் போகலாம்" என்று விடுவான். நாம் இறங்குவதில்லை. இதற்கிடையில் இயக்கச் சூடுகள் இங்கொன்று அங்கொன்றாக. உண்மையாக இரு பெரிய இயக்கங்களைத் தவிர வேறு இருந்ததாகத் தெியவில்லை. ஈரோஸ் உம் இருந்ததாம் எதுவோ அந்த அரசடி கொஞ்சநாள் அல்லோலகல்லோலப்பட்டது. காலையில் நாம் போகும்போது சனசந்தடி இராது. கட்டாயமாக இரு இளைஞனின் பிரேதம் இருக்கும். மறுநாள் இன்னொன்று இருக்கும். சில நேரம் வான் இறங்கவும் முன்னால் இருக்கும் றிவேர்ஸ் எடுத்து அதைச் சுற்றி போவோம். மாணவிகள் அழுவார்கள். தலைசுற்றி மயக்கம் கோடுவார்கள். தலையிடிக்குது என்பார்கள்.

ஒருநாள் செக்கச்சிவந்தமேனி வெள்ளை வெளேரென்ற வேட்டி நெற்றியில் திருநீறு சந்தனம் நெஞ்சிலும் சந்தனம். மெல்லிய அழகான 12 - 13 வயது மதிக்கத்தக்க பையன் காதிலிருந்து ஒரு சொட்டு இரத்தம் மட்டும். நிர்மலமான அந்த முகத்தைப் பார்த்து "யார் பெற்ற பிள்ளையோ எந்த ஊரோ கோயிலுக்குப் போட்டுவாறான் என்று தாய்க்கு சொல்லிப்போட்டு போயிருக்கும். வகுப்பிலே எதாவது ஒன்றைச் சார்ந்து கதைச்சிருக்கும் அந்தக் கதை மற்றதுக்குப் போய் இருக்கும்" எனப் பேசிக்கொண்டோம். யாரோ இரு பகுதியும் பழிக்குப்பழி வாங்கல்போல் நடத்திவந்து அது எமக்கு பழகிப்போய் ஒருநாள் இல்லாவிட்டாலும் ஏதோ எதிர்பார்த்து ஏமாந்ததுபோல இருக்கும் என்ற அளவுக்கு வந்துவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே பல இடங்களிலும் கண்டு கண்டு எங்கள் உள்ளங்களும் மரத்துவிட்டன. பழைய கோபதாபங்களைத் தீர்ப்பது போன்று மருதனாமடம் வரி வசூலிக்கும் நாடகக் கலைஞர் ஒருவர், C.T.B மேற்பார்வையாளர் எம்மூர் தனபாலசிங்கம், கடன் காசு கேட்ட கடைக்கார முருகையா, தையிட்டி வர்த்தகர் கனகசபையின் மகள் லிங்கேஸ்வரி எனும் இளம்பெண் இப்படிப் பலர் காரணம் தெரியாமலேயே பழிக்கு பழியாக காலனடி புகுந்தனர்.

தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்தவரும் காங்கேசன்துறை "இளந்தமிழர் மன்றத்தின்" ஒரு தூணும் நடேஸ்வரக் கல்லூரியின் ஆசிரியருமான கருணானந்த ஆசிரியரும் பாடசாலையில் இயக்கப் பிரசாரம் செய்தார் எனக்கூறி அவரது மாணவனும் வேறொரு இயக்கத்தின் முக்கிய புள்ளியுமாகிய இளைஞன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சொட்டல் நொட்டல் ஒரு புறமாக - இந்தியன் ஆமிக்கு வால் பிடித்துச் சில நன்மைகளைப் பெறுவதற்கான அண்டல் ஆறுமுகங்கள் மறுபுறமாக வாழ்க்கை நகருகின்றது. ஒருநாள் நாமிருவரும் கல்லூரிகளுக்குப் புறப்பட்டோம். கலாசாலைக்கு வந்த ஆசிரிய மாணவர்கள் பரபரப்பிலிருந்து ஏதோ நடைபெற்றுள்ளது எனத்தெரிந்து கொண்டேன். சென்ற் ஜோன்ஸ் கல்லூரி மாணவனை நித்திரைப்பாயால் எழுப்பிக் கொண்டு போய் சுட்டுப் போட்டான்கள் என்பதுதான் கதை. படிக்கிற மாணவனா? அந்தத் தாய் என்ன பாடுபடுவாளோ ஏன் குழந்தைகளில் கை வைக்கிறீர்கள் எனத் துக்கித்தோம். தகப்பனைத் தேடிப் போய் மகனைப் பணயமாகக் கொண்டு சென்றவர்களாம் பின் ஏனோ தெரியாது சுட்டுவிட்டார்களாம்.

அமரர் பெனடிக்ற்பாலன் அன்று அரைநாள் லீவு. மதியபோசனத்தின்போது வந்திருந்தார். பரபரப்பாக என்னை வெளியே அழைத்தார். "தெரியுமோ உங்களுக்கு திருச்செல்வத்தின் மகனைத்தான் இப்படிச் செய்து விட்டான்கள். அவனோடை படிக்கிற பொடியளாய் தான் இருக்கும்".

அப்படியே திடுக்கிட்டு விட்டேன். ஒரேயொரு மகன். அவரது கெட்டித்தனங் களையெல்லாம் முதல்வாரம்தான் பாலன் சொல்லிக்கொண்டிருந்தார். எழுத்துத் துறையைச் சேர்ந்தவர்களுக்குப் பத்திரிகையாளரான திருச்செல்வத்தை தெரியாமல் இருக்க முடியாது. அவர் தினகரனில் வேலை செய்த காலத்திலிருந்தே எனக்கு அறிமுகமாயிருந்தார். டொமினிக் ஜீவா தமது மல்லிகை 18வது ஆண்டு விழாவைக் கொழும்பு விவேகானந்தக் கல்லூரியில் நடத்தினார். அந்த இலக்கிய ஆர்வலர் கூட்டத்துக்கு அடியேனைத் தலைமைதாங்கக் கேட்டிருந்தார். மண்டபம் நிறைந்த கூட்டம் இதுபற்றித் தினகரனில் திரு எழுதியிருந்தார். ஓர் இலக்கிய கூட்டத்துக்கு அதுவும் கொழும்பு மாநகரில் தலைமை தாங்கி நடத்திய முதலாவது பெண் எனப் பாராட்டியிருந்தார். அதிலிருந்து அவரைத் தெரியும்.

இந்திய இராணுவம் பத்திரிகையாளர்களைச் சிறைவைத்தமை ஒன்றும் முதலில் எமக்குத் தெரியாது. ஆனால் கோபால் ரட்ணத்தின் மனைவியார் அவரைப் பார்க்க வந்தபோது எமது வீட்டில் தங்கி ஏற்ற உணவுகளைத் தயாரித்துக் கொண்டு குமரகுருவுடன் கூடிச்சென்று கணவனைப் பார்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார். இவர்தான் 'திரு'வையும் யாழ்ப்பாணத்தில் வைத்திருக்கினம் என்று சொல்லியிருந்தார். குடும்பப் பொறுப்புகள் கூடியமையாலும் நாட்டு நிலைமையாலும் அதிக புதினங்களை அறிய முடியாதிருந்தது.

கொலைச் செய்தியைக் கேள்விப்பட்டதும் ஏற்கனவே நான் ஒன்றைப் பறி-கொடுத்து இருபது வருடமாகியும் கண்ணீர் விடுகிறேனே! அந்த மழலைக்காக, வாலிப வயதில் பறிகொடுத்த இந்தத் தாய் என்ன செய்வாள். கட்டாயமாக அந்த இளைஞனுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என தீர்மானித்துக் கொண்டேன். யாழ் கல்லூரிகளில் அந்த மாணவனுக்கு பேரும் புகழும் இருந்தது. பாடசாலைகளிலிருந்து மாணவரனைவரும் தாமாகவே வெளியேறி அவர்கள் வீட்டிலே அஞ்சலி செய்கிறார்களாம். எனக்கோ போக்குவரத்து பிரச்சனை எப்படியும் போகவே வேண்டும். பெனடிற் பாலன் தான் கூட்டிக் கொண்டு போவதாகச் சொன்னதும் அவரது மோட்டார் சைக்கிளில் தொத்திக் கொண்டு போய் அப்பிஞ்சுக்கு வணக்கம் செலுத்தினேன். கொடூரமாக நிகழ்ந்த கொலையினால் அறிவிழந்திருந்த பெற்றோருக்கு ஒரு அனுதாப பார்வையைச் செலுத்திவிட்டு வந்துவிட்டேன். வெறும் வார்த்தைகளால் என்ன பயன்?

றோசா கட்டாயம் போக வேண்டும் என நிற்பாள். சக மாணவிகளுடன் போகும்படி சொல்வோம் என நினைத்துக் கொண்டேன். மகளே, சொல்லாமல் செய்வர் உத்தமர் எனும்படி றயில் பாதையில் வரும்போதே கிடாரத்தில் சுடுநீர் எரிவதைக் கண்டதும் அம்மா அங்கே போய்த்தான் வருவா என நீ உணர்ந்திருக்கிறாய். எள் எனுமுன் என்ணையாய் நிற்பவளே! என்ன கைம்மாறு செய்வேன். ஒரு குற்ற உணர்வோடு என்னைப் பார்க்கிறாய். என்ன கண்ணெல்லாம் வீங்கியிருக்கு, ஏன் இந்தநேரம் முழுகினனீங்கள் எனக் கேட்கிறேன். "நீங்கள் பேசுவிங்களோ தெரியாது. இண்டைக்கு எல்லாரும் வகுப்பைக் கட் பண்ணிப் போட்டு அகிலனைப் பார்க்க போனவை. எனக்கு விருப்பம் ஆனால் உங்களை கேளாது போக முடியாது என்று சொன்னன். அன்ரி சொன்னவ அவவுக்கு எல்லாந் தெரியும்தானே நான் அவவுக்குச் சொல்றன் நீர் போம் என்றவ அதுதான் நானும் போனேன்" என்கிறாய்.

"அதுதான் நல்லது. சில விடயங்களில் அவசர முடிவு எடுக்க வேண்டிவரும் அப்போதெல்லாம் எங்களை எதிர்பார்க்க முடியாதுதானே உங்கள் மனதுக்குச் சரியென்றுபட்டால் அதைச் செய்யலாம். அது பிடிக்காமல் நாம் ஏசினாலும் சரியாகத்தானே நான் செய்தேன் என்ற திருப்தி இருக்கும்" என்றேன்.

அன்று முழுவதும் இதே கதைதான் அவ துடிச்ச துடிப்பும் வேதனையும் சாவுக்கான காரணங்களை அலசியதும் மாணவர்களில் கைவைத்து விட்டான்களே இனிச் சும்மா இருக்கக்கூடாது எனக் குமுறியமையும் படிப்பு தலைக்கேறாததுகள் தான் விவேகமானவர்களை இப்படிச் செய்வது, தகப்பன் வந்து காப்பாற்றியிருப்-பார்கள்தானே என்ன அவசரம், பொறாமை என அமைதியிழந்து தவித்தாள்.

அகிலன் மாணவர் குழாத்தின் பிரதிநிதி என்ற உணர்வு கல்லூரி மாணவரிடையே அலைமோதியது. பாடசாலைகளிலிருந்து மாணவர் குழுகுழுவாகக் காணாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகத் தொடங்கினர். ஒரு நாளிலேயே ஐம்பதுக்கும் மேற்பட்ட உயர்வகுப்பு மாணவர் காடுகளுக்குச் சென்றுவிட்டனர். பெற்றோர் திகைத்தனர். ஒவ்வொரு நாளும் புதிய புதிய செய்திகள். அகிலன் அலை புலியியக்கத்துக்கு ஆள்வலு சேர்த்தது. எங்கள் றோசாவுக்கும் உத்வேகம் வந்தது. அகிலனை அவள் ஒருநாள் தன்னிலும் கண்டதில்லை. ஆனால் அந்த சமூக உணர்வு தன்மானம் சுதந்திரவேட்கை மேலும் அதிகரிக்க இது ஒரு தூண்டுகோலாகிவிட்டது.

ஓ செல்வமே அன்றிலிருந்து நீ மாறிவிட்டாய். மௌனம் உன்னை ஆட்கொண்டு விடுகிறது. அன்றுதான் பெற்றோருக்குத் தெரியாது ஒரு காரியம் செய்தீர் அதுதான் எதிர்கால மீறல்களுக்கு கால்கோள் நாட்டியதோ? தலையிடியும் காய்ச்சலும் தமக்கு வந்தால்தான் தெரியும் பெரிய வீரமாகவும் தீயாகமாகவும் பெருமிதமாகவும் மதிக்கப்படும் சில விடயங்களை அவரவர் அனுபவிக்கும் - போதுதான் பந்த பாசம் எவ்வளவு கொடூரமாக உள்ளத்தை வதைப்பன என்பது புரியும்.

றோசாவும் புனிதாவும் நண்பர்கள். ஜனா வெளிநாடு சென்றுவிட்டாள். புனிதா வந்து இவவும் சேர்ந்தே வகுப்புகளுக்கு பிரத்தியேகப் படிப்புகளுக்குச் செல்வார்கள். அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது றோசாவைப் பார்க்க எமக்கு மிகச்சந்தோசமாக இருக்கும். அப்போதுதான் மனம் விட்டுச்சிரிப்பாள், கலகலவெனக் கதைப்பாள். மற்றும்படி வாய்மூடிதான். அயலிலே எம் தங்கையின் பிள்ளைகள் கோசல் மனோராகவன் ஒரு வயதுக் குழுவினர் அவர்களோடுகூட கவசம் போட்ட முகத்துடன் பழகுவது போலத்தான் இருக்கும்.

நிலைமைகள் சிறிது சீராகவே எமது பின்வீட்டில் தற்காலிகமாக்த் தங்கியிருக்கும் திரு குமரகுரு தமது வீட்டுக்குப் போய்விட்டார். காலங்கெட்டுப் போயிருந்ததால் "கலைச்சோலைக்கு" யாரும் வாடகைக்கு வர மாட்டார்கள். தங்கள் சொந்த வீடுகளை விட்டிட்டு உள்ளூர்களில் வீடெடுத்துக் கொண்டு போனவர்களே அதிகம். பின் வீட்டுக்கு பின் வேலி பக்க வேலி எல்லாம் ஓடுவதற்குப் பாதை வைப்பதற்காக வெட்டிவிடப்பட்ட நிலையில் நீண்டகால பாவனையற்ற நிலையில் அழிந்தும் இருந்தன. கல்லூரி வீதியாலும் றயில் பாதையாலும் இந்திய இராணுவம் அடிக்கடி ரோந்து போகும். றயில் பாதையிலிருந்து கிழக்கே இரண்டாம் வளவு ஆகவும் கல்லூரி வீதியிலிருந்து தெற்கே இரண்டாவது காணியாகவும் இந்த "கலைச்சோலை" அமைந்திருக்கிறது. இரு வீட்டுக்கு நடுவே சில கதியால்களே. வேலி கிடையாது.

றோசா அப்போது கொம்பியூட்டர் வகுப்புக்கு போய்க்கொண்டிருக்கிறா. கலாசாலையால் வீடு வந்ததும் "பின் வீட்டில் யாரோ Boys வந்து நடமாடுகி-றாங்கள் என றோசா ஒரு நாள் சொன்னாள். உடனே பின்வீட்டுக்குச் சென்றேன் திறப்பு இல்லாமலே கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன. சாரம் போன்ற சில உடுப்புகள் காணப்பட்டது. யாருமே அங்கில்லை. யாரும் களவு தொழில் செய்பவர்கள் எமது வெறும் வீட்டைப் பயன்படுத்துகிறார்களோ - சந்திக்க, பங்குபிரிக்க வெளிவிறாந்தைகள் பல இருக்க அறைக் கதவுகளை ஏன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்தார்கள்? எப்படித் திறந்தார்கள்? யோசித்த வண்ணமே வந்து வீட்டை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன்.

ஆளரவம் தெரியவே அங்கு சென்று யார் நீங்கள்? யாரைக் கேட்டுக் கொண்டு உள்ளே வந்தீர்கள் எனக் கேட்டேன். "நாங்கள் இயக்கப் பெடியள் சிவம் மாஸ்ரர்தான் இந்த வீடு வெறுமனே இருக்கிறது என்று சொன்னவர்" இடிவிழுந்ததுபோல சப்தநாடிகளும் ஒடுங்கிவிட்டன. பயத்தில் என்ன சொல்வதென்றும் தெரியவில்லை. உள்ளேயிருந்து யார் எனக் கேட்டுக்கொண்டு வெளியே ஒருவர் வந்தார், "என்ன தம்பியவை போயும் போயும் ஒரு இடமுமில்லாமல் இந்தப் பகிரங்கமான இடத்துக்கு வந்தனீங்களோ. நான் என்ன செய்ய? எல்லாரும் காட்டிக் கொடுத்திடுவாங்கள். எனக்கு வாழ்வே ஒரு சுமையாய் இருக்கு. நடக்கவோ பேசவோ இயலாத ஒரு நோயாளியும் ஒரு இளம்பெண்ணும் இருக்கிற இடம். அந்தரத்துக்கு உதவி இல்லை வேலைக்கு வெகுதூரம் போறது. இராணுவம் வந்தால் எங்களுக்கு எவ்வளவு ஆபத்து என்றேன். எனக்கு இயலாத தன்மையில் கோபம் கொப்பளிக்கிறது.

கிட்டுவைப்போலவே தோற்றமளித்த ஹரன் எனும் வாலிபர் என்னைச் சாந்தப்படுத்தினார். "அம்மா இந்தியன் ஆமி வருவதானால் முதலிலேயே எனக்குத் தகவல் வந்துவிடும். அது மாத்திரமல்ல இரவு ஒரு நேரம் படுத்திட்டுப் போவதற்குத்தான். முன்பக்கம் வரவே மாட்டோம். உங்களை அவர்கள் ஒன்றுமே செய்யார்கள் பயப்படாதையுங்கோ" மிகவும் சாந்தமாக உள்ளத்தை ஈர்க்கும் வண்ணம் அவர் என்னைச் சமாதானப்படுத்த வேறு இருவர் துவக்குகளை கொண்டு வந்து ஏதோ துடைப்பது போலப் பாசாங்கு செய்து கொண்டிருந்தனர். திரும்பி விட்டேன்.

அப்பா "போகச் சொல்லும்" "போகச்செல்லும்" எனத் திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டிருந்தார். றோசாவுக்கோ நல்ல முகமலர்ச்சி "அதுக்கென்ன? அவர்களும் வேறெங்க போறது பாவங்கள்! நாங்கள் ஒன்றும் தெரியாதது மாதிரி இருப்பம்" என்று சொன்னாள். அன்று முழுவதும் நித்திரையைத் தொலைத்துவிட்டு யாருக்கும் சொல்லமுடியாமல் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தேன். வேறெங்காவது வீடு வாடகைக்கு எடுத்துப் போவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது. எமக்குத் தேவையான இடத்தில் எமக்கேற்ற வீடு கிடைக்குமா? இரத்த அழுத்தம் கூடியதுதான் மிச்சம்.

இராணுவம் வருவதைக் கண்டால் உடனே றோசா போய் பட்டடையடியில் நின்று எச்சரிக்கை செய்வாள். அவர்கள் பின்வளவால் பாய்ந்து ஓடுவார்கள். பின் வளவுகளில் இருந்தவர்கள் உணவு பார்ஸல்கள் கொடுப்பதாம். அவர்கள் எல்லாம் நல்ல உதவி செய்து பாதுகாப்பாக வைத்திருந்தார்கள் ஆனால் என்னைக் கண்டாலுங்கூட அயலவர் ஏதும் அறியார்போல நடந்து கொள்வார்கள். இந்தப் போராளிகள் ஐவருள் ஒருவர் ஐங்கரன் அளவெட்டியைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் தம்பதிகளின் புதல்வராம். அவருக்கு நல்ல காய்ச்சல் யாரோ குடிநீர் போட்டுக் கொடுத்ததாகப் பின்னர் சொன்னார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் நான் கலாசாலை போய்விட்டேன். அன்று இவர்கள் றயில் பாதைச் சந்தியில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஐங்கரனும் தனியே படுத்திருக்க 'டல்'லாயிருக்கென்று போயிருக்கிறார். இந்திய இராணுவத்தின் 'ஜீப்' ஒன்று வந்து, பாய்ந்து ஓடி மதில்களால் ஏறிவிழுந்து ஓடிவிட்டார்கள். ஐங்கரனால் ஓடமுடியவில்லை. அவர் பாலத்துக்கண்மையிலுள்ள வீட்டுள் இருந்துவிட்டார். அந்த மதிலைத்தாண்டியதை இராணுவம் கண்டுவிட்டது. வீட்டைச் சுற்றிவளைத்து உட்புகுந்து அறைகளைத் தேடி, சொந்தக்காரனைப் பிடித்து அடித்திருக்கிறார்கள். அதைக்கண்டு பொறுக்க முடியாமலோ அல்லது இனித்தப்ப வழியில்லையென்றோ சயனைற்றைக் கடித்துவிட்டு எழுந்து முன்னே வந்து முற்றத்தில் விழுந்துவிட்டார். ஆமிக்காரனுக்கோ ஆத்திரம். குற்றுயிரும் குலையுயிருமாக இருந்தவனை சப்பாத்துக்காலால் உழக்கி உதைத்து சயனைட் குடித்ததற்காக ஏசிப் படாதபாடுபடுத்தினானாம். ஊர்மக்கள் உடலை அளவெட்டியில் கையளித்தார்கள். இதனை றோசா எமக்குச் சொல்லும்போது துக்கமாகவும் உழக்கியதைச் சொல்லும்போது மிக ஆத்திரமாகவும் காணப்பட்டாள். என் வீட்டில் இருக்கும்போது இப்படி நடந்துவிட்டதென எனக்கும் மிகக்கவலை.

இந்தியாவில் அடைக்கலம் புகுந்த அகதிகளை கப்பலில் கொண்டுவந்து இறக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்களை நடேஸ்வராக் கல்லூரியில் இறக்கி அலுமினியம் பானை சட்டி எனப் பொருள்களும் கொடுத்துத் தத்தம் ஊர்களுக்கு அனுப்பத் தொடங்கினர். நிறைய பொருள்கள் கொடுத்தமையால் ஒருசிலர் திரும்பவும் வள்ளத்தில் போய் கப்பலில் திரும்பி இந்த ஆதாயங்களைப் பெற்றுக்கொண்டனர். நம்மவர் ஊரை ஏய்ப்பதில் வல்லவர்கள்தானே. கல்லூரியைச் சுற்றி இராணுவ சென்றி இருந்தது. தெற்குப்பக்கமாக இருந்த சென்றிக்கு இரவுநேரம் யாரோ கிறனைட் அடித்துவிட்டார்கள். ஒரே துவக்கு சூட்டுச் சத்தங்கள்தான். விளக்குகளை அணைத்துவிட்டு நடுங்கிக்கொண்டேயிருந்தோம். மறுநாள் இந்தியா செல்லவிருந்த இராணுவத்தினன் ஒருவன் அதில் கொல்லப்பட்டானாம். மறுநாள் இந்திய இராணுவம் வீடுவீடாக விசாரணைக்கு வந்தது. பின் வீட்டுப்பக்கத்தில் ஒருவரும் காணப்படவில்லை. இவருள் சர்மா என்றொரு கப்டன் துருதுருவென்று விசாரணை நடத்தினான். உங்களைப் பற்றி நான் அறிந்திருக்கிறேன் பெற்றோல் செட்டில் சொன்னார்கள் என்றான் கடுப்பாக.

யாரோ சிலர் இரவில் கடைகளைக் கொள்ளையடித்து வந்தனர். ஊரடங்குச்சட்டம் இதற்கு வாய்ப்பளித்தது. மக்கள் இயக்கப்பெடியளிடம் முறைப்பாடு செய்தனர். இவர்கள் பகலில் குருநாத சுவாமி கோவிலில் மடத்தில் இருப்பவர்கள் போலும். அந்தக் கள்வரைக் கையும் மெய்யுமாகப் பிடித்ததெனச் சொன்னார்கள். அவர்களுக்கு மொட்டையடித்து, பொருள்களை அவர்களின் தலைமேற் சுமத்தி அங்கிருந்து கல்லூரி வாசல்வரை பொதுமக்களும் பாடசாலை விடும்நேரம் மாணவரும் பார்க்கத்தக்கதாக நடத்தி வந்திருக்கிறார்கள். கள்வரெனச் சொல்லப்பட்டவர் சிலர், பகலில் பெரிய ஆட்கள்போல நடித்துத் திரிபவர்கள். எனவே இந்த அவமானம் தாங்க முடியாமல் இந்திய இராணுவத்திடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிகளின் இருப்புப்பற்றிய தகவல்களை கொடுத்துவிட்டார்கள். வந்தது அனர்த்தம்.

அன்று மூன்று மணிபோல கலாசாலையால் வந்ததும் றோசாவின் முகம் சரியில்லை. என்ன ஏதாவது நடந்ததா எனக்கேட்டேன் "தெரியவில்லை முன்கேற்றால் கருணானந்தசிவம் பின்வீட்டுக்குப் போனது. பெடியள் பார்ஸல்களில் சோறு சாப்பிட்டுக் கொண்டிருந்தவை. நான் யன்னலில் நின்று பார்க்க இவர் ஏதோ சொன்னதும் சிலர் பார்ஸலைக் கொண்டும் சிலர் விட்டிட்டும் ஓடிவிட்டினம். விட்டிட்டுப்போன பார்ஸல்களைச் சிவம் மாஸ்டர் தூக்கிக்கொண்டு புறப்பக்கம் போனவர். கனநேரம் கழிச்சுத்தான் திரும்பிப்போனவர். என்னைக் கண்டிட்டு 'ஆமி வாறாங்கள்' என்று சொல்லிப் போட்டார்" என்று றோசா சொல்லவே நான் உடனடியாகப் பின்பக்கம் போய் வீட்டைப் பார்த்தேன். ஆட்கள் வசிக்காத வீடுபோல எதுவித தடயமும் இல்லாமல் இருக்கவே திருப்தியுடன் வந்து உடைமாறினேன்.

இந்திய இராணுவம் வந்தபின்தான் எங்கள் மகன் பாபு லீவுக்கு வீட்டில் வந்து நிற்கிறார், மூன்று வருடங்களின் பின் வந்தவர் அடுத்த வாரத்தில் போக இருக்கிறார். அன்று யாழ் நகர் பழைய பாடசாலைக்குச் சென்று ஆசிரியர்களைச் சந்தித்து அப்போதான் வந்திருந்தார்.

அன்று கல்லூரி வீதி மறுபுறத்திலிருந்து இராணுவம் இறங்கியிருந்தது கை-யெடுத்த தெய்வம் கைவிடாது போலும். இந்தப்புறத்திலிருந்து இறங்கியிருந்தால் றோசா மாத்திரம் வீட்டில் இருந்திருப்பாள். சிவலிங்கம் எனும் ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவரின் வீட்டைச் சல்லடைபோட்டுச் சலித்திருக்கிறார்கள். அடையாள அட்டையைப் பார்த்து நீ இராமலிங்கம் ஓய்வுபெற்ற தபாலதிகாரி இல்லையா? என மீண்டும் மீண்டும் கேட்டு திருப்தியடைந்தவர்களாக மற்றைய வீடுகளுக்குப் போயிருக்கிறார்கள். சிவலிங்கத்தார் உடனேயே சிவம் மாஸ்டருக்குத் தகவல் அனுப்பவே அவர் பூரணமாக விடயத்தைச் சொல்லாமல் தடயங்களை அழித்துவிட்டுச் சென்றுவிட்டார். நாமும் ஏதோ வந்து பார்த்துவிட்டுப் போகட்டுமே என்று நினைத்தோமே தவிர எம்மைத்தான் தேடி வருகிறார்கள் என்பதை அறி-யோம். சனநடமாட்டம் இல்லாத காரணத்தால் கல்லூரி வீதியில் தேடுதல் நடப்பதை நாம் அறிவோம்.

பெரிய ட்றக்குகள் ஜீப்புகள் எல்லாம் வந்து கல்லூரிக்கு முன்நிற்கவும் றயில்பாதை நீளத்துக்கு இராணுவம் நிலை கொள்ளவும் ஒரு அதிகாரி எம்வீட்டில் உள்ளிடவும் கணப்பொழுதில் நிகழ்ந்தன. வந்தவர் பெயர் கேட்டார். ஓய்வுபெற்ற தபாலதிபரா என்று கேட்டார். பரபரப்போடு வாக்கிடோக்கியில் ஏதோ சொன்னார். தூரத்தில் ஏதேதோ கட்டளைகள் பிறந்தன. உடனடியாக கேற்றினூடாக இராணுவம் பொலபொலவெனக் கொட்டுண்டது. ஒவ்வொருவர் கையிலும் ஏதேதோ பெரிய பெரிய ஆயுதங்கள் பெட்டிகள்போல சிலிண்டர்கள்போல மிகப்பாரமானவைபோல. உடுப்பை மாற்றுவோம் என அறைக்குள் போனால் யன்னலூடாகத் துவக்கு நீண்டு கொண்டிருந்தது. திரும்பி-வரவும் பல சல்யூட்டுகளைப் பெற்றுக்கொண்டு இரு உயரதிகாரிகள் வந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது தொப்பிகள் கைச்சட்டைகள் எல்லாம் நிறையப் பட்டயங்கள், சின்னங்கள் (Badges) வந்தவருள் ஒருவர், தான் இந்தப்பகுதிகளுக்குப் பொறுப்பாகப் பலாலியில் இருக்கும் பிறிகேடியர் என்று அறிமுகம் செய்தார். மிக விநயத்தோடும் பண்போடும் அவரது கேள்விகள் அமைந்திருந்தன.

"வீடு வெறுமனே இருந்தது. அவர்கள் தம்பாட்டிலேயே வந்துவிட்டார்கள். போராளிகள் என எனக்குத் தெரிந்துவிட்டது. ஆனாலும் ஒன்றும் செய்யமுடியாது. அப்பா சுகவீனமானவர் பகலில் தனியே இருப்பவர். உங்களுக்கு அறிவிப்பதா? எப்படி அறிவிப்பது சந்தேகத்துக்கிடமான யாருடனும் நாம் பேசினால் சுட்டுவிடுவார்கள். நாமுண்டு, நம்பாடுண்டு என இருந்துவிட்டோம். அரசியலில் ஈடுபடுவதில்லை. யார் ஆண்டாலும் நமக்குக் கவலையில்லை என் தொழில் கற்பித்தல். இவர் என் மகன் இந்தியாவில் எஞ்சினியரிங் படிக்கிறார்" கேட்ட கேள்விகளுக்கு நாமும் பயந்ததாகக் காட்டிக்கொள்ளாமல் ஒரு இயக்கங்களுமே எமக்குப் பிடிக்காத மாதிரி மிக மரியாதையாகச் சொல்லிக்கொண்டிருந்தோம்.

சரி வாருங்கள் வீட்டை போய்ப் பார்ப்போம் எனவும், திறப்புகளை எடுத்துக்கொண்டு பாபுவையும் வரச்சொல்லவே கூட்டிச்சென்றோம். வழிநிறைய வேலியோரம் இராணுவம் அவருக்குக் கிடைத்த சல்யூட்டுகளை நாமும் பெற்றுக்கொண்டு போனோம்.

பின்புற விறாந்தைச் சுவரில் முன்பிருந்தவர்கள் விட்டுப்போன ஒரு மரக்கூடு இருந்தது. அதில் பிளேட் சிறு போத்தல்கள் இருந்தன. "இது குமரகுரு போகும்போது விட்டிட்டுப் போனது" எனச் சொன்னேன். என் கூடாதகாலம் சில எண்ணைப் போத்தல்களோடு மருந்து கட்டக்கூடிய போறிக் பவுடர் ஸ்பிறிற் என்பனவும் இருந்தன அதன் பின்னால் றிவால்வர் வைக்கும் ஒரு உறையும் காணப்பட்டது. அதனை எடுத்து பிறிகேடியரிடம் கொடுத்தபோது, அவர் அதை என்னிடம் காட்டிச் சிறிது கடுமையாகவே "இதுவும் குமரகுரு பாவிப்பாரோ" என்று கேட்டார். றிவால்வர் உறையைக் காட்டிக் கேட்டதும் பெரிதும் அவமானமாகவும் பயமாகவும் எமது தகைமைக்கு இழுக்கு ஏற்படும் வண்ணம் அவசரமாகப் பதில் சொன்ன என் அசட்டுத்தனத்தையும் நொந்து கொண்டேன்.

அதன்பின் அடுப்படி விறாந்தையில் சில சிறிய வயர் துண்டுகள் மெல்லிய நூல் போன்ற வெள்ளிக் கம்பிகள் என இரண்டு அங்குல நீளமானவற்றை அவரே பொறுக்கினார். மற்றவர்களுக்குக் காட்டி ஜவானைப் பலிகொண்ட வெடி இங்கேதான் தயாரிக்கப்பட்டது எனச் சொல்லி பாபுவையும் பார்க்க வைத்தார். என் முழங்கால்கள் நடுங்கின. கடதாசிக் குப்பைகளையே பார்த்துப் பழகிய என் கண்களுக்கு இவை கண்ணில் படவேயில்லையே. அறிந்தவன் அறியவேண்டும் ஒவ்வொன்றையும் பற்றி எல்லாவற்றுக்கும் சிரம் வைத்ததுபோல ஒரு அறையின் யன்னல் மீதேறி பூக்கல்லை எட்டி அதனடியில் ஒரு கிறைனைட் எடுத்தார்கள். வளவைச் சுற்றிப் பார்த்தார் "இப்போ இங்கே ஒருவருமில்லை என்றீர்கள் எப்படி தென்னமரத்தடியில் தண்ணீர் வந்தது. யாரோ குளித்திருக்கிறார்கள் இல்லையா" என்றார் திக்குமுக்காடிப்போனேன். வளவெல்லாம் கொத்திப்பார்க்கும்படிக் கட்டளையிட்டுவிட்டு எம்மையும் அழைத்துக்கொண்டு எம்வீடு வந்தார்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலைச்சோலையைப் பார்வையிட்டுத் திரும்பவும் எம்மீது கொஞ்சம் அதிருப்தியைக் காட்டிக்கொண்டு எம் வீடு வந்த அதிகாரிகள் வீட்டு ஹாலில் நின்று சுற்றிப்பார்வையிடுகின்றனரே தவிர அறைகளுள் புக எத்தனிக்கவில்லை. ஆனால் வெளிப்புறத்திலிருந்து யன்னலூடாக எல்லா அறைகளுள்ளும் துவக்கை உள்ளே வைத்துக் கண்காணிக்கின்றனர்.

அப்பாவிடமே கேள்விகள் கேட்டார். யெஸ், நோ, தவிர வேறெதும் அவர் பேசவில்லை. "அவருக்கு பாரிசவாதம் நன்றாகப் பேசவராது" என்றேன் "மேடம் நான் அவருடன் பேசப்போகிறேன் நீங்கள் சற்றுப் பேசாதிருங்கள்" என்றார். சுவரில் தொங்குகின்ற மூத்தமகளின் கலியாண போட்டோவைக் காட்டி பிள்ளைகளா என்று கேட்டார். "Yes". இப்ப எங்கே இருக்கிறார்கள் "கனடா" "நைஸ் லுக்கிங் கப்பிள்" என்றார். அப்பா சிரித்தார்.

அப்பாவின் வாயால் எதையாவது வரவழைக்கப் பாடுபடுகிறார் பிரிகேடியர். அருகே நின்று அன்பாக மென்மையாகப் புலிகள் ஏதாவது எங்களைச் செய்து விடுவார்களோ என்பது தனது விசாரம் என்பது போன்ற கேள்விகளைக் கேட்கிறார். ஆசிரியர்கள் எவ்வளவு அறிவுடையவராய் இருந்தாலும் குழந்தை-யுள்ளம்போல வெள்ளையுள்ளம் படைத்து எதையும் வெளியே கக்கிவிடுவார்கள். ஆனால் அப்பாவுக்கு நல்ல நிர்வாக மூளை. அதிகம் வாயால் பேசாமலே எழுத்தில் போட்டு கருமம் ஆற்றும் திறமையான நிர்வாகி எனப் பெயர்பெற்றவர்.

இங்கெல்லாம் வருவார்களா? யாருடனும் பேசுவார்களா? உணவு கேட்பார்களா? துவக்கைக் காட்டி மிரட்டுவார்களா? "இல்லை இல்லை" என்ற பதில்தான் ஒரு சந்தர்ப்பத்தில் தன்னைக் குழந்தைப்பிள்ளை என நினைத்துவிட்டானோ என்று நினைத்தோ என்னவோ நெற்றியைச் சுருக்கிக்கொண்டே "சில்லி" என்கிறார்.

மற்றைய அதிகாரியோ சந்தேகக் கண்களுடன் குற்றஞ்சாட்டுவது போலவே எம்மை மாறிமாறிப் பார்க்கிறான். தலைமையதிகாரியின் அணுகுமுறை அவனுக்குப் பிடிக்கவேயில்லை. பாபுவைக் கேட்கத் தொடங்கியதும் படிக்கும் கல்லூரி யூனிவேசிற்றி, ஹாஸ்டலா, வீடா என்று தொடங்கி எஞ்சினியறிங்கில் என்ன பகுதி படிக்கிறீர்கள் இத்யாதி. "இந்தியன் ஆமிதான் யாழ்ப்பாணத்தை நிர்வகிக்கிறது எனக் கேள்விப்பட்டுத்தான் 3 வருடமாகப் பார்க்காதிருந்த அப்பா அம்மாவைப் பார்க்க வந்தேன். அவர்களை எனக்குத் தெரியாது நான் பார்க்கவும் இல்லை பேசவும் இல்லை மெக்கானிக்கல் செய்கிறேன்" என இவர் பதில்கள் அமைந்து கல்லூரி IDயும் காட்டப்படுகிறது.

றோசாவைக் கேட்டபோது "நான் படித்துக் கொண்டிருக்கிறேன். இவையெல்லாம் எனக்கு விருப்பமில்லை. நாங்கள் கனடாவுக்குப் போகப் போகிறோம்" என்கிறாள். "நீங்கள் நல்லபிள்ளை இவர்கள் திரும்பிவந்தால் அம்மாவைத் தூண்டி யார் மூலமாவது எங்களுக்குச் செய்தி அனுப்புங்கள்" என "ஆம்" என்கிறாள் அந்தக்கள்ளி.

"சரி நாங்கள் போகவேண்டும். துளசிராம்! நைஸ் நேம், உடுப்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றிக்கொண்டு வாரும் எங்களோடு ஒரு ஸ்ரேற்மென்ற் எடுத்துக்கொண்டு அனுப்பி விடுகிறோம்." எனக்கு ஐந்தறிவும் கெட்டு தலைசுற்றத் தொடங்கிவிட்டது. றோசா என் கையை இறுக்கிப்பிடிக்கிறாள். பாபு என்னைப் பார்க்கிறான். "ஏன் அவனை, கல்லூரி திறக்கப்போகிறது 3 நாளில் அவர் போய்விடுவார். இனி அவங்கள் வரமாட்டான்கள். இன்று நீங்கள் வந்தது எங்களுக்கு எவ்வளவு சந்தோசம் இனி ரென்சன் இருக்காது அவை பயத்திலை இந்தப்பக்கம் எட்டியும் பாராயினம். நாங்களும் நிம்மதியாய் இருக்கலாம். அப்படி வந்தாலும் E P பெடியளிடம் சொல்லிவிடுகிறோம்" எனக் குழையடிக்கிறேன்.

"நோ மேடம் ஒருவீட்டிலை ஆயுதங் கண்டுபிடித்தால் விட்டிட்டுப் போகேலாது சாட்டுக்கு ஒரு ஸ்ரேற்மென்ற் எடுத்து கையெழுத்து வாங்கிக்கொண்டு நானே கூட்டிவந்து விடுகிறேன்" என்கிறார். "அப்படியானால் நான்தானே வீட்டுச் சொந்தக்காரி நானே வாறன் நில்லுங்கோ உடுப்பு மாத்திக்கொண்டு வாறன்" "இல்லை ஒரு பத்து நிமிடத்தில் அனுப்பிவிடுவம்" "ஐயையோ அப்பா அழப்போறார் இரண்டாம்முறை ஸ்ரோக் வரக்கூடாதென டாக்டர் சொன்னவர்" என்று நான் சொல்லவும் மற்ற அதிகாரி பாபுவின் கையைப் பிடிக்கவும் அப்பா "நோ நோ நோ" என்று சொல்லியவாறு வெம்பி வெம்பி அழத் தொடங்கிவிட்டார். "ஒரே மகன் ஒரே மகன்" எனத் திருப்பித்திருப்பிச் சொல்லவே ஒருகணம் யோசித்த பிறிகேடியர் "சரி சரி நிற்கட்டும், ஆனால் அவங்கள் வருவான்கள் நீங்கள் எல்லாவற்றையும் எங்களுக்குச் சொல்லிவிட்டதாக சந்தேகப்படுவான்கள். எங்களை நீங்கள் ஏமாற்றியது மாதிரி சொல்லித் தப்பிக்கொள்ளுங்கோ. கவனம் அவங்களுக்கு உயிர் ஒரு துரும்பு" போய்விட்டார்கள். மற்ற அதிகாரியோ முறைத்து பார்த்துவிட்டே போனான். அத்தனை இராணுவமும் அவர்களது போர்க்கருவிகளும் ஜீப்புகள் ட்றக்குகளும் புறப்பட மாலை ஏழு மணியாகிவிட்டது.

வழக்கமாக இரவில் புதினம் கதைக்கவரும் உறவினர் நண்பர், விடுப்புப் புடுங்கிகள் ஒருவருமே இரவு 9 மணியாகியும் வரவில்லை. அவ்வளவு பயம். 9 மணிபோல ஹரன் முன்பக்கத்தால் சைக்கிளில் வந்து ஒழுங்கைக்குள் நின்றார். நானும் றோசாவும் போனோம். நடந்ததைச் சுருக்கமாகவே சொன்னோம். "தங்கச்சி உங்கடை உதவிகளுக்கு நன்றி. அம்மா, நாளைக்குக் கட்டாயம் வருவாங்கள் நீங்கள் மகனை வேறேங்காவது அனுப்பிவிடுங்கோ" என்றவாறு போய்விட்டார். நேரம் மரணவேதனையுடனும் அதேநேரம் ஒரு சுகப்பிரசவமான நிம்மதியுடனும் கழிகிறது.

எல்லாரும் விறைத்துப்போய் இருந்தோம். தங்கை வந்து கோப்பி தந்தாள். நிலைமையைச் சுமுகமாக்க றோசாதான் தொடங்கினாள். "அப்பா நல்லாய் நடிச்சீங்க. அம்மா அழுவார் என்று புறேம்ப் பண்ணவும் ஆகா என்ன ஒரு அழுகை. பெடியனாய் இருந்தபோது கல்முனையிலை உடையார் மிடுக்கு நாடகம் நடிச்சனீங்களாம். அது ஆபத்தில் கை கொடுத்திட்டுது பாருங்கோவன்" "என்ன சேட்டை, மெய்யாய்தான் மெய் மெய்" என்று கோபிக்கிறார் அப்பா. அது உண்மைதான் இந்த வருத்தக்காரரர் அதிகமாக அழுவார்கள் அல்லது கண்டபடி ஏசுவார்கள். இங்கே தன் இயலாமையால் அழுவதுதான் வழக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளுணர்வுகள்தான் கனவுகளாக வருவனவோ தெரியாது. "கண்டவற்றை நாளுங் கனவில் கலங்கிவிடும் திண்டிறல்" என்று திருவருட்பயன் சொன்னாலும், சிறிது கண்ணயர்ந்த நேரத்திலே என் அப்பாவும், நானும், பாபுவும் புகையிரதம் ஒன்றில் பிரயாணம் செய்வதுபோல கனவு. விழித்துப் பார்த்தபோது மணி நான்கு. சிறிது நேரம் யோசித்துவிட்டு எழுந்துபோய் அப்பாவை எழுப்பினேன் "பாபுவைக் கொழும்புக்குக் கூட்டிப் போகப்போகிறேன்" யோசித்தார். சரி சரி என வெம்பினார். "சகுனப்பிழையாக அழக்கூடாது தங்கையவை இரவில் இங்கே வந்து படுப்பினம்." உடுப்பெல்லாம் கட்டாடிக்குப் போட்டாயிற்று. அவரது சூட்கேஸில் 2 சோடி சொக்ஸ் ஒருசாரம் வேறும் சில பொருள்கள். ஐந்தரை மணிக்கு மினிபஸ்ஸில் யாழ்ப்பாணம் பயணம். கொழும்பு பஸ்கள் ஒன்றிலும் இடம் இல்லை. ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக ஏதும் வெற்றிடம் வருமோ என பதிந்துவிட்டு காத்திருப்போர். வழியெல்லாம் சோதனைச் சாவடிகள் ஏதும் நடந்தாலும் நானும் கட்டாயம் போகவேண்டியுள்ளது.

கடைசி பஸ்சும் போனபின் என்ன செய்வோம் என ஏக்கம். யாரோ சொன்னார்கள் ராஜா தியேட்டரடிக்குப் போங்கள் ஒரு வான் புறப்படுவதாக இருந்தது அங்கே விரைந்தோம். அவர்கள் ஆட்கள் சேர்ந்தால்தான் போவோம் என்றார்கள். பத்துமணியாகி விட்டது. வேறும் இருவர் வந்தார்கள். சாரதி சொன்னார் வான் திருத்தவேணும் ஆட்கள் காணாது வவுனியா மட்டும் போவம் பிறகு நீங்கள் வேறு பஸ் பிடித்தும் போகலாம். 'அப்பாடா' என்றிருந்தது. வவுனியாவுக்குப் போவதற்கிடையிலேயே சில பஸ்களை முந்திவிட்டோம். சோதனைச்சாவடியில் அத்தனைபேரையும் இறக்கி ஏற்றுவதில் தாமதம். நாம் நால்வர்தானே. வவுனியாவில் சாரதி கறாச்சில் நிற்க உதவியாள் எமக்கு பஸ் பார்க்கப் போய்விட்டான்.

கடவுள் இருக்கிறாரோ இல்லையோ தெரியாது. சாரதியும் திருத்துபவனுமாக வந்தனர் "டேய் எனக்கும் ஒரு அலுவல் இருக்கு வாடா போவம் கொழும்புக்கு" "மச்சான் மனிசிக்கு பேறுகாலம் ஏலாட்டிச் சொல்லு நான் திரும்புகிறேன்" அவன் ஏதோ ஆசைகாட்ட கொழும்புக்கு புறப்பட்டுவிட்டது வான். அனுராதபுரத்தை அடைந்தபோது எல்லா பஸ்களையுமே முந்திவிட்டோம் முதலில் புறப்பட்ட பஸ் இரண்டும் சாப்பாட்டுக் கடையில் நிற்கிறது. "எப்படி ஓட்டம் பிளேன் போல போகுது - அம்மா பயமாய் இருக்கோ" என்று ஒரு கேலி. "இப்படியே இந்தியாவுக்குப் போனால் எனக்கு நல்ல சந்தோசம்" என மனதுள் சொல்லிக் கொண்டேன். நேரே நாம் தங்கும் வீட்டிலே விட்டது மாத்திரமல்ல மேலதிகமாக கொடுத்த பணத்தையும் வாங்க மறுத்துவிட்டார்.

பகல் பகலாக உடைகள் சாமான்கள் வாங்கி மறுநாளுக்கு பயணச்சீட்டும் வாங்கி வீடு வந்தோம். செய்தி நேரம் ரூபவாஹினியைப் போட்டால், எங்களது பிரிஞ்ச வேலிதான் போகுது. நாங்கள் இருந்தவீடும் புகையிரதப் பாதையும் ஒருகணம் வந்துபோக, அயலிலே பின் வீட்டுக்கு விடப்பட்ட பாதையில் இராணுவம் துவக்குகளோடு ஓடுகிறது. பின்வீடும் கிணற்றடியில் நிலங் - கொத்துதலும் காட்டப்படுகின்றன சில ஆயுதங்கள் பார்வைக்கு. கொலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட ஜவானுக்கான வெடி தயாரிக்கப்பட்ட இடம் என அடுப்படி விறாந்தை. இந்தியாவில் கல்வி கற்கும் எஞ்சினியர் மாணவன் ஒருவர் கிறனைட் செய்ய உதவி செய்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கிறார். பாபு பயப்படுகிறான், கல்லூரிப் பேரேல்லாம் சொல்லிப்போட்டான் அங்கே வந்து கைது செய்வார்களோ என்று. அவன் இந்திக்காரன் கல்லூரிப் பெயரை மறந்திருப்பான். ஆனால் உண்மையாகவே அவனுக்கு பாபு மீது சந்தேகம் இருக்காது. பாபுவின் குழந்தைமையை அவன் புரிந்துகொண்டான். ஆனால் தமது வீரத்தையும் காட்டவேண்டுமே.

வீடு சென்றபின்தான் நாம் புறப்பட்டது எவ்வளவு நன்மை என உணர்ந்தோம். நாம் யாழ்நகரில் தவித்துக்கொண்டிருந்தபோதே ஒன்பதரை மணியளவில் வந்துவிட்டார்களாம். பாபு எங்கே கூட்டிப்போக வேண்டுமென்று. 2 நாளில் கல்லூரியில் நிற்கவேண்டும் என்று நேற்றுச் சொன்னதுதானே. அக்கா கூட்டிப்போயிற்றா என்று தங்கை சொன்னாளாம். அறையறையாகத் தேடினார்களாம். பிறிகேடியர் வரவில்லையாம். அதன்பின் பின்வீட்டில் சென்று நீண்டநேரம் நின்றார்களாம். பின்னர் உடைந்த பின்வேலியால் போய்விட்டார்களாம்.

நேரடியாக இவற்றை அனுபவிக்கும்போது ஏற்படும் சிக்கல்கள், மனத்தாக்கங்கள், சிந்தனைக்குழப்பங்கள் என்ன கேட்கிறானோ என்னத்தை உளறிக் கொட்டு-கிறோமோ என்ற தடுமாற்றங்கள் எத்தனை பேருக்குப் பக்கத்துணையாக நின்றோம். நூற்றுக்கணக்கில் இராணுவம் சுற்றிவளைக்க வருத்தக்காரன் இருக்கும் இடம் எனப் பக்கத்துணைக்கு ஒருவரும் வரவில்லையே என்ற குற்றக்கண்டுபிடிப்புகள் எப்படி ஒரு குமர்ப்பிள்ளையைக் காப்பாற்றுவது எப்படி ஒரு பதமான இளைஞனைக் காப்பாற்றுவது ஆகிய மூளைக் கலக்கங்கள் இவற்றையெல்லாம் நினைக்கும்போது இச்சிறு நிகழ்ச்சியையே ஒரு நாவலாக எழுதமுடியும்போல இருக்கிறது.

இளநெஞ்சம் துடிக்கிறது, இளம் இரத்தம் கொதிக்கிறது என்ற நிலை றோசாவிடம் இருந்து மறைந்தேவிட்டது. முகமூடியணிந்த றோசாவாக - எனக்கு ஒரு புதிராகிறாள். "உங்கள் உதவிக்கு நன்றி" என ஹரன் சொன்ன வார்த்தைகள் எதுவாயிருக்கலாம். தேநீர் கோப்பி கொடுத்திருக்கலாம் ஏதும் உணவுப்பண்டம் கொடுத்திருக்கலாம் என்று நினைத்துப் பேசாதிருந்துவிட்டேன். ஆனால் றோசா மாவீரரானபின் இளங்கன்று பயமறியாது என சில தூதுகளும் சில வேவுகளும் அந்த நாட்களில் நடந்ததாக அறிய நேர்ந்தது. கொம்பியூட்டர் வகுப்புகளுக்குப் போய் வரும்போது இது நடந்திருக்கிறது. இந்தப் பணிகளில் ஈடுபட்டதனால் போலும் அவளிடம் ஒரு நிதானமும் பரபரப்பின்மையும் காணப்படுகிறது. என் இனிய றோசாவே, அநீதிகளைக் கண்டு பொங்கியெழுந்த காலம், பிறந்த வீட்டையும் பிரதேசத்தையும் விட்டோடும்போது கொண்ட சீற்றம், பிரதிக்ஞை, இந்திய இராணுவம் வந்தபோது ஆற்றாமையால் துடித்த துடிப்பு, எல்லாம் எப்படி அடங்கின என்பதை ஆராய்ந்து அறியாத நான், பெண்கல்வி பெண் முன்னேற்றம் எனப் பழந்தோம்புகளை ஆராய்ந்தும் சட்டியோடும் காசுப் பெட்டியோடும் மருந்து டப்பிகளோடும் போராடியும் கொண்டிருந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னாலான சேவைகள் மறைமுகமாக இயக்கத்துக்கு வழங்கத் தொடங்கியமையே கொதித்த பாலுக்கு நீர் தெளித்தது மாதிரிச் சிறிது அடங்கியிருந்ததா?

எங்கள் பிள்ளைகள் எங்களைக் கேட்காமல் எதுவும் செய்யார்கள் என்ற நம்பிக்கையை இந்தக் கதை உடைத்துவிட்டதம்மா. உங்களுடைய முடிவு எடுக்கும் திறன் பற்றிய முதிர்ச்சி ஏற்கனவே ஏற்பட்டிருந்தபடியால், 18 வயதின்பின் நானும்தான் உளவு பார்த்ததில்லை. கண்டுபிடித்தால் பாசம் கண்ணை மறைக்க "உனக்கல்லடி பெண்ணே அது ஊருக்கடி கண்ணே" எனக் கனடாவுக்குப் பார்ஸல் பண்ணியிருப்பேன் போலும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org